தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

நடவடிக்கைகளின் அட்டவணை (INDEX)

பயன்படுத்தும் முறை.

பேரவை நடவடிக்கைகளின் ஒவ்வொரு தொகுப்புக்கும் (Volume) தனித்தனியாக அட்டவணைகள் வெளியிடப்பெறுகின்றன. உறுப்பினர்கள் பேரவையில் எழுப்பிய வினாக்கள், ஆற்றிய உரைகள் ஆகியவை தொடர்பான குறிப்புகளை இலகுவாகவும், விரைவாகவும் அறிந்துகொள்ள அகரவரிசைப்படி அமைக்கப்பட்ட இவ்வட்டவணை பெரிதும் பயன்படும்.

இந்த அட்டவணை கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:

1. உள்ளடக்கம்.
2. உறுப்பினர்களின் பெயர் அட்டவணை. (Name Index)
3. பொருள் அட்டவணை. (Subject Index)

அவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட அலுவல்கள் பற்றிய குறிப்புகளை 'உள்ளடக்கம்' என்ற தலைப்பின் கீழும், உறுப்பினர்கள் பேசியது தொடர்பான குறிப்புகளை 'பெயர் அட்டவணை' என்ற தலைப்பின் கீழும், விவாதிக்கப்பட்ட பொருள்கள் குறித்த குறிப்புகளை 'பொருள் அட்டவணை' என்ற தலைப்பின் கீழும் காணலாம்.

"உள்ளடக்கம்" என்ற தலைப்பின் கீழ்,

அமைச்சரின் அறிக்கை

அறிக்கை அளித்தல்

அறிவிப்புகள்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் இதர தீர்மானங்கள்

இரங்கல் குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானங்கள்

உரிமைப் பிரச்சினைகள்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

ஒழுங்குப் பிரச்சினைகள்

கவன ஈர்ப்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMILNADU LEGISLATURE LIBRARY
30 JAN 1992
MADRAS-600 009

சட்ட முன்வடிவுகள்

தகவல் கோரல்

தனித் தீர்மானங்கள்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

வரவு-செலவுத் திட்ட பொது விவாதம்,

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் மற்றும்

இதர நிதி அலுவல்கள்

போன்றவை வருவதால் அவை 'பொருள் அட்டவணை'-யில் இடம் பெற வில்லை.

'பெயர் அட்டவணை'-யில் ஒவ்வொரு உறுப்பினரது பெயரின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பின் இறுதியிலும் அவ்வுறுப்பினர் அவையில் எந்தத் தலைப்பின் கீழ் உரையாற்றினார் என்பதைக் குறிக்கும் வகையில் அடைப்புகளுக்குள் அதுபற்றிய சுருக்கங்கள் கொடுக்கப்பட்டு இருக்கும். எடுத்துக்காட்டாக (ஒ.பி.) என்று போடுவது ஒழுங்குப் பிரச் சினையையும் ,(க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கை யையும், (வி.) என்று போடுவது வினாவையும் குறிக்கும். இவ்வட்டவணையில் பயன்படுத்தப்பட்டுள்ள சில சுருக்கங்களின் விளக்கம் கீழே கொடுக்கப்பட் டுள்ளன :

அ.	...	அறிக்கை
அ.வி.	...	அரைமணி விவாதம்
கு.வி.	...	குறுகியகால விவாதம்
பொ.வி.	...	பொது விவாதம்
ஆ.உ.	...	ஆளுநர் உரை
உ.பி.	...	உரிமைப் பிரச்சினை
ஒ.பி.	...	ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ.	...	கவன ஈர்ப்பு
க.ஈ.அ.	...	கவன ஈர்ப்பு அறிக்கை
அ.தீ.	...	சட்ட முன்வடிவின் அறிமுக நிலை

ஆ.நி.	...	சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை
த.கோ.	...	தகவல் கோரல்
த.வி.	...	தன்னிலை விளக்கம்
தீ.	...	தீர்மானம்
ஒ.தீ.	...	ஒத்திவைப்புத் தீர்மானம்
த.தீ.	...	தனித் தீர்மானம்
வ.செ.தி.	...	வரவு-செலவுத் திட்டம்
மா.கோ.	...	மானியக் கோரிக்கை
து.மா.கோ.	...	துணை மானியக் கோரிக்கை
மி.மா.கோ.	...	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை
வி.	...	வினா

சில குறிப்புகளைப் பொறுத்தவரையில் அவ்வாறு அடைப்புகளுக்குள் சுருக்கங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில் அக்குறிப்புகளே தேவையான விளக்கத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கும். மூல வினாவிற்குரிய தலைப்புப் பொருளே துணை வினாக் குறிப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.

தலைவர், துணைத்தலைவர் மற்றும் மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் 'பெயர் அட்டவணை' யில் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொருள் அட்டவணையில் வரும் பல்வேறு பொருள்களைப் பொறுத்தவரையில் அவை உரிய பொதுத் தலைப்புகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக 'கல்விக்கூடங்கள்' என்ற பொதுத்தலைப்பின் கீழ் பள்ளிகள், கல்லூரிகள், பாலிடெக்னிக், பயிற்சிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, பல்கலைக் கழகங்கள் ஆகியவை இடம்பெறும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1990 ஏப்ரல் 5, 6 மற்றும் 9.

(தொகுதி 26 எண்கள் 1—3)

உள்ளடக்கம்.

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்	iii—v
Personnel of the Government of Tamil Nadu	vi— viii
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	ix—x
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)	xii—xxiii
அறிக்கை அளித்தல்—	
பொதுக் கணக்குக் குழு	62, 258
பொது நிறுவனங்கள் குழு	63
அறிவிப்புகள்—	
அவை நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அமைச்சர்களிடம் உறுப்பினர்கள் சென்று பேசுவது குறித்து	262—263
தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.)	470
இரங்கல் குறிப்பு—	
முன்னாள் உறுப்பினர் மறைவு	215
உரிமை மீறல் பிரச்சினை—	
'தினகரன்' நாளிதழ் மீது—அவை நிகழ்ச்சிகள் தொடர்பான உறுப்பினர்களின் நடவடிக்கைகளை விமர்சித்துத் தலையங்கம் தீட்டியுள்ளது குறித்து	456—463
ஒத்திவைப்புத் தீர்மானம்—	
வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து	41—57

பக்கங்கள்

கவன ஈர்ப்பு—

அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து 467—470

ஆரணி, காந்தி நகர் அரிசன மக்களின் இடுகாடு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து 465—467

சென்னை மருத்துவக் கல்லூரியில் பிணப் பரிசோதனை செய்யப் போதுமான மருத்துவர்கள் இல்லாமை குறித்து 256—259

சென்னையில் சிறு தொழில்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவதால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து 251—254

பல்கலைக் கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் முறை குறித்து 57—59

மயிலை மாங்கொல்லைப் பகுதியில் எல். கே. பி. பி. பள்ளிக் கருகிலுள்ள குடிசைகள் அகற்றப்பட வேண்டியது குறித்து 60—63

சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 470—472

தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 251,464

எதிர்க்கட்சித் தலைவரின் கார் கே. கே. நகரில் சிலரால் தாக்கப் பெற்றுள்ளது குறித்து 39—41

கோவை மாவட்டம், சின்னவேடன்பட்டி மற்றும் வேலப்ப நாயக்கன்புதூர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களை அகற்றும் நடவடிக்கை குறித்து 455—456

தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து 451—455

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி முதலமைச்சர் டெல்லியில் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து 91, 94—95

பக்கங்கள்.

தகவல் கோரல்—தொடர்ச்சி.

வினா நேரம் முடிவுற்றபின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்	254—256, 259—260, 271—272
பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்	159—160, 351

மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும், வாக்கெடுப்பும்—

கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும்.	
கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி	260—350
கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்	
கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்	472—584
கோரிக்கை எண் 21—மீனளம்	
கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு	63—159

விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி டெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தை குறித்து	305—307
நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக 'ராயல்டி' கொடுக்க மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது குறித்து	307—308

வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்—	1—38, 216—251, 415—451

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.
நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1990 ஏப்ரல் 5, 6 மற்றும் 9.

(தொகுதி 26 எண்கள் 1—3)

பெயர் அட்டவணை.

பக்கங்கள்

அ

அண்ணாதுரை, திரு. கா.—

பேராவூரணி, காவல்துறை ஆய்வாளர் அலுவலகம் துவங்குதல் (வி.) — 420

அண்ணாமலை, திரு. எம்.—

சென்னை, தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்கியது (வி.) — 437

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி — 347

மீனவளம், கால்நடை வளர்ப்பு — 156

அப்துல் லத்தீப், திரு. எம்.—

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி — 278—290

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் — 505, 556—567

அழகர்சாமி, திரு. சோ.—

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (வி.) — 15—16

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி — 319—325

அழகர்சாமி, திரு. சோ.—தொடர்ச்சி.

மா. கோ. 1990-91—தொடர்ச்சி.

மீனவளம், கால்நடை வளர்ப்பு ... 155

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) ... 41, 48—49

அழகுவேலு, திரு. ச.—

விக்கிரவாண்டி. ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கட்டிடம் கட்டுதல் (வி.) ... 23—24

அன்பழகன், டாக்டர் க.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெண்களுக்குப் பட்டப் படிப்பு துவங்குதல் (வி.) ... 1—3

எதிர்க்கட்சித் தலைவரின் கார் கே. கே. நகரில் சிலரால் தாக்கப் பெற்றுள்ளது குறித்து (த.கோ.) ... 39—40

பல்கலைக் கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் முறை குறித்து (க.ஈ.அ.) ... 58—59

மதுரை—காமராசர் பல்கலைக் கழகம், செனட், சிண்டிகேட் அமைப்புகள், பிரதிநிதிகள் இல்லாமை (வி.) ... 217—220

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் ... 495, 506—507, 509

மீனவளம், கால்நடை வளர்ப்பு ... 83, 84, 86

மேல்நிலைப்பள்ளி, அரசியல் பாடம் கற்பித்தல் (வி.) ... 216—217

வினா நேரம் முடிவுற்ற பின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள் (த.கோ.) ... 260

அன்பில் பொய்யாமொழி, திரு.—

நிர்வாக ஆலோசனை திட்டம், பரிசு வழங்கல் (வி.) ... 418

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

'ஆ'

ஆசையன், திரு. பெ.—

முத்திரைத்தாள்கள், விற்பனை (வி.) 231

ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ.—

அந்தியூர் தொகுதி, போர்வெல் அமைத்தல் (வி.) 24—25

அரசு ஊழியர்கள், வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு (வி.) 34

பாசன வசதி, குழாய்க் கிணறுகள் அமைத்தல் (வி.) 242—244

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 495, 544, 545, 546

விக்கிரவாண்டி, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கட்டிடம் கட்டுதல் (வி.) 22—24

வினா நேரம் முடிவுற்றபின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள் (த.கோ.) 255

வேளாண்மை அலுவலர்கள், நிர்வாகம் நிதி அதிகாரம் (வி.) 241—242

ஆஸ்கர் சி. நிக்லி, திரு.—

சென்னை மருத்துவக் கல்லூரியில் பிணப் பரிசோதனை செய்ய போதுமான மருத்துவர்கள் இல்லாமை குறித்து (க.ஈ.) 256, 258

'இ'

இரகுமான்கான், திரு. அ.—

சென்னை, புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல பேருந்து வசதி (வி.) 425—426

பக்கங்கள்.

இ—தொடர்ச்சி.

இரகுமான்கான், திரு. அ.—தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—

நிதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 481, 493, 501, 502, 503, 504, 509—511 512—521

இராசமாணிக்கம், திரு. இரெ.— 512—521

கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகம், சிதம்பரம், பிரித்தல் (வி.) 37—38

இராசேந்திரன், திரு. அ.—

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் (வி.) 5

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுதல் (வி.) 423—426

பேராவூரணி காவல் துறை ஆய்வாளர் அலுவலகம், துவங்குதல் (வி.) 421

இராதா, திரு. எஸ். ஆர்.—

எதிர்க்கட்சித் தலைவரின் கார் கே. கே. நகரில் சிலரால் தாக்கப் பெற்றுள்ளது குறித்து (த.கோ.) 39—41

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 471

தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்கு கடத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து (த.கோ.) 452—453

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41—44, 56, 57

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்.

இ—தொடர்ச்சி.

இராமகிருஷ்ணன், டாக்டர் எ.—தொடர்ச்சி.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி, காரைக்குடி தொகுதி (வி.) 441

ஆத்தூர், ஆதி திராவிட மாணவர் விடுதிகள், விரிவாக்கம் (வி.) 25—26

எரிபுறக்கரை (பட்டுக்கோட்டை வட்டம்) ஆதி திராவிடர்களுக்கு விட்டுமனைப் பட்டா வழங்கல் (வி.) 27—29

கலப்பு மண தம்பதிகள், வேலைவாய்ப்பு (வி.) 245

கன்னியாகுமரி, சமுதாய நலக்கூடம், ஆக்கிரமிப்பு (வி.) 245—246

குறிச்சி, ஆதி திராவிடர் மாணவர் விடுதி, கட்டிடம் கட்டுதல் (வி.) 26—27

தேமங்கலம் (நாகை வட்டம்), ஆதி திராவிடர்களுக்கு விட்டு மனை வழங்கல் (வி.) 441—443

பர்கூர், சோழகர் பிரிவு ஆதிவாசி மக்கள், கூட்டுறவுச் சங்கம், ஆரம்பித்தல் (வி.) 440

இராமசாமி, திரு. கே. ஆர்.—

சென்னை-கடலூர், படகு போக்குவரத்துத் திட்டம் (வி.) 427

இராமசாமி, திரு. வி.—

மா.கோ. 1990-91—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 93—97

இராமச்சந்திரன், திரு. எம்.—

திருமலைசமுத்திரம், திறந்தவெளி சிறைச்சாலை அமைத்தல் (வி.) 222

இராமநாதன், திரு. மு.—

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி.) 8—9

தருமபுரி, பெரியார் மாவட்டங்கள், மத்திய சிறைச்சாலை கட்டுதல் (வி.) 237

பக்கங்கள்.

இ—தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 545

இராமலிங்கம், திரு. செ.—

திருமலைசமுத்திரம், திறந்தவெளி சிறைச்சாலை அமைத்தல் (வி.) 221

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும்,

நகர்ப்புற வளர்ச்சி 272—278, 348—349

இராஜேந்திரன், திரு. பி. வி.—

பேரூராட்சிகள், அரசு நிதியுதவி (வி.) 236—237

இளம்வழுதி, திரு.—

சென்னை, தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்கியது (வி.) 437

'உ'

உகம்சந்த், திரு. எஸ். டி.—

ஆரணி, காந்தி நகர் அரிசன மக்களின் இடுகாடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து (க.ஈ.) 465—467

நிர்வாக ஆலோசனைத் திட்டம், பரிசு வழங்கல் (வி.) 415—419

பாசன வசதி, குழாய்க் கிணறுகள் அமைத்தல் (வி.) 242—243

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 474—485, 511—512, 513, 521

மீனளம்

கால்நடை வளர்ப்பு 158

வருவாய்த் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41

பக்கங்கள்

'க'—தொடர்ச்சி.

கணபதி, திரு. என்.—

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 505

507—508, 541, 556, 559

மீனளம்

கால்நடை வளர்ப்பு 84—85

கணேசன், திரு. சா.—

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் (வி.) 4

சென்னை, தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்கியது (வி.) 434—438

கண்ணப்பன், திரு. மு.—

குடியிருப்புகள், தொழிலாளர்களுக்கு உரிமையாக்குதல் (வி.) 18—19

சென்னை—கடலூர், படகு போக்குவரத்துத் திட்டம் (வி.) 427—428

சென்னை, பாரிமுனையில் ஒருவழிப் பாதை (வி.) 426—431

சென்னை, புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல பேருந்து வசதி (வி) 425—426

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (வி.) 14—17

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 503, 504

கருணாநிதி, டாக்டர் மு.—

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி டெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தை குறித்து (அ.) 305—307

பக்கங்கள்

'க'—தொடர்ச்சி.

கருணாநிதி, டாக்டர் மு.—தொடர்ச்சி.

சென்னை, தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்கியது (வி.) 434—438

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 470—472

தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்கு கடத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து (த.கோ.) 454—455

'தினகரன்' நாளிதழ் மீது (உ.பி.) 460—463

நிர்வாக ஆலோசனைத் திட்டம், பரிசு வழங்கல் (வி.) 415—419

நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக "ராயல்டி" கொடுக்க மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது குறித்து (அ.) 307—308

போரூரணி, காவல் துறை ஆய்வாளர் அலுவலகம் துவங்குதல் (வி.) 419—422

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 518, 521, 530, 547, 548—549

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி முதலமைச்சர் டெல்லியில் நடத்திய பேச்சு வார்த்தை குறித்து (த.கோ.) 308—309

கருப்பசாமி, திரு. எஸ். எஸ்.—

கைத்தறி, மூலப் பொருட்கள் விலை உயர்வு (வி.) 447—449

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும்

நகர்ப்புற வளர்ச்சி 299—305

பக்கங்கள்

'க'—தொடர்ச்சி.

காஞ்சனா, டாக்டர் க.—

கிருஷ்ணகிரி, மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தல் (வி.) 445—447

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர் உணவிற்காக ஒதுக்கப்படும் தொகை (வி.) 12

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் செனட், சிண்டிகேட் அமைப்புகள், பிரதிநிதிகள் இல்லாமை (வி.) 217

காளியப்பன், திரு. பி.—

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (வி.) 14—17

குணசேகரன், திரு. எஸ்.—

ஆத்தூர், ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள், விரிவாக்கம் (வி.) 25—26

குமரி அனந்தன்,, திரு.—

சென்னை—கடலூர், படகு போக்குவரத்துத் திட்டம் (வி.) 427—428

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 470, 471

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 493, 494, 499. 500, 501, 502, 503, 505—506, 508, 529, 541, 544, 545, 547—548, 549

மீனளம். 85

கால்நடை வளர்ப்பு

பக்கங்கள்

'க'—தொடர்ச்சி.

குமரி அனந்தன், திரு.—தொடர்ச்சி.

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41, 44—46, 57

குருநாதன், திரு. சு.—

கூட்டுறவு ஊழியர்கள், பஞ்சப்படி வழங்கல் (வி.) 238

கோதண்டம், திரு. ஏ.—

மதுராமங்கலம், அரசினர் மருத்துவமனை மருத்துவர் எண்ணிக்கை அதிகரித்தல் (வி.) 443

கோவிந்தசாமி, திரு. சி.—

பனங்காடு (காங்கேயம் தொகுதி), குடிமனைப் பட்டா வழங்கல் (வி.) 232

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும் நகர்ப்புற வளர்ச்சி 348

கோவிந்தராஜன், திரு. சி.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெண்களுக்குப் பட்டப் படிப்பு துவங்குதல் (வி.) 3

பேராவூரணி காவல் துறை ஆய்வாளர் அலுவலகம் துவங்குதல் (வி.) 421

பொதுக் கணக்குக் குழு, 38-வது அறிக்கை அளித்தல் 259

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும் நகர்ப்புற வளர்ச்சி 262—270, 337—338

மீனளம்

கால்நடை வளர்ப்பு 64

வினா நேரம் முடிவுற்ற பின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள் (த.கோ.) 255

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்.

ச சந்திரசேகரன், டாக்டர் க.—

மா.கோ. 1990-91—

மீனவம்

கால்நடை வளர்ப்பு 63, 65, 129—158

ப் சம்சுதீன் என்கிற கதிரவன், திரு.—

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித்தொழிலும்

நகர்ப்புற வளர்ச்சி 339

சற்குணம், திருமதி எஸ். பி.—

சென்னை, பாரிமுனையில் ஒரு வழிப்பாதை (வி.) 428—431

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் (வி.) 3—6

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருட்கள் வழங்கல் (வி.) 6—9

தருமபுரி, பெரியார் மாவட்டங்கள், மத்திய சிறைச்சாலை கட்டுதல் (வி.) 224—227

திருமலைசமுத்திரம் (தஞ்சை மாவட்டம்), திறந்த வெளி சிறைச்சாலை அமைத்தல் (வி.) 220—224

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர், உண விற்காக ஒதுக்கப்படும் தொகை (வி.) 9—13

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித்தொழிலும்

நகர்ப்புற வளர்ச்சி 338

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—தொடர்ச்சி.

மா. கோ. 1990-91—தொடர்ச்சி.

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 472—474, 477, 479, 483, 488, 493, 497, 498, 499, 501, 502, 504, 509, 513, 526, 540, 559, 562, 563, 569—589

சாந்தகுமாரி, டாக்டர் த.—

திருமலைசமுத்திரம், திறந்தவெளி சிறைச்சாலை அமைத்தல் (வி.) 223

சிங்காரம், திரு. ஆர்.—

ஏரிப்புறக்கரை (பட்டுக்கோட்டை வட்டம்), ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கல் (வி.) 27—29

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் (வி.) 3—6

தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து (த.கோ.) 453—454

பேராவூரணி, காவல் துறை ஆய்வாளர் அலுவலகம் துவங்குதல் (வி.) 419—423

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 502, 545—546

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சிங்காரம், திரு. ஆர்.—தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—தொடர்ச்சி.

மீனளம்

கால்நடை வளர்ப்பு ஓ, 82—89

சிவசுப்பிரமணியன், திரு. சா.—

பொது நிறுவனங்கள் குழு, நாற்பத்தி மூன்றாவது அறிக்கை அளித்தல் 63

சின்னக்குழந்தை, திரு. மு.—

திருவண்ணாமலை—சம்பவராயர் மாவட்டம் புதிய வருவாய்க் கோட்டம் ஏற்படுத்தல் (வி.) 422—423

சின்னசாமி, திரு. வி. கே.—

போரூரணி காவல்துறை ஆய்வாளர் அலுவலகம், துவங்குதல் (வி.) 422

மா.கோ. 1990-91—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 66—76, 157

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41

சீரங்கன், திரு. எம்.—

கொளத்தூர் (சேலம் மாவட்டம்) குடிநீர்த் திட்டம் (வி.) 247—249

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும்

நகர்ப்புற வளர்ச்சி 339

சீனிவாசன், திரு. பெ.—

சென்னை, பாரிமுனையில் ஒருவழிப் பாதை (வி.) 431

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர், உண விற்காக ஒதுக்கப்படும் தொகை (வி.) 11

சுந்தரம், திரு. கே. ஆர்.—

குடியாத்தம், புதிய பேருந்து நிலையம் அமைத்தல் (வி.) 431—433

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி.) 8

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுந்தரம், திரு. கே. ஆர். தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும்

நகர்ப்புற வளர்ச்சி 261

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 548

சுந்தரம், திரு. ப.—

குடியாத்தம், புதிய பேருந்து நிலையம் அமைத்தல் (வி.) 433

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி.) 6—9

சுந்தரதாஸ், திரு. மா.—

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (வி.) 14—17

மயிலை மாங்கொல்லைப் பகுதியில் குடிசைகள் அகற்றப்பட வேண்டியது குறித்து (க.ஈ.) 60—62

மா.கோ. 1990-91—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 106—114

சுந்தரராஜ், டாக்டர் எஸ்.—

சென்னை, தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்கியது (வி.) 437

பரமக்குடி, குடிநீர் ஆற்றில் சாக்கடை கலப்பது (வி.) 29—31

சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே.—

நாகர்கோவில், பேருந்து நிலையம் விரிவாக்கம் (வி.) 20—22

மா.கோ. 1990-91—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 76—82

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பிரமணியம், திரு. அ. லெ.—

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் (வி). 4—5

சென்னை—கடலூர், படகுப் போக்குவரத்துத் திட்டம் (வி.) 428

மதுரை—காமராசர் பல்கலைக் கழகம், செனட், சிண்டிகேட் அமைப்புகள், பிரதிநிதிகள் இல்லாமை (வி.) 218—219

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும்
நகர்ப்புற வளர்ச்சி 338—339

நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் 502—503

சுப்பிரமணியம், திரு. வே. நா. சு.—

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41

சுப்பு, திரு. ஏ.—

மா.கோ. 1990-91—

கைத்தறியும் துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 316—319

சுப்புலட்சுமி செகதீசன், திருமதி—

சென்னையில் சிறு தொழில்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவதால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (க.ஈ.அ.) 251—254

மா.கோ. 1990-91—

மீன்வளம், கால்நடை வளர்ப்பு 70—73

ராயவரம் மற்றும் செங்கிரை (திருமயம் தொகுதி), பெயிண்ட் தொழிற்சாலை அமைத்தல் (வி) 244

சுப்பையா, திரு. ஆலவயல் வ.—

ராயவரம் மற்றும் செங்கிரை (திருமயம் தொகுதி) பெயிண்ட் தொழிற்சாலை அமைத்தல் (வி.) 244

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

செங்கை சிவம், திரு.—

சென்னையில் சிறுதொழில்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவதால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (க.ஈ.) 251—254

விக்கோடெர்மா, மருத்துவம் (வி.) 31—33

செங்கோட்டையன், திரு. கே. ஏ.—

கோவை மாவட்டம் சின்னவேடம்பட்டி மற்றும் வேலப்ப நாய்க்கன் புதூர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்றும் நடவடிக்கை குறித்து (த.கோ.) 455

தருமபுரி, பெரியார் மாவட்டங்கள், மத்திய சிறைச்சாலை கட்டுதல் (வி) 227

மா.கோ. 1990-91—

மீனளம், கால்நடை வளர்ப்பு 122—130

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41

சௌந்திரபாாண்டியன், திரு. ந.—

வேளாண்மை அலுவலர்கள்—நிர்வாகம், நிதி அதிகாரம் (வி) 241—242

டேனியல் ராஜ், திரு. எஸ்.—

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 495—502

த

தங்கபண்டியன், திரு. வே.—

திருமலைசமுத்திரம், திறந்தவெளி சிறைச்சாலை அமைத்தல் (வி) 224

மா.கோ. 1990-91—

கைத்தறியும் துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 280

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தங்கராஜன், திரு. எஸ். ஏ.—

திண்டுக்கல், பேரவை குடிநீர்த் திட்டம், மேற்கொள்ளல் (வி.) 444—445

திருமலைசமுத்திரம், திறந்த வெளி சிறைச்சாலை அமைத்தல் (வி) 222—223

தங்கராஜு, திரு. ஏ.—

கன்னியாகுமரி, சமுதாய நலக் கூடம் ஆக்கிரமிப்பு (வி) 245—246

தங்கவேலு, திரு. ச.—

குடிசைவாழ் மக்கள், முன்வைப்புத்தொகை செலுத்துதல் (வி) 36—37

கைத்தறி, கணக்கெடுப்பு (வி) 35

கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகம், சிதம்பரம், பிரித்தல் (வி) 37—38

கைத்தறி, மூலப் பொருட்கள் விலை உயர்வு (வி) 447—449

திருக்கழுக்குன்றம், பேருந்து நிலையம், அமைத்தல் (வி) 450—451

மா.கோ. 1990-91—

கைத்தறியும் துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 260, 261—262, 325—349

தமிழ்மணி, திரு. வீ.—

திருக்கழுக்குன்றம், பேருந்து நிலையம், அமைத்தல் (வி) 450—451

தம்புசாமி, திரு. வி.—

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி) 9

தலைவர்—

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், சொற்றொடர்கள்—

'ஆண் ஆடு, பெண் ஆடு' என்ற சொற்கள் அவைக்கு ஒவ்வாதவை அல்ல 105

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—

பத்திரிகைகள் மீது—

தினகரன் (உறுப்பினர்களின், அவை நிகழ்ச்சிகள் தொடர்பான நடவடிக்கைகளை விமர்சித்துத் தலையங்கம் தீட்டியது குறித்து) ..

31—3—1990 ஆம் நாளன்று தாம் அவையில் தெரிவித்த கருத்துக்களை விமர்சித்து 1—4—1990 நாளிட்ட தினகரன் நாளிதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்று ஓர் உறுப்பினர் 9—4—1990 ஆம் நாளன்று எழுப்பிய உரிமைப் பிரச்சினைக்குத் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"இது குறித்து நாளிதழின் ஆசிரியருக்கு எழுதி விளக்கம் கேட்டுப் பின்னர் என் தீர்ப்பை அளிக்கிறேன்" 456—463

ஒத்திவைப்புத் தீர்மானம் (அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்னர் இசைவு மறுக்கப்பெற்றவை)—

தமிழகத்தில் உள்ள வருவாய்த்துறை அதிகாரிகள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவது குறித்து 41—57

ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்—

உரையாற்றும் முறை—

ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளைத் தவிர வேறு எதுவும் பேசக்கூடாது 55, 56

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்—

அனுமதி—

ஓர் அமைதியான நிகழ்ச்சி போகிறபோது order லிருந்து விலகுவதுதான் Point of Order இயல்பான நடவடிக்கை order அதிலிருந்து ஏதாவது 'disorder' இந்த அவையிலே ஏற்பட்டுப்

* தீர்ப்பு அளிக்கப் பெறவில்லை.

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்—தொடர்ச்சி.

அனுமதி—தொடர்ச்சி.

போய்விட்டால் அறுதான் Point of Order Point of Orderக்கு உள்ள விதிகளைத் தயவுசெய்து மீண்டும் படித்துப் பார்க்கவும். தங்களுடைய கருத்துக்களைத் திணிப்பதற்காக யாரும் Point of Order கேட்க முடியாது. அறையில் பேசி மறுக்கப்பட்ட பிறகு இந்த அவையில் ஒருவர் கேட்பது, அதிலேயும் குழப்பம் விளைவிப்பது, இதற்கிடையிலே Point of Order என்ற உரிமைகளைக் கையாளுவது, அது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். அதை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். 255

ஒழுங்குமுறை—

அவையில் அமைச்சர்களைச் சந்தித்துப் பேசுதல்—

உறுப்பினர்கள், அலுவல் நடைபெறும்போது அமைச்சர்களைச் சந்தித்துப் பேசுவது குறித்து பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

"உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்ப்பது என்றால் அவர்களுக்கு என்று தனி அறைகள் இருக்கின்றன. துறைகளும் இருக்கின்றன. தேவைப்படுகிறபோது அவர்களை அறைகளிலேயே சந்திப்பதற்கு வாய்ப்பு இருக்கும்போது, இப்படி அவையிலே ஒருவர் பேச எழுந்தவுடன், இது ஒரு Zero-hour போல நடக்கிறது. உறுப்பினர்கள் அதைத் தவிர்த்தால்தான் இந்த அவையை அமைதியாகக் கொண்டு செலுத்த முடியும், பேசுகின்ற உறுப்பினரும் தன்னுடைய பேச்சை ஆழமாகவும், அழுத்தமாகவும் இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல முடியும். அதனுடைய பயனும் முழுமையாகக் கிடைக்கும். இது எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும்". 262—263

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குமுறை—தொடர்ச்சி.

அவையில் அமைச்சர்களைச் சந்தித்துப் பேசுதல்—தொடர்ச்சி.

உறுப்பினர்களும், அமைச்சர்களும் கலந்துரையாட வசதியாக பாராளுமன்றத்தில் உள்ளதுபோல் மத்திய மண்டபம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஓர் உறுப்பினர் தலைவரைக் கேட்டுக்கொண்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"உறுப்பினருடைய கருத்து 100-க்கு 150 விழுக்காடு ஏற்றுக்கொள்ளப்பெற்றது. கண்டிப்பாக அதற்கான தக்க ஏற்பாடுகளை நான் செய்வேன். உங்களுடைய முழு வாய்ப்புகளுக்கு ஏற்ப உதவி செய்வதற்காகத்தான் சபாநாயகர் போலவைத் தலைவர் இங்கே இருக்கிறார்".

குறிப்புகள்—

மானியக் கோரிக்கை தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகளை முன்கூட்டியே உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"உறுப்பினர் அவர்களுடைய உணர்வை ஒட்டுமொத்தமாக இந்த அவையின் உணர்வாகக் கருதி, தொடர்புடைய அமைச்சர்களும், அந்த அமைச்சர்களது செயலகங்களும் எந்தக் கொள்கை விளக்கக் குறிப்பாக இருந்தாலும், அவற்றை 48 மணி நேரம் முன்னதாக கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்" 65

குறுக்கீடுகள்—

உறுப்பினரின் உரையில் விளக்கம்—

ஓர் உறுப்பினர் உரையாற்றுகிறபோது இன்னொரு உறுப்பினர் அனுமதியின்றி குறுக்கிடுதல் கூடாது 505, 506.

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—

அவை அலுவல்கள்—

தான் எழுந்து மூலமாகக் கொடுத்திருக்கிற பிரச்சினைகளை அவையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சில உறுப்பினர்கள் வற்புறுத்தியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"இதுபோன்று கொடுத்துவிட்டால் தான் அதில் முடிவெடுத்து அறிவிக்கிறவரையில் உறுப்பினர்கள் அருள்கூர்ந்து பொறுமை காட்டவேண்டும். இப்படி ஒவ்வொன்றையும் தான் கொடுத்திருக்கிறேன், என்னவாயிற்று என்று கேட்டால் எந்த விவரத்தையும் சொல்ல முடியாது, வேறு எந்த வேலையையும் செய்ய முடியாது. அவை எல்லாம் என் ஆய்விலே உள்ளன. இத்தனை நாட்களுக்குள் எடுத்தாக வேண்டும் என்று கூற முடியாது. அதற்கு விதி இல்லை" 464

தகவல் கோரல்—நடைமுறைகள்—

அனுமதி—

ஓர் உறுப்பினர் ஒரு பொருள் குறித்துத் 'தகவல் கோரல்' என்ற முறையில் எழுப்பியதற்குத் தலைவர் பதில் அளித்த பிறகு இன்னொரு உறுப்பினர் அதே பொருள் குறித்துத் தகவல் கோர அனுமதி இடையாது 41

துணை வினா—

குற்றச்சாட்டுகள்—

துணை வினாவில் குற்றச்சாட்டு கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று, குற்றச்சாட்டு கூறப் பெற்ற பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது 444

பக்கங்கள்

து—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

துணை வினா—தொடர்ச்சி.

கேட்கும் முறை—

துணை வினாக் கேட்கும்போது ஓர் உறுப்பினர் கருத்தைப் பாராட்டுகிற முறையில் பேசக்கூடாது. வினா நேரத்தில் தத்துவங்கள் அனுமதிக்கப்படமாட்டா 232

துணை வினாக் கேட்கும்போது குற்றச்சாட்டுகள் கூறக் கூடாது 7, 239

துணை வினாக் கேட்கும்போது செய்திகளைச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. அமைச்சரின் விடையை எதிர்பார்க்கிற வகையில் வினாவை மட்டும் கேட்க வேண்டும் 32

தொடர்பற்ற துணை வினாவுக்கு வாய்ப்பு மறுக்கப்படும் 438

மூல வினாவிலிருந்து விலகிச் செல்லுதல் கூடாது 11, 12, 28

மூல வினாவிற்குத் தொடர்புடைய துணை வினாவை மட்டும் கேட்க வேண்டும் 236, 238

வினாவாகக் கேட்க வேண்டும். பேருரையாற்றக் கூடாது 18, 21, 25, 225, 243

விவாதம்—

அவை முன்னுள்ள பொருள்—

அவை முன்னுள்ள பொருள் குறித்து மட்டுமே உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டும் 71

அவை முன்னுள்ள மானியக் கோரிக்கைகள் தொடர்பாக மட்டும் உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் 87, 103, 125

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

உரையாற்றுகிற உறுப்பினர் தாம் வளாகத்தில் கேட்ட செய்திகளை எல்லாம் அவையில் சொல்லக்கூடாது. தலைவருடைய அறையில் பேசியதை எல்லாம் அவையில் குறிப்பிடுதல் கூடாது.

எழுப்பப்பட்ட பிரச்சினையின்மீது தலைவர் தீர்ப்பளித்த பிறகு அவை முன்னவர் விளக்கம் அளித்த பிறகு அப்பிரச்சினை பற்றி அவையிலே எழுப்புவது கூடாது 271, 272

காலவரையறை—

உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் உரையாற்றி முடிக்க வேண்டும் 75, 76

பேசும் வாய்ப்பு—

உரையாற்றுகிற வாய்ப்பு கட்சி வரிசைப்படி அளிக்கப் படவேண்டுமென்று ஓர் உறுப்பினர் தெரிவித்தபோது இதையெல்லாம் உறுப்பினர்கள் பெரிய பிரச்சினையாக எழுப்பக் கூடாது என்றும் ஓர் உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் பேச அழைக்கப் பட்டார் என்றும் குறிப்புரைக்கப்பெற்றது 530

விவாதத்தில் பங்குகொள்ள இருக்கும் உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து யாரை உரையாற்ற அழைப்பது என்பது தலைவருடைய முழு உரிமையைப் பொறுத்தது ஆகும் 65

தனபாலன், திரு. கே. ஆர். ஜி.—

கலப்பு மணத் தம்பதிகள், வேலை வாய்ப்பு (வி.) 345

மா.கோ. 1990-91—

கைத்தறியும் துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 295—297

திருவேங்கடம், திரு. பெ. சு.—

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி) 7

துரை சந்திரசேகரன், திரு.—

திருமலைசமுத்திரம், திறந்த வெளி சிறைச்சாலை அமைத்தல் (வி.) 220—224

துரைசாமி, திரு. வீ. பெ.—

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் (வி) 6

பேரூராட்சிகள் அரசு நிதியுதவி (வி) 237

முத்திரைத்தாள்கள், விற்பனை (வி) 231

துரைமுருகன், திரு.—

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 543, 544, 588

தென்னரசு, திரு. எஸ். எஸ்.—

பேராவூரணி காவல் துறை ஆய்வாளர் அலுவலகம், துவங்குதல் (வி) 420

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 485—495,498

ந

நடேசன், திரு. ஆர்.—

மா.கோ. 1990-91—

மீனளம், கால் நடை வளர்ப்பு 63

நாராயணன், திரு. இராம.—

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி, காரைக்குடி தொகுதி (வி) 441

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நூர். முகமது, திரு. செ.—

சென்னை-கடலூர், படகு போக்குவரத்து திட்டம் (வி) 428

தென்கரை ஊராட்சி, குடிநீர்த்திட்டம், (வி) 249—281

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 286, 287

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 583

நேரு, திரு. கே. என்—

அரசு ஊழியர்கள், வாரிசுதாரர்களுக்கு, வேலை வாய்ப்பு (வி.) 33—34

மா.கோ. 1990-91—

மீனளம், கால்நடை வளர்ப்பு 126—127

'ப'

பழனிச்சாமி, திரு. ஜி.—

மா. கோ. 1990-91—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 114—120

பழனிவேல், திரு என்.—

திண்டுக்கல்—காயிதே-மில்லத் மாவட்டம், மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தல் (வி) 22—23

மா.கோ. 1990-91—

மீனளம், கால்நடை வளர்ப்பு 63

பாண்டியன், திரு. பி. எச்.—

சேரன்மகாதேவி, வீட்டு மனைப்பட்டா வழங்கல் (வி) 338—370

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பாண்டியன், திரு. பி. எச்.—தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 290—295

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 521—529

பாப்பா உமாநாத், திருமதி—

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி) 7

சென்னை, தெருப்பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்கியது (வி) 437

தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து (க.கோ.) 451—452

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர், உணவிற்காக ஒதுக்கப்படும் தொகை (வி) 9—13

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 332

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 473

மேல்நிலைப்பள்ளி, அரசியல் பாடம் கற்பித்தல் (வி) 217

பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர்.—

அரசு ஊழியர்கள், வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு (வி) 33—34

'தினகரன்' நாளிதழ் மீது (உ.பி.) 457—460

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 492,493,498, 503,504,513,544

மீனவளம், கால்நடை வளர்ப்பு 84—85, 156—157

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பால்ராஜ், திரு. சோ.—

பல்கலைக் கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் ஆசிரியர்கள் நியமிக்கப்படும் முறை குறித்து (க.ஈ.) 57—59

மேல்நிலைப்பள்ளி, அரசியல் பாடம் கற்பித்தல் (வி.) 216—217

பிச்சாண்டி, திரு. கே.—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுதல் (வி) 423—426

முத்திரைத்தாள்கள், விற்பனை (வி) 230—232

பிச்சைமுத்து, திரு. செ.—

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர், உணவிற்காக ஒதுக்கப்படும் தொகை (வி) 13

பீட்டர் அல்போன்ஸ், திரு. சா.—

பொதுக் கணக்குக் குழு; முப்பத்தைந்து முதல் முப்பத்தேழு வரையிலான அறிக்கைகள், அளித்தல் 62

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர், உணவிற்காக ஒதுக்கப்படும் தொகை (வி) 13

முத்திரைத்தாள்கள், விற்பனை (வி) 231

பூவராகன், திரு. கோ.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெண்களுக்குப் பட்டப் படிப்பு துவங்குதல் (வி) 1—3

நிர்வாக ஆலோசனைத் திட்டம், பரிசு வழங்கல் (வி) 438

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், செனட்-சிண்டிகேட். அமைப்புகள், பிரதிநிதிகள் இல்லாமை (வி.) 510

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பூவராகன், திரு. கோ.—தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—

கைத்தறியும் துணித் தொழிலும், நகர்ப்புற வளர்ச்சி 309—316

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 450—456

பெரியசாமி, திரு. வே.—

அந்தியூர் தொகுதி, போர்வெல் அமைத்தல் (வி) 24—25

பர்கூர், சோழகர் பிரிவு ஆதிவாசி மக்கள், கூட்டுறவுச் சங்கம், ஆரம்பித்தல் (வி) 440

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (வி) 41

பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க.—

அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (க.ஈ.அ.) 467—470

கிருஷ்ணகிரி, மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம், ஏற்படுத்தல் (வி) 445—447

கொளத்தூர் (சேலம் மாவட்டம்,) குடிநீர்த் திட்டம் (வி) 246—249

சென்னை மருத்துவக் கல்லூரியில் பிணப் பரிசோதனை செய்ய போதுமான மருத்துவர்கள் இல்லாமை குறித்து (க.ஈ.அ.) 256—259

திண்டுக்கல், பேரணை குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளல் (வி) 444—445

துறையூர், குடிநீர் வழங்கும் திட்டம் (வி) 246—247

தென்கரை ஊராட்சி, குடிநீர்த் திட்டம் (வி) 249—251

பக்கங்கள்

ப—தொடர்ச்சி

பொன்முடி என்கிற தெய்வசிகாமணி டாக்டர். க.—தொடர்ச்சி.

பாமக்குடி, குடிநீர் ஆற்றில் சாக்கடை கலப்பது (வி) 29—31

மதுராமங்கலம் (திருப்பெரும்புதூர் வட்டம்), அரசினர் மருத்துவமனை, மருத்துவர் எண்ணிக்கை அதிகரித்தல், (வி.) 443

லிக்கோடெர்மா, மருத்துவம் (வி.) 31—33

பொான்முடி, திரு. டி.—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் ஆட்சித் தலைவர் அலுவலகம், கட்டுதல் (வி.) 423—426

பொன். முத்துராமலிங்கம், திரு.—

கள்ளக்குறிச்சி, கூட்டுறவு விவசாய வங்கியில் நகைத் திருட்டு (வி.) 438—439

கூட்டுறவு ஊழியர்கள், பஞ்சப்படி வழங்கல் (வி.) 238

திண்டுக்கல்—காயிதே-மில்லத் மாவட்டம், மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தல் (வி.) 22—23

பயிர் காப்புறுதித் திட்டம், மாற்றியமைத்தல் (வி.) 440

பொது விநியோகம், மையத் தொகுப்பில் இருந்து வழங்கப்பட்ட அரிசி, கோதுமை, பாமாயில், விவரம் (வி.) 238—241

பொன்னம்மாள், திருமதி எ. எஸ்.—

தருமபுரி, பெரியார் மாவட்டங்கள், மத்திய சிறைச்சாலை கட்டுதல் (வி.) 226

ப.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 583

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பொன்னுசாமி, பேராசிரியர் க.—

பொது விநியோகம், மையத் தொகுப்பில் இருந்து வழங்கப் பட்ட அரிசி, கோதுமை, பாமாயில் விவரம் (வி.) 238—241

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 472, 514, 574, 581

மீனளம்

கால்நடை வளர்ப்பு 64

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41

ம

மணி, திரு. கோ. சி.—

கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்கள், அமைத்தல் (வி) 235—236

குடியாத்தம், புதிய பேருந்து நிலையம் அமைத்தல் (வி.) 431—433

செந்திபுரம் ஊராட்சி (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்) ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல் (வி.) 234

சென்னை தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்கியது (வி.) 434—438

நாகர்கோயில், பேருந்து நிலையம் விரிவாக்கம் (வி.) 20—21

பேரூராட்சிகள், அரசு நிதியுதவி (வி.) 236—237

மயிலை மாங்கொல்லைப் பகுதியில் குடிசைகள் அகற்றப்பட வேண்டியது குறித்து (க.ஈ.அ.) 60—62

வடக்கன்குளம், வாரச் சந்தை அமைத்தல் (வி.) 19—20

மணிமாறன், திரு. மா.—

பயிர் காப்புறுதித் திட்டம், மாற்றியமைத்தல் (வி.) 440

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மதிவாணன், திரு. இரா.—

மா.கோ. 1990-91—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 90—93

மனோகரன், திரு. நாஞ்சில் கி.—

ஆரணி, காந்தி நகர் அரிசன மக்களின் இடுகாடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து (க.ஈ.அ.) 465—467

கோவை மாவட்டம், சின்னவேடன்பட்டி மற்றும் வேலப்ப நாயக்கன்புதூர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களை அகற்றும் நடவடிக்கை குறித்து (த.கோ.) 456

சென்னை, தெருப் பெயர்களில் உள்ள சாதிப்பெயரை நீக்கியது (வி.) 436

சேரன்மகாதேவி, வீட்டுமனைப் பட்டா வழங்கல் (வி.) 228—229

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுதல் (வி.) 423—426

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், புதிய வருவாய் கோட்டம் ஏற்படுத்தல் (வி.) 422—423

பனங்காடு (காங்கேயம் தொகுதி), குடிமனைப் பட்டா வழங்குதல் (வி.) 232—233

முத்திரைத்தாள்கள், விற்பனை (வி.) 230—232

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 50—56

மாரப்பன், திரு. பி.—

பனங்காடு (காங்கேயம் தொகுதி), மனைப் பட்டா வழங்குதல் (வி.) 232—233

முகமது சித்திக், திரு. எம்.—

திருமலைசமுத்திரம், திறந்தவெளி சிறைச்சாலை அமைத்தல் (வி.) 223

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

முத்துசாமி, திரு. ப.—

கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்கள் அமைத்தல் (வி.) 235—236

முல்லைவேந்தன், திரு. வ.—

தருமபுரி, பெரியார் மாவட்டங்கள், மத்திய சிறைச்சாலை கட்டுதல் (வி.) 224—227

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (வி.) 17

மூக்கன், திரு. ஆர்.—

துறையூர், குடிநீர் வழங்கல் (வி.) 246—247

மோகன், திரு. இரா.—

நிர்வாக ஆலோசனைத் திட்டம், பரிசு வழங்கல் (வி.) 418—419

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 546, 577

ர

ரமணி, திரு. கே.—

கள்ளக்குறிச்சி, கூட்டுறவு விவசாய வங்கியில் நகைத் திருட்டு (வி.) 438—439

கோவை மாவட்டம், சின்னவேடம்பட்டி மற்றும் வேலப்ப நாயக்கன்புதூர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களை அகற்றும் நடவடிக்கை குறித்து (த.கோ.) 455

தருமபுரி, பெரியார் மாவட்டங்கள், மத்திய சிறைச்சாலை கட்டுதல் (வி.) 226

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர் உணவிற்காக ஒதுக்கப்படும் தொகை (வி.) 11—13

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.

ரமணி, திரு. கே.—தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 530

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41, 56

ரமணி நல்லதம்பி, திருமதி—

வடக்கன்குளம், வாரச் சந்தை அமைத்தல் (வி.) 19—20

ரவி அருணண், திரு. கே.—

சிவந்திபுரம் ஊராட்சி, ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல் (வி.) 234

ராமசுப்பு, திரு. எஸ். எஸ்.—

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (வி.) 17

பேராவூரணி, காவல்துறை ஆய்வாளர் அலுவலகம் துவங்குதல் (வி.) 421

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 539—550

வ

வரதராசன், திரு. உ. ரா.—

அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (க.ஈ.) 467—470

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள் (த.கோ.) 464

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

'வ'—தொடர்ச்சி.

வரதராதசன், திரு. உ. ரா.—தொடர்ச்சி.

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் (வி.) 5

சென்னை, பாரிமுனையில் ஒருவழிப்பாதை (வி.) 428—431

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், செனட், சிண்டிகேட் அமைப்புகள், பிரதிநிதிகள் இல்லாமை (வி.) 217—220

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 530—539, 582

மீனளம்

கால்நடை வளர்ப்பு 65

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41, 46—48

வினா நேரம் முடிவுற்றபின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள் (த.கோ.) 259—260

விஜயராகவன், திரு. பொன்.—

கைத்தறி, கணக்கெடுப்பு (வி.) 35

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் (வி.) 16

வீரையன், திரு. கோ.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 464

குறிச்சி, ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, கட்டிடம் கட்டுதல் (வி.) 26—27

திருமலைசமுத்திரம், திறந்தவெளி சிறைச்சாலை அமைத்தல் (வி.) 223

தேமங்கலம், நாகை வட்டம், ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்கல் (வி.) 441—44?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வீரையன், திரு. கோ.—தொடர்ச்சி.

மா.கோ. 1990-91—

கைத்தறியும், துணித் தொழிலும்

நகர்ப்புற வளர்ச்சி 261, 349

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 506

வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.நீ.) 41

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி முதலமைச்சர் டெல்லியில் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து (த.கோ.) 305

வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய்.—

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி.) 7—8

மா.கோ. 1990-91—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 65, 97—106

முத்திரைத்தாள்கள் விற்பனை (வி.) 232

வெள்ளிங்கிரி, திரு. யூ. கே.—

சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் (வி.) 9

சென்னை, பாரிமுனையில் ஒருவழிப் பாதை (வி.) 430—431

மா.கோ. 1990-91—

நீதி நிர்வாகம்

சிறைச்சாலைகள் 472, 583

பக்கங்கள்

'வ'—தொடர்ச்சி.

வைத்தியலிங்கம், திரு. மீ. அ.—

குடிசைவாழ் மக்கள், முன்வைப்புத் தொகை செலுத்தல் (வி.) 36—37

'ஸ'

ஸ்டாலின், திரு. மு. க.—

சென்னை, புளியந்தோப்பு வழியாக மயிலை அடையாறு செல்ல பேருந்து வசதி (வி.) 426

'ஹ'

ஹமீது இப்ராகிம், திரு. அ. மு.—

மீனளம்

கால்நடை வளர்ப்பு 120—122

'ஸ்ரீ'

ஸ்ரீதர் திரு. ஆர். எஸ்.—

குடியிருப்புகள், தொழிலாளர்களுக்கு உரிமையாக்குதல் (வி.) 18—19

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

பொருள் அட்டவணை.

அ

அமைச்சரின் அறிக்கை— ..

பார்க்க—உள்ளடக்கம் 2

அரங்கங்கள்—

கன்னியாகுமரி, சமுதாய நலக்கூடம், ஆக்கிரமிப்பு 245—246

அலுவலகங்கள்—

கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர், சிதம்பரம், பிரித்தல் 57—58

அலுவலர்கள்—

வருவாய்த்துறை, வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (ஒ.தீ.) 41—57

அறிக்கை அளித்தல்—

பார்க்க—உள்ளடக்கம்

ஆ

ஆசிரியர்கள்—

பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் கல்லூரிகளில் நியமிக்கப்படும் முறை குறித்து (க.ஈ.) 57—59

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

ஆ.—தொடர்ச்சி.

ஆதிதிராவிடர் நலன்—

ஆத்தூர், மாணவர் விடுதிகள் விரிவாக்கம் 25—26

ஆரணி, காந்தி நகர் அரிசன மக்களின் இடுகாடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து (க.ஈ.) 465—467

எரிப்புறக்கரை (பட்டுக்கோட்டை வட்டம்), வீட்டுமனைப் பட்டா வழங்கல் 27—29

காரைக்குடி தொகுதி, குடியிருப்புகளுக்கு மின் வசதி 441

குறிச்சி (நாகை வட்டம்), ஆதி திராவிடர் மாணவர் விடுதி, கட்டிடம் கட்டுதல் 26—27

சிவந்திபுரம் ஊராட்சி (திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்), வீடு கட்டுதல் 234

தேமங்கலம் (நாகை வட்டம்), வீட்டுமனை வழங்குதல் 441—443

உ

உரிமைப் பிரச்சினைகள்—

பார்க்க-உள்ளடக்கம்

உள்ளாட்சிகள்—

கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்கள், அமைத்தல் 335—336

குடியாத்தம், புதிய பேருந்து நிலையம் அமைத்தல் 431—433

சென்னை, தெருப் பெயர்களில் சாதிப் பெயரை நீக்கியது 434—435

திருக்கழுக்குன்றம், பேருந்து நிலையம் அமைத்தல் 450—451

நாகர்கோயில், பேருந்து நிலையம் விரிவாக்கம் 20—26

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

உ—தொடர்ச்சி.

உள்ளாட்சிகள்—தொடர்ச்சி.

பேரூராட்சிகள், அரசு நிதியுதவி 236—237

வடக்கன்குளம் (வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம்), வாரச் சந்தை அமைத்தல் 19—20

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானம்—

பார்க்க-உள்ளடக்கம்

க

கட்டிடங்கள்—

சிறுதொழில்களுக்காகக் கட்டப்பட்டவை, குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவது (க.எ.) 251—254

விக்கிரவாண்டி, ஒழுங்கு முறை விற்பனைக் கூடம், கட்டுதல் 23—24

கல்விக் கூடங்கள்—

மேல்நிலைப்பள்ளி, அரசியல் பாடம் கற்பித்தல் 216—217

கவன ஈர்ப்பு—

பார்க்க—உள்ளடக்கம்.

காவல் துறை—

போளூரணி, ஆய்வாளர் அலுவலகம் துவங்குதல் 419—422

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

'க'—தொடர்ச்சி.

குடிநீர்—

கொளத்தூர் (சேலம் மாவட்டம்), வழங்கல் 246—249

திண்டுக்கல், பேரணைத் திட்டம், மேற்கொள்ளல் 444—445

துறையூர், வழங்கல் 246—247

வழங்கல், தென்கரை ஊராட்சி (கன்னியாகுமரி மாவட்டம்) 249—251

குற்றங்கள்—

கள்ளக்குறிச்சி, கூட்டுறவு விவசாய வங்கி, நகைத் திருட்டு 438—439

கூட்டுறவு—

ஊழியர்களுக்கு பஞ்சப்படி வழங்கல் 236

திண்டுக்கல்—காயிதே-மில்லத் மாவட்டம், வங்கி அமைத்தல் 22—23

டார்கூர், சோமுகர் பிரிவு ஆதிவாசிமக்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் 440

கைத்தறி, விசைத்தறி—

கைத்தறி, கணக்கெடுப்பு 39

மூலப் பொருட்கள் விலை உயர்வு 447—449

ச

சட்ட முன்வடிவுகள்—

பார்க்க—உள்ளடக்கம்

சமூக நலன்—

கலப்பு மணத் தம்பதிகள் வேலை வாய்ப்பு 245

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

‘ ச ’—தொடர்ச்சி.

சிறைச்சாலைகள்—

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கல் 6—9

தருமபுரி, பெரியார் மாவட்டங்கள், மத்திய சிறைச்சாலை கட்டுதல் 224—227

திறந்தவெளி, அமைத்தல், திருமலை சமுத்திரம் (தஞ்சை மாவட்டம்) 220—224

மக்கள் பிரச்சினைகளுக்காக கைது செய்யப்படுவோர், உணவிற்காக ஒதுக்கப்படும் தொகை 6—13

சுற்றுப்புறச் சூழல்—

பரமக்குடி, குடிநீர் ஆற்றில் கழிவுநீர் கலப்பது 29—31

மயிலை மாங்கொல்லைப் பகுதியில் குடிசைகள் அகற்றப்பட வேண்டியது (க.ஈ.) 60—62

த

தகவல் கோரல்—

பார்க்க—உள்ளடக்கம்

திட்டங்கள்—

அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து (க.ஈ.) 467—470

நிர்வாக ஆலோசனை, பரிசு வழங்கல் 415—419

பக்கங்கள்

'த'—தொடர்ச்சி

தொழிலாளர்கள்—

குடியிருப்புகளை உரிமையாக்குதல் 18—19

தொழில்கள்—

ராயவரம் மற்றும் செங்கீரை (திருமயம் தொகுதி), பெயின்ட் தொழிற்சாலை அமைத்தல் 244

'ந'

நிதி அலுவல்கள்—

பார்க்க—உள்ளடக்கம்.

நீதிமன்றங்கள்—

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், ஊழியர்கள் ஊதியம் 3—6

நுகர்பொருள்—

மையத் தொகுப்பிலிருந்து வழங்கப்பட்ட அரிசி, கோதுமை, பாமாயில், விவரம் 238—241

'ப'

பல்கலைக்கழகங்கள்—

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பெண்களுக்கு பட்டப் படிப்பு துவங்குதல் 1—5

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், செனட், சிண்டிகேட் அமைப்புகள், பிரதிநிதிகள் இல்லாமை 217—220

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பாசனம்—

குழாய்க் கிணறுகள் அமைத்தல் 242—244

போக்குவரத்து—

சென்னை-கடலூர் படகு போக்குவரத்துத் திட்டம் 427—428

சென்னை, பாரிமுனையில் ஒருவழிப் பாதை 428—432

சென்னை, புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல பேருந்து வசதி 425—426

தனியார் ஒப்பந்தப் பேருந்துகள் 14—17

ம

மருத்துவமனைகள்—

கிருஷ்ணகிரி, இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தல் 445—447

மதுரமங்கலம் (திருப்பெரும்புதூர் வட்டம்), மருத்துவர் எண்ணிக்கை அதிகரித்தல் 443

மருத்துவம்—

சென்னை மருத்துவக் கல்லூரியில் பிணப் பரிசோதனை செய்ய போதுமான மருத்துவர்கள் இல்லாமை (க.ஈ.) 256—259

லிக்கோடெர்மா 31—33

மாவட்ட நிர்வாகம்—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுதல் 423—426

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் புதிய வருவாய்க் கோட்டம் ஏற்படுத்தல் 422—423

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

வ

வரிகள்—

முத்திரைத்தாள்கள், விற்பனை 230—235

வீட்டு வசதி—

குடிசைவாழ் மக்கள், முன்வைப்புத் தொகை செலுத்துதல் 36—37

சேரன்மகாதேவி, மனைப் பட்டா வழங்கல் 228—229

பணங்காடு (காங்கேயம் தொகுதி), குடிமனைப் பட்டா வழங்கல் 232—233

வேலை வாய்ப்பு—

அரசு ஊழியர்கள், வாரிசுதாரர்கள் 33—34

வேளாண்மை—

அந்தியூர் தொகுதி, போர்வெல் அமைத்தல் 34—35

அலுவலர்கள், நிர்வாகம், நிதி அதிகாரம் 241—242

பயிர் காப்புறுதி திட்டம், மாற்றியமைத்தல் 440

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

உள்ளடக்கம்

5-4-1990

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் iii—v

Personnel of the Government of Tamil Nadu vi—viii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். ix—xi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி). xii—xxiii

1. வினக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 1—38

2, தகவல் கோரல்—

எதிர்க்கட்சித் தலைவரின் கார் கே. கே. நகரில் சிலரால் தாக்கப் பெற்றுள்ளது குறித்து. 39—41

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. 41—57

4. கவன ஈர்ப்பு—

(அ) பல்கலைக் கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் முறை குறித்து. 57—59

(ஆ) மயிலை மாங்கொல்லைப் பகுதியில் எஸ்.கே.பி.பி. பள்ளிக்கருகிலுள்ள குடிசைகள் அகற்றப்பட வேண்டியது குறித்து. 60—62

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு. 62

(ஆ) பொது நிறுவனங்கள் குழு. 63

6. மானியக் கோரிக்கைகள், 1990—91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி—

(அ) கோரிக்கை எண் 21—மீனளம் .. 63—159

(ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு—

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன். .. 65,129—128

திரு. வி. கே. சின்னசாமி 66—76

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை 76—82

திரு. ஆர். சிங்காரம் 82—89

*திரு. இரா. மதிவாணன் 90—93

*திரு. வி. இராமசாமி 93—97

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. 97—106

திரு. மா. சுந்தரதாஸ் 106—114

திரு. ஜி. பழனிச்சாமி 114—120

திரு. அ. மு. ஹமீது இப்ராகிம் 120—122

திரு. கே. ஏ. செங்கோட்டையன் 122—129

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 159—160

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாண்டர்.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்,

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத்துறை.

2. கல்வி அமைச்சர் ... மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் ... மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4.	வருவாய்த்துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.
5.	போக்குவரத்துத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி.
6.	அறநிலையத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத்துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா.
7.	ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப் புறக் கடன் சம்பந்தப் பட்டவை.
8.	உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம் : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள்.
9.	வேளாண்மைத்துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.

TRUTH ALONE TRIUMPHS

10. பொதுப்பணித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட) திட்டப் பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் மின்சாரம்.

11. சமூக நலம்—ஊரகத் தொழிற் துறை அமைச்சர். — மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக் காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

12. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

13. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். — மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப் படுத்தல்.

14. செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. என். நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை அரசு அச்சகம் மற்றும் பால்வளம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

15.	கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.	மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு; மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம்.
16.	கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம்.

முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். — திரு. எல். கணேசன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu—Thiru P. C. ALEXANDER.

Members of the Council of Ministers.

1. Chief Minister ..	**The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise.
2. Minister for Education	**The Hon. Dr. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Officail Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology.
3. Minister for Law ..	**The Hon. Thiru S. J. SADIQ PASHA :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf.
4. Minister for Revenue	**The Hon. Thiru NANJIL K. MANOHARAN:** Revenue, District Revenue, Establishment, Deputy Collectors, Registration and Stamp Act.
5. Minister for Transport	**The Hon. Thiru M. KANNAPPAN :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing.
6. Minister for Hindu Religious and Charitable Endowments.	**The Hon. Thiru K. P. KANDASAMY :** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.

7. Minister for Rural Development and Local Administration.	**The Hon. Thiru KO. SI. MANI :** Municipal Admintstration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness.
8. Minister for Food and Co-operation.	**The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM :** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.
9. Minister for Agriculture.	**The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM :** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service, Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.
10. Minister for Public Works.	**The Hon. Thiru DURAIMURUGAN :** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works Highways and Electricity.
11. Minister for Social Welfare and Rural Industries.	**The Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADISAN :** Social Welfare including Children and Women's Welfare, Beggers' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.
12. Minister for Adi-Dravidar Welfare.	**The Hon. Dr. E. RAMAKRISHNAN :** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.
13. Minister for Public Health.	**The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI :** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control.

14. Minister for Information and Labour.	**The Hon. Thiru K. N. NEHRU :** Information and Publicity Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing, Government Press and Milk.
15. Minister for Animal Husbandry.	**The Hon. Dr. K. CHANDRASEKARAN :** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.
16. Minister for Handlooms and Urban Development.	**The Hon. Thiru S. THANGAVELU :** Handlooms, Textiles, Town Planning, Urban Development, Accommodation Control and Slum Clearance Board.
Parliamentary Secretary to Chief Minister.	**Thiru L. GANESAN.**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்:

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்

திரு. வீ. பெ. துரைசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்.

திரு. இரா. மோகன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

திரு. குமரி அனந்தன்.

திரு. உ. ரா. வரதராசன்.

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

டி-2 53—87—C

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி).

டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்.,	இணைச் செயலாளர்.
ஜானகிராமன், திரு. செ. சு., பி. ஏ., பி. எல்., ..	இணைச் செயலாளர்.
இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., ..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
இராமச்சந்திரன், திரு. ஆர். கே., ந .. பி.ஏ., பி.எல்.,	துணைச் செயலாளர்.
கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., .. பி.எல்.,	துணைச் செயலாளர்.
சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. ..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ.	துணைச் செயலாளர்.
கோவிந்தராஜன், திரு. ஆர்., ..	குழு அலுவலர்
அப்துல் சத்தார், திரு. ஜெ., .. பி.ஏ., பி.எல்.,	சார்புச் செயலாளர்
இராசாராமன், திரு. வி., பி.ஏ., பி.எல்.,	சார்புச் செயலாளர்.
கேசவராம், திரு. சு., பி.ஏ. ..	சார்புச் செயலாளர்.
சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. ..	சார்புச் செயலாளர்.
சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி, பி.எல்.,	சார்புச் செயலாளர்.
சுந்தரராஜன், திரு. கா. செ., .. பி.ஏ., பி.ஜி.எல்.	சார்புச் செயலாளர்.
முனிர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸி.,	சார்புச் செயலாளர்.
ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. ..	சார்புச் செயலாளர்.
ஜான், திரு. வ. சா., பி.ஏ. ..	சார்புச் செயலாளர்.
ஜேக்கப் ஆர்த்தர், திரு. தா., .. பி.ஏ., பி.எல்.,	சார்புச் செயலாளர்.
ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. ..	சார்புச் செயலாளர்.
வெங்கட்டராமன், திரு. கோ. ..	பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.
அரங்கநாதன், திரு. சு. பி,ஏ., பி.எல்., ..	தலைமை நிருபர் (குழுக்கள்).
ஜெயதேவ், திரு., பி.சி. ..	தலைமை நிருபர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி),

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
''அ''	
1 அங்கமுத்து, திரு. கே. ..	உளுந்தூர்பேட்டை (செ. வ.)
2 அசேன், திரு. ஜெ.	இராணிப்பேட்டை
3 அண்ணாதுரை, திரு. கா. ..	பட்டுக்கோட்டை
4 அண்ணாதுரை, டாக்டர் கே. ..	வரகூர் (செ.வ.)
5 அண்ணாநம்பி, திரு. ஆர். ..	அவிநாசி (செ.வ.)
6 அண்ணாமலை, திரு. எம். ..	அரூர் (செ.வ.)
7 அதியமான், திரு. ஆ. ..	சேடப்பட்டி
8 அப்துல்சமத், திரு. பா. ..	வாணியம்பாடி
9 அப்துல் லத்தீப், திரு. எம். ..	சேப்பாக்கம்
10 அர்ஜூனன், திரு. கே. ..	தாரமங்கலம்
11 அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி
12 அழகுவேலு, திரு. ச. ..	கண்டமங்கலம் (செ.வ.)
13 அறிவழகன், திரு. ஆ. ..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
14 அன்பழகன், டாக்டர் க. ..	அண்ணாநகர்
15 அன்பழகன், திரு. வ. ..	செய்யாறு
16 அன்பில் பொய்யாமொழி, திரு.	திருச்சிராப்பள்ளி-
''ஆ''	
17 ஆண்டியன், திரு. பெ. ..	ஆண்டிபட்டி
18 ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்
19 ஆறுமுகம், திரு. த. ..	அரியலூர்
20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ.	சேலம்-2

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
"இ"	
21 இரகுமான்கான், திரு. அ. ..	பூங்கா நகர்
22 இராசமாணிக்கம், திரு. இரெ...	குத்தாலம்
23 இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. ..	மேலூர்
24 இராசன், திரு. வி. பி. ..	ராஜபாளையம் (செ.வ.)
25 இராசு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.)
26 இராசு, திரு. வெ. ..	குளத்தூர் (செ.வ.)
27 இராசேந்திரன், திரு. அ. ..	போளூர்
28 இராதா, திரு. எஸ். ஆர். ..	மதுரை கிழக்கு
29 இராதாகிருஷ்ணன், திரு. டி. ..	சோழவந்தான்
30 இராமகிருஷ்ணன், டாக்டர் எ.	அச்சரப்பாக்கம் (செ.வ.)
31 இராமகிருஷ்ணன், திரு. நா. ..	கம்பம்
32 இராமச்சந்திரன், திரு. எம். ..	திருவோணம்
33 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	விளாத்திகுளம்
34 இராமச்சந்திரன், திரு. ந. ..	செஞ்சி
35 இராமசாமி, திரு. ஏ. எம். ..	ஆத்தூர்
36 இராமசாமி, திரு. கே. வி. ..	கரூர்
37 இராமசாமி, திரு. வி. ..	திருச்செங்கோடு
38 இராமசாமி, திரு. கே. ஆர். ..	திருவாடானை
39 இராமநாதன், திரு. மு. ..	கோவை மேற்கு
40 இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்
41 இராஜேந்திரன், திரு. கே. ஆர்.	பர்கூர்
42 இராஜேந்திரன், திரு. பி. வி. ..	வேதாரண்யம்
43 இளம்வழுதி, திரு. ..	எழும்பூர் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
"ஈ"	
44 ஈஸ்வரன், திரு. ஆர். ..	வாசுதேவநல்லூர் (செ.வ.)
"உ"	
45 உகம்சந்த், திரு. எஸ். டி. ..	மதுராந்தகம்
46 உதயசூரியன், திரு. தா. ..	சின்னசேலம்
47 உபயதுல்லா, திரு. எஸ். என். எம். ..	தஞ்சாவூர்
"ஏ"	
48 ஏகாம்பர ரெட்டி, திரு. எ. ..	பள்ளிப்பட்டு
"க"	
49 கண்ணப்பன், திரு. மு. ..	பல்லடம்
50 கண்ணன், திரு. எஸ். பி. ..	அணைக்கட்டு
51 கணபதி, திரு. என். ..	மயிலாப்பூர்
52 கணேசமூர்த்தி, திரு. என். ..	குறிஞ்சிப்பாடி
53 கணேசமூர்த்தி திரு. ஏ. ..	மொடக்குறிச்சி
54 கணேசன், திரு. எல். ..	ஒரத்தநாடு
55 கணேசன், திரு. க. சொ. ..	ஜெயங்கொண்டம்
56 கணேசன், திரு. சா. ...	தியாகராய நகர்
57 கணேசன், திரு. வே. ...	மங்களூர் (செ.வ.)
58 கந்தசாமி, திரு. கே. ..	கிணத்துக்கடவு
59 கந்தசாமி, திரு. கே. பி. ...	திருச்செந்தூர்
60 கரீம், திரு. எம். கே.	கூடலூர்
61 கருணாநிதி, டாக்டர் மு. ...	துறைமுகம்
62 கருப்பசாமி, திரு. எஸ். எஸ்...	சாத்தூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
''க''—தொடர்ச்சி.		
63	கருப்பையா மூப்பனார், திரு. ஜி.	பாபநாசம்
64	கன்னயைன், திரு. க. ..	தொட்டியம்
65	கஜபதி, திரு. டி.ஆர். ..	ஆற்காடு
66	காஞ்சனா, டாக்டர் க. ..	கிருஷ்ணகிரி
67	காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ்.	முதுகுளத்தூர்
68	காளியப்பன், திரு. பி. ..	ஒட்டன்சத்திரம்
69	கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து.	சிதம்பரம்
70	கிருஷ்ணன், திரு. சி. ..	ஓமலூர்
71	குணசேகரன், திரு. எஸ். ..	தலைவாசல் (செ.வ.)
72	குமரி அனந்தன், திரு. ..	சாத்தான்குளம்
73	குருநாதன், திரு. சு. ..	பாளையங்கோட்டை
74	குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. ..	பவானி
75	கோதண்டம், திரு. ஏ. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
76	கோபாலகிருஷ்ணன், திரு. வெ.	மேட்டுப்பாளையம்
77	கோவிந்தசாமி, திரு. சி. ..	திருப்பூர்
78	கோவிந்தசாமி, திரு. வி. சி. ..	காவேரிப்பட்டினம்
79	கோவிந்தராஜன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்
80	கோவிந்தன், திரு. வெ. ..	பேரணாம்பட்டு (செ.வ.)
''ச''		
81	சண்முகம், திரு. சி. ..	ஆலந்தூர்
82	சந்திரசேகர், திரு. வி. பி. ..	பொள்ளாச்சி
83	சந்திரசேகரன், டாக்டர் சு. ..	ஆலங்குடி
84	சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. ..	கடையநல்லூர்

தொடர் எண்ணும் தொகுதியின் பெயரும் உறுப்பினர்களின் பெயரும்.

(1)		(2)
'ச'—தொடர்ச்சி.		
85 சம்பத், திரு. ஏ. ஜி.	..	முசையூர்
86 சற்குணம், திருமதி எஸ். பி.	..	இராதாகிருஷ்ணன் நகர்
87 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.		உடுமலைப்பேட்டை
88 சாந்தகுமாரி, டாக்டர் த.	..	தாராபுரம் (செ.வ.)
89 சாமிநாதன், திரு. ஆர்.	..	திருமங்கலம்
90 சிங்காரம், திரு. ஆர்.	..	பேராவூரணி
91 சிவசுப்பிரமணியன், திரு. சா.		ஆண்டிமடம்
92 சிவலிங்கம், திரு. எஸ். ஆர்.	..	பனைமரத்துப்பட்டி
93 சின்னக்குழந்தை, திரு. மு.	..	பெரணமல்லூர்
94 சிவலோகம், திரு. எஸ்.	..	புவனகிரி
95 சின்னசாமி, திரு. கே.	..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
96 சின்னசாமி, திரு. ரா.	..	தர்மபுரி
97 சின்னசாமி, திரு. வி. கே.		பவானிசாகர்
98 சீரங்கன், திரு. எம்.		மேட்டூர்
99 சீனிவாசன், திரு. பெ.	..	சிவகாசி
100 சுந்தர், திரு. கே.	..	உத்திரமேரூர்
101 சுந்தரதாஸ், திரு. மா.		விளவன்கோடு
102 சுந்தரம், திரு. க.	..	பொன்னேரி (செ.வ.)
103 சுந்தரம், திரு. கே. ஆர்.	..	குடியாத்தம்
104 சுந்தரம், திரு. ப.	..	திருப்பத்தூர்
105 சுந்தரராஜ், டாக்டர் எஸ்.	..	பரமக்குடி (செ.வ.)
106 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே.		கன்னியாகுமரி
107 சுப்பிரமணியம், திரு. தூ. க.	..	சத்தியமங்கலம்
108 சுப்பிரமணியன், திரு. அ.லெ.	..	திருநெல்வேலி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)

'ச'—தொடர்ச்சி.

109	சுப்பிரமணியன், திரு. வே. நா.	பெருந்துறை
110	சுப்பு, திரு. ஏ. ...	ராசிபுரம்
111	சுப்புலட்சுமி செகதீசன், திருமதி	ஈரோடு
112	சுப்பையா, திரு. ஆலவயல் ..	திருமயம்
113	செங்குட்டுவன், திரு. ஏ. ...	மயிலாடுதுறை
114	செங்கைசிவம், திரு. ..	பெரம்பூர் (செ.வ.)
115	செங்கோட்டையன், திரு. கே. ஏ.	கோபிசெட்டிபாளையம்
116	சேட்டு, திரு. எம். ..	செங்கம் (செ.வ.)
117	சொக்கர், திரு. ரா. ..	விருதுநகர்
118	சௌந்திரபாண்டியன், திரு. ந.	சமயநல்லூர், (செ.வ.)

'ட'

119	டேனியல்ராஜ், திரு. எஸ். ..	ஸ்ரீவைகுண்டம்

'த'

120	தங்கபாண்டியன், திரு. வே. ..	அருப்புக்கோட்டை
121	தங்கம், திரு. அ. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்
122	தங்கராஜன், திரு. எஸ். ஏ. ..	திண்டுக்கல்
123	தங்கராஜு, திரு. ஏ. ...	காட்டுமன்னார்கோயில் (செ.வ.)
124	தங்கவேல், திரு. எம். ..	முசிறி
125	தங்கவேல், திரு. என். ...	குன்னூர் (செ.வ.)
126	தங்கவேலு, திரு. ச. ...	சங்கரநாயனார்கோவில் (செ.வ.)
127	தம்புசாமி, திரு. வி.	திருவாரூர் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1)		தொகுதியின் பெயர். (2)
'த'—தொடர்ச்சி		
128 தமிழ்க்குடிமகன், முனைவர் மு.		இளையான்குடி
129 தமிழ்மணி, திரு. வீ.	..	செங்கல்பட்டு
130 தயாளன், திரு. ஏ. சி.	..	ஆரணி
131 தனபாலன், திரு. கே.ஆர்.ஜி.		சேலம்-1
132 தனராஜ், திரு. வி.	..	வந்தவாசி (செ.வ.)
133 திருநாவுக்கரசு, திரு. எஸ்.	..	அறந்தாங்கி
134 திருமூர்த்தி, திரு. து.	..	திருப்போரூர் (செ.வ.)
135 திருவேங்கடம், திரு. பெ. சு.		கலசப்பாக்கம்
136 துரை சந்திரசேகரன், திரு.	..	திருவையாறு
137 துரைசாமி, திரு. வீ. பெ.	..	நாமக்கல் (செ.வ.)
138 துரைபாண்டியன், திரு. பெ.		மானாமதுரை (செ.வ.)
139 துரைமுருகன், திரு.	..	காட்பாடி
140 துரை ராமசாமி, திரு.	..	வெள்ளக்கோவில்
141 தென்னரசு, திரு. எஸ். எஸ்.		திருப்பத்தூர்
142 தேவராஜ், திரு. வி. எம்.	...	வேலூர்
'ந'		
143 நஞ்சப்பன், திரு. ந.	..	பெண்ணாகரம்
144 நடராசன், திரு. ஆ.	..	பேரூர்
145 நடராசன், திரு. பொ.	..	திருத்தணி
146 நடேசன், திரு. எகால். மு.	..	ரிஷிவந்தியம்
147 நடேசன், திரு. ஆர்.	..	திருவட்டாறு
148 நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ.		பண்ருட்டி
149 நாராயணன், திரு. ராம.	...	காரைக்குடி
150 நூர்முகமது, திரு. செ.	..	பத்மநாபபுரம்
151 நேரு, திரு. கே. என்.	...	லால்குடி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
'ப'		
152 பஞ்சாட்சரம், திரு. ஆர்.	..	மேல்மலையனூர்
153 பழனிச்சாமி, திரு. டி. கே.		திருவொற்றியூர்
154 பழனிச்சாமி. திரு. ஜி.		திருத்துறைப்பூண்டி (செ.வ.)
155 பழனிசுவாமி, திரு. க.	..	எடப்பாடி
156 பழனிவேல், திரு. என்.	..	பழனி (செ.வ.)
157 பன்னீர்செல்வம், திரு. மா.	..	சீர்காழி (செ.வ.)
158 பாண்டியன், திரு. பி. எச்.	..	சேரன்மாதேவி
159 பாப்பா உமாநாத், திருமதி		திருவரம்பூர்
160 பாப்பா சுந்தரம், திரு. அ.	..	குளித்தலை
161 பால்ராஜ், திரு. சோ.	..	மதுரை-மத்திய
162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே.		திருநாவலூர்
163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர்.		பொங்கலூர்
164 பாலையா, திரு. ஆ.	..	கொளச்சல்
165 பிச்சாண்டி, திரு. கே.	..	திருவண்ணாமலை
166 பிச்சைமுத்து திரு. ரெ.	..	பெரம்பலூர் (செ.வ.)
167 பீட்டர் அல்போன்ஸ், திரு. சா.		தென்காசி
168 புகழேந்தி, திரு. இ.	..	கடலூர்
169 பூவராகன், திரு. கோ.	..	விருத்தாசலம்
170 பெரியசாமி, திரு. என்.	..	தூத்துக்குடி
171 பெரியசாமி, திரு. ஐ.	..	ஆத்தூர்
172 பெரியசாமி, திரு. வே.	..	அந்தியூர் (செ.வ.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்		தொகுதியின் பெயர்
(1)		(2)
'ப'—தொடர்ச்சி.		
173	பெரியண்ணன், திரு. அ. ...	புதுக்கோட்டை
174	பெருமாள், திரு. செ. ...	ஏற்காடு (ஆ.வா.)
175	பொன்முடி, திரு. டி. ...	தண்டராம்பட்டு
176	பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க.	விழுப்புரம்
177	பொன். முத்துராமலிங்கம், திரு.	மதுரை மேற்கு
178	பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.	நிலக்கோட்டை (செ.வ.)
179	பொன்னுசாமி, பேராசிரியர் க.	மருங்காபுரி
180	பொன்னுபிள்ளை, திரு. ஜி.	தேனி
'ம'		
181	மகேந்திரன், திரு. ஆர். ..	நாட்ராம்பள்ளி
182	மணி, திரு. ஆச்சியூர் எம். ..	நாங்குநேரி
183	மணி, திரு. கே. ஏ. ..	கபிலர்மலை
184	மணி, திரு. கோ. சி. ..	கும்பகோணம்
185	மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.)
186	மதிவாணன், திரு. இரா. ..	இராயபுரம்
187	மலர்மன்னன், திரு. அ. ..	திருச்சிராப்பள்ளி-1
188	மனோகரன், திரு. நாஞ்சில் கி.	திருவல்லிக்கேணி
189	மனோகரன், திரு. பா. ..	சிவகங்கை
190	மாசிலாமணி, டாக்டர் சி. ரா.	திண்டிவனம்
191	மாசிலாமணி, திரு. தி. ரா. ..	பூந்தமல்லி
192	மாதப்பன், திரு. கொ. ..	பாலக்கோடு
193	மாரப்பன், திரு. பி. ..	காங்கேயம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
'ம'—தொடர்ச்சி.	
194 மாரிமுத்து, திரு. அ. ..	வானூர் (செ.வ.)
195 முகமது சித்திக், திரு. எம். ..	பூம்புகார்
196 முத்துசாமி, திரு. ப. ..	வேடசந்தூர்
197 முத்தையன், திரு. எம். ..	சங்கராபுரம்
198 முத்தையா, திரு. எம். ..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
199 முருகேசன், திரு. பொ. ..	காஞ்சிபுரம்
200 முல்லைவேந்தன், திரு. வ. ..	மொரப்பூர்
201 முனிரத்தினம், திரு. ஆ. மு.	சோளிங்கர்
202 முனிரத்தினம், திரு. எஸ். ஆர்.	திருவள்ளூர்
203 மூக்கன், திரு. ஆர். ..	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
204 மூக்கையா, திரு. எல். ..	பெரியகுளம்
205 மோகன், திரு. இரா. ..	சிங்காநல்லூர்
206 மோசஸ், டாக்டர் எம். ..	நாகர்கோவில்
'ய'	
207 யசோதா செல்லப்பா, திருமதி	வலங்கைமான் (செ.வ.)
'ர'	
208 ரமணி, திரு. கே. ..	கோவை (கிழக்கு)
209 ரமணி நல்லதம்பி, திருமதி ..	ராதாபுரம்
210 ரவி அருணன், திரு. கே. ..	அம்பாசமுத்திரம்
211 ராமச்சந்திரன், திரு. கே.	மன்னார்குடி
212 ராமச்சந்திரன், திரு. சி. ..	திருப்பரங்குன்றம்
213 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந.	ஓசூர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
'ர'—தொடர்ச்சி	
214 ராமசாமி, திரு. மொஞ்சனூர், ப. ..	அரவக்குறிச்சி
215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். ..	ஆலங்குளம்
216 ராஜு, திரு. எச். எம். ..	உதகமண்டலம்
217 ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே.	இராமநாதபுரம்
'ல'	
218 லட்சுமி, திருமதி பி. ..	வால்பாறை (செ.வ.)
'வ'	
219 வரதராசன், திரு. உ. ரா. ..	வில்லிவாக்கம்
220 வரதராஜன், திரு. ஆர். ..	சங்கரி (செ.வ.)
221 வல்லரசு, திரு. பி. என். ..	உசிலம்பட்டி
222 விஜயராகவன், திரு. பொன்.	கிள்ளியூர்
223 விஜயேந்திரையா, திரு. டி. சி.	தளி
224 வீராசாமி, திரு. ஆற்காடு நா.	புரசைவாக்கம்
225 வீரையன், திரு. கோ. ..	நாகப்பட்டினம்
226 வெங்கடாசலம், திரு. பெ. ..	வீரபாண்டி
227 வெங்கடேஸ்வர தீட்சிதர். திரு. ஒய்.	ஸ்ரீரங்கம்
228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. ..	தொண்டாமுத்தூர்
229 வேணு, திரு. கி. ..	கும்மிடிப்பூண்டி
230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. ..	தாம்பரம்
'ஸ'	
231 ஸ்டாலின், திரு. மு. க. ..	ஆயிரம் விளக்கு

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
'ஜ'	
232 ஜெயலலிதா, செல்வி ஜெ.	போடிநாயக்கனூர்.
'ஹ'	
233 ஹமீது இப்ராகிம், திரு. அ.மு.	கடலாடி.
'ஸ்ரீ'	
234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். ..	சைதாப்பேட்டை
235 ஆஸ்கார், சி. நிக்லி, திரு. ..	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி ... தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பங்குனி 22, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 5, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் ''

யாவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புகின்றவர் தம்மோடு பழகியவர் தனக்கு நஞ்சு இடக் கண்டும் அதை உண்டு அமைவர்.

1 வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெண்களுக்குப் பட்டப் படிப்பு துவங்குதல்.

*1668 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெண்களுக்குப் பட்டப் படிப்புத் துவங்க அரசு பல்கலைக் கழகத்தை வற்புறுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஏற்கனவே பட்டப் படிப்பு இருந்தது. எந்தக் காரணத்தாலோ அது மூடப்பட்டு விட்டது? எந்த வருடத்திலே மூடப் பட்டது? அரசாங்கம் மூடவேண்டும் என்று அந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஏதாவது உத்திரவு பிறப்பித்ததா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்கள், அங்கேயுள்ள ஆட்சிக் குழு தருகிற ஆலோசனையின் அடிப்படையில் அந்தந்தக் காலத்தி

னுடையத் தேவையைக் கருதி உருவாக்கப்படுகின்றன. பட்டப் படிப்பு வகுப்புகளும் பட்டத்திற்கு முற்பட்ட படிப்பு வகுப்பு களும் அந்தப் பல்கலைக் கழகத்திலே ஒரு காலத்திலே இருந்தன என்றுச் சொன்னாலும், மேல் பட்டப் படிப்புகளும், தொழில் படிப்புகளும் உருவாக்குகிற ஒரு நிலைமை ஏற்பட்டபோது, தொடர்ந்து வேறு பல கல்லூரிகள் இருக்கிற காரணத்தால், மேல் பட்டப் படிப்பு அதே போல் ஆய்வுப் படிப்புகள், ஆகியவை அந்தப் பல்கலைக் கழகத்திலே ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு மேல் படிக்கக்கூடிய அளவுக்கு அதிகமான அளவில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, அது பல்கலைக் கழகத்தினுடைய முடிவு என்ற அடிப்படையில்தான் தேவைக்கு ஏற்ப செய்யப்படுகிற மாற்றத்திலே இடம் பெறுகிறது.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தினுடைய விதியில் எத்தனை மாணவர்கள் சேர்கிறார்களோ, அதிலே 75 சதவீதம், குறைந்தபட்சம் அந்த உணவு விடுதியிலே தங்கிப் படிக்க வேண்டிய நியதி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்திலே பயின்றவர்கள், அங்கே இருந்தவர்கள், அந்த ஊர்க்காரர்கள், அடிக்கடி சென்று வருகிறார்கள். இப்போது நிதியில்லை என்றுகூடச் சொல்ல முடியாது. இது வசதி இல்லை எனறு கூட சொல்ல முடியாது. தற்போது பெண் களுக்குத் தனியாக அதிக கவனம் செலுத்துகின்ற இந்தச் சம யத்திலே பேராசிரியர் அவர்கள் வற்புறுத்தினால், இந்த ஆண்டே அவர்கள் அந்தப் பட்டப் படிப்பை அங்கே துவங்க வசதியாக இருக்கும். மிகவும் பின்தங்கிய மாவட்டத்திலே ஒரு நல்ல நிலையை இது உருவாக்கும் என்பதாலே, இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொருவருடைய நியாயமான வேண்டுகோளுக்கும் எந்த ஒரு அமைப்பையும் எளிதாகச் செவிசாய்க்க வைக்க முடியாது. வேண்டுகோள் நியாயமாக இருக்கலாம். இப்போது தென் ஆற்காடு மாவட்டத்திலே கடலூரிலே ஒரு தனியார் மகளிர் கல்லூரி இருப்பதாக நான் அறிகிறேன். விழுப்புரத்திலே ஒரு தனியார் கல்லூரி ஒன்று மகளிருக்கென துவங்கப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றையும்விட பட்டப் படிப்பு நடத்தவேண்டும் என்றால் உதவித் தொகையை, அதாவது ‘‘எய்டட் காலேஜ்’’ என்ற முறையில் உதவித் தொகையைத் தர வேண்டிய நிலைமை அரசுக்கு இருக்கிறது. எனவே, அந்த முறையிலே அவர்களே ஒத்துக்கொண்டு செய்வதாக இருந்தாலுங்கூட அரசு ஆலோசிக்க வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 5]

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், ஏனைய பல்கலைக் கழகங்களிலும் பணிபுரியக்கூடிய ஹாஸ்டல் ஊழியர்கள் தங்களை பல்கலைக் கழக ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் என்றும் பல்லாண்டுக்காலமாகப் பணிபுரியக்கூடியவர்கள் தங்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்றும் கோரி, மகஜரை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதுகுறித்து, மேலும், மேலும், மகஜர்களை முதல்வர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அண்மையிலே அவர்கள் தொடர் உண்ணாவிரதம் சென்னையிலே இருந்தார்கள். அவர்களுடைய பிரச்சினையை அரசு தீர்க்க அவர்களுக்கான ஒரு சட்டத்தை கொண்டுவர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை மூலக் கேள்வியோடு தொடர் உடையது அல்ல. இருந்தாலும் அவர்களுக்கும் எனக்கும் அக்கறை உள்ள பிரச்சினை, முடியுமா என்ற கேள்வியிலேதான் நாங்கள் இரண்டு பேர்களும் இருக்கிறோம்.

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழக ஊழியர்களுக்கு ஊதியம் வரையறுத்தல்.

*4568 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகத்தில் 1982-லிருந்து பணிபுரியும் 200 பட்டதாரி உதவியாளர்களுக்கு ஊதியம் வரையறுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (Societies Registration Act)படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். எனவே, பதிவுச் சட்டத்தின், விதிகள் விதிமுறைகளை ஒட்டியே இயங்க முடியும். இக்கழகத்தின் பணியாளர்கள், அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டவர்களாக இல்லை. பணியாளர்களின் நியமனமும் சட்ட நிபந்தனைகளும் உதவி மற்றும் ஆலோசனைக் கழக விதிமுறை 17-ன்கீழ் வரையறுக்கப்பட்டவாறு இதன் தலைவரால் (தமிழ்நாடு மாநில ஆளுநர்) நிர்வாகக் குழுவின் பரிந்துரையின் பேரில் முடிவு செய்யப்படுகிறது.

1990 ஏப்ரல் 5]

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், ஏனைய பல்கலைக் கழகங்களிலும் பணிபுரியக்கூடிய ஹாஸ்டல் ஊழியர்கள் தங்களை பல்கலைக் கழக ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் என்றும் பல்லாண்டுக்காலமாகப் பணிபுரியக்கூடியவர்கள் தங்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்றும் கோரி, மகஜரை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதுகுறித்து, மேலும், மேலும், மகஜர்களை முதல்வர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அண்மையிலே அவர்கள் தொடர் உண்ணாவிரதம் சென்னையிலே இருந்தார்கள். அவர்களுடைய பிரச்சினையை அரசு தீர்க்க அவர்களுக்கான ஒரு சட்டத்தை கொண்டுவர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை மூலக் கேள்வியோடு தொடர் உடையது அல்ல. இருந்தாலும் அவர்களுக்கும் எனக்கும் அக்கறை உள்ள பிரச்சினை, முடியுமா என்ற கேள்வியிலேதான் நாங்கள் இரண்டு பேர்களும் இருக்கிறோம்.

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழக ஊழியர்களுக்கு ஊதியம் வரையறுத்தல்.

*4568 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகத்தில் 1982-லிருந்து பணிபுரியும் 200 பட்டதாரி உதவியாளர்களுக்கு ஊதியம் வரையறுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (Societies Registration Act)படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். எனவே, பதிவுச் சட்டத்தின், விதிகள் விதிமுறைகளை ஒட்டியே இயங்க முடியும். இக்கழகத்தின் பணியாளர்கள், அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டவர்களாக இல்லை. பணியாளர்களின் நியமனமும் சட்ட நிபந்தனைகளும் உதவி மற்றும் ஆலோசனைக் கழக விதிமுறை 17-ன்கீழ் வரையறுக்கப்பட்டவாறு இதன் தலைவரால் (தமிழ்நாடு மாநில ஆளுநர்) நிர்வாகக் குழுவின் பரிந்துரையின் பேரில் முடிவு செய்யப்படுகிறது.

9–05 மணி

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவில் 1982–லிருந்து பணிபுரிந்து வருகின்ற 200 பட்ட தாரி உதவியாளர்களுக்கு ஊதியம் வரையறுக்கப்படவில்லை. அவர்களுக்கு ஊதியம் வரையறுக்கப்படுமா? அதற்கான உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல அவர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. அவர்கள் கோவாப்பிரேட்டிவ் சொசைட்டி ஆக்டின் படி பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் பணியாற்றக் கூடியவர்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல 200 பேர்கள் அங்கே பணியாற்றவில்லை. எனக்கு கிடைத்திருக்கிற தகவலின்படி 196 பேர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுடைய ஊதிய விகிதத்தைப் பொறுத்தவரையில் 1–6–1989 முதல் திருத்திய ஊதிய விகிதங்களைக் கொடுத்து வருகிறார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்தது 200, நான்கு தான் குறைவாக இருக்கிறது. அது கூட்டுறவு இயக்கமாக இருந்தாலும் அரசினுடைய அங்கம்தான். ஆகவே, தான் அரசினுடைய அனைத்து அலுவலர்களுக்கும் கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் சொல்லுகிறேன். ஆகவே, அவர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அரசு ஊழியர்களாக ஆக்குகிற எண்ணமும் கிடையாது. அதை அந்த நிறுவனமும் ஏற்றுக்கொள்ளாது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகத்தின் மூலமாக எவ்வளவு பேர் இதுவரை பயன்பெற்றுள்ளார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு லீகல் எய்டு சொசைட்டியில் வேலை பார்ப்பவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் தரப்படுகிறது. அதனால் அவர்கள் சில வழக்கறிஞர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு வழக்குகளை அவர்களுக்கே கொடுத்து

990 ஏப்ரல் 5]

இலவச ஆலோசனை வழங்கும்படி தருகிறார்கள். இது பல தவறுகள் நடைபெறுவதற்கு வழி கோலுகிறது. எனவே அவர்கள் ஏழ்மையை கருத்தில் கொண்டும் இப்படிப்பட்ட தவறு களை நிறுத்துவதற்காகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி தருவதற்கான நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, 1-6-1989 முதல் தமிழ்நாடு சட்ட உதவி ஆலோ சனைக் கழகத்தின் பணியாளர்களின் ஊதிய விகிதம் — முதுநிலை நிர்வாக உதவியாளர்களுக்கு 615-20-920 ஆக இருந்த சம்பள விகிதம் தற்போது 950 என்ற விகிதத்தில் 950 முதல் 1,200 வரை என்று அந்த ஊதிய விகிதத்தைத் திருத்தியிருக்கிறார்கள். அதே போல் ஜூனியர் அசிஸ்டன்டுகளுக்கும் அது மாற்றப் பட்டிருக் கிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது அது கூட்டுறவுச் சட்டத்திலே பதிவு பெற்ற சொசைட்டி என்று சொன்னார்கள். அது கூட்டுறவு சொசைட்டியா அல்லது சொசைட்டிஸ் ரெஜிஸ்ட்டிரேஷன் ஆக்டிலே பதிவு செய்யப் பட்டதா என்று தெரியவில்லை. இருந்தாலும் கூட அந்த சொசைட்டிக்கு, அது தனி அமைப்பாக இயங்கினாலும், அரசு அளிக்கக்கூடிய மானியத்தின் மூலமாகத்தான் அவர்களுக்கு ஊதியங்கள் வழங்கப்படுகின்றன. இப்போது வழங்கப்படுகிற ஊதியம்—அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க முடியாவிட் டாலும் கூட மானியத்தை அதிகரிப்பதன் மூலமாக அந்த ஊழியர்களுக்கு ஊதிய விகிதத்தை அதிகரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது என்ற குறிப்பைத் தந்திருக்கிறார்கள். ஊதிய விகிதத்தைப்பொறுத்தவரையில் இப்போதுபழைய விகிதம் மாற்றப்பட்டிருக்கிறது. அரசு மானியம் ஏற்கெனவே கிட்டத். தட்ட 25 லட்சம் ரூபாய்க்கு மேல் மானியம் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல் கொடுப்பதற்கு இப்போதைய நிதி நிலையைப் பொறுத்தவரையில் இயலாது.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட உதவி ஆலோசனைக் குழு விற்கு ஆலோசனை நடத்துவதற்குக்கூட இட வசதி இல்லாமல், தமிழகத்திலே பல ஆலோசனைக் கழகங்கள் இயங்கிக்கொண் டிருக்கின்றன. அவற்றிற் கெல்லாம் தனியாகக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அப்படி எந்தவிதமான புகாரும் வரவில்லை. ஆலோசனைக் குழு என்பது அங்கு உட்கார்ந்துகொண்டு ஆலோசனை சொல்வது அல்ல. குறிப்பிட்ட வழக்குகளிலே உதவி செய்வதற்காக அந்த வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் வழக்கு மன்றங்களிலே சென்று வாதிடுவதுதான் முறையாக இருந்து வருகிறது. எனவே அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லை.

9-10 மணி

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவசக் கழகம் மற்றும் ஆலோசனைக் குழுவின் மூலமாக வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. ஆகவே சென்னையிலிருந்து அந்தக் குறிப்பிட்ட மனுவை அல்லது கோப்பை அனுப்புகின்ற நேரத்தில் அந்தந்த கிளைக் கழகத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு வழக்கறிஞர் போடவேண்டும் என்ற ஒரு ஆலோசனை வழங்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகுஉறுப்பினர் சொல்லுவதுபோல் குறிப்பிட்ட ஒன்று இரண்டு பிரச்சினைகள் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. ஒரு குறிப்பிட்ட வழக்கிலே பாப்பர் சூட் பைல் செய்து நம்பர் ஆவதற்கு 6 மாத காலத்திற்கு மேல் ஆகிவிட்டது. உடனடியாக அது தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அறிவுரை குழுவிற்கு அறிவுறுத்தப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

சிறைச்சாலைகளுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உணவுப் பொருட்கள்.

*5323 திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு சட்டத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உணவுப் பொருட்கள் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலுள்ள எல்லா மத்திய சிறைகளுக்கும், அரிசி, சர்க்கரை, ரவை போன்ற கட்டுப்பாடு செய்யப்பட்ட, உணவுப் பொருட்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக

[1990 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அப்படி எந்தவிதமான புகாரும் வரவில்லை. ஆலோசனைக் குழு என்பது அங்கு உட்கார்ந்துகொண்டு ஆலோசனை சொல்வது அல்ல. குறிப்பிட்ட வழக்குகளிலே உதவி செய்வதற்காக அந்த வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் வழக்கு மன்றங்களிலே சென்று வாதிடுவதுதான் முறையாக இருந்து வருகிறது. எனவே அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லை.

9-10 மணி

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவசக் கழகம் மற்றும் ஆலோசனைக் குழுவின் மூலமாக வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. ஆகவே சென்னையிலிருந்து அந்தக் குறிப்பிட்ட மனுவை அல்லது கோப்பை அனுப்புகின்ற நேரத்தில் அந்தந்த கிளைக் கழகத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு வழக்கறிஞர் போடவேண்டும் என்ற ஒரு ஆலோசனை வழங்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,மாண்புமிகுஉறுப்பினர் சொல்லுவதுபோல் குறிப்பிட்ட ஒன்று இரண்டு பிரச்சினைகள் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. ஒரு குறிப்பிட்ட வழக்கிலே பாப்பர் சூட் பைல் செய்து நம்பர் ஆவதற்கு 6 மாத காலத்திற்கு மேல் ஆகிவிட்டது. உடனடியாக அது தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அறிவுரை குழுவிற்கு அறிவுறுத்தப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

சிறைச்சாலைகளுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உணவுப் பொருட்கள்.

*5323 திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு சட்டத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உணவுப் பொருட்கள் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலுள்ள எல்லா மத்திய சிறைகளுக்கும், அரிசி, சர்க்கரை, ரவை போன்ற கட்டுப்பாடு செய்யப்பட்ட, உணவுப் பொருட்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக

1990 ஏப்ரல் 5]

வும், பருப்பு, எண்ணை போன்றவை கதர் கிராமத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், கொள்முதல் செய்யப்படு கிறது. மற்ற பொருட்கள், மத்திய சிறைகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பெறப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் உணவுப் பொருட்கள் மற்றும் சிறைகளுக்கு வேண்டிய மற்றப் பொருட்கள் கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய கவனத்திற்கு வருவது இன்னும் சில நேரங்களில் டெண்டர் மூலமாக, தனியார் இடத்திலிருந்து வாங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த முறை அறவே ஒழிக்கப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில வேளைகளில் டெண்டர் மூலமாக கொடுக்கின்ற பொருட்களின் விலை குறைவாக இருக் கிறது. கிளைச் சிறைகளைப் பொறுத்தவரையில் அரிசி, மற்றும் எண்ணெய் வகைகள், கதர் கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் மற்றவை வருடாந்திர ஒப்பந்தக்காரர்கள் மூலமாகவும் பெறப்படுகின்றன.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வாங்கக்கூடிய பொருட்கள் சிறையில் உள்ள கைதிகளுக்குப் பயன்படுவதற்குப் பதிலாக அதிகாரி களால் திருடப்படுவதாக பல ஆண்டுக் காலமாக செய்திகள் வந்து அதன் மூலமாக சிறைச்சாலைகளில் ஒரு அமைதி இன்மை ஏற்பட்டு இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அது சென்ற ஆட்சியோடு நின்றிடாமல் இந்த ஆட்சியிலும் தொடரா மல் நிறுத்தப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்களில் குற்றச் சாட்டுகள் கூடாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஜெயிலுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் சப்ளை செய்யப்படும் பொருட்களின் தரம் கம்மியாக இருக் கிறது. பிரைவேட் செக்டார் அதாவது டெண்டர் மூலமாக சப்ளை செய்யப்படும் பொருட்களின் தரம் நல்லதாக இருக்கும். ஏன் என்றால் கூட்டுறவுத் துறையில் பேரலல் கவர்ன்மெண்ட் செய்வதுபோல் அவர்கள் நினைக்கிறார்கள். அங்கே கூட்டுறவுத் துறையில் பணிபுரிகின்ற அதிகாரிகள், சிப்பந்திகள் என்ன நினைக் கிறார்கள் என்றால் நாம் பேரலல் கவர்ன்மெண்டு செய்கிறோம்.

நம்மை கேட்பதற்கு ஒருவரும் இல்லை என்று சொல்லி எந்தச் சாமானாக இருந்தாலும் தகுதி அற்ற சாமான்கள் கோவில்கள் மற்ற பொது நிறுவனங்களைப் போல சிறைச்சாலைகளுக்கும் சப்ளை செய்யப்படுகிறது, ஆகவே அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் சொல்வது போல் கருத்து ஒன்று இருந்து வருகிறது. இதை அரசு மூலமாக அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைகளுக்கு உணவுப்பொருட்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அளிப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில் கிளைச் சிறைகளிலும், மத்திய சிறையிலும் முக்கியப் பொருட்கள் குறிப்பாக காய்கறிகள் இன்றைக்கு தனியார்த் துறை மூலமாகத்தான் வினியோகிக்கப்படுகின்றன. அவைகளையும் கூட்டுறவுத் துறையில் வாங்குவதற்கு, அவற்றை முறையாக வாங்குவதற்கு என்று கண்காணிப்பதற்காக, ஒரு குழுவை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே குழு பெரியப் பிரச்சினையாக இருக்கிறது. இன்னும் குழுக்களை உருவாக்கி இன்னும் பெரிய பிரச்சினையாக்க விரும்பவில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் கூட்டுறவுத் துறையின் மூலமாக வாங்கப்படுகிறது. எங்கெல்லாம் சாத்தியம் இல்லையோ அங்கே தனிப்பட்ட முறையில் வாங்கப்படுகிறது. ஆனால் குறிப்பாக தரத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

9.15 மணி

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிறைச்சாலைகளிலே கூட்டுறவுத் துறையின் மூலமாக அரிசி, பருப்பு அல்லது சர்க்கரை போன்ற உணவுப் பொருட்கள் வாங்கப்படுவது உண்மை என்றாலும்கூட எதிர்பாராத நிலையில் ஏதேனும் கிளர்ச்சிகள் ஏற்பட்டு ஆயிரக் கணக்கானவர்கள் திடீரென்று சிறைச்சாலைகளுக்குள்ளே ஒரு பெரும் கூட்டம் வருகிறபோது, அப்போது அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை தனியாரிடத்திலேயிருந்து பெறுவதுதான் நடைமுறை வழக்கமாக இருக்கிறது. எந்தச் சூழ்நிலையிலும் சிறைச்சாலையில் இருக்கின்ற கைதிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலம்தான் எல்லா பொருள்களையும் வாங்குவது என்பதை ஒரு முறையாக மேற்கொள்ள அரசு தகுந்த உத்தரவு

LEGISLATURE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 5]

பிறப்பிக்குமா என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ ராமநாதன் அவர்கள் அடிக்கடி சிறைச்சாலைக்கு சென்று வந்தவர்கள். சிறையைப் பற்றிய அதிக அனுபவம் அவர்களுக்கு உண்டு. ஆகவே, அவர்கள் கூறியதை மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்திரவாதத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே வழங்கப்படும் உணவுப் பொருள்கள், கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியாரிடத்திலோ வாங்கக்கூடிய பொருள்கள், அரிசி, பருப்பு போன்ற பொருட்கள் மிகவும் கெட்டு விடுகின்ற காரணத்தினால், அதையே சிறைக்கைதிகளுக்குப் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. அது தவிர்க்கப்படுமா? அதே நேரத்தில் கெட்டிருக்கக்கூடிய பொருட்களை, யார் விநியோகம் செய்தார்களோ அவர்களுக்குத் திருப்பி அனுப்பி அவர்களிடமிருந்து அரசு நஷ்டஈடு பெறுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொண்ட வகையில், அன்றாடம் எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் வேண்டுமென்று கேட்டு வாங்குகிறார்கள். அப்படி தவறு நேர்ந்திருக்குமேயானால் அதை சுட்டிக்காட்டினால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியில் உள்ள குறைகள் நிவர்த்திக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே உள்ள கைதிகளுடைய உணவு அளவை கூட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி ஒரு செயற்குறிப்பு தற்போது இல்லை.

மக்களது பிரச்சனைகளுக்காக இயக்கங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு உணவு வழங்க ஒதுக்கப்படும் தொகை.

*7682 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மக்களது பிரச்சினைகளுக்காக இயக்கங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு உணவு வழங்க மிக சொற்பத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

பிறப்பிக்குமா என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் அடிக்கடி சிறைச்சாலைக்கு சென்று வந்தவர்கள். சிறையைப் பற்றிய அதிக அனுபவம் அவர்களுக்கு உண்டு. ஆகவே, அவர்கள் கூறியதை மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்திரவாதத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே வழங்கப்படும் உணவுப் பொருள்கள், கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியாரிடத்திலோ வாங்கக்கூடிய பொருள்கள், அரிசி, பருப்பு போன்ற பொருட்கள் மிகவும் கெட்டு விடுகின்ற காரணத்தினால், அதையே சிறைக் கைதிகளுக்குப் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. அது தவிர்க்கப்படுமா? அதே நேரத்தில் கெட்டிருக்கக்கூடிய பொருட்களை, யார் விநியோகம் செய்தார்களோ அவர்களுக்குத் திருப்பி அனுப்பி அவர்களிடமிருந்து அரசு நஷ்டஈடு பெறுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொண்ட வகையில், அன்றாடம் எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் வேண்டுமென்று கேட்டு வாங்குகிறார்கள். அப்படி தவறு நேர்ந்திருக்குமேயானால் அதை சுட்டிக்காட்டினால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியில் உள்ள குறைகள் நிவர்த்திக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே உள்ள கைதிகளுடைய உணவு அளவை கூட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி ஒரு செயற்குறிப்பு தற்போது இல்லை.

மக்களது பிரச்சனைகளுக்காக இயக்கங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு உணவு வழங்க ஒதுக்கப்படும் தொகை.

*7682 திருமதி பாப்பா உமாநாத் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மக்களது பிரச்சினைகளுக்காக இயக்கங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு உணவு வழங்க மிக சொற்பத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

[1990 ஏப்ரல் 5

(ஆ) ஆம் எனில், அத்தொகையை அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மக்களது பிரச்சினைகளுக்கு இயக்கங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு உணவு வழங்க மிக சொற்பத் தொகை அரசால் வழங்கப்படுகிறது என்பது சரியல்ல,

(ஆ) இவ்வினா எழவில்லை.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இயக்கங்களில் ஈடுபட்டு, காலையில் பிடித்து மாலையில் விடக்கூடியவர்கள், காவல் நிலையங்களிலும் சென்னையிலே கமிஷனர் அலுவலகத்திலும் வைக்கப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போல 80 பைசாவோ 90 பைசாவோ ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும், சின்ன குழந்தைகளுக்குக்கூட போதாத அளவு சிறிய பொட்டலத்தில்தான் சாப்பாடு தரப்படுவதாகவும், நானே பலமுறை சென்றபோது இதை பற்றி கேட்டபோது, குறைவாக ஒதுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேல் கூடுதலாக ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கேள்வி இரண்டு அம்சங்களை உடையது. ஒன்று, சிறைக்குச் சென்ற பிறகு; மற்றொன்று சிறைக்குப் போவதற்கு முன்னால், கமிஷனர் அலுவலகத்தைக் பொறுத்த அளவில் நான் பதில் சொல்ல முடியாது. சிறைக்குச் சென்ற பிறகு, சிறைவாசிகளுக்கு, ஏ கிளாஸ், பி கிளாஸ் என்று கோர்ட் மூலமாக நிர்ணயிக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். ஏ கிளாஸ் சிறைவாசிகளுக்கு, ஏ வகுப்பு-சைவம் வேலை செய்பவர்—ரிகரஸ் இம்பிரிசன்மெண்ட்: ரூ. 15.20 பைசா; சைவம் வேலை செய்பவர்-சிம்பிள் இம்பிரிசன்மெண்ட்: ரூ. 14.10 பைசா; அசைவம் வேலை-செய்பவர் ரூ. 17.05 பைசா; அசைவம்—வேலை செய்பவர். 13 ரூபாய்; பி வகுப்பு வேலை செய்பவர் மற்றும் வேலை செய்யாதவர், அரிசி உணவு 9 ரூபாய்; கோதுமை உணவு ரூ. 7.60 பைசா என்று வழங்கப்படுகிறது.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைக்கு உள்ளே தருவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கைது செய்து முதலில் வைத்திருந்து விட்டு பிறகுதான் சிறைச்சாலைக்கு அனுப்புகிறார்கள். அதைப் பற்றித்தான் நான் கேட்டிருந்தேன். காவல் நிலையங்களில் இருக்கக் கூடிய காவலரோ அல்லது ஆய்வாளரோ அவர்களுடைய கையிலே இருக்கக் கூடிய காசைப் போட்டு வாங்கும் போது அவர்கள் லஞ்சம் லாவண்யங்களிலே ஈடுபடக்கூடிய நிலைமை ஏற்படும் என்ற காரணத்திற்காகத்தான் கூடுதலாக்க வேண்டுமென்று கேட்டேன்.

1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறைச்சாலைக்கு செல்வதற்கு முன்னால் போலீஸ் கஸ்டடி இருக்கிறது. அந்த போலீஸ் கஸ்டடியில் எப்படியெல்லாம் உணவு வழங்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவற்றை பற்றி நான் குறிப்பாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனாலும் போலீஸ் கஸ்டடியில் இருக்கும்போது போலீஸ் இலாக்கா அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலிருந்து கொஞ்சம் விலகிய கேள்வி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எப்போதுமே விலகியே போகிறீர்கள்!

9-20 மணி

திரு. பெ. சீனிவாசன் : சிறைச்சாலைகளில் உணவு கூட பிரச்சினை இல்லை. ஆனால் சுகாதாரக் கேடுகள் மோசமாக இருக்கின்றன. ஆகவே எல்லா சிறைச்சாலைகளிலும் போதுமான சுகாதார வசதி ஏற்படுத்தும் வகையில் கட்டாயமாக டிரைனேஜ் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் சிறைச்சாலைக்குள்ளே போகவில்லை. அதாவது கைது செய்யப்படுகிறவர்களைப் பற்றித்தான் கேட்டார்கள். ஆனால் நீங்கள் ரொம்ப விலகிவிட்டீர்கள்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, சிறைச்சாலைக்குள்ளே போய் இருக்கின்ற கைதிகள் பற்றிய கேள்வி அல்ல அது. மூலக்கேள்வி போட்டிருப்பவர்கள் சொல்வது கைது செய்யப்படுபவர்களுக்கு, கைது செய்து கொண்டு போய் அவர்களின் பெயர்களை எழுதி, அவர்களைச் சரியான ஜாதியில் சேர்த்து அவர்களை உள்ளே அனுப்புவது பின்னாலே, ஆனால் போலீஸ் கஸ்டடியில் இருக்கும் போது, ஏதாவது தயிர் சாதப் பொட்டலம், புளி சாதப் பொட்டலம் வாங்கி கொண்டு வந்து நூற்றுக்கணக்கான பேர்களுக்கு அவர்கள் கொடுக்கிறார்கள். அது நேரத்திற்கு கிடைக்காது. சிலருக்குக் கிடைக்காமலும் போகும்... நாங்கள் எல்லாம் அடிக்கடி அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அப்படி இருக்கும் போது பல நேரங்களில் போலீஸ் அதிகாரிகளிடம் அதற்காக காசு கூட இருக்காது. அவர்களாகப் பார்த்து ஏற்பாடு பண்ணிக் கொள்ள வேண்டியதுதான். அந்த நிலை ஏற்படாமல் இருக்க ஒரு ஆளுக்குக் குறைந்த பட்சம் 3 ரூபாய் 5 ரூபாய் செலவு செய்யலாம் என்ற உத்தரவைப்

பிறப்பித்து காவல் நிலையத்தினருக்கும் அதை செலவழிக்க அதிகாரம் கொடுத்தால் கொஞ்சம் ஒழுங்காக இருக்கும். அப்படிச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான அரசியல் வாதிகள் போராட்டங்களில் ஈடுபட்டு சிறை செல்கின்ற நேரத்தில் அவர்களுக்கு காலை நேரத்தில் கொடுக்கவேண்டிய உணவு மத்தியானத்தில் வருகிற காரணத்தால், அந்தந்த சிறைச்சாலைகளின் சூப்பிரெண்டெண்டுகளுக்கே சமையல்காரர்களை தேவைப்படும்போது நியமித்துக் கொள்ளும் அதிகாரத்தை அரசு வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிரிரிமாண்ட் பிரிசனர்களுக்கு அதாவது காவல் துறை பொறுப்பில் அவர்கள் இருக்கும்போது அது நமது இலாக்கா சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இல்லை. ஆனால் உறுப்பினர் திரு. அர்ஜுனன் அவர்களுக்கு எல்லாம் தெரியும். புதிதாக ஒன்றுமில்லை. அவர்கள் அனுபவம் உள்ளவர்கள். எப்படி எல்லாம் உணவு கொடுப்பார்கள் என்பது அனுபவத்தில் தெரிந்து கொண்டிருப்பார்கள். அந்த அனுபவத்தை அவர்கள் தெரிவிக்கும்போது அதை ஏற்றுக் கொள்ள கட்டாயம் தயாராக இருக்கிறேன்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு, உடை, உறையுள் என்பது ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது என்பதை தாங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதன் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் என்னுடைய கேள்விக்கு விடையளிப்பார்கள் என்றும் நம்புகிறேன். மக்களுடைய பிரச்சினைகளுக்காக இயக்கங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு கைதி உடை கொடுக்கப்பட்டது. மக்களுடைய பிரச்சினைக்காக இயக்கங்களில் ஈடுபட்டவர்களுக்கு. கைதி உடை அணிய வேண்டியதில்லை என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறைச்சாலைக்குள்ளேயே போய்விட்டீர்கள். கேள்வி வெளியில் உள்ளவர்களைப் பற்றியதாகும்.

1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, டாக்டர் கலைஞர் அவர்கள் சிறைச்சாலையில் இருந்தபோது, சிறை உடை அணிய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது உண்மைதான். இந்த அரசைப் பொறுத்து, அப்படி ஒரு கருத்து இல்லை.

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பிரச்சினையில் தலையிட்டு சிறை செல்பவர்களுக்கு சிறையில் என்ன உரிமை இருக்கின்றது? அதேபோல கிரிமினல் குற்றங்கள் செய்துவிட்டு சிறை செல்கின்றவர்களுக்குச் சிறையில் என்ன உரிமை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியில் வைக்கப்பட்டிருக்கும்போது அப்படியெல்லாம் வேறுபாடு பார்க்கவில்லை. பிறகு முறைப்படி வழக்குத் தொடரும்போது அதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய பிரச்சினைக்காக இயக்கங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல ''ஏ'' வகுப்பு, ''பி'' வகுப்பு என்று மாஜிஸ்டிரேட் உத்தரவு போடுகிறார். நாங்கள் அப்படிப் போயிருக்கும்போது ஒருசிலருக்கு ''ஏ'' வகுப்பும் ஒரு சிலருக்கு ''பி'' வகுப்பும் கொடுக்கப்பட்டது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் உள்ளே போய் விட்டீர்கள். வெளியில் வாருங்கள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அதாவது மக்கள் பிரச்சினைக்காக சிறை செல்பவர்களுக்கு எல்லாருக்கும் ''ஏ'' வகுப்பு கொடுக்கவேண்டுமென்று நிரந்தரமான அரசாணை போடப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் ஒருவேளை அரசு உத்தரவு போட்டால் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள், கோர்ட் மூலம் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே கோர்ட் மூலம் அனுப்புகிறோம்.

தனியார் ஒப்பந்த பேருந்துகள்

*5777 திரு. பி. காளியப்பன் :
திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து தினசரி வெளியூர் சென்று திரும்பும் தனியார் ஒப்பந்த பேருந்துகள் அரசின் அனுமதி பெற்று விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் செயல்பட்டு வருகின்றனவா?

(ஆ) மொத்தம் எத்தனை பேருந்துகள் உள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது தமிழ்நாட்டில் ஒப்பந்த அனுமதியுடைய வாகனங்கள் மொத்தம் 90 உள்ளன. இவற்றில் 51 அகில இந்தியச் சுற்றுலா ஒப்பந்த அனுமதிச் சீட்டு உடைய வாகனங் களும் அடங்கும்.

9–25 மணி

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு அவைத்தலைவர் அவர் களே, தனியார் பஸ்கள் தினமும் இரவு நேரத்தில் அதிக அளவில் செல்கின்றன. அதுபோல் அரசு பஸ்களும் இரவு நேரத்தில் அதிகம் விடப்படுமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இது ஒப்பந்தப் பேருந்துகள் பற்றிய கேள்வியாகும். இருந்தாலும் ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி ஒப்பந்தப் பேருந்துகள் 90 பேருந்துகள்தான் தமிழ்நாட்டில் இப்போது இருக்கின்றன. நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் குறிப் பாக தொலைதூரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலும் பக்கத்தில் போகக்கூடிய பேருந்துகளைப் பொறுத்தவரையில் அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகங்களின் சார் பிலும் தற்போது விடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இந்தக் கோடை விடுமுறை காலத்தை ஒட்டி 100 பேருந்துகள் கூடுத லாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் விடுவது என்று முடிவு செய்து ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து இயக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன.

1990 ஏப்ரல் 5]

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருசில எண்ணங்களை இங்கே சொன்னார்கள். ஆனால் லைசன்ஸ் இல்லாமலேயே ஆம்னி பஸ்கள் ஓட்டுவது என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் லைசன்ஸ் இல்லாமல் ஓட்டுகின்றவர்களைக் கண்டு பிடித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அடுத்து அதிகமான ஜன நெரிசல் இருக்கக்கூடிய பகுதிகளில்ஆம்னி பஸ்கள் விடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதைமாற்றிவிட்டு அந்தப் பகுதிகளில் அரசின் மூலம் அதிகமான பஸ்கள் விடுவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆம்னி பஸ்கள் கான்ட்ராக்ட் கேரேஜ் என்ற வகையில்தான் ஓட்டப்பட வேண்டும். குறிப்பாக ஒரு இடத்திலிருந்து புறப்பட்டு இன்னொரு இடத்திற்குப் போய்ச்சேருவதற்கு இன்னின்ன காரியங்களுக்காக பயணிகள் இன்னின்னாரை அழைத்துச் செல்கிறார்கள் என்கிற விதிமுறைகளை எல்லாம் அனுசரித்துத்தான் 'பெர்மிட்' வாங்கிஓட்ட வேண்டும். ஆனால் சிலபேர் ஆம்னி பஸ் என்ற பெயரில் ஸ்டேட் கேரேஜ்—ஆக ஆங்காங்கே நின்று பயணம் செய்யக்கூடிய பேருந்துகளாக ஓட்டுவதுதான் விதிமுறைகளுக்குப் புறம்பானது. அவ்வாறு ஓட்டுகிறார்கள் என்பது குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து சென்ற ஆண்டு அவைகளை எல்லாம் ஒரு நாள் நேரடியாகச் சென்று பிடித்துக்கூட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்தாலும் தொடர்ந்து அந்த குற்றங்களைச் சிலபேர் செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்தத் துறையின் அதிகாரிகள் அதிலேயே முழுக் கவனம் செலுத்தி அப்படி தவறாக பெர்மிட்டுகளைப் பயன்படுத் படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை அவ்வப்போது மேற்கொண்டு வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப் பேருந்துகள் 90 ஓடுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது தவிர தனியார் பேருந்துக் கம்பெனி வைத்து நடத்தக்கூடியவர்கள் 5 பஸ்கள் வைத்திருந்தால் ஸ்பேர் பஸ் என்ற அடிப்படையில் ஒரு பேருந்து வைத்திருக்கக்கூடிய நிலைமையில் அந்தப் பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் ஐயப்பன் சாமி கோயில், திருப்பதி கோயில் போன்றவற்றிற்கு எல்லாம் போகக் கூடியவர்கள் கான்ட்ராக்ட் அமைத்துக்கொண்டு போகிறார்களே, இப்போது அவர்கள் செல்லக்கூடிய அந்தப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் கூட இப்படி 2,000 ரூபாய் வரி கட்டவேண்டும் என்று இருப்பதால் முடியாது என்று சொல்கிற காரணத்தால் அந்த சுற்றுலா பயணிகளை எல்லாம் அழைத்துச் செல்லக்கூடிய ஏஜென்டுகள்

என்பவர்கள் எல்லாம் வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று ஒரு கூக்குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள். எனவே அதற்கு இதே மாதிரியாக 2,000 ரூபாய் தான் வரி என்று சொல்கிறார்களா அல்லது ஏற்கெனவே இருக்கக்கூடிய முறைப்படி ஸ்பேர் பஸ்களை அந்தக் காரியத்திற்குப் பயன்படுத்தலாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தனியார் பேருந்துக் கம்பெனிகள் வைத்திருக்கக்கூடிய ஸ்பேர் பஸ்-ஆக இருந்தாலும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் வைத்திருக்கக்கூடிய ஸ்பேர் பஸ்-ஆக இருந்தாலும் ஏற்கெனவே அவர்கள் கட்டக்கூடிய வரியில் 3-ல் ஒரு பங்கு அவர்களுக்குச் சலுகை இருந்தது. அப்போதே இந்த ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையில் அதற்குத் தனியாகத்தான் நாம் வரி போட்டியிருந்தோம். ஒரு சீட்டுக்கு 500 ரூபாய் என்று சென்ற ஆண்டில் நாம் வரியை உயர்த்தி இருந்தோம். தற்போது ஆம்னி பஸ்களுக்கு மட்டும் 2,000 ரூபாய் ஒரு சீட்டுக்கு என்று வரியை உயர்த்தி இருக்கிறோம். அது இந்த ஸ்பேர் பஸ்சுக்கு பொருந்துமா பொருந்தாதா என்பதைப்பற்றி அரசு தற்போது சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கின்ற போது, ஒப்பந்த விதிமுறைகளுக்குப் புறம்பாக இந்த ஆம்னி பஸ்கள் நடத்துகின்றவர்கள் கான்ட்ராக்ட் கேரேஜாக, ஸ்டேஜ் கேரேஜாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து அதைத் தடை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால் இங்கே சென்னையிலேயும் மற்ற நகரங்களிலேயும் பார்த்தால் தனித்தனியான இடங்களை வைத்து ஸ்டேஜ் கேரேஜ் என்ற அளவிலேதான் இந்த ஆம்னி பஸ்களை ஓட்டுகிறார்களே அல்லாமல் இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு எந்த ஆம்னி பஸ்ஸும் ஓட்டப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து இது போன்ற சட்ட விரோதமான காரியங்களைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

9–30 மணி

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் இந்த அம்னி பஸ்களுக்கு ஒப்பந்த பேருந்துகளுக்கு பெர்மிட்டுகள் வழங்குவதில்லை என்று முடிவெடுத்து கடந்த ஓராண்டு காலமாக நாம் வழங்கவில்லை. ஆனால் சிலபேர்கள் நீதிமன்றத்துக்கு சென்று

1990 ஏப்ரல் 5]

அந்த பெர்மிட்டுகள் வழங்க வேண்டும் என்ற தீர்ப்பைப் பெற்று ஒரே ஒருவருக்கு மட்டும் நாம் பெர்மிட் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும்கூட தெரிந்தே தவறு செய்கின்ற முறையில்தான் நாம் விதிமுறைகளை வகுத்து இருக்கிறோம். அதாவது ஒரு இடத்திலிருந்து புறப்பட்டு இன்னொரு இடத்திற்கு போகும் பேருந்து அடிப்படையிலேதான் செல்லவேண்டும் என்று மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறோம். ஆனால் செய்கின்ற தவறே எங்கெங்கு கண்டிஷன்கள் வேண்டுமோ அதற்குத் தகுந்தாற்போல் அதைப் பக்குவப்படுத்தி பயணிகளை ஏற்றிச் செல்லும்போது ஒப்பந்த பேருந்துகளை சாதாரண பேருந்துகளாகவே அதை பயன்படுத்துகின்றார்கள். இருந்தாலும் இந்த குற்றங்களை தடுப்பதற்கு அரசு அவ்வப்போது சோதனை மேற்கொண்டிருக்கின்றது. தொடர்ந்து செய்யும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அனுமதி பெறாமல் ஓடும் தனியார் பேருந்துகளை பறிமுதல் செய்யும் எண்ணம் அரசுக்குண்டா ? கடந்த ஆண்டு இப்படி ஓடிய பஸ்கள் எத்தனை? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஓடிய பேருந்துகளுடைய விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், இத சோதனைகள் தொடர்ந்து ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து நடைபெறும். அப்படி சட்ட விரோதமாக ஓடக்கூடிய பேருந்துகள் மீது தகுந்த நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு மேற்கொள்ளும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஆம்னி பஸ்களுடைய வரி 10 மடங்காக உயர்த்தப்பட்டு இருப்பதால் சுமார் 1445 பஸ்கள் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அதனால் 10 ஆயிரம் குடும்பங்கள் வேலை இழந்து தவிக்கின்றார்கள். இந்த வரியைக் குறைக்க முடியுமா? அல்லது வேலை இழந்து உள்ள அந்த குடும்பங்களுக்கு அரசு போக்குவரத்து துறையிலே வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்கள் ஓடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா ?

டி2 53-87—3

தொழிலாளர் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்குதல்.

* 9027 திரு. ஆர். என். ஸ்ரீதர் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள தொழிலாளர் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு மானியத்துடன் நிறைவேற்றப்பட்ட தொழிலாளர் வீட்டுவசதி சட்டத்தின்படி பொதுத் துறையின்கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்குவது குறித்து அரசு ஏற்கனவே சில ஆணைகள் பிறப்பித்துள்ளது. அவ்வாணைகளில் தற்போது பணி புரியும் தொழிலாளர்களுக்கும், ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும், இறந்த தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கும், மற்றும் தற்போது தொழிலாளிகளாகவோ அல்லது குறைந்த வருமானத்துடன் சுயவேலைத் திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களாகவோ இருப்பவர்கட்கும், அவர்கள் தொழிலாளர் குறிடியிருப்புகளில் வசித்து வந்தால் அவற்றை உரிமையாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீடுகளை உரிமையாக்குவதற்கு அவர்களிடம் பெறவேண்டிய தொகை குறித்தும் மற்றும் இதுகுறித்து பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஆர். என். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற தேர்தலின்போது கிண்டி திரு. வி. க. தொழில் பேட்டையிலுள்ள தொழிலாளர்கள் குடியிருப்புகளை அவர்களுக்கு உரிமையாக்கித் தருவதாக வாக்குறுதி தந்து தொடர்புடைய மாண்புமிகு சமூகநல ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களை அழைத்து சென்று விழா ஏற்பாடு செய்து, கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் அன்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவைக் கேளுங்கள்.

திரு. ஆர். என். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமுயற்சி எடுத்து அமைச்சரவைக் கூட்டத்தில் உரிய அரசாணை வழங்கப்பட்டும் இன்று வரை நிறைவேற்றப் படவில்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நிறைவேற்றப்படுகின்ற வகையிலே அரசாங்கம் பரிசீலனை செய்து சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் திரு.வி.க. நகரில் 544 வீடுகளும் சர்மா நகரில் 450 வீடுகளும், அதிலே குடியிருப்பவர்களுக்கே சொந்தம் ஆக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கின்றது. அதேபோல தமிழகம் முழுவதும் மதுரை, ராஜபாளையம், சத்தியமூர்த்தி நகர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் திருப்பூர், சிங்காநல்லூர், பீளமேடு ஆகிய எல்லா இடங்களிலும் சேர்ந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 2930 வீடுகள், சிட்கோ நிறுவனத்தின் சார்பில் 1187 வீடுகளும் கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் அதிலே குடியிருப்பவர்களுக்கே விலைக்கு கொடுப்பது என்று அரசு முடிவு செய்து ஏற்கனவே அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வழங்கப்படும்.

9.35 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகளில் தற்போது யார் எல்லாம் குடியிருக்கிறார்களோ அவர்களுக்கே அவற்றை உரிமையாக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றியதற்காக நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில். இதையே காரனம் காட்டி அங்கேயிருக்கிற அதிகாரிகள் பொது மக்களுக்கு சேரவேண்டிய சாதாரண அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற காரியங்களைக் கூட செய்து தருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அத்தகைய புகார்கள் ஏதும் வரவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த புகார்களின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைத்தல்.

* 1902 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வடக்கன் குளம் ஊராட்சி

1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நிறைவேற்றப்படுகின்ற வகையிலே அரசாங்கம் பரிசீலனை செய்து சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் திரு.வி.க. நகரில் 544 வீடுகளும் சர்மா நகரில் 450 வீடுகளும், அதிலே குடியிருப்பவர்களுக்கே சொந்தம் ஆக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கின்றது. அதேபோல தமிழகம் முழுவதும் மதுரை, ராஜபாளையம், சத்தியமூர்த்தி நகர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் திருப்பூர், சிங்காநல்லூர், பீளமேடு ஆகிய எல்லா இடங்களிலும் சேர்ந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 2930 வீடுகள், சிட்கோ நிறுவனத்தின் சார்பில் 1187 வீடுகளும் கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் அதிலே குடியிருப்பவர்களுக்கே விலைக்கு கொடுப்பது என்று அரசு முடிவு செய்து ஏற்கனவே அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வழங்கப்படும்.

9.35 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகளில் தற்போது யார் எல்லாம் குடியிருக்கிறார்களோ அவர்களுக்கே அவற்றை உரிமையாக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றியதற்காக நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில். இதையே காரனம் காட்டி அங்கேயிருக்கிற அதிகாரிகள் பொது மக்களுக்கு சேரவேண்டிய சாதாரண அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற காரியங்களைக் கூட செய்து தருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அத்தகைய புகார்கள் ஏதும் வரவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த புகார்களின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைத்தல்.

* 1902 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வடக்கன் குளம் ஊராட்சி

பகுதியில் வடக்கன் குளத்தில் ஒரு வாரச் சந்தைத் திறக்க வடக்கன்குள ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஒரு பிரேரணை அனுப்புள்ளார். மேற்படி பொருள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஆய்வில் உள்ளது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கன்குளத்தைச் சுற்றி பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களிலுள்ள விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களையோ, கால்நடை வளர்ப்பவர்கள் தங்களுடைய பொருள்களையோ கொண்டு வந்து விற்பதற்கு பல மைல் செல்வதில் சிரமம் இருக்கிறது. மேலும் அன்றாடம் உற்பத்தி செய்கிற காய்கறிளை பல மைல் தொலைவிற்கு சென்று விற்பதிலும் பல சிரமங்கள் இருக்கின்றன. இச் சிரமங்களைக குறைக்கும் வகையில் மிக விரைவில் அங்கே வாரச் சந்தை வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். காரணம் அப்படி செய்தால் பஞ்சாயத்துகளுக்கு நல்ல வருவாய் வரவாய்ப்பு இருக்கிறது. சந்தை அமைப்பதற்கான இட வசதியும் இருக்கிறது. ஆகவே, இது துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊராட்சியில் சொந்த இடம் இல்லாத காரணத்தால் வாரச சந்தை அமைப்பதற்கு 3 ஏக்கர் 57 செண்ட் இடம் பெருங்குடி என்ற கிராமத்தில் ஏற்பாடு செய்து, 21 ஆண்டு குத்தகைக்கு ஏற்பாடு செய்து, 100 ரூபாய் குத்தகையாக, மாத வாடகைக் குத்தகையாக 100 ரூபாய் செலுத்தும் வகையில் இதை அமைக்கலாம் என்று முடிவு ஏற்பட்டது. ஆனால் இதை ஊராட்சி பொறுப்பேற்று நடத்துவதா அல்லது ஊராட்சி ஒன்றியம் அந்தச் சந்தையை நிர்வகிப்பதா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டதையொட்டி, பொதுவாகவே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் வாரச்சந்தைகள் துவங்க வேண்டுமானால் மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவுக்கு விடலாமென்று, ஒன்றியத்தின் தீர்மானத்தை ஏற்பது என்று அரசு ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பதால் அது தற்போது ஊராட்சி ஒன்றியக் குழுவிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் அந்தப் பணி தேக்கத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி அதற்கான விவரம் கேட்டால் விரைவில் சந்தையை திறப்பதற்கான முடிவு ஏற்படும்.

நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம்.

* 6503 திரு கே. சுப்பிரமணிய பிள்ளை :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் உள்ள அண்ணா பேருந்து நிலையத்தில் இட நெருக்கடியைப் போக்க அருகிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பணிமனையை பேருந்து நிலையத்தோடு இணைக்க அரசு முன்வருமா?

பகுதியில் வடக்கன் குளத்தில் ஒரு வாரச் சந்தைத் திறக்க வடக்கன்குள ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஒரு பிரேரணை அனுப்புள்ளார். மேற்படி பொருள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஆய்வில் உள்ளது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கன்குளத்தைச் சுற்றி பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களிலுள்ள விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களையோ, கால்நடை வளர்ப்பவர்கள் தங்களுடைய பொருள்களையோ கொண்டு வந்து விற்பதற்கு பல மைல் செல்வதில் சிரமம் இருக்கிறது. மேலும் அன்றாடம் உற்பத்தி செய்கிற காய்கறிளை பல மைல் தொலைவிற்கு சென்று விற்பதிலும் பல சிரமங்கள் இருக்கின்றன. இச் சிரமங்களைக் குறைக்கும் வகையில் மிக விரைவில் அங்கே வாரச் சந்தை வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். காரணம் அப்படி செய்தால் பஞ்சாயத்துகளுக்கு நல்ல வருவாய் வரவாய்ப்பு இருக்கிறது. சந்தை அமைப்பதற்கான இட வசதியும் இருக்கிறது. ஆகவே, இது துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊராட்சியில் சொந்த இடம் இல்லாத காரணத்தால் வாரச் சந்தை அமைப்பதற்கு 3 ஏக்கர் 57 செண்ட் இடம் பெருங்குடி என்ற கிராமத்தில் ஏற்பாடு செய்து, 21 ஆண்டு குத்தகைக்கு ஏற்பாடு செய்து, 100 ரூபாய் குத்தகையாக, மாத வாடகைக் குத்தகையாக 100 ரூபாய் செலுத்தும் வகையில் இதை அமைக்கலாம் என்று முடிவு ஏற்பட்டது. ஆனால் இதை ஊராட்சி பொறுப்பேற்று நடத்துவதா அல்லது ஊராட்சி ஒன்றியம் அந்தச் சந்தையை நிர்வகிப்பதா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டதையொட்டி, பொதுவாகவே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் வாரச்சந்தைகள் துவங்க வேண்டுமானால் மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவுக்கு விடலாமென்று, ஒன்றியத்தின் தீர்மானத்தை ஏற்பது என்று அரசு ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பதால் அது தற்போது ஊராட்சி ஒன்றியக் குழுவிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் அந்தப் பணி தேக்கத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி அதற்கான விவரம் கேட்டால் விரைவில் சந்தையை திறப்பதற்கான முடிவு ஏற்படும்.

நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம்.

* 6503 திரு கே. சுப்பிரமணிய பிள்ளை:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் உள்ள அண்ணா பேருந்து நிலையத்தில் இட நெருக்கடியைப் போக்க அருகிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பணிமனையை பேருந்து நிலையத்தோடு இணைக்க அரசு முன்வருமா?

1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகர்கோவில் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனையை பேருந்து நிலையத்தோடு இணைப்பதற்கு அப்போக்குவரத்துக் கழகம் நிர்வாக காரணங்களினால் மறுப்புத் தெரிவித்துள்ளது.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம் தற்போது இட நெருக்கடி காரணமாக போக்குவரத்து இடைஞ்சல் உண்டாகி பல விபத்துக்கள் ஏற்பட்டு உயிர் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அண்ணா பேருந்து நிலையத்தை தொட்டு திருவள்ளுவர் போக்குவரத்து பணிமனை இருக்கிறது. அப்பணிமனையை அண்ணா பேருந்து நிலையத்தோடு இணைத்துவிட்டு, நாகர்கோவில் இந்துக் கல்லூரிக்கு அருகில் நகராட்சிக்கு சொந்தமாக உள்ள காலி இடத்தில், பொருட்காட்சி மைதானம், திருவள்ளுவர் போக்குவரத்து பணிமனையை அமைப்பதாக இருந்தால் தற்போது மிக நலமாக இருக்கும். திருவள்ளுவர் பணிமனையை அண்ணா பேருந்துடன் சேர்க்கும்போது கூடுதல் இடம் கிடைக்கும். நெருக்கடி நீங்கும். எல்லா பேருந்துகளும் அண்ணா பேருந்து நிலையத்தினுள் வந்து செல்ல வசதியாக இருக்கும். தற்போது பொது மக்கள் மத்தியில் ஏற்படும் அதிருப்தியும் குறையும். எனவே, திருவள்ளுவர் போக்குவரத்து பணிமனையை அண்ணா பேருந்து நிலையத்தோடு இணைத்து பேருந்து நிலைய நெருக்கடிப் பிரச்சினையை தீர்த்துவைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேருந்து நிலையத்தைப் பற்றி திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுடைய பேருரையைக் கேட்டோம். (சிரிப்பு) இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனை அமைந்துள்ள 2 ஏக்கர் 82 செண்ட் நிலம் நகராட்சிக்குச் சொந்தமானதுதான். 10 ஆண்டுகளுக்கு முன்புதான் அப்போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை மற்றும் இயந்திரம் நிறுவி நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஏறக்குறைய 54 பேருந்துகள் தினசரி அங்கிருந்து புறப்படுகின்றன. மேலும் பிற இடங்களிலிருந்து 112 பேருந்துகள் இவ்வழியாகத்தான் செல்கின்றன. தவிர, இவ்விடத்தில் மாதந்தோறும் 10 பேருந்துகள் தயாரிக்கக் கூடிய அளவில் ஒரு தொழில் பிரிவும் இருக்கிறது. எனவே, இதில் பஸ் ஸ்டாண்ட் இணைப்பதற்கான சாத்தியக் கூறுகள் நிச்சயமாக இல்லை. இருந்தாலும்

நாகர்கோவில் நகராட்சி அண்ணா பேருந்து நிலைய தற்போதைய நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு இதே பகுதியில் 88 சென்ட் நிலத்தில் ரூ. 15 லட்சம் செலவில் ஒரு தற்காலிகப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு, 1987 அக்டோபர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

இது தவிர பெருமாள் குளம் சர்வே 2.2ல் 9 ஏக்கர் நிலத்தில் ரூ. $1\frac{1}{2}$ கோடி செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு, முதல் கட்டமாக 7 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பேருந்து நிலையத்தின் வரைபடங்கள், மதிப்பீடுகள் முதலியன கிர்லாஸ்கர் கன்சல்டன்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையக் கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

9.40 மணி

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

* 9032 திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே-மில்லத் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கென பிரத்தியேகமாக மத்திய கூட்டுறவு வங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய தலைமை வங்கியிடமிருந்து வங்கியியல் பணிகளை ஆற்ற உரிமம் (licence) கிடைக்கப்பெற்ற பின்னர் இவ்வங்கி தனது வங்கியியல் பணிகளை துவங்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பிரிந்து நீண்ட நாட்கள் ஆகின்றது. இன்றைக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி மதுரையோடு இருக்கிறது. மத்திய வங்கியினுடைய தலைமை வங்கியின் அனுமதி கிடைத்த பிறகு இங்கே ஆரம்

நாகர்கோவில் நகராட்சி அண்ணா பேருந்து நிலைய தற்போதைய நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு இதே பகுதியில் 88 சென்ட் நிலத்தில் ரூ. 15 லட்சம் செலவில் ஒரு தற்காலிகப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு, 1987 அக்டோபர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

இது தவிர பெருமாள் குளம் சர்வே 2.2ல் 9 ஏக்கர் நிலத்தில் ரூ. $1\frac{1}{2}$ கோடி செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு, முதல் கட்டமாக 7 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பேருந்து நிலையத்தின் வரைபடங்கள், மதிப்பீடுகள் முதலியன கீர்லாஸ்கர் கன்சல்டன்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையக் கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

9.40 மணி

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

* 9032 திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே-மில்லத் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கென பிரத்தியேகமாக மத்திய கூட்டுறவு வங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய தலைமை வங்கியிடமிருந்து வங்கியியல் பணிகளை ஆற்ற உரிமம் (licence) கிடைக்கப்பெற்ற பின்னர் இவ்வங்கி தனது வங்கியியல் பணிகளை துவங்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பிரிந்து நீண்ட நாட்கள் ஆகின்றது. இன்றைக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி மதுரையோடு இருக்கிறது. மத்திய வங்கியினுடைய தலைமை வங்கியின் அனுமதி கிடைத்த பிறகு இங்கே ஆரம்

பிக்கப்படுமென்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். எப்போது அந்த அனுமதி கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய துணைப் பதிவாளர் 1–8–1989-ம் தேதியன்று அந்த வங்கிக்கான பதிவினைச் செய்திருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து 6–10–1989-ம் தேதியன்று பேரவைக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. வங்கி நடவடிக்கைகள், பேங்கிங் ஆக்டிவிடீஸ் தொடங்குவதற்கு ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி தேவைப்படுகிறது. அதற்காக நபார்ட் மூலமாக ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது விரைவில் கிடைக்குமென்று நம்புகிறோம். கிடைத்தவுடன் வங்கி அதன் பணியினைத் தொடங்கும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்த வங்கியை ஆரம்பிக்கும்போது இன்றைக்கு மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் பணி புரியக்கூடிய ஊழியர்களையே பிரித்து காயிதே மில்லத் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு ஆட்களை நியமிப்பார்களா அல்லது புதிதாக ஆட்களை வங்கிக்குத் தேர்ந்தெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் காலப் போக்கில் பரிசீலிக்கப்படும்.

விற்பனை விளைபொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

* 5181 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தென் ஆற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் விற்பனை விளைபொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் கட்ட நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிக்கப்படுமென்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். எப்போது அந்த அனுமதி கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறி விப்பார்களா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய துணைப் பதிவாளர் 1–8–1989-ம் தேதியன்று அந்த வங்கிக்கான பதிவினைச் செய்திருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து 6–10–1989-ம் தேதியன்று பேரவைக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. வங்கி நடவடிக்கைகள், பேங் கிங் ஆக்டிவிடீஸ் தொடங்குவதற்கு ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி தேவைப்படுகிறது. அதற்காக நபார்ட் மூலமாக ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது விரைவில் கிடைக்குமென்று நம்புகிறோம். கிடைத்தவுடன் வங்கி அதன் பணியினைத் தொடங்கும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்த வங்கியை ஆரம்பிக்கும்போது இன்றைக்கு மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் பணி புரியக்கூடிய ஊழியர்களையே பிரித்து காயிதே மில்லத் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு ஆட்களை நியமிப்பார்களா அல்லது புதிதாக ஆட்களை வங்கிக் குத் தேர்ந்தெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் காலப் போக்கில் பரி சீலிக்கப்படும்.

விற்பனை விளைப்பொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

* 5181 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தென் ஆற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் விற்பனை விளைபொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் கட்ட நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் நடைபெறுகின்ற இடம் மிகவும் நெருக்கடியான இடம், சமூக விரோதிகளுக்கு இடம் தரக்கூடிய இடம். தயவு செய்து அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, நிலத்தைக் கையகப்படுத்தி கட்டிடம் கட்டிக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் ஒரு இடத்திலும், மற்றொரு இடத்திலே 14 ஏக்கர் நிலமும் பார்க்கப்பட்டு, நெகோசியேஷன்ஸ் நடைபெறுகிறது, நேரடியாக விலை பேசப்பட்டு வருகிறது. பேசி முடிந்தவுடன் இந்த ஆண்டு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

போர்வெல் போடுதல்.

* 5476 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பாசனக் கிணறுகள் பல வறண்டு விட்டதால், அரசே குறைந்த கட்டணம் பெற்று வேளாண்மைத் துறை மூலம் போர்வெல் போட்டுக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேளாண்மைப் பொறியியல் துறையால் குறைந்த வாடகையில் துளை போடும் கருவிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரும், விடுதலை வீரரும், பகுத்தறிவுப் பகலவனுமாகிய தந்தை பெரியார் பிறந்த பெரியார் மாவட்டத்திலே அந்தியூர் தொகுதியிலே உள்ள அனைத்து விவசாயிகளுடைய கிணறுகள் எல்லாம், கடந்த 3, 4 ஆண்டுகளாக மழை பொய்த்ததன் காரணமாக வறண்டு போய்விட்டன, அங்கேயுள்ள மக்கள். . . .

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் நடைபெறுகின்ற இடம் மிகவும் நெருக்கடியான இடம், சமூக விரோதிகளுக்கு இடம் தரக்கூடிய இடம். தயவு செய்து அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, நிலத்தைக் கையகப்படுத்தி கட்டிடம் கட்டிக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் ஒரு இடத்திலும், மற்றொரு இடத்திலே 14 ஏக்கர் நிலமும் பார்க்கப்பட்டு, நெகோசியேஷன்ஸ் நடைபெறுகிறது, நேரடியாக விலை பேசப்பட்டு வருகிறது. பேசி முடிந்தவுடன் இந்த ஆண்டு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

போர்வெல் போடுதல்.

* 5476 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பாசனக் கிணறுகள் பல வறண்டு விட்டதால், அரசே குறைந்த கட்டணம் பெற்று வேளாண்மைத் துறை மூலம் போர்வெல் போட்டுக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேளாண்மைப் பொறியியல் துறையால் குறைந்த வாடகையில் துளை போடும் கருவிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரும், விடுதலை வீரரும், பகுத்தறிவுப் பகலவனுமாகிய தந்தை பெரியார் பிறந்த பெரியார் மாவட்டத்திலே அந்தியூர் தொகுதியிலே உள்ள அனைத்து விவசாயிகளுடைய கிணறுகள் எல்லாம், கடந்த 3, 4 ஆண்டுகளாக மழை பொய்த்ததன் காரணமாக வறண்டு போய்விட்டன, அங்கேயுள்ள மக்கள்....

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 5]

9-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடையின் அடிப் படையில் தொடர் வினா அமைய வேண்டும். மற்றொரு முறை பெரியார் பேருரையைக் கேட்போம். (சிரிப்பு)

திரு. வே. பெரியசாமி: அந்த விவசாயிகள் வாங்கிய கடன்களைக்கூட கட்ட முடியாத துர்ப்பாக்கியமான சூழ் நிலைக்கு உந்தப்பட்டு இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அரசாங்கம் குறைந்த செலவில் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கின்ற நேரத்தில் அதில் தண்ணீர் இல்லை என்று சொன்னால் அவர்கள் அந்த கிணறுகள் அமைக்கப்படுவதற்கு ஆன செலவுகளை எல்லாம் ரத்து செய்தும், மீதி உள்ள கிணறை குறைந்த தொகையில் போட்டுக் கொடுப்பதற்கு இந்த அரசு விரைவில் முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறி யியல் துறை மூலம் குறைந்த வாடகையில் துளைக் கருவி போர் வெல் போட வழங்கப்படுகிறது என்று தான் பதில் சொன்னேன். மலைவாசி, ஆதி திராவிடர்களுக்கு 50 சதவீதம் மானியத் தொகையும் வழங்கப்படுகிறது. இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளை விரிவாக்குதல்.

* 3121 திரு. எஸ். குணசேகரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதி களை விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

ஆத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதியில் மாணவர் களின் எண்ணிக்கையை 90-லிருந்து 105 ஆக உயர்த்தும் செயற் குறிப்பு மட்டும் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 5]

9-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடையின் அடிப்படையில் தொடர் வினா அமைய வேண்டும். மற்றொரு முறை பெரியார் பேருரையைக் கேட்போம். (சிரிப்பு)

திரு. வே. பெரியசாமி: அந்த விவசாயிகள் வாங்கிய கடன்களைக்கூட கட்ட முடியாத துர்ப்பாக்கியமான சூழ்நிலைக்கு உந்தப்பட்டு இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அரசாங்கம் குறைந்த செலவில் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கின்ற நேரத்தில் அதில் தண்ணீர் இல்லை என்று சொன்னால் அவர்கள் அந்த கிணறுகள் அமைக்கப்படுவதற்கு ஆன செலவுகளை எல்லாம் ரத்து செய்தும், மீதி உள்ள கிணறை குறைந்த தொகையில் போட்டுக் கொடுப்பதற்கு இந்த அரசு விரைவில் முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகையில் துளைக் கருவி போர்வெல் போட வழங்கப்படுகிறது என்று தான் பதில் சொன்னேன். மலைவாசி, ஆதி திராவிடர்களுக்கு 50 சதவீதம் மானியத் தொகையும் வழங்கப்படுகிறது. இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளை விரிவாக்குதல்.

* **3121** திரு. எஸ். குணசேகரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளை விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

ஆத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை 90-லிருந்து 105 ஆக உயர்த்தும் செயற் குறிப்பு மட்டும் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். குணசேகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுகாவின் மையப் பகுதியாகும். தற்போது அங்குள்ள விடுதிகளில் மாணவர்களுக்குப் போதிய வசதி இல்லை. மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி கூடுதல் கட்டிடம் கட்டித் தருவதற்கு இனி மேலாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று வரும் நிதி ஆண்டில் அரசு விடுதி அமைக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிச்சி ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம்.

* 3432 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை வட்டம், குறிச்சியில் உள்ள ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முக்கியத்துவம், அவசியம் மற்றும் நிதி ஒதுக்கீடு வசதியைப் பொறுத்து அரசு நடவடிக்கை எடுத்து பணியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் கருதி பணி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமப் புறத்தில் இருக்கக் கூடிய ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு மற்றவர்களிடமிருந்து வாடகைக் கட்டிட வீடுகள் கிடைப்பது என்பது எந்த அளவுக்குச் சாத்தியமற்றது என்பது அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே அப்படி அந்தக் கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய மாணவர் விடுதி இப்போது தனியார் கட்டிடத்தில் இருப்பதனால் பெரும்

திரு. எஸ். குணசேகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுகாவின் மையப் பகுதியாகும். தற்போது அங்குள்ள விடுதிகளில் மாணவர்களுக்குப் போதிய வசதி இல்லை. மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி கூடுதல் கட்டிடம் கட்டித் தருவதற்கு இனி மேலாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று வரும் நிதி ஆண்டில் அரசு விடுதி அமைக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிச்சி ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம்.

* 3432 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை வட்டம், குறிச்சியில் உள்ள ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முக்கியத்துவம், அவசியம் மற்றும் நிதி ஒதுக்கீடு வசதியைப் பொறுத்து அரசு நடவடிக்கை எடுத்து பணியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் கருதி பணி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமப் புறத்தில் இருக்கக் கூடிய ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு மற்றவர்களிடமிருந்து வாடகைக் கட்டிட வீடுகள் கிடைப்பது என்பது எந்த அளவுக்குச் சாத்தியமற்றது என்பது அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே அப்படி அந்தக் கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய மாணவர் விடுதி இப்போது தனியார் கட்டிடத்தில் இருப்பதனால் பெரும்

சிரமம் இருக்கிறது. அதற்காக சில இடங்களில் கூட நிலம் கையகப்படுத்தப்பட்டு அந்த வேலைகள் முடியப் பெற்று இருக்கிறது. அதை இந்த நிதியாண்டில் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டில் 100 மாணவ-மாணவியர் விடுதிகள் ஆரம்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறது. எங்கெங்கெல்லாம் அவசியமான தேவைகள் இருக்கின்றனவோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே அரசு விடுதிகளைக் கட்டிக் கொடுக்க முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதி ஆண்டிலே 100 மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாணவர் விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று திட்ட மதிப்பீடு சொல்கிறது. அவ்வளவு பெரும் தொகையில் கட்டப் படக் கூடிய அந்தக் கட்டிடங்கள் சில இடங்களில் பயனற்றுக் கூட இருப்பதை நான் பார்த்து இருக்கிறேன். எனவே, அந்தக் கட்டிடங்கள் 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுமே யானால் 100 விடுதிகள் என்பது 300 விடுதிகள் கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு ஒரு விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் வேண்டும் என்பதைக் குறைத்து அந்த மாணவர்களினுடைய தேவைக்கு ஏற்ற முறையில் விடுதி களைக் கட்ட அரசு முன்வந்து, கூடுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவ, மாணவியர்களின் விடுதி களின் எண்ணிக்கை குறைந்த பட்சம் 50 விகிதாச்சாரத்தில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.

* 4669 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை, 2-வது வார்டு நண்டுவெட்டி தெரு ஆதி

1990 ஏப்ரல் 5]

சிரமம் இருக்கிறது. அதற்காக சில இடங்களில் கூட நிலம் கையகப்படுத்தப்பட்டு அந்த வேலைகள் முடியப் பெற்று இருக்கிறது. அதை இந்த நிதியாண்டில் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டில் 100 மாணவ-மாணவியர் விடுதிகள் ஆரம்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறது. எங்கெங்கெல்லாம் அவசியமான தேவைகள் இருக்கின்றனவோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே அரசு விடுதிகளைக் கட்டிக் கொடுக்க முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதி ஆண்டிலே 100 மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாணவர் விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று திட்ட மதிப்பீடு சொல்கிறது. அவ்வளவு பெரும் தொகையில் கட்டப் படக் கூடிய அந்தக் கட்டிடங்கள் சில இடங்களில் பயனற்றுக் கூட இருப்பதை நான் பார்த்து இருக்கிறேன். எனவே, அந்தக் கட்டிடங்கள் 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுமே யானால் 100 விடுதிகள் என்பது 300 விடுதிகள் கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு ஒரு விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் வேண்டும் என்பதைக் குறைத்து அந்த மாணவர்களினுடைய தேவைக்கு ஏற்ற முறையில் விடுதி களைக் கட்ட அரசு முன்வந்து, கூடுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவ, மாணவியர்களின் விடுதி களின் எண்ணிக்கை குறைந்த பட்சம் 50 விகிதாச்சாரத்தில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.

* 4669 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை, 2-வது வார்டு நண்டுவெட்டி தெரு ஆதி

திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வீட்டு மனைப் பட்டா வழங்கி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவுற்று நிலத்தைக் கையகப்படுத்தி வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிய பின்பு, இலவச வீடு கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9—50 மணி

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்கு அந்த மனை நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு பல்லாண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பணம் சம்பந்தப்பட்ட நிலச் சுவான்தாருக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, அதை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா ? அதே நேரத்திலே, அந்தப் பட்டா வழங்கப்பட்டு விட்டதா, வழங்கப் படவில்லையா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு நிலத்தை அரசு கையகப்படுத்த வேண்டுமென்றால் கிட்டத்தட்ட மூன்றாண்டுக் காலம் ஆகிறது. Continuous process என்று சொல்லப்படுகின்ற அளவில் 4(1) notification 5-A enquiry பிரிவு 6-ன் கீழான Draft Declaration notification மற்றும் பிரிவு 7-ன் கீழான Draft Direction notification ஆகிய நடவடிக்கைகள் முடிவுற்ற பின்பு தான் அரசு அந்த நிலத்தைக் கையகப்படுத்த முடியும். கையகப்படுத்தப்பட்ட பின்னர், நிலத்திற்கு உரிமையாளரிடம் பணம் கட்ட வேண்டுமென்ற ஒரு குறிப்பீடு அரசினுடைய விதியிலிருக்கிறது. அப்படிக் கொடுத்த பின்னர்தான் அரசு அந்த நிலத்தை எடுத்து மக்களுக்கு இலவசப் பட்டாக்கள் வழங்கி விநியோகம் செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று அந்தக் குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் கொடுத்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 5]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, அந்த நிலம் ஆர்ஜிதம் செய்கின்றபொழுது, மூன்றாண்டுகளுக்கு முன்னால்தான் ஆர்ஜிதம் செய்தோம். ஆனால் அப்பொழுது இருந்த நிலத்தினுடைய ரேட் வேறு ; இன்று இருக்கின்ற ரேட் வேறு. ஆகவே, பக்கத்தில் உள்ளவர்கள் அதிகமான ரேட் தருகிறேன் என்று நிலச்சுவான்தாரரைக் கேட்கிறார்கள். இப்படி ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. ஆகவேதான், விரைவுகாட்டி அந்த மனை நிலத்திற்கு உரிய நபரிடம் தொகையை வழங்கிவிட்டு பிறகு நடவடிக்கையை அரசு எடுத்தால் பரவாயில்லை.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூடிய விரைவில் அந்த நில உரிமையாளருக்கு தொகை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர் ஆற்றில் சாக்கடை கலப்பதைத் தடுத்தல்

*6051. டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சாக்கடைகள் அனைத்தும் குடிநீர் பெறப்படும் ஆற்றில் கலப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) பரமக்குடியில் வைகை ஆற்றின் படுகையில் ஆங்காங்கே சில இடங்களில் கழிவுநீர் வழிந்தோடி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) பரமக்குடியிலிருந்து சுமார் 1 கி. மீ. தூரத்திலுள்ள ‘ தண்டர் தேவிபட்டணம் ’ என்னும் கிராமத்தின் அருகில் அமைந்துள்ள கழிவுநீர்ப் பண்ணைக்கு கழிவு நீரானது மின் இயந்திரங்கள் மூலம் கழிவு நீரேற்றம் செய்யப்படுகிறது. வைகை ஆற்றில் விடப்படும் கழிவுநீர்த் தேக்கம் இருக்க வாய்ப்பில்லை. வைகை ஆற்றில் நீர் திறந்து விடப்படும்போது, தேங்கியுள்ள கழிவுநீரும் நீர்ப் போக்கில் கொண்டு செல்லப்படும்.

1990 ஏப்ரல் 5]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிலம் ஆர்ஜிதம் செய்கின்றபொழுது, மூன்றாண்டுகளுக்கு முன்னால்தான் ஆர்ஜிதம் செய்தோம். ஆனால் அப்பொழுது இருந்த நிலத்தினுடைய ரேட் வேறு; இன்று இருக்கின்ற ரேட் வேறு. ஆகவே, பக்கத்தில் உள்ளவர்கள் அதிகமான ரேட் தருகிறேன் என்று நிலச்சுவான்தாரரைக் கேட்கிறார்கள். இப்படி ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. ஆகவேதான், விரைவுகாட்டி அந்த மனை நிலத்திற்கு உரிய நபரிடம் தொகையை வழங்கிவிட்டு பிறகு நடவடிக்கையை அரசு எடுத்தால் பரவாயில்லை.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூடிய விரைவில் அந்த நில உரிமையாளருக்கு தொகை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர் ஆற்றில் சாக்கடை கலப்பதைத் தடுத்தல்

*6051. டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சாக்கடைகள் அனைத்தும் குடிநீர் பெறப்படும் ஆற்றில் கலப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) பரமக்குடியில் வைகை ஆற்றின் படுகையில் ஆங்காங்கே சில இடங்களில் கழிவுநீர் வழிந்தோடி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) பரமக்குடியிலிருந்து சுமார் 1 கி. மீ. தூரத்திலுள்ள 'தண்டர் தேவிபட்டணம்' என்னும் கிராமத்தின் அருகில் அமைந்துள்ள கழிவுநீர்ப் பண்ணைக்கு கழிவு நீரானது மின் இயந்திரங்கள் மூலம் கழிவு நீரேற்றம் செய்யப்படுகிறது. வைகை ஆற்றில் விடப்படும் கழிவுநீர்த் தேக்கம் இருக்க வாய்ப்பில்லை. வைகை ஆற்றில் நீர் திறந்து விடப்படும்போது, தேங்கியுள்ள கழிவுநீரும் நீர்ப் போக்கில் கொண்டு செல்லப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகராட்சிக்கு பரமக்குடி அருகில் உள்ள வைகையாற்றில் இருந்துதான் குடி தண்ணீர் பெறப்படுகிறது. பெரும்பாலான கழிவு நீர், குடி நீர் பெறப்படும் வைகையாற்றில் கலக்கின்றது. குறிப்பாக, பேச்சியம்மன் படித்துறை முத்தாலம்மன் கோயில் படித்துறை, சுப்பிரமணியர் கோயில் படித்துறை, சாந்தி தியேட்டர் சந்து, ரவி தியேட்டர் சந்து ஆகிய இடங்களில் , 24 மணி நேரமும் ஆற்றில் சாக்கடை நீர் கலக்கின்றது. இதனால், மஞ்சள் காமாலை, மூளைக் காய்ச்சல் இளம் பிள்ளை வாதம், காலரா போன்ற நோய்கள் வருஷந்தோறும் பரமக்குடி மக்களை வாட்டுகின்றது. இரண்டு வருஷங்களுக்கு முன்புகூட பரமக்குடி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, விரிவுரையா ? வினா என்ன ? நேராகச் சாக்கடைக்கு வாருங்கள் . (சிரிப்பு)

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : இரண்டு வருஷங்களுக்கு முன்புகூட, ''பரமக்குடியை உலுக்கிய மஞ்சள் காமாலை'' என்று தினத்தந்தியில் தலையங்கம் இட்டு கட்டுரை வெளிவந்தது. இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், இது வாட்டர் பொல்யூஷன் மூலம்தான் இந்த வியாதி பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது என்று மதுரையிலிருந்து நுண்ணியல் பிரிவு ஆய்வாளர் வந்து அறிக்கை கோரி உள்ளார்கள். ஆகவே, இதைத் தடுப்பதற்கு ஆற்றின் ஓரத்தில் சேனல் கட்டி, அந்தக் கழிவு நீர், குடிநீர் பெறப்படும் ஆற்றில் கலக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வைகை ஆற்றிலேயிருந்துதான் பரமக்குடிக்கான குடிநீர் எடுக்கப்படுகிறது. அந்தக் கழிவு நீரை பக்கத்திலே உள்ள கழிவு நீர்ப் பண்ணைக்கு எடுத்துச் சென்று அங்கே புல் வளர்க்கப்படுகிறது. சிலயிடங்களிலே உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதைப்போல கழிவு நீர் செல்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அவைகள் ஆற்றினுடைய வெள்ளக் காலங்களிலே அடித்துச் செல்லப்படுவது உண்டு. தேங்கி நிற்கின்ற இந்தக் கழிவு நீரை அகற்றுவதற்கு நகராட்சியோடு சேர்ந்து இந்த அரசும் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் ஆற்றில் சாக்கடை நீர் கலக்கிறது என்பது முழுக்க முழுக்க உண்மை. நீங்கள் ஒரு குழு அமைத்து, மழைக் காலங்களில் ஆனாலும் சரி, கோடைக் காலங்

களில் ஆனாலும் சரி, அதைப் பார்வையிட நேர்ந்தால், எந்த நேரமும் அதைப் பார்வையிடலாம். அவ்வாறு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு வந்து அதைப் பார்வையிடுமா? அவ்வாறு அந்தக் குழு பரிந்துரை செய்தால் அப்பொழுதாவது இந்தச் சாக்கடை நீர் குடிநீர் பெறப்படும் தண்ணீரில் கலக்காமல், வாட்டர் பொல்யூஷன் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, உறுப்பினருடைய கருத்துக்களை அரசு கருத்தில் எடுத்துக் கொள்ளும்.

லிக்கோடெர்மாவுக்கு மருத்துவம்.

* 9026 திரு. செங்கை சிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) லிக்கோடெர்மா வில்டிலில் என்னும் சருமநோய் தாக்கியுள்ளவர்கள் நிவாரண மருந்தான மெல்ஜினினா லோஷனை அதிக விலையில் வாங்க முடியாமல் உள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இம்மருந்தினை உள்ளூரில் தயாரிக்கவும் நியாயமான விலையில் விற்கவும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம், இந்த மருந்து இச்சரும நோய்க்கு முழுமையான பலனளிக்கக்கூடிய மருந்தாக அமையவில்லை. மேலும் இந்த மருந்தின் தொழில் நுட்ப விவரங்கள் சரிவரக் கிடைக்காத காரணத்தினால் இந்த மருந்தினை இந்தியாவில் தயாரிக்க முடியாமல் உள்ளது. எனினும் இதற்குச் சமமாக பலனளிக்கக்கூடிய மாற்று மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதிலும் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

9–55 மணி

திரு. செங்கைசிவம்: தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள ராம் மனோகர் லோகியோ மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பேராசிரியர் எஸ்.கே. சர்மா 18–9–1989 ஆம் நாளன்று 'பைனான்சியல் எக்ஸ்ப்ரஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்து இருக்கிற பேட்டியில் 'லிக்கோடெர்மா' வியாதிக்கு கியூபா நாட்டில் மருந்து தயாரிக்கப்படுகிறது என்றும், 'மெல்ஜினினா' என்ற மருந்து தான் சிறந்தது என்றும், அதில் 100-ல்

களில் ஆனாலும் சரி, அதைப் பார்வையிட நேர்ந்தால், எந்த நேரமும் அதைப் பார்வையிடலாம். அவ்வாறு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு வந்து அதைப் பார்வையிடுமா ? அவ்வாறு அந்தக் குழு பரிந்துரை செய்தால் அப்பொழுதாவது இந்தச் சாக்கடை நீர் குடிநீர் பெறப்படும் தண்ணீரில் கலக்காமல், வாட்டர் பொல்யூஷன் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, உறுப்பினருடைய கருத்துக்களை அரசு கருத்தில் எடுத்துக் கொள்ளும்.

லிக்கோடெர்மாவுக்கு மருத்துவம்.

* 9026 திரு. செங்கை சிவம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) லிக்கோடெர்மா வில் டிலில் என்னும் சருமநோய் தாக்கியுள்ளவர்கள் நிவாரண மருந்தான மெல்ஜினினா லோஷனை அதிக விலையில் வாங்க முடியாமல் உள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இம்மருந்தினை உள்ளூரில் தயாரிக்கவும் நியாயமான விலையில் விற்கவும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம், இந்த மருந்து இச்சரும நோய்க்கு முழுமையான பலனளிக்கக்கூடிய மருந்தாக அமையவில்லை. மேலும் இந்த மருந்தின் தொழில் நுட்ப விவரங்கள் சரிவரக் கிடைக்காத காரணத்தினால் இந்த மருந்தினை இந்தியாவில் தயாரிக்க முடியாமல் உள்ளது. எனினும் இதற்குச் சமமாக பலனளிக்கக்கூடிய மாற்று மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப் பட்டு தமிழ்நாடு முழுவதிலும் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

9–55 மணி

திரு. செங்கைசிவம் : தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள ராம் மனோகர் லோகியோ மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பேராசிரியர் எஸ்.கே. சர்மா 18–9–1989 ஆம் நாளன்று 'பைனான்சியல் எக்ஸ்ப்ரஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்து இருக்கிற பேட்டியில் 'லிக்கோடெர்மா' வியாதிக்கு கியூபா நாட்டில் மருந்து தயாரிக்கப்படுகிறது என்றும், 'மெல்ஜினினா' என்ற மருந்து தான் சிறந்தது என்றும், அதில் 100-ல்

71 நோயாளிகள் பூரணமாக குணமடைந்துள்ளனர் என்றும் கூறியுள்ளார். அந்த நோயால் இந்தியாவின் இரண்டு கோடி பேர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; தமிழ்நாட்டில் ஆறு இலட்சம் பேர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த வியாதிக்கு இந்தியாவில் சரியான மருந்து இல்லாத காரணத்தால் கியூபா நாட்டிலிருந்து அரசு அங்கீகாரத்தோடு சிம்கோ என்ற நிறுவனம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அமைச்சருக்குச் செய்தி சொல்கிறீர்களா, அல்லது அமைச்சரிடமிருந்து விடை எதிர்பார்க்கிறீர்களா?

திரு. செங்கை சிவம் : தலைவர் அவர்களே, சிம்கோ நிறுவனம் இறக்குமதி செய்து விநியோகிக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் நாட்டில் அந்த மருந்து சுலபமாக கிடைக்க வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, 'லிக்கோடெர்மா' என்ற வியாதி முழுவதுமாக குணப்படுத்த முடியாத வியாதி என்று வகைசெய்யப்பட்டுள்ள வியாதியாகும். அதற்கு இந்தியாவில் பல்வேறு மருந்து வகைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குறைந்த விலையில் அவைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.
Maxsolara Lotion, Monoderm ointment Neuosoralens ointment, Lonosil ointment.

போன்ற பல்வேறு மருந்துகள் இதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகள் எல்லாம் இந்தியாவில் தயாரிக்கப்படுகிற மருந்துகள் ஆகும். யாரோ மருத்துவர் சொன்னதாக குறிப்பிட்டார்கள். மருத்துவர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் இருப்பது என்பது மருத்துவ உலகில் இருக்கிற நிலைமை தான். அவைகள் முழுவதுமாக ஆய்வு செய்யப்பட்டு இந்த வியாதியை முழுவதுமாக குணப்படுத்தமுடியும் என்று ஆராய்ச்சி நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டால் அந்த மருந்தை இங்கே கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : தலைவர் அவர்களே, இந்த வியாதியால் ஆறு லட்சம் பேர் தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திருமண வயதுடைய பெண்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். இது கியூபா நாட்டில் மூன்று டாலருக்கு விற்கப்படுகிறது. இந்தியாவில் 260 ரூபாய்க்கு விற்கிறார்கள். மேலும், இந்த மருந்து தயாரிப்பதற்குத் தேவைப்படும் மூலப்பொருள்—human placerta

1990 ஏப்ரல் 5]

அதாவது மனித சேய் இணைப்பு திசு. இந்த மூலப் பொருள் தமிழ் நாட்டில் மிக அதிகமாக கிடைக்கிறது. ஆகவே, ஒரு டாக்டர் குழுவை கியூபா நாட்டிற்கு அனுப்பி, மருந்து தயாரிப்பு முறையை அறிந்து வரச் செய்து, தமிழ் நாட்டில் அந்த மருந்தை தயாரித்து மிகச் சுலபமாக விற்பனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இந்த மருந்தின் பலன் குறித்து இன்னமும் முழுமையாக அறிஞர் குழுவால் முடிவு செய்யப் படாத நிலையில், அதுபற்றி ஆய்வு செய்கிற செயற்குறிப்பு அரசிடம் இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால், அது முழு மையாக குணப்படுத்தும் என்று அறிஞர் உலகம், மருத்துவர் உலகம் ஏற்றுக்கொள்ளுமானால், அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

பணியில் இருக்கும்போது மரணமடைந்து விடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி.

*1006 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணியில் இருக்கும்போது மரணமடைந்துவிடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி வழங்குவதில் திருமணம் முடிந்த பெண்களுக்குப் பாரபட்சம் காட்டக் கூடியவகையில் அரசு ஆணை அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குறையை நிவர்த்திக்க அரசு மேற் கொள்ளும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி மணமாகாத பெண்களுக்குத்தான் கருணை அடிப்படையில் வேலை கொடுக் கப்படுகின்றது.

(ஆ) இப்பொருள் குறித்து தற்பொழுது அரசின் பரி சீலனையில் ஏதுமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அரசுப் பணியில் இருக்கிற நேரத்தில் மரணம் அடையும் அரசு ஊழியர்களுடைய வாரிசுகளுக்கு வேலை அளிக்க வேண்டும்

1990 ஏப்ரல் 5]

அதாவது மனித சேய் இணைப்பு திசு. இந்த மூலப் பொருள் தமிழ் நாட்டில் மிக அதிகமாக கிடைக்கிறது. ஆகவே, ஒரு டாக்டர் குழுவை கியூபா நாட்டிற்கு அனுப்பி, மருந்து தயாரிப்பு முறையை அறிந்து வரச் செய்து, தமிழ் நாட்டில் அந்த மருந்தை தயாரித்து மிகச் சுலபமாக விற்பனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இந்த மருந்தின் பலன் குறித்து இன்னமும் முழுமையாக அறிஞர் குழுவால் முடிவு செய்யப் படாத நிலையில், அதுபற்றி ஆய்வு செய்கிற செயற்குறிப்பு அரசிடம் இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால், அது முழு மையாக குணப்படுத்தும் என்று அறிஞர் உலகம், மருத்துவர் உலகம் ஏற்றுக்கொள்ளுமானால், அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

பணியில் இருக்கும்போது மரணமடைந்து விடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி.

*1006 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணியில் இருக்கும்போது மரணமடைந்துவிடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி வழங்குவதில் திருமணம் முடிந்த பெண்களுக்குப் பாரபட்சம் காட்டக் கூடியவகையில் அரசு ஆணை அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குறையை நிவர்த்திக்க அரசு மேற் கொள்ளும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி மணமாகாத பெண்களுக்குத்தான் கருணை அடிப்படையில் வேலை கொடுக் கப்படுகின்றது.

(ஆ) இப்பொருள் குறித்து தற்பொழுது அரசின் பரி சீலனையில் ஏதுமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அரசுப் பணியில் இருக்கிற நேரத்தில் மரணம் அடையும் அரசு ஊழியர்களுடைய வாரிசுகளுக்கு வேலை அளிக்க வேண்டும்

என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை, திட்டம். அப்படி இருக்கிறபோது மணமான காரணத்தால், அதிலும் குறிப்பாக இப்போது பெண்கள் வாரிசு உரிமைச் சட்டம் நிறைவேற்றியதற்கு பின்னால் அந்தப் பெண்களுக்கு வேலை தராமல் இருப்பது முறையா? எனவே, வேலை தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, வாரிசுதாரர் அடிப்படையில் பணியில் இருக்கிறபோது இறந்துவிட்ட அரசு ஊழியர்களின் மனைவியோ அல்லது மகனோ அல்லது மணமாகாத மகளோ என்றுதான் இருக்கிறது. மணமாகிவிட்டாலே அவர் வேறு குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தாலோ என்னவோ அவர்களுக்குத் தருவதில்லை. இந்த மூன்று பேர்களுக்கு மட்டும்தான் தருவதாக இதுவரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் ''வினாக்கள்-விடைகள் நேரம்'' சற்று நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமை முன்பு இருந்திருந்தால், சரி, சென்ற ஆண்டு புதிதாக இந்தப் பேரவையில் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இந்த அரசாங்கம் சட்டம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னாலும், அவர்கள், அந்த மணமான பெண்கள் வாரிசுதாரர்களாக கருதப்படமாட்டார்கள் என்று சொல்வது எந்த நியாயத்தின் அடிப்படையிலே அப்படிச் சொல்லப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கடந்த வருடம் இதுபோன்ற சட்டத்தை இயற்றியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. அந்தக் குறிப்பை அறிந்து, அந்தச் சட்டம் இயற்றப்பட்டு இருக்குமானால், அவர்களுக்கும் வேலை தருவதிலே அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நிறைவேற்றியிருக்கிற சட்டம், பெண்களுக்கும் பெற்றோர்களுடைய சொத்தில் உரிமை உண்டு என்று அந்தச் சட்டமே தவிர, வேலை கொடுப்பதற்கான சட்டம் அல்ல.

1990 ஏப்ரல் 5]

கைத்தறி கணக்கெடுப்பு.

*475 திரு. பொன். விஜயராகவன்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் முழுமையான கைத்தறி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென மைய அரசின் கைத்தறி மேம்பாட்டு ஆணையர் ஆணை ஏதும் பிறப்பித்துள்ளாரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வீடு வீடாகச் சென்று தேவையான குறிப்புகளைச் சேகரித்து மேற்படி கணக்கெடுப்பைத் முடித்திருக்கிறார்கள்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கெடுப்பின் மூலம் தமிழ்நாட்டில், எத்தனை கைத்தறிகள் இப்போது இருக்கின்றன என்ற விவரத்தை அரசு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கெடுப்பின் மூலம் 1987 ஆம் ஆண்டு கணக்குப்படி 4.27 லட்சம் கைத்தறிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கை எடுப்பதற்கான முகாந்திரம், காரணம் ஏதேனும் தனியாக இருக்கிறதா என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கைத்தறிகளைக் கணக்கிட்டு அதற்கேற்றாற்போல பல்வேறு திட்டங்களை உருவாக்குவதற்கு இப்படிப்பட்ட கணக்குகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குடிசை வாழ் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகை

*912—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

குடிசை மாற்று வாரியம் உலக வங்கித் திட்டம் என்று குடிசைவாழ் மக்களை வற்புறுத்தி ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தியாக வேண்டும் என்று கேட்பதை ரத்து செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவிற்கு இடமில்லை.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா சென்ற ஆண்டு தொடுக்கப் பட்ட வினா. இப்போது அந்த மக்கள் பணம் செலுத்தச் சென்றால், அரசு அதிகாரிகள் பெற மறுக்கின்றார்களே, அது இந்த அரசுக்குத் தெரியுமா அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியோடு குடிசைப் பகுதியிலே குடியிருக்கின்ற அந்தக் குடிசைப் பகுதி மக்களுக்கு மேம்பாடு வசதிக்காக இப்படிப்பட்ட திட்டங்கள் உருவாக்கப் பட்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் தற்போது நடை முறையிலே உள்ளது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இடத்தைச் சொல்வார்களேயானால், உரிய நடவடிக்கை விரைவிலே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி 148-வது வட்டத்தில் இந்தத் திட்டத்தில் பயன் அடையக்கூடிய அளவிற்கு மக்கள் பணம் செலுத்தச் சென்றபோது, அவர்கள் குடியிருக்கின்ற அரை மனையில் கால் மனையை விட்டுத்தந்தால் தான் தரமுடியும் என்று அரசு அதிகாரிகள் அறிவித்ததினுடைய விளை வாக, அந்தத் திட்டம் கடந்த 6 மாத காலமாக முடங்கியிருக்

1990 ஏப்ரல் 5]

கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் துவங்குவதற்கு அவர்கள் குடியிருக்கிற இடத்திற்கு ஏற்றாற்போல பணம் பெற்றுக்கொள்ள உத்தரவிடுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதியிலே குடியிருக்கிற அந்த மக்கள், அந்தக் குடிசைப் பகுதியிலே உள்ள அந்த வீட்டு மனையினுடைய மனை அளவு, குறிப்பிட்ட ஒரு சதவீதத் தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும். மீதத் தொகை, மேம்பாட்டுத் தொகையில் தவணை முறையிலே செலுத்தப்பட வேண்டும். அந்தப் பகுதியினுடைய குறைபாடுகளை விரைவிலே அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அலுவலகம்.

* 5408. திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களை எல்லையாகக் கொண்டு தற்பொழுது இயங்கிவரும் கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் சிதம்பரம் அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மாவட்டத்திற்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் துவக்க சாத்தியக்கூறு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

10.05 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் எத்தனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன? அந்தச் சங்கங்களிலே அங்கம் வகிக்கக் கூடிய அங்கத்தினர்கள் எத்தனை பேர்? அதற்குத் தனியாக இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்களே அதற்கு என்ன காரணம் என்பதை தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 5]

கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் துவங்குவதற்கு அவர்கள் குடியிருக்கிற இடத்திற்கு ஏற்றாற்போல பணம் பெற்றுக்கொள்ள உத்தரவிடுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதியிலே குடியிருக்கிற அந்த மக்கள், அந்தக் குடிசைப் பகுதியிலே உள்ள அந்த வீட்டு மனையினுடைய மனை அளவு, குறிப்பிட்ட ஒரு சதவீதத் தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும். மீதத் தொகை, மேம்பாட்டுத் தொகையில் தவணை முறையிலே செலுத்தப்பட வேண்டும். அந்தப் பகுதியினுடைய குறைபாடுகளை விரைவிலே அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அலுவலகம்.

* 5408. திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களை எல்லையாகக் கொண்டு தற்பொழுது இயங்கிவரும் கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் சிதம்பரம் அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மாவட்டத்திற்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் துவக்க சாத்தியக்கூறு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

10.05 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் எத்தனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன? அந்தச் சங்கங்களிலே அங்கம் வகிக்கக் கூடிய அங்கத்தினர்கள் எத்தனை பேர்? அதற்குத் தனியாக இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்களே அதற்கு என்ன காரணம் என்பதை தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்கனவே திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் பகுதியை உள்ளடக்கியதாக முதலிலே அந்த அலுவலகம் தொடங்கப்பட்டது. நிர்வாகத் திற்கு ஏற்றாற்போல் அந்தச் சங்கங்களை கண்காணிப்பதற்குரிய பணிகளை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளியும் புதுக்கோட்டையும் சேர்த்து தனியாக ஒரு உதவி இயக்குநர் அலுவலகமும் அதுபோல தென்னாற்காடு மாவட்டமும் தஞ்சாவூர் பகுதியும் சேர்த்து சிதம்பரம் பகுதியில் ஒரு அலுவலகமும் இன்றைய தினம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தென்னாற்காட்டைப் பொறுத்தவரையில் 74 நெசவாளர்ச் சங்கங்கள் மட்டுமே இருக்கின்றன. தஞ்சாவூரைப் பொறுத்த வரையில் 47 நெசவாளர்ச் சங்கங்களே இருக்கின்றன. ஆகவே இவ்வளவு சிறிய நெசவாளர்ச் சங்கங்கள் இருக்கின்ற காரணத்தால், தனியாக அலுவலகம் பிரிக்கின்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக சங்கங்களின் அங்கத்தினர்களாக உள்ள நெசவாளர்களின் எண்ணிக்கை எத்தனை? தஞ்சை மாவட்டம் ஒரு பெரிய மாவட்டமாகும். இப்போது கூட நிர்வாக வசதிக்காக காவல் துறை, போக்கு வரத்துத் துறை போன்ற துறைகளில் 2 ஆகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடந்து வருகிறது. அதையும் கவனத்தில் கொண்டு மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் அவர்கள் நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டத்தை தனியாகப் பிரித்து கைத்தறி மற்றும் துணி நூல் அலுவலகம் அமைக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச .தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர்கள் விவரம் மாவட்ட வாரியாக உள்ள குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 47 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களே இருக்கின்றன. ஆகவே தனியாக உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்கின்ற திட்டம் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

எதிர்க்கட்சித் தலைவரின் கார் கே. கே. நகரில் சிலரால் தாக்கப்பெற்றுள்ளது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதினாலே இந்த நேரத்தை நான் பயன் படுத்திக்கொள்கிறேன். நேற்று காலை நடைபெற்ற உங்களுடைய இல்லத் திருமணத்தில் நான் குறிப்பிட்ட நேரத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. சட்டமன்றத்திற்கு வரவேண்டிய நிலை வந்துவிட்டது. மாலையில் எப்படியும் கலந்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக மாலை ஆறரை மணிக்கு புறப்பட்டு வழியில் கே. கே. நகரிலே இருக்கிற அன்னை பாத்திமா சைல்டு வெல்பேர் சென்டர் என்ற நிறுவனத்திற்கு சென்று, மதுரை கிழக்கு தொகுதியில் ஒரு அனாதை இல்லம் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காக நானும் மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களும் அரசாங்கத்திலேயிருந்து எனக்கு ஒதுக்கப்பட்ட காரில் கே. கே. நகருக்கு சென்று அந்த இல்லத்தின் உள்ளே போய் பேசிக் கொண்டிருந்த ஒரு ஐந்து நிமிடத்திற்குள்ளாக 7, 8 பேர்கள் கைகளில் ஆயுதங்களோடு வந்து அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த என்னுடைய கார் கண்ணாடிகள் அத்தனையும் உடைத்துவிட்டார்கள். கார் பலத்த சேதத்திற்கு ஆளாகி இருக்கிறது.

இதைக் குறிப்பிடுவதற்கு அடிப்படை காரணம் என்னை நோக்கி தாக்குவதற்காக வந்தார்களா அல்லது வேறு வகையான எண்ணங்களோடு வந்தார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் கே. கே. நகரிலே இருக்கிற காவல் துறை நிலையத்திலே என்னுடைய ஓட்டுநர் அவர்களை வைத்து வண்டிக்காக நான் அங்கு ஒரு புகார் எழுதிக்கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு சின்னசாமி அவர்களும் அந்தப் புகாரை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திலே கொண்டு வந்து பாதுகாப்பு என்ற அடிப்படையிலே அல்ல அந்த நிலைமைகள் வளராமல் இருப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நீண்ட நாள் சட்டமன்ற அனுபவம் உள்ளவர்கள். இந்தப் பிரச்சினையை இப்படி எழுப்பவேண்டும் என்று அவர் விரும்பியதே எனக்குச் சற்று ஆச்சரியமாக இருக்கிறது. என்ன காரணம் என்றால் சற்று நேரம் முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள்

[டாக்டர் க. அன்பழகன்] [1990 ஏப்ரல் 5

இந்தப் பிரச்சினையை சொல்லி, ஒட்டுநர் காவல் நிலைய அலுவலருக்கு எழுதிய புகாரை அந்தத்தாளை என்னிடத்திலே கொடுத்தார்கள். நான் அவர்களிடத்திலே சொன்னேன். இது பற்றி உடனடியாகப் பதில் சொல்லக்கூடிய நிலையிலே நான் இல்லை. காவல் துறையைக் கேட்டுச் சொல்லவேண்டு மானாலும் கூட சபாநாயகர் மூலமாக இந்தக் கடிதம் வருமாறு தாங்களோ அல்லது எதிர்க்கட்சித் தலைவரோ கையெழுத் திட்ட ஒரு புகார் கொடுத்தால், நான் அதை அனுப்பி விவரம் தெரிந்துகொண்டு நாளையதினம் தெரிவிப்பதாகச் சொன்னேன். உறுப்பினர் என்னிடம் பேசுகிறபோது சொன்னார், அந்தப் பகுதியில் ஒரு ரவுடிக் கும்பல் 7, 8 கார்களைச் சேதம் செய்துவிட்டது. எங்களுடைய காரும் சேதம் அடைந்தது நாங்கள் சென்று இருந்த இடத்தில் காரும் பாதிக்கப்பட்டது. என்று சொன்னார்கள். கே.கே. நகர்ப் பகுதியில் அப்படி ஒரு ரவுடி கும்பல் ஒருவர் பெயரைக் கூட அவர் சொன்னார். ஆதாரம் இல்லாமல் அந்தப் பெயரை திரும்பச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் அரசியல் சம்பந்தப்பட்டதா என்று கேட்டேன். அரசியல் சம்பந்தப்பட்டது அல்ல. அந்தத் தெருவிலே அப்படி ஒரு அக்கிரமம் நடக்கிறது என்ற கருத்தை அவர் சொன்னார். இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறபோது இரண்டு பக்கத்திலே யும் பொருள் படும்படியாக—அது நாங்கள் எல்லாம் தஞ்சாவூர் மாவட்டத்திலே பேசிப் பழக்கப்பட்டது—(சிரிப்பு) எனவே இரண்டுப் பக்கத்திலேயும் பொருள்படும்படியாக ஒரு கருத்தை சொல்லி அதில் ஏதோ ஒரு உள்நோக்கம் இருப்பது போல் ஒரு எண்ணம் ஏற்படுத்துவது அவ்வளவு சரியல்ல. ஆனால் இந்த செய்தி இந்த அவையில் தெரிவிக்காமலே, தெரிவித்தாலும் கூட உரிய முறையில் விசாரிக்க காவல் துறை கேட்டுக்கொள்ளப்படும். அந்த முறையில் காவல் துறையைக் கேட்டுக்கொள்வேன்.

10-10 மணி

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் இதைப் பிரச்சினையாக எழுப்பி விவாதிக்க வேண்டும் என்று விரும்பவில்லை. நான் எதற்காக விவா திக்க வேண்டும் என்று எழுப்பினேன் என்றால் நேற்றைக்கு இந்தக் காவல் துறையிலே எதிர்க்கட்சித் தலைவருடைய கார் அடிக்கப்பட்டது, கண்ணாடி உடைக்கப்பட்டது என்று காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் காவல் துறையில் இருக்கின்றவர்கள் கொஞ்சமாவது அக்கறை உள்ளவர் களாக இருந்து இருப்பார்களானால் தகவலை உங்களுக்குத் தந்து இருக்கவேண்டும், முன்னவருக்கும் கொடுத்து இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைப்பற்றி யார் கார் போனால் என்ன, யார் உயிர் போனாலும் அவர்களுக்கு கவலையில்லை என்ற நிலையில் இருக்கிறார்கள். அதை நீங்கள் கவனிக்கவேண்டும் என்பதால் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

1990 ஏப்ரல் 5]

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரவேண்டும். ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். நான் ஏற்கனவே நிறைய விரிவான விளக்கங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்தைக் கவனத்தில் வைத்துச் செயல்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு). திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்கார வேண்டும். இப்படி இருந்தால் நான் கடைசியில் இறுக்கமாக இருக்க வேண்டியிருக்கும். கொஞ்சம் வாய்ப்புக் கொடுத்தால், அப்புறம் என்ன ஆகிவிடும் என்றால், வீணாகி விடும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, கே. ஏ. செங்கோட்டையன், வி. கே. சின்னசாமி, வே. நா. சுப்பிரமணியன், எஸ். டி. உகம்சந்த், வே. பெரியசாமி, க. பொன்னுசாமி, குமரி அனந்தன், கே. ரமணி, கோ. வீரையன், உ. ரா. வரதராசன் மற்றும் சோ. அழகர்சாமி ஆகியோர் ''தமிழகத்திலுள்ள வருவாய்த் துறை அதிகாரிகள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்ற பொருள் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21 ஆம் தேதி முதல் தமிழ் நாட்டில் இருக்கிற 15 ஆயிரம் வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்காக முன்னறிவிப்புக் கொடுத்து நீண்ட நாட்களாக அவர்களுடைய கோரிக்கை என்ன என்பதை தெளிவாக அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது குறித்து 2, 3 முறை பேச்சு வார்த்தைகள் நடை பெற்றதாகவும், அந்தப் பேச்சு வார்த்தையில் முடிவுகள் ஏற்படாத காரணத்தால் தங்களுக்கு வேறு வழி இல்லை என்ற நிலை ஏற்பட்டதற்குப் பின்னால் அவர்களுக்கு இருக்கிற அந்த உரிமையின் அடிப்படையில் வேலை நிறுத்தம் தவிர வேறு வழி இல்லாத நிலையில் வேலை நிறுத்

1990 ஏப்ரல் 5]

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரவேண்டும். ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். நான் ஏற்கனவே நிறைய விரிவான விளக்கங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்தைக் கவனத்தில் வைத்துச் செயல்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு). திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்கார வேண்டும். இப்படி இருந்தால் நான் கடைசியில் இறுக்கமாக இருக்க வேண்டி யிருக்கும். கொஞ்சம் வாய்ப்புக் கொடுத்தால், அப்புறம் என்ன ஆகிவிடும் என்றால், வீணாகி விடும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, கே. ஏ. செங்கோட்டையன், வி. கே. சின்னசாமி, வே. நா. சுப்பிரமணியன், எஸ். டி. உகம்சந்த் , வே. பெரிய சாமி, க. பொன்னுசாமி, குமரி அனந்தன், கே. ரமணி, கோ. வீரையன், உ. ரா. வரதராசன் மற்றும் சோ. அழகர்சாமி ஆகியோர் ''தமிழகத்திலுள்ள வருவாய்த் துறை அதிகாரிகள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்ற பொருள் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21 ஆம் தேதி முதல் தமிழ் நாட்டில் இருக்கிற 15 ஆயிரம் வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்காக முன்னறிவிப்புக் கொடுத்து நீண்ட நாட்களாக அவர்களுடைய கோரிக்கை என்ன என்பதை தெளிவாக அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது குறித்து 2, 3 முறை பேச்சு வார்த்தைகள் நடை பெற்றதாகவும், அந்தப் பேச்சு வார்த்தையில் முடிவுகள் ஏற்படாத காரணத்தால் தங்களுக்கு வேறு வழி இல்லை என்ற நிலை ஏற்பட்டதற்குப் பின்னால் அவர்களுக்கு இருக்கிற அந்த உரிமையின் அடிப்படையில் வேலை நிறுத்தம் தவிர வேறு வழி இல்லாத நிலையில் வேலை நிறுத்

[திரு. எஸ். ஆர். இராதா] [1990 ஏப்ரல் 5

தத்தை துவக்கியிருக்கிறார்கள். வேலை நிறுத்தம் துவக்கப்பட்ட பின்னால் கூட அரசினிடத்தில் பேசுவதற்கு அவர்கள் தயாராக இருந்து கொண்டு இருக்கிறார்கள். அரசு அழைக்கிற நேரத்தில் பேசுவதற்கு அவர்கள் முன் வந்து இருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் ஏற்படவில்லை.

ஆனால் இதற்கு முன்னால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற அளவில் பல்வேறு தீர்மானங்கள் கொடுத்து இருந்தும் கூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தருகிற நேரத்தில் தெளிவாகச் சொன்னார்கள். கதவு திறந்து இருக்கிறது, எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்று. வருவாய்த் துறை அலுவலர்களைக் கேட்டேன். அவர்களும் எங்கள் கதவும் திறந்து இருக்கிறது. நாங்கள் மூடவில்லை என்று சொன்னார்கள். ஆனால் 2 கதவுகளும் திறக்கப்பட்டு யாரும் வெளியே வராமல் உள்ளே இருக்கிறார்கள். திறக்கப்பட்ட கதவுகள் மூடப்பட இருக்கிறதா அல்லது திறந்த நிலையிலேயே இருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் நாட்கள் கடந்து கொண்டிருக்கிறது. அதனுடைய விளைவு என்ன ஆகியிருக்கிறது என்று சொன்னால் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா வட்ட அலுவலகங்களும் செயல்படாத நிலை ஏற்பட்டு விட்டது. தாலுக்கா அலுவலகங்கள் செயல்படவில்லை என்று சொன்னால் அதனால் என்னென்னப் பிரச்சினைகள் வரும் என்பதை நான் முழுமையா. விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை இன்றைக்கு இருக்கிற நிலைமை, சாதாரண அத்தாட்சியைக் கூட தரமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது. அவசரமாக ஒரு அத்தாட்சி வேண்டுமென்றால் வாங்க முடியாத நிலை.

10.15மணி

அதைப்போல இன்றைக்கு முதியோர் உதவித் தொகை அரசினுடைய உதவித் தொகை இந்த வட்ட அலுவலகங்கள் மூலமாக, இந்த அலுவலர்களை வைத்துத்தான் அந்த உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது என்பதையும் நீங்கள் மறந்து விடாதீர்கள். இப்போதேகூட முதியோர் உதவித் தொகை கிடைக்கவில்லை என்ற கூக்குரல்கள் பெரியவர்களிடத்திலேயிருந்து வர ஆரம்பித்து விட்டன. இன்னும், அடுத்த மாதம் தரவேண்டிய உதவித் தொகை என்பது இன்றைக்கு ஐந்தாம் தேதிக்கு முன்னாலே எழுதி அவர்கள் தயார் செய்தால்தான் அந்த உதவித் தொகையை அனுப்ப முடியும். நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒரு முறை மதுரையிலே ஏற்பட்ட நிலை. 5 மாதம் உதவித் தொகை அனுப்பாத காரணத்தினாலே ஐந்தாவது மாதத்திலே ஐந்து மாதத்தினுடைய உதவித்தொகை

யைச் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று முயற்சித்து அதற்குப் பின்னாலே, மணியார்டர் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை வருகிற நேரத்திலே தனித் தனியாக, மாதா மாதம் அனுப்பு வதற்கு மணியார்டர் கட்டணம் குறைந்தும் 5 மாதத்திற்கு தொகை சேர்ந்து, 5 மாதத்திற்கான மணியார்டர் கட்டணம் சேர்கிற நேரத்திலே அதிகம் ஆகிறது என்று தெரிவித்து, அத னாலே நாளைக்கு தணிக்கையிலே ஏதாவது பிரச்சினைகள் வந்து விடும் என்று பயந்து அதற்குப் பின்னாலே ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு மாதமும் மணியார்டர் அனுப்புகிற நிலைமை ஏற்பட்டு மிகப் பெரிய அல்லலுக்கு ஆளாகி அங்கே யிருக்கிற பெரியவர்கள், தாய்மார்கள், அநாதைகள், ஆதர வற்றவர்கள் எவ்வளவு பெரிய ஆபத்திற்கு ஆளானார்கள் என் பது எனக்குத் தெரியும். இன்றைக்கு, அதேபோல எல்லா வித மான உதவித் தொகைகள் கிடைக்கிறதா இல்லையா என்பது, இன்றைக்கு அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் அதனால் ஏற்படுகிற கஷ்டம் அவர்களுக்கும் தெரியும். நாமும் உணர்ந்து இருக்கிறோம். எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகிற காரணத்தினாலே வருவாய்த் துறை என்பது ஒரு அத்தியாவசிய மான, தவிர்க்க முடியாத, மிக முக்கியமான துறை என்ற அள விற்கு ஆகிவிட்டது. அன்றாட பிரச்சினையிலே இப்படி ஒரு பாதிப்பு ஏற்பட்டு இவ்வளவு நாள் இந்த வேலை நிறுத்தத்தை நாம் அனுமதித்து இருப்பது என்பது நிச்சயமாக அரசுக்கு நல்ல தல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என் றால், இரண்டு மூன்று நாட்களாக பல்வேறு இடங்களிலே கைது செய்கிற நிலைமையை ஆரம்பித்து இருக்கிறார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இன்றைக்கு வந்திருக்கிற பல்வேறு தந்திகள் இருக்கின்றன. மதுரையிலே கைது செய்து இருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே கைது செய்து இருக்கிறார் கள். கோவில்பட்டியிலே கைது செய்து இருக்கிறார்கள். தூத்துக்குடியிலே கைது செய்து இருக்கிறார்கள். இப்படி பல்வேறு இடங்களிலேயிருந்து பல்வேறு காரணங்களாலே போலீஸ்காரர்கள் இதிலே தலையிட ஆரம்பித்து விட்டார்கள். ஒரு ஊரிலேயிருந்து வந்திருக்கிற தந்தியில், ஒன்றுமே செய்யவில்லை, நாங்கள் வைத்திருந்த தட்டியையெல்லாம் அப்புறப்படுத்தி எங்களை கைது செய்து உள்ளே வைத்து மிரட்டுகிற அளவிற்கு அரசாங்கம் ஒரு நடவடிக்கையை எடுக்கிறது என்று பயப்படுகிற நிலைமை இருக்கிறது என்று தந்தியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற முக்கியமான அந்தப் போராட்டத்திலே ஈடு பட்டிருக்கிற அலுவலர்களுடைய தலைவர்களை மிரட்டுகிற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கருது கிறார்கள். அந்த நிலைமைகளை மாற்றி அவர்களுடைய, போராட்டத்தை நீங்கள் முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமென் பதிலே இருக்கிற பிரச்சினைகள் என்பது மாண்புமிகு வருவாய்த்

[திரு. எஸ். ஆர். இராதா] [1990 ஏப்ரல் 5

துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன் நீங்கள் இன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சராக இருக்கிற இந்தக் காலத்தில் இந்த நிலைமை வந்திருக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன். நீங்கள் இதிலே அக்கறை கொண்டு, அதிகமாகக் கவனம் கொண்டு, அவர்களுடைய கவலையிலே நீங்களும் கொஞ்சம் கவலைப்பட்டு, கஷ்டத்தை கொஞ்சமாவது நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற உணர்வோடு, இந்தக் கஷ்டத்தை நாமும் கொஞ்சம் பகிர்ந்துக் கொள்ள வேண்டுமென்ற நிலையில் நீங்கள் அவர்களுக்காக, இந்த வேலை நிறுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்காக நிச்சயமாக நீங்கள் பாடுபட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களிடத்திலே இன்றைக்கு ஒரு கருத்து இருக்கிறது. நாங்கள் முதல்வரைச் சந்தித்தால் எங்கள் பிரச்சினை முடிந்து விடும் என்று சொல்கிற அளவிற்கு அவர்களுடைய மனநிலை இன்றைக்கு வளர்ந்திருக்கிறது. அப்படியென்றால் வருவாய்த் துறை அமைச்சர் இடையிலே, குறுக்கே நிற்கிறார். முதல்வரைப் பார்த்தால் முடிந்து விடும்; முதல்வருக்கும் அவர்களுக்கும் இடையிலே இருக்கிற வருவாய்த் துறை அமைச்சரினாலே இந்தப் பிரச்சினை வளர்ந்து விடுகிறதோ என்ற பயம், அந்த உணர்வு வந்திருக்கிறது. எனவே, அந்த நிலையை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் முழு வதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 15 ஆயிரம் ஊழியர்கள் என்று சொன்னாலுங்கூட, அவர்களைச் சார்ந்திருக்கிற குடும் பங்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பாதிப்பை நீங்கள் கருத்திலே கொண்டு உடனடி யாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்பற்றி விவாதிக்க வேண்டும்.

10.20 மணி

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வருவாய்த் துறை அலுவலர்கள் பல்வேறு வகையிலே தங் களுடைய கோரிக்கைகளை எடுத்து வைத்தும் அறப் போராட்டங் களை நடத்தியும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவு தருகின்ற வகையிலே தீர்த்து வைக்கப்படாத காரணத்தினாலே, உண்ணா நோன்பு என்று சொல்கின்ற ஒரு கட்டத்தை எட்டி, அதனையும் தாண்டி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, அங்கே சட்டத்தின் பிடியிலே அவர்கள் வைக்கப்பட்டிருக்கின்ற அளவிற்கு காரியங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனைப் பார்த்து அவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பது மட்டுமல்லாமல் ஆதரவும் தெரிவித்து 'ஜாக்டி' இயக்கம் அந்தப் போராட்டத்திற்கு துணை போவதாகவும் அறிவித்திருக்கிறது. ஆக, இது பெரிது பெரிதாக விரிந்து கொண்டே போவதற்குப் பதிலாக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்

இதைச் செம்மையாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை விவாதமாக வைத்து அதன் மூலம் அவர்களுடைய கருத்தை ஏற்க வேண்டுமென்பதுதான் எங்கள் நோக்கம்.

ஏனென்றால், அதிகாரப் பரவல் முறை வர வேண்டுமென்று சொன்னால், பிர்க்காவுக்கு ஒருவராக இருக்கிற ரெவின்யு இன்ஸ்பெக்டரை, டெபுடி தாசில்தாராக உயர்த்தி விட்டால், அவர்கள் சான்றிதழ்கள் போன்றவற்றை கொடுக்க வாய்ப்பாக இருக்கும். இது அதிகார பரவல்முறைதான். கிராமங்களில் இருப்பவர்கள், 50, 60 கிலோ மீட்டர் என்று வந்து, தாசில்தார் ஆபிஸ்களில் காத்து இருப்பதை தவிர்க்கலாம் என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள்.

ஏறத்தாழ 1,079 பதவி உயர்வுகள் இப்படிக் கிடைக்குமானால் அதற்காக ஏற்படுகிற உபரி செலவு 19 இலட்சம் ரூபாய் தான் என்று சொல்கிறபோது, அது ஒரு பெரிய தொகையாக இந்த அரசுக்கு நிச்சயமாகத் தெரியாது. ஏனென்றால், அவர்கள் பணிகள் பல்வேறு வகைப்பட்டனவாக இருக்கின்றன. முதியோர் உதவித் தொகை ஏறத்தாழ நான்கரை இலட்சம் பேர்களுக்கு அவர்கள் வழங்க வேண்டியிருக்கிறது. அதற்காக உதவி புரிவதற்காக 600 பணியிடங்கள் தேவைப்படுகின்றன என்கிறபோது அதில் பாதியிடங்கள் கூட நிரப்பப் படவில்லை.

அதோடு பதவியிறக்கம் ஏன் செய்ய வேண்டும் என்று சில நேரங்களில் கேட்கிறபோது, தற்காலிக பதவியிறக்கம்தான் செய்கிறோம், தேர்தல் போன்ற பணிகளுக்குச் செல்பவர்களைத் தான் பதவியிறக்கம் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு அவர்கள் செலுத்திய பணம் திருப்பி யனுப்ப வேண்டியிருக்கிறது. அதற்காக நியமிக்கப் பட்ட அலுவலர்களைக்கூட திருப்பி எடுத்து விட்டார்கள்.

ஆக, ஏற்கெனவே நடந்து கொண்டிருந்த, அமலில் இருக்கின்ற நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற பணிகளில் இருப்பவர்கள் கூட பதவிகளில் இருந்து எடுக்கப்படுகிறார்கள் என்பதும், விபத்து நிவாரணத் திட்டம், நலிந்தோர் குடும்ப நிவாரணத் திட்டம், நிலமற்ற விவசாயிகளுக்கான காப்பீட்டுத் திட்டம் என்ற ஏழு வகையான திட்டங்கள் அமலில் இருக்கும்போதே, 20 தாசில்தார்களும், 173 உதவியாளர்களும் அவர்களுடைய பணியிலிருந்து எடுக்கப்பட்டு இருக்கிறார்கள். உயர்த்தப்பட வேண்டிய கோட்ட, மாவட்ட, தலைமை மற்றும் உதவியாளர் பணியிடங்கள் 240 பணியிடங்களில் 60 பணியிடங்கள் மட்டுமே இப்போது தருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் சுருக்கமாகச் சொல்லி, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய மிக முக்கியமான

செய்தி என்னவென்றால், 11 தடவைக்கு மேல் உங்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது. யாரைச் சந்தித்து இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. இப்போது 16-3-1990-ல் தாங்கள் அவர்களை வரச் சொல்லிவிட்டு, என்னோடு பேசுங்கள் என்று சொல்லிவிட்டு, அவர்களும் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களோடு பேசலாம் என்று காத்திருந்தார்கள். வருவாய்த் துறை அமைச்சர் வருவார், தன்னுடைய சுந்தரத் திரு உருவாய் வருவார், வந்து தன் திருவாயை மலருவார், நீங்கள் வந்திருக்கிறீர்களே, அதிலே தலைவரைக் கூப்பிட்டு, நீ கேட்டதெல்லாம் பெறுவாய் என்று சொல்வார் என்ற நம்பிக்கையோடு இருந்த நேரத்தில், தாங்கள் அங்கு செல்ல வில்லை என்ற மனக்குறை அவர்களுக்கு இருக்கிறது.

நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அன்று சொன்னதை இன்றும் சொல்கிறேன், நீங்கள் மென்மையானவர் அல்லவா? அந்த மென்மையானவர்கள், என்னதான் வருவாய் வந்தாலும், நாட்டிலிருக்கிற நலிந்தவர்களுக்கெல்லாம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலை நேரம், ரொம்பக் குளிர்ச்சியாக இருக்கிறது (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : எனவே, தயவு செய்து உங்களுடைய நல்ல உள்ளத்திலே அவர்களுடைய குறைகளை ஏற்றுக்கொண்டு, தீர்த்தருள வேண்டுமென்பதற்காக, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*!திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே பிரச்சினையின் மீதான ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையிலே சில தினங்களுக்கு முன்பு எடுத்துக்கொண்டபோது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், "நடவடிக்கை எடுக்கப்படும், வேலை நிறுத்தக் காலத்தைப் பணிக்காலமாக அறிவிக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது" என்ற அறிவிப்புகளை ஒரு கையில் துப்பாக்கியாகவும், Doos are still open என்ற முறையில் சமரசத்திற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்ற அறிவிப்பை ஒருகையில் வெண்கொடியாகவும், இங்கே சித்தரிக்க முற்பட்டார்கள். "ஜாக்டீ" பேரவை என்ற அமைப்பின் தலையீட்டோடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பிரதிநிதிகள் அமைச்சர் அவர்களை சந்தித்தார்கள். அப்படிச் சந்தித்தபோது, " Doos are still open " என்பதற்குப் பதிலாக அந்தக் கதவுகள் அடைக்கப்பட்டுவிட்டன என்று வருத்தத்தோடுதான் அவர்கள் திரும்பி இருக்கக்கூடிய

ஒரு சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை மிகுந்த வேதனையோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

10.25 மணி

மறுபக்கம் இன்னொரு கையில் ஏந்தி இருக்கக்கூடிய துப்பாக்கி வெடிக்க ஆரம்பித்து இருக்கிறது. வேலை நிறுத்தத்திற்கு சம்பந்தம் இல்லாத, தவறான புகார்கள் மீதான கைதுகள் எல்லாம் தொடருகின்றன. அவர்கள் மிகுந்த வருத்தத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். அந்த வருவாய்த்துறை அலுவலர்களைப் பொறுத்த வரையிலும் சரி, ஜேக்டி பேரமைப்பைப் பொறுத்தவரையிலும் சரி முதலமைச்சர் அவர்கள்தான் சந்தித்து முடிவு சொல்ல வேண்டும் என்பதல்ல. வருவாய்த்துறை அமைச்சர் அவர்களே ஒரு சமரசத்திற்கு வந்து அவர்களை மீண்டும் அழைத்துப் பேசினால் ஒரு நல்ல தீர்வு வரும். அதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இன்றைக்கே கூட அவர்களை அழைத்துப் பேசினால் ஒரு நல்ல தீர்வு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கடந்த கால ஆட்சிகளில் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டால்தான் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்கின்ற நிலைமை வந்தாலும்கூட அதை எதிர்த்து ஒரு போராடுகிற சங்கத்தைப் பார்த்து நீ வேலை நிறுத்தத்தைக் கைவிட்டால் தான் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண முடியும் என்று சொல்வது தொழிற்சங்கத்தை மதிக்கிற உணர்வல்ல என்று சொல்லி நாங்களும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, மற்ற பல கட்சிகளும் சரி முடிவுகளை எடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

ஆகவே, வேலைநிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என்ற அந்த நிபந்தனையைக் கைவிட்டு அவர்களோடு சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, இன்றைக்கே, பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று திட்டவட்டமாக ஒரு அறிப்பை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இந்தப் பிரச்சினை 15 தினங்களைக் கடந்திருக்கக்கூடிய நிலைமையில் ஒரு தீர்வுக்குக் கொண்டுவர அப்போதுதான் இது உதவிகரமாக இருக்கும். மேலும், இதனால் அந்த வருவாய்த்துறை அலுவலர்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. தமிழகம் முழுவதும் இருக்கின்ற மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அறிவித்த போது, ஏற்கெனவே வேலை நிறுத்தத்திலே சேராமல் இருந்தவர்கள் கூட இப்போது வேலை நிறுத்தத்தில் சேர்ந்து இருக்கிறார்கள். அதன் காரணமாக மக்களுக்கு அதிகமான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அலுவலர்கள் கடந்த மாதத்தில் பணிபுரிந்த நாட்களுக்கான ஊதியம் வேண்டும் என்று சொன்னபோது அது

கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இன்றைய தினமே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், அவர்களைச் சந்தித்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்க, ஒரு திட்டவட்டமான அறிவிப்பை இங்கே செய்ய வேண்டும். இந்த மக்கள் மன்றத்திலே இருக்கின்ற மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற எங்களுக்கு விடை அளிக்கப்படுகிறபோதே அவர்கள் சொல்கிற அந்த அறிவிப்பையே அழைப்பாக ஏற்று அவர்கள் பேச்சு வார்த்தைக்கு வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். பேச மறுத்தால் கொடி தூக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமையில் அவர்களை மீண்டும் அழைத்துப்பேச வலியுறுத்தவும் இதன் தொடர்ச்சியான கருத்துக்கள் குறித்துப் பேசுவதற்கான வாய்ப்பை அளிக்கக் கூடிய முறையிலும் இந்தப் பேரவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைக்க வேண்டும் என்று தங்களைப் பணிவன்போடு கேட்டு அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த்துறை அலுவலர்களின் வேலைநிறுத்தம் சம்பந்தமாக ஏற்கெனவே இந்த அவையில் நாம் பேசியிருக்கிறோம். இப்போது அவர்களுக்கு இருக்கிற கஷ்டம் என்னவென்றால் வேலைப்பளு அதிகமாகியிருக்கிறது அவர்களுக்கு என்பது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். குறிப்பாக ஒன்றை எடுத்துக்கொண்டால் அதாவது ஓ.ஏ.பி. என்று சொல்லப்படக் கூடிய அந்த ஒரே ஒரு வேலையை காலையிலிருந்து மாலை வரையில் அவர்களுக்கு மிக அதிகமாக இருக்கிறது. அங்கே ஒரே கூட்டமாக இருக்கிறது. நாம் தப்பித் தவறி தாலுகா அலுவலகத்திற்குச் சென்றால் அவர்களைப் பார்ப்பதற்கோ, பேசுவதற்கோ, இந்த ஓ.ஏ.பி. என்ன ஆயிற்று என்று கேட்பதற்கோ, ரேஷன் கார்டு வாங்குவதற்கோ முடியாமல் ஒரே கூட்டமாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட உள்ளே சென்று வெளியே வர முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவேதான் அவர்கள் ஒன்று சொல்கிறார்கள். அந்த வேலையைப் பரவலாக்கக்கூடிய முறையில் ஆங்காங்கேயுள்ள பிர்க்காக்களில் இருக்கக்கூடிய ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை துணை தாசில்தாராக பதவி உயர்த்தினால் கொஞ்சம் இலகுவாக இருக்கும் வேலை துரிதமாக நடக்கும் என்ற நிலையில் அவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். இப்படி மற்ற கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் சொன்னது மாதிரி இன்றைக்கு நாட்டிலே பல்வேறு கோரிக்கைகளுக்காக மக்கள் போராடுகிறார்கள். ஏனென்றால் முன்பைவிட இப்போது மக்களுக்கு பல்வேறு அதிருப்திகள் இருக்கின்றன குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளைப் போக்க வேண்டும் என்று அவர்கள் யாரிடத்தில் கேட்பார்கள்? அரசாங்கத்திடம்தான் கேட்பார்கள். நேரடியாகக் கேட்பார்கள். மனு

கொடுப்பார்கள். அமைச்சரைக் கேட்பார்கள். அதுவும் முடிய வில்லை என்றால் இன்னும் கொஞ்சம் வேகமாகப் போய் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள். உண்ணாவிரதம் இருப்பார்கள். எனவே, இதனை அரசாங்கம் ஒரு வன்மையான பார்வையோடு பார்க்காமல் அனுதாபத்தோடு பார்த்து அவர்களை அழைத்துப் பேசி ஒரு முடிவை எடுக்க வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்களைப்பற்றி நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவர்கள் தன்னிடத்தில் பேசுகிறவர்களை எல்லாம் தன்வயப்படுத்துகிற சொல்வளம் பெற்றவர்கள்; சொல் நயம் பெற்றவர்கள் என்பது எங்களுக்கெல்லாம் தெரியும். அவர்களிடத்திலே பேசினாலும்கூட, தன்வயப்படுத்தி விடுவார்கள் பேச வருகிறவர்களை. அப்படிப்பட்ட ஒரு சொல் நயம் படைத்தவர்கள்தான். இருந்தாலும் கூட, 11 தடவை—நம்முடைய மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னமாதிரி, பேசியும் கூட, உங்கள் வசம் வரவில்லை என்று சொன்னால், அவர்களுடைய கோரிக்கையிலே எவ்வளவு வலுவு இருக்கிறது,—அவர்களுடைய கோரிக்கைகளிலே எவ்வளவு நியாயம் இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு எப்படியாவது அந்தப் போராட்டம் நடத்துகிற காலத்திலே, அந்தப் போராட்டத்தை நிறுத்திவிட்டு வாருங்கள்; அப்போதுதான் பேசுவோம் என்று சொல்லுவது என்பது, நாம் எல்லோரும் சேர்ந்து ஒத்துக்கொண்ட நியதிகளுக்கு விரோதமானது.

10.30 மணி

நாம் எல்லோரும் சேர்ந்து பல போராட்டங்களை நடத்தி இருக்கிறோம்—கடந்த காலத்திலே. அப்போது ஆட்சியிலே உள்ள கட்சிகளெல்லாம் ஒன்று சொல்லி இருக்கின்றன. நாம் அப்போது என்ன சொன்னோம்—போராட்டம் நடத்தும்போது கூப்பிட்டுப்பேசி, ஏதாவது ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டபிறகு, போராட்டம் தானாக நின்றுவிடும். அந்த முறையிலே இந்த போராட்டம் ஏற்கனவே நடத்தப்பட்டு, இன்றைக்கு பல்வேறு பணிகளெல்லாம் ஸ்தம்பித்து நிற்கின்றன. அதுமட்டுமல்லாமல், நியாயமான சில கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, தயவுசெய்து, இந்தப் பிரச்சினையை நீட்டிக்காமல், அவர்களை அழைத்துப் பேசி, எந்த நிபந்தனையும் போடாமல், உடனடியாக இந்தப் போராட்டத்திற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டியிருப்பதன் காரணமாக, இன்னும் பல்வேறு விஷயங்களை விவாதிப்பதற்காக, அரசு அலுவலை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

[1990 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே கடந்த 13 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிற வருவாய்த்துறை அலுவலர்களின் வேலை நிறுத்தத்தைப் பற்றி விவாதித்து ஒரு முடிவு காணத்தக்க வகையில், இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று அருமை நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. இராதா அவர்களும், இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்களும், நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்களும், அருமை அண்ணன் திரு. அழகிரிசாமி அவர்களும் பேசி இருக்கிறார்கள். எனக்கு இருக்கிற மகிழ்ச்சி, மன்றத்தில் ஆரம்பத்தில் அதை தெரிவிக்க விரும்புகிறேன்.

என்னைப் பற்றி உணர்ந்தவர்கள், பேசியிருக்கிறார்கள் என்பதனால், நான் வருவாய்த்துறை அமைச்சராக இருக்கும்போது, இப்படிப்பட்ட ஒருநிலை வந்திருக்கக்கூடாது என்ற ஆதங்கம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இருப்பதை எண்ணிப் பார்த்து நான் பூரிப்படைகிறேன். மிருதுவான மென்மையான இதயத்திற்குச் சொந்தக்காரர் என்று இரண்டாவது முறையும் இந்த மன்றத்தில் என்னைப் பற்றி அன்பொழுக, பண்பொழுகப் பேசிய இலக்கியச் செல்வருக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், திரு. வரதராசன் அவர்கள் பேசும்போது, துடிப்பு காரணமாகவோ, இளமை காரணமாகவோ கொஞ்சம் வேகமாகவே பேசி, ஆனாலும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் கண்டு தீரவேண்டுமென்ற கருத்தை இங்கே அளித்திருக்கிறார்கள். திரு. அழகிரிசாமி அவர்களும் வாடிக்கையாக— பேசுகின்ற கருத்துக்களை வேடிக்கையாகச் சொல்லவில்லை; விநயத்தோடு—தீரவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு—நோக்கத்தோடு பேசி இருக்கிறார். திரு. இராதா அவர்கள் பேசும்போது, சென்ற மாதம் ஓல்டேஜ் பென்ஷன் முழுவதும் அனுப்பப்படவில்லை என்பதை சொல்லியிருக்கிறார். சென்ற மாதம் Old age pension முழுவதும் அனுப்பப்பட்டன என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அனுப்பவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் இங்கே எழுப்பினார். இந்த மாதம் தற்காலிக செக்ஷன் ரைட்டரை நியமித்து, உடனடியாக மணியார்டர் அனுப்பப்பட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, கைது செய்யப்படுகிறார்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் என்ற கருத்தை திரு. இராதா அவர்கள் குறிப்பிட்டார்கள். அடக்கத்தோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன். வன்முறையில் ஈடுபட்டு, பணியாளர்களைத் தாக்கியவர்கள்தான் கைது செய்யப்பட்டுள்ளார்களே தவிர, வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்களை வேண்டுமென்றே இந்த அரசு கைது செய்யவில்லை என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத்

தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பார்த்தால் முடிவேற்படும் என்று குறிப்பிட்டார்கள். ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும், முதலமைச்சர் அவர்களை கலந்துதான் நான் முடிவெடுக்கிறேன் என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, என்ன இருந்தாலும், நாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று திரு. அழகர்சாமி அவர்கள் சொன்ன கருத்திற்கு என்னுடைய மகிழ்ச்சியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10–35 மணி.

திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும்போது, வேலை நிறுத்தம் செய்யும் சங்கத்தினாலேயே கைவிட்டுவிட்ட பிர்க்கா டெபுடி தாசில்தார் கோரிக்கையை அவர் எப்படி வலியுறுத்துகிறார் என்று எனக்குப் புரியவில்லை. அவர்களே அந்த கோரிக்கையை விட்டுவிட்டார்கள். பிர்க்கா டி.டி. தேவையில்லை என்றும், அதைப்போல முதலிலே வலியுறுத்திய அதைத்தான் விட்டார்கள். அதேபோல, ஓபன் பைல் சிஸ்ட்டம் அபாலிசன் தேவை என்று ,அவர்கள் சொன்னார்கள். ஏற்றுக்கொள்ள இயலாது என்று நான் சொன்னேன். அப்படியானால் அதை விட்டு விடுகிறோம் என்று சொன்னார்கள். ஜோனல் டெபுட்டி தாசில்தார் என்று அவர்கள் ஆரம்பித்தார்கள். அதை குமரி அனந்தன் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேகம் வேகமாக கேட்டு செய்திகளை விரைவு விரைவாக எடுத்துச் சொல்வதில் வல்லுனரான குமரி அனந்தன் அவர்கள் சில நேரங்களிலே குறிப்பிட்ட தவறுகளை இழைப்பது இயற்கை. அது அவர்களுடைய குற்றம் அல்ல. அந்தத் தவறை நானும் இழைக்கக் கூடும். அவையிலே இருக்கின்ற அத்தனை பேரும் விதிவிலக்குக் கேட்டால் ஆண்டவனேகூட வழங்கமாட்டார் என்று நான் நம்புகிறேன். 16ஆம் தேதி நான் அவர்களைப் பார்க்க வில்லை என்று அன்று சொன்னதை குமரி அனந்தர் அவர்கள் இன்றும் சொல்கிறார். ஆனால், அதற்குப் பிறகு 30ஆம் தேதி, 31ஆம் தேதி அவர்களை நான் பல மணி நேரம் சந்தித்து உரையாடியது அவருக்குத் தெரியுமோ, தெரியாதோ, எனக்குத் தெரியாது. அவருக்குத் தெரியாது என்று உறுதியாகத் தெரிவிப்பதற்குக் காரணம் எனக்குத் தெரியும் என்பதற்காக.

நான் பொதுவான சில கேள்விகளுக்கான விளக்கத்தை உங்களிடம் பெறுவதற்காகவும், விளங்கிக்கொள்வதற்காகவும் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு நேரடியாக நீங்கள் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. உங்களுடைய மனச்சாட்சிக்கு மட்டும் நீங்கள் பதில் சொன்னால் போதும் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன். பல கோரிக்கைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக்கொள்ளப்

பட்ட நிலையில் இந்த வேலை நிறுத்தம் தேவைதானா ? முதல் கேள்வி. அடிப்படையான இரண்டு கோரிக்கைகளை விலக்கிக் கொண்ட பிறகும் இதைத் தொடர்வது எப்படி நியாயம் ஆகும்? 300 க்கு மேற்பட்ட பதவிகளை உருவாக்கும் மண்டல துணை தாசில்தார், ஸோனல் டெப்புட்டி தாசில்தார் என்ற புதிய கோரிக்கையை ஏற்பதாக அறிவித்தால்தான் வேலை நிறுத்தத்தை கைவிடுவதாக சொல்வது முறைதானா என்று முறை தவறாமல் பேசிய உறுப்பினர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் நான் கேட்கவிரும்புவது, ஒவ்வொரு துறையும் தனக்கு இவ்வளவு பணியிடங்கள் வேண்டும், இல்லா விட்டால் வேலை நிறுத்தம் செய்வோம் என்று அரசை மிரட்டுவது என்றுகூட சொல்லமாட்டேன், வலியுறுத்துவதை இம் மாமன்றம் ஏற்கிறதா என்றும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எந்த ஒரு துறையும் வேலை நிறுத்தத்தை முடிக்கவேண்டுமென்ற அவசரத்தில் இதன் மூலம் மற்ற துறைகளில் என்னென்ன குறை கள் அல்லது பிரச்சினைகள் எழலாம் என்று ஆராயாமல் இந்த அரசு அவசரப்பட்டு முடிவெடுப்பதை மன்ற உறுப்பினர்கள் ஆத ரிக்கிறார்களா ? பல காலமாக இருந்தும் நிர்வாகக் கூட்டமைப் பின் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஸ்ட்ரக்ஷர் ஒரு மட்டத்திலே லெவல் சேர்ப்பது அல்லது எடுப்பது குறித்து நன்கு ஆராய்ந்து முடி வெடுக்க அரசுக்கு அவகாசம் வேண்டுமா வேண்டாமா ? வேலை நிறுத்தம் முடிந்து சுமுகமாக பேச்சுவார்த்தை நடந்தால் அது இன்னும் எளிதாக முடியுமா முடியாதா என்று கேட்க விரும்பு கிறேன். வேலை நிறுத்தத்தை வருவாய்த்துறையைச் சேர்ந்த வேறு சில சங்கங்கள் ஆதரிக்கவில்லை. ஒன்றிரண்டு கோரிக்கை கள் வேறு பகுதியினரை பாதிக்கக்கூடும். இதை அரசு கருத்தில் கொள்ள வேண்டுமா வேண்டாமா ? பொது மக்களுக்கு மேலும் சிறந்த சேவை செய்வதற்காக இவ்வளவு பணியிடங்கள் கேட்ப தாக கூறுகின்றவர்கள் பொதுமக்களுக்கு சிரமம் கொடுக்கும் இவ் வேலைநிறுத்தத்தை நீண்டகாலமாக நீட்டிப்பது ஏன் ? ஆபத்து நிவாரணம், முதியோர் உதவித் தொகை சென்று அடைய தற் காலிக ஆட்களை நியமிப்பதைக்கூட தடுப்பது ஏன் ?

ஆளுங்கட்சியாக இருந்தபோதும், எதிர்க்கட்சியாக இருந்த போதும் தமிழக அரசு ஊழியர்கள் மேம்பாட்டிற்காக போராடி யுள்ளது. பல ஆண்டுக்காலமாக இழுக்கப்பட்ட மத்திய அரசு சம்பள விகிதத்தை மத்திய அரசு அகவிலைப்படி கோரிக்கைகளை இவ்வரசுதான் ஏற்றது என்பதை இம்மன்றம் மறக்காது என்று நம்புகிறேன்.

10-40 மணி.

அதற்குமேல், சமீபத்தில் பதவி உயர்வு தாமதப்படும் அலுவலர் களுக்கு தேர்வு நிலையும் (செலக்ஷன் கிரேடு), இந்த அரசுதான்

1990 ஏப்ரல் 5] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

வழங்கியது. வருவாய்த்துறையைப் பொறுத்தவரையில், துயர்துடைப்பு, முத்திரைக் கட்டணம், நிலம் கைப்பற்றுதல், கோட்டாட்சி அலுவலகம், உணவுப் பொருட்கள் வழங்குதல் போன்றவைக்கான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மது விலக்கு ஆயத் தீர்வைக் குறைக்க, இன்னும் பல தோற்றுவிக்கப் பட உள்ளன. ஒரு மாவட்டம், ஒரு கோட்டம், இரண்டு வட்டங்கள் உருவாக்கப்பட்டதன் காரணமாகவும், பல பணியிடங்கள் ஏற்பட்டுள்ளன. குறுகிய காலத்தில் இத் துறைக்கு இவ்வளவு செய்துள்ள இந்த அரசை எதிர்த்து, இன்னும் சில பணியிடங்களுக்காக, இத்துறையினர் இவ்வளவு நாட்கள் போராட வேண்டுமா என்று இந்த நேரத்தில் இங்கே இருக்கின்ற எனது அருமை நண்பர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராதா அவர்கள் பேசும்போது கூட சொன்னார்கள். பல இடங்களிலே இருந்து தந்திகள் வருகின்றன என்றெல்லாம் சொன்னார்கள். எனக்கும் தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன, எந்த அளவுக்கு அச்சுறுத்துகிறார்கள் என்பதைப்பற்றி. குறிப் பாக, தமிழ்நாடு தாசில்தார், டெபுடி தாசில்தார்கள் என்னைச் சந்தித்து அளித்த மகஜரை உங்கள் மத்தியில் நான் தர விரும்பு கிறேன். தற்போது வருவாய்த்துறை அலுவலர்கள் நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டம் தவறான அணுகுமுறை. முரண்பட்ட கோட்பாடுகள்; பாதை தவறிய வழியில் நடத்திச் செல்லும் தலைமையின் பிடிவாதப் போக்கு ஆகிய காரணங் களினால்தான் என்பது என்னுடைய அசைக்கமுடியாத நம் பிக்கையாகும். மேலும் தற்போது வருவாய்த் துறைக்கு பொறுப்பேற்றிருக்கும் நாஞ்சில் கி. மனோகரன், இந்தத் துறை யின் மேம்பாட்டிற்காக கடந்த ஓராண்டில் செய்துள்ள சாதனை களை மறந்து அவர் மீது பழித்து, அவரை தூற்றும் வகையில் உள்நோக்கம் கற்பித்து, வெளியிடப்பட்டிருக்கும் பெட்டிச் செய் திக்கு—ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில் — ஒரு வாரப் பத்திரி பத்திரிகையிலே வந்தது — அந்த அடிப்படையான தகவல்களை வாரி வழங்கிய பெருங்கயமையை நான் வன்மையாகக் கண்டிக் கிறேன்.

கலைஞர் அவர்கள் அரசு பதவியேற்றதற்குப் பிறகு, வருவாய்த் துறை அளித்த பயன்களைப்பற்றி ஒவ்வொன்றாக அவர்கள் அதிலே தெரிவித்திருக்கிறார்கள். அதோடு அவர்கள் இன் னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். போராட்டம் நடத்து கிறவர்கள் முன்வைத்துள்ள 10 அம்சக் கோரிக்கைகளில், பெரும் பாலானவை ஏற்றுக் கொள்ளப்பட்டு, எப்போதும் சங்கத்தின ரோடு பேச மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கும் சூழ்நிலையில் அறிவித்த திட்டம் இது. காலம் கனிந்து வரும் வேளையில், கல் எறிவது போன்றதுதான் இது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலோர்

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1990 ஏப்ரல் 5

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல், சில தீய சக்திகளால் உந்தப்பட்டு செயல்படுகிறார்கள். மேலும், அச்சுறுத்தல்களில் பங்கேற்போர் பலர், இது அவர்கள் எனக்கு தந்திருக்கின்ற செய்திகள். தகவல்கள். இதற்குப் பிறகு, நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தேன். வற்புறுத்திய காரணத்தால், மீண்டும் இன்னொரு அறிக்கையை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு சார்பில் நான் தரப்போகின்ற அறிக்கை. அவர்களுடைய 10 அம்சக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில், வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கம், 21—3—1990 முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தை ஆரம்பிதத்து. வேலைநிறுத்தத்திற்கு முன், பலமுறைகள் அலுவலர்கள் மட்டத்திலே, அமைச்சர்கள் மட்டத்திலே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, பல கோரிக்கைகள் முழுமையாகவும், சில கோரிக்கைகள் பகுதியாகவும், அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சில கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏற்றுக்கொள்ளப்படாதவைகளுள், ஒன்று பிர்க்கா துணை தாசில்தார்; இரண்டு, பணித்தர போக்குமுறை ஒழிப்பு ஆகிய இரண்டும் அவர்களுடைய அடிப்படை கோரிக்கைகள் என்றும், அவை ஏற்றுக்கொள்ளப்படாததால், அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடு படுவதாகவும் சங்கம் கூறியது. 23—3—1990 அன்று நான் சட்டமன்றத்தில் இதுபற்றிய அறிக்கையை சமர்பித்த போது, ஏன் இந்த இரண்டு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை விளக்கியதோடு மட்டுமல்லாமல், இதற்காக வேலைநிறுத்தத்தை சங்கம் உடனே கைவிட வேண்டுமென்று தெரிவித்தேன்.

அதே நேரத்தில், பேச்சுவார்த்தைக்காக கதவுகள் திறந்திருக்கின்றன என்றும் அறிவித்தேன். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, 30—3—1990 மற்றும் 31—3—1990 அன்று பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடந்தன. அப்போது மேற்சொன்ன இரண்டு கோரிக்கைகளையும் விலக்கிக் கொள்வதாகவும், அதற்குப் பதிலாக மண்டல துணை தாசில்தார் அமைப்பாவது வேண்டுமென்றும் சங்கத்தினர் கோரினார்கள். அது வேலை நிறுத்தத்திற்கு சொல்லப்பட்ட 10 அம்சக் கோரிக்கைகளுள் இல்லாததால் — அப்படிப்பட்ட கோரிக்கை இல்லை—, இது பற்றி அறிய, சில நாட்கள் தேவைப்படுவதால், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடப்பதன் மூலம், இன்னும் வேலை நிறுத்தத்தைத் தொடர வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கத்தின் சார்பில் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், சங்கத்தினர் அதற்கான முடிவினை அரசிற்கு அறிவிக்காமல் தாங்கள் வேலைநிறுத்தத்தினை திரும்பப்பெற இயலாது என்று கூறிச் சென்றார்கள். கடந்த இரண்டு வாரங்களாக நடக்கும் வேலைநிறுத்தத்தால், பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. எல்லா துணை கலெக்டர்களும், பெரும்பாலான வட்டார அலுவலர்களும், பல வட்டாட்சியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

1990 ஏப்ரல் 5] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

10-45 மணி

சான்றிதழ்கள் வழங்குதல், தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி வழங்குதல் மற்றும் பல முக்கிய பணிகளை, பணிக்கு வரும் மற்ற உதவியாளர்களின் உதவியுடன் இவ்வலுவலர்கள் கவனித்து வருகிறார்கள். மேலும் நிவாரண நிதி வழங்குதல், சோதனைச் சாவடிகளைப் பராமரித்தல், நெல் கொள்முதல் போன்ற முக்கியப் பணிகள் தங்குதடையின்றி நடைபெற மாவட்ட ஆட்சியாளர்கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். முதியோர் உதவித் தொகை போன்றவற்றிற்கு மணியார்டர் உடனடியாக அனுப்ப தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்துகொள்வதற்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, வருவாய் அலுவலர்களின் வேலைநிறுத்தம் காரணமாக தமிழகத்தில் வருவாய் நிர்வாகம் முற்றும் ஸ்தம்பித்து மக்களை பாதிக்கும் நிலை ஏற்படவில்லை என்பதை மாமன்றத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு, சங்கத்தினுடைய பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுவிட்டது என்பதுதான் உண்மை. இவ்வுண்மையை அவர்கள் மறைத்து பெரும்பாலான அப்பாவி அரசு ஊழியர்களைத் திசைதிருப்ப முயற்சி செய்து வருகிறார்கள். மேலும் பணிக்கு வரவிரும்பும் அரசு ஊழியர்களை அச்சுறுத்தி, அவர்களது இல்லங்களுக்குச் சென்று அவர்கள் பணிக்கு வராதவாறு மறைமுகமாக தடுத்து நிறுத்தியும் வருகிறார்கள். இவர்களது இச்செயல் வருத்தத்திற்குரியது மட்டுமல்ல, கண்டனத்திற்குரியதுமாகும். குறிப்பாக சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டியில் சில அரசு அலுவலர்கள் தொடர்ந்து பணி புரிந்துகொண்டிருந்த ஒரு தாசில்தாரைத் தாக்கி இருக்கிறார்கள். அக்குற்றத்திற்காக நான்கு பேர் இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டோர், ஈடுபடுவோர் மீது அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அடிப்படையான இரண்டு கோரிக்கைகளையும் விலக்கிக்கொண்டு, அரசுடன் புதிய கோரிக்கை பற்றி பேச்சுவார்த்தை நடத்த சங்கம் ஆரம்பித்திருப்பதால் இதன் மத்தியில் வேலைநிறுத்தம் தொடருவது அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. எனவே, உடனடியாக வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொண்டு, தங்கள் பணிகளுக்குத் திரும்புமாறு வருவாய்த் துறை அலுவலர்கள் கோரப்படுகிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே வேறு எதுவும் பேச முடியாது. (குறுக்கீடு). திரு. ரமணி, உட்காருங்கள்.

திரு. கே. ரமணி : உங்களுக்கு ஒரு சப்மிஷன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, சொல்லுங்கள்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தின் சார்பில் வெளியிட்டு இருக்கும்படியான இந்த அறிக்கை எங்களுக்கு ஏற்புடையதல்ல. நியாயம் தரக்கூடியது அல்ல. வேலைநிறுத்தத்தைக் கைவிட்டால்தான் பேச்சு என்ற முறையும் ஒழுங்கானது அல்ல. இப்படிப்பட்ட முறையை அரசு கையாளக் கூடாது. பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இதற்கு அரசு உடனடியாக முன்வராத காரணத்தால் நாங்கள் எங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள், அவர்களை அழைத்துப் பேசுவதற்குக்கூட-வரட்டும், பேசி பிரச்சினையைத் தீர்ப்போம்—என்று சொல்லாமல், வேலைக்குச் செல்ல வேண்டும், இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்வது மிகக் கொடுமையான ஒரு காரியமாகத் தெரிவதன் காரணமாக நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைக் கொடுத்தார்கள். ஆனால் போராட்டத்தை நசுக்குவதற்காக.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து, இப்போது என்ன என்பதை மட்டும் உடனே சொல்லிவிட்டால் நல்லது. வேறு விவகாரத்திற்குப் போகக்கூடாது. (குறுக்கீடு) வேறு செய்திகளுக்குப் போகவேண்டாம் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அழைத்துப் பேசத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். கதவுகள் திறந்திருக்கின்றன என்று நான் சொன்னேன். தாய் வீட்டிற்கு வருவதற்கு குழந்தைகள் தயக்கம் காட்டக்கூடாது.

1990 ஏப்ரல் 5]

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு தொழிற்சங்கப் போராட்டத்தில் இருக்கிற ஜன நாயகத்தைப் பறிக்கின்ற செயலாகும். அவர் திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலில் தொழிற்சங்கத்தை ஆரம் பிக்கிற நேரத்தில், அந்தப் பேரவைக்குத் தலைவராக அவரைப் போட்டுத்தான் நாங்கள் ஆரம்பித்தோம். அப்படிப்பட்ட ஒரு தொழிற்சங்கத் தலைவராக இருந்து, அந்தக் காலத்திலே அரசியலை ஆரம்பித்த மனோகரன் அவர்கள் இன்றைக்கு வேலைநிறுத்தம் வாபஸ் வாங்கினால் பேச்சு, வேலை நிறுத்தம் செய்தால் வேறு ஆட்களை வைத்து வேலை செய்வோம் தொழிற்சங்க உரிமைகளை மதிக்கமாட்டோம் என்ற நிலை எடுத்திருக்கிற காரணத்தால் அதைக் கண்டித்து, இந்த ஒரு பொருள் பற்றி, இதற்காக மட்டும் வெளியே சென்றுவிட்டு அடுத்த பிரச்சினையிலே கலந்துகொள்கிறோம்.

(அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

10.50 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தாய் வீடாக இருந்தாலும், சேய்க்கு பல நிபந்தனைகளைப் போட்டு, இங்கே தாய் வீட்டின் சார்பிலே சொல்லப்படுகிற காரணத்தாலே இது எங்களுக்கு ஏற்புடையதல்ல. பொது மக்களை பாதிக்கின்ற அளவுக்கு இது தொடர்ந்து சென்று கொண் டிருக்கின்ற காரணத்தினாலே இத்தகைய நிபந்தனைகள் இல்லாமல் இதைப் பேசிட அவர்களை அழைக்காத காரணத் தினாலே, அவர்களுடைய மனக்குறையையும், மக்கள் மனக் குறையையும் வெளிப்படுத்தி நாங்களும் வெளிநடப்புச் செய் கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து மேலும் விவா திக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் முறை குறித்து.

திரு. சோ. பால்ராஜ் : தலைவர் அவர்களே, ''கல்லூரி ஆசிரியர் பணி நியமனத்திற்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலம், அகில இந்திய அளவில் தேர்வு நடத்தி நியமனம் செய்

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு தொழிற்சங்கப் போராட்டத்தில் இருக்கிற ஜன நாயகத்தைப் பறிக்கின்ற செயலாகும். அவர் திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலில் தொழிற்சங்கத்தை ஆரம் பிக்கிற நேரத்தில், அந்தப் பேரவைக்குத் தலைவராக அவரைப் போட்டுத்தான் நாங்கள் ஆரம்பித்தோம். அப்படிப்பட்ட ஒரு தொழிற்சங்கத் தலைவராக இருந்து, அந்தக் காலத்திலே அரசியலை ஆரம்பித்த மனோகரன் அவர்கள் இன்றைக்கு வேலைநிறுத்தம் வாபஸ் வாங்கினால் பேச்சு, வேலை நிறுத்தம் செய்தால் வேறு ஆட்களை வைத்து வேலை செய்வோம் தொழிற்சங்க உரிமைகளை மதிக்கமாட்டோம் என்ற நிலை எடுத்திருக்கிற காரணத்தால் அதைக் கண்டித்து, இந்த ஒரு பொருள் பற்றி, இதற்காக மட்டும் வெளியே சென்றுவிட்டு அடுத்த பிரச்சினையிலே கலந்துகொள்கிறோம்.

(அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

10.50 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தாய் வீடாக இருந்தாலும், சேய்க்கு பல நிபந்தனைகளைப் போட்டு, இங்கே தாய் வீட்டின் சார்பிலே சொல்லப்படுகிற காரணத்தாலே இது எங்களுக்கு ஏற்புடையதல்ல. பொது மக்களை பாதிக்கின்ற அளவுக்கு இது தொடர்ந்து சென்றுகொண் டிருக்கின்ற காரணத்தினாலே இத்தகைய நிபந்தனைகள் இல்லாமல் இதைப் பேசிட அவர்களை அழைக்காத காரணத் தினாலே, அவர்களுடைய மனக்குறையையும், மக்கள் மனக் குறையையும் வெளிப்படுத்தி நாங்களும் வெளிநடப்புச் செய் கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து மேலும் விவா திக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் முறை குறித்து.

திரு. சோ. பால்ராஜ் : தலைவர் அவர்களே, "கல்லூரி ஆசிரியர் பணி நியமனத்திற்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலம், அகில இந்திய அளவில் தேர்வு நடத்தி நியமனம் செய்

[திரு. சோ. பால்ராஜ்] [1990 ஏப்ரல் 5

வதாக மைய அரசு அறிவித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கையைப் பேரவைமுன் வைக்கிறேன்:

அறிக்கை.

இதுவரை பல்கலைக் கழகங்களில் பணிபுரிய ஆசிரியர்களை அப்பல்கலைக் கழகங்கள் தங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டும்; அரசு கல்லூரியில் பணிபுரிய தமிழ்நாடு தேர்வாணையம் தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுத்தும் வந்தன. தனியார் கல்லூரிகள் வேலை வாய்ப்பகங்களின் மூலம் தகுதிவாய்ந்தவர்களை தங்கள் கல்லூரிகளில் அமர்த்தி வந்தன. நாடு முழுவதும் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் நியமனம் பெற அதற்கென நடத்தப்படும் ஒரு பொதுத் தேர்வில் கலந்து தகுதி பெறவேண்டும் என்பது 1986-ன் புதிய கல்விக் கொள்கையின் ஒரு அம்சமாகும். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை மாநில அரசுகள் அமுல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு செய்திருந்த பரிந்துரைகளிலும் இவ்வம்சம் வலியுறுத்தப்பட்டது. அதன்படி பல்கலைக் கழக மான்யக் குழு நடத்தும் தேர்வில் தகுதிபெற்றவர்கள்தான் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என வழிமுறை வகுக்கப்பட்டிருந்தது. தமிழ் தெரிந்தவர்களுக்கு ஆசிரியர் பதவிகளில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக அந்தத்தேர்வினை தமிழ் நாடு அரசே நடத்தலாம் என்று முடிவு செய்து இவ்வரசு அதற்கேற்றவாறு ஆணைகள் பிறப்பித்தன. இதுபோன்றே அந்தந்த மாநில மொழியினை அறிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காக அந்தந்த மாநிலங்களே அந்த தேர்வினை நடத்த முடிவு செய்தன. அம்முடிவுகளை பல்கலைக் கழக மானியக் குழு ஏற்றுக்கொண்டு மாநில அளவில் அந்த தேர்வினை நடத்திக்கொள்ளுமாறு கூறியுள்ளது.

2. நமது மாநிலத்தில் அந்த தேர்வினை நடத்தும் நிறுவனமாக சென்னைப் பல்கலைக் கழகம் இவ்வரசால் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த தேர்வில் தகுதிபெற்றவர்களை பல்கலைக் கழகங்கள் தங்களின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பணியில் அமர்த்தும். அரசு கல்லூரிகளுக்குத் தேவையான ஆசிரியர்களை இந்தத் தேர்வில் (அரசு சட்டக் கல்லூரிகள் உட்பட) தகுதி

பெற்றவர்களின் பட்டியலிலிருந்து ஆசிரியர் தேர்வாணையம் தெரிவு செய்யும். இந்தத் தேர்வினை விரைவில் நடத்தும்படி சென்னைப் பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. பல்கலைக் கழக மான்யக்குழு இந்த தேர்வினை 1989 நவம்பரில் நடத்தியுள்ளது. இன்னும் முடிவுகள் வெளியிடப்படவில்லை. பல்கலைக் கழக மான்யக்குழு தெரிவு செய்துள்ள பட்டியலிலிருந்தும், சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் தேர்வில் தகுதிபெறுபவர்களின் பட்டியலிலிருந்தும் ஆசிரியர்கள் தெரிவு செய்து நியமிக்கப்படுவார்கள்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து பல்கலைக்கழக மானியக் குழுவின் பிடியிலிருந்து, ஆசிரியர்கள் தேர்வினை மாநில அரசு நடத்திக்கொள்ள ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதோடு, சென்னைப் பல்கலைக்கழகம் இத் தேர்வினை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு இன்னும் அந்தத் தேர்வு நடத்தப்படவில்லை. ஆதலால் அந்தத் தேர்வு எப்போது நடத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகம்—பல்கலைக்கழகம், கல்லூரி இவைகளில் நியமிக்கப்படக்கூடிய ஆசிரியர்களுக்கு ஒரு பொதுத் தேர்வு நடத்தப்படவேண்டும் என்ற அந்த நோக்கத்தில் அந்தப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. உரிய நேரத்தில் நடத்துவார்கள்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பல்கலைக்கழகங்கள் வெவ்வேறு பாடத் திட்டங்களைப் பின்பற்றுவதால் இத்தேர்வு அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொருந்தும் வகையில் பொதுவான பாடத் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : ;தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தேர்வு நடத்துகிறபோது, எந்தெந்தத் துறை பாடத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் அந்தப் பொதுத் தேர்விலே ஈடுபட விரும்புகிறார்களோ, அந்தந்தத் துறை பாடங்களுக்கும் முக்கியத்துவம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். முழு விவரம் இப்போது நான் தெரிவிக்கக்கூடிய நிலையிலே இல்லை.

(ஆ) மயிலை மாங்கொல்லைப் பகுதியில் எஸ்.கே.பி.பி பள்ளிக்கு அருகிலுள்ள குடிசைகள் அகற்றப்பட வேண்டியது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மைலாப்பூர் எஸ். கே. பி.பி. பாடசாலை அருகாமையில் மாங்கொல்லைப் பகுதியில் உள்ள குடிசைகளை அகற்ற வேண்டியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி ; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கையைப் பேரவைமுன் வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோவிலுக்கு அருகில் வடக்கு மாட வீதியும் கிழக்கு மாட வீதியும் சந்திக்கும் இடத்தில் ச. எண் 2655/1-ல், 26 மனைகள் 1,791 சதுர அடியும் ச. எண் 2633-ல், 2,170 சதுர அடியும் பரப்பளவுள்ள இடம் மாங்கொல்லை ஆகும்.

2. இந்த இடத்தில் 117 குடிசைகள் உள்ளன. 47 குடிசைகள் மட்டும் ஆலயத்தில் நேரடி வாடகைதாரர்களாக உள்ளனர். மீதி 70 குடிசைவாசிகள் ஆக்கிரமிப்புதாரர்களாகவும், உள் வாடகைதாரர்களாகவும் உள்ளனர். 47 குடிசைகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 மட்டும் அடிமனை வாடகையாகக் கிடைக்கிறது. ஐந்து மனைகள் பரப்பளவு இடத்திற்கு இரண்டு நபர்களிடமிருந்து ஆண்டு குத்தகை ரூ. 250-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த இடத்தில் $3\frac{1}{2}$ மனை பரப்பில் உள்ள ''ஸ்ரீ கற்பகவல்லி பாலிகா பாடசாலை'' என்ற கல்வி நிறுவனத்திற்கு வருடக் குத்தகை ரூ. 1,001—க்கு விடப்பட்டு, அடிமனை வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

3. திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் முறையாக குடிசைப்பகுதி அமையாத நிலையில் முறையாக ரோடு வசதி சாக்கடை வசதி ஏற்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகிறது. குறைந்த வருவாய் கிடைப்பதாலும், மாங்கொல்லை பகுதியை குடிசை மாற்று வாரியம் எடுத்துக்கொள்ள நடவடிக்கை நிலுவையில் உள்ளதாலும், குடிசைகளைத் தற்போது அகற்ற இயலாத நிலை உள்ளது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4. மாங்கொல்லைப் பகுதிக்குத் தேவையான துப்புரவுப் பணியினை சென்னை மாநகராட்சியால் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது: மயிலை மாங்கொல்லை அருகிலுள்ள

1990 ஏப்ரல் 5] [திரு. கோ.சி. மணி]

எஸ். கே. பி. பி. பாடசாலை அருகில் உள்ள குடிசைகள் தற்காலிக குடியிருப்புகள் ஆகும். இக்குடியிருப்புகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள மக்கள் வசிக்கின்றனர். இங்கு சுமார் 1,200 மக்கள்தொகை கொண்ட 200 குடியிருப்புகள் அமைந்துள்ளன. இப்பகுதி மக்கள் சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்கின்றனர். இப்பகுதி மக்கள் குடியிருப்புக்கு இயலாத வீடுகளில் வசிப்பதால் சுற்றுப்புறச் சூழல் சரியாக பராமரிக்கப்பட முடியவில்லை. எனினும் சென்னை மாநகராட்சி தினமும் இப்பகுதியின் குப்பைக் கூளங்களை அகற்றும் பணியினை மிகுந்த சிரமத்தின் மேல் நிறைவேற்றி வருகிறது. இதற்கெனத் தினமும் நான்கு தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் அங்குள்ள பொதுக் கழிப்பிடங்கள் இரண்டு தொழிலாளர்கள் மூலம் சுத்தப்படுத்தி தூய்மையாக வைத்துக் கொள்ளப்படுகிறது. பொது இடங்கள் மற்றும் திறந்தவெளிகளில் அசுத்தப் படுத்தும் பழக்கமுள்ள மக்கள் வசிக்கும் இப்பகுதிக்கு, தினமும் அந்த அசுத்தங்களை அகற்றி சுத்தப்படுத்தி மருந்து தெளித்து தொற்றுநோய் பரவாமல் இருக்க கொசு, ஈ ஒழிப்பான் மருந்துகள் தினமும் போடப்பட்டு வருகின்றன. சுமார் இரண்டு மெட்ரிக் டன் குப்பைகள் இரண்டு மாட்டுவண்டிகள் மூலம் அகற்றப் படுகின்றன. மேலும் இப்பகுதி மக்களுக்கு நிலத்தடி நீரும் பாதுகாக்கப்பட்ட குடிநீரும் டேங்குகள் மற்றும் பொதுக்குழாய்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி என்று சொல்வது, கபாலீஸ்வரர்—தேவி கோயிலுக்குச் சொந்தமான இடம். இதிலே ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக ஒரு பள்ளிக் கூடம் இருக்கிறது. பள்ளிக் கூடப் பகுதிகள் சுத்தமாக இல்லாமல், குடிசைகள் இருந்து அந்தக் குழந்தைகள் போகமுடியாத அளவிற்கு இருக்கிறது. குடிசைவாழ் மக்களை அகற்றவேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்திலிருந்து ஒரு வீடு கட்டிக் கொடுத்துத்தான் மாற்றவேண்டும் என்று சொல்கிறோமே தவிர, உடனே மாற்றச் சொல்லவில்லை. ஆனால், உடனடியாக அந்தப் பகுதியிலிருக்கின்ற அசுத்தத்தை மாற்றுவதற்கு, அந்தக் குடிசைப்பகுதிகளை மாற்றி அங்கே தங்கியவர்களுக்கு வேறு வீடு கட்டிக் கொடுக்கின்ற எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தப் பகுதியை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. மாநகராட்சியானாலும், நகராட்சியானாலும் எல்லாப் பகுதிகளிலும் குடிசைவாழ் மக்கள் இருக்கிற பகுதிகளில் கொஞ்சம் அதிக அக்கறை செலுத்தி, அப்படிப்பட்ட துப்புரவுப் பணிகளை ரொம்பவும் முடுக்கிவிட்டு, ஏற்பாடு செய்துகொண்டு வருகிறோம். ஆனால், என்னதான்

செய்தாலும், தொடர்ந்து அந்தத் துப்புரவுப் பணிகள் நிறைவு பெறவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் சில நேரங்களில் அங்கே சென்று பார்த்தால் நிச்சயமாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். 200 குடியிருப்பு இருக்கிற இடத்தில் ஏறத் தாழ 1,200 பேர் இருக்கிறார்கள். மேற்படி கோட்டத்தில் மொத்தம் 41 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். 6 பேர்கள், அதாவது 12 விழுக்காடு பணியாளர்களை இச்சிறிய பகுதியில் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் காலையிலும், மாலை யிலும் அப்பகுதியில் தொடர்ந்து துப்புரவு பணியினை மேற் கொண்டு வருகிறார்கள். தவிர, இப்போது நானும் திடீர் திடீர் என்று குடிசைப் பகுதிகளுக்குச் சென்று அப்பகுதிகளிலுள்ள சுகாதார நிலைமைப் பற்றி பார்வையிட்டு வருகிறேன். மாண்பு மிகு உறுப்பினர் சொல்லியுள்ள இந்த இடத்திற்கும் சென்று பார்வையிட முயற்சி செய்கிறேன்.

10-55 மணி.

திரு. ம. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளை திடீரென்று மாற்ற முடியாது. அதில் பிரச்சினை இருக்கிறது என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இது மாணவர்கள் நலன் கருதி செய்யப்படவேண்டிய ஒன்று. அக்குடிசைகளுக்குப் பதிலாக அதற்கு இணையாக பல மாடி கட்டிடம் கட்டி அங்கே அவர்களை மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் அங்கே சுகாதார நிலையை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் இதில் அதிக கவனம் செலுத்தி அதிகமான துப்புரவுப் பணியாளர்களையும் உடனே அங்கே அனுப்பி துப்புரவுப் பணியை மேற்கொள்ள ஆணையிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், உறுப்பினர் குறிப்பிடுகிற பகுதிகளில் மட்டு மல்லாமல், எங்கெங்குள்ள குடிசைப் பகுதிகளில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறதோ எங்கெங்கு நெருக்கடி இருக்கிறதோ அங்கெல்லாம் துப்புரவுப் பணி தீவிரமாக முடுக்கி விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ)பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்து முதல் முப்பத்தேழு வரையி லான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[திரு. கோ.சி. மணி] [1990 ஏப்ரல் 5

செய்தாலும், தொடர்ந்து அந்தத் துப்புரவுப் பணிகள் நிறைவு பெறவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் சில நேரங்களில் அங்கே சென்று பார்த்தால் நிச்சயமாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். 200 குடியிருப்பு இருக்கிற இடத்தில் ஏறத் தாழ 1,200 பேர் இருக்கிறார்கள். மேற்படி கோட்டத்தில் மொத்தம் 41 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். 6 பேர்கள், அதாவது 12 விழுக்காடு பணியாளர்களை இச்சிறிய பகுதியில் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் காலையிலும், மாலை யிலும் அப்பகுதியில் தொடர்ந்து துப்புரவு பணியினை மேற் கொண்டு வருகிறார்கள். தவிர, இப்போது நானும் திடீர் திடீர் என்று குடிசைப் பகுதிகளுக்குச் சென்று அப்பகுதிகளிலுள்ள சுகாதார நிலைமைப் பற்றி பார்வையிட்டு வருகிறேன். மாண்பு மிகு உறுப்பினர் சொல்லியுள்ள இந்த இடத்திற்கும் சென்று பார்வையிட முயற்சி செய்கிறேன்.

10–55 மணி.

திரு. ம. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளை திடீரென்று மாற்ற முடியாது. அதில் பிரச்சினை இருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இது மாணவர்கள் நலன் கருதி செய்யப்படவேண்டிய ஒன்று. அக்குடிசைகளுக்குப் பதிலாக அதற்கு இணையாக பல மாடி கட்டிடம் கட்டி அங்கே அவர்களை மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் அங்கே சுகாதார நிலையை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் இதில் அதிக கவனம் செலுத்தி அதிகமான துப்புரவுப் பணியாளர்களையும் உடனே அங்கே அனுப்பி துப்புரவுப் பணியை மேற்கொள்ள ஆணையிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகிற பகுதிகளில் மட்டு மல்லாமல், எங்கெங்குள்ள குடிசைப் பகுதிகளில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறதோ எங்கெங்கு நெருக்கடி இருக்கிறதோ அங்கெல்லாம் துப்புரவுப் பணி தீவிரமாக முடுக்கி விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்து முதல் முப்பத்தேழு வரையி லான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

1990 ஏப்ரல் 5]

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ரூ. 10,04,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பொதுப் பணித் துறைக்கு சொந்தமான பெரிய மற்றும் சிறிய அணைக் கட்டுகளில் கிடைக்கும் மீன்களை அந்தத் துறையினரே அன்றாடம் பிடித்து விற்பனை செய்வதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலத்தில் விட்டு வருமானத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,04,43,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பெருமளவில் பிடிக்கப்பட்டும் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை ஏதும் இல்லாததால், கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகின்ற நிலை காரணமாக இம் மாவட்ட மக்களுக்கு உரிய பயன் கிடைப்பது தடைபடுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,04,43,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 5]

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ரூ. 10,04,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பொதுப் பணித் துறைக்கு சொந்தமான பெரிய மற்றும் சிறிய அணைக் கட்டுகளில் கிடைக்கும் மீன்களை அந்தத் துறையினரே அன்றாடம் பிடித்து விற்பனை செய்வதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலத்தில் விட்டு வருமானத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,04,43,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பெருமளவில் பிடிக்கப்பட்டும் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை ஏதும் இல்லாததால், கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகின்ற நிலை காரணமாக இம் மாவட்ட மக்களுக்கு உரிய பயன் கிடைப்பது தடைபடுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,04,43,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,98,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகர் மன்ற எல்லைக்குள் ஒரு கால் நடை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 46,98,32,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் வளநாட்டில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 46,98,32,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவ மனைகள் தொடங்க ஊராட்சி ஒன்றியங்களில் நிதி வசதி இல்லாததால் அரசே முழு மானியத்தில் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 46,98,32,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

[1990 ஏப்ரல் 5

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றிய மானியக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. நமது மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளை எல்லாம் ஆழமாகப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கருத்துக்களைச் சொன்ன பிறகு தேவைப்பட்டால் என்னுடைய பதிலுரையில் விளக்கங்களைச் சொல்வதாகக் கூறி இந்த மானியக் குறிப்புகளைச் சட்டமன்றப் பதிவேட்டில் பதித்து கொள்ள வேண்டுமென்று * கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

11.00 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் விவாதத்தில் எங்கள் கட்சி சார்பிலே முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன்அவர்கள் கலந்துகொள்வதாக எழுதிக் கொடுத்திருந்தும், அவர் அழைக்கப் படாததற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் அப்படி நடக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். எத்தனை உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்தாலும், அழைப்பது என்பது பேரவைத் தலைவருடைய முழு உரிமையைப் பொறுத்தது என்பதை நன்றாக அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும். இதற்குமேலே இதிலே பேசுவதற்கு இடமே கிடையாது.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவை அலுவல் சம்பந்தமாக ஒன்றைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இன்றைய தினம் விவாதிக்கப்படும் மானியம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் எல்லாம் நேற்றைய இரவு 9 மணிக்குத்தான் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது தவிர்க்கப்படவேண்டுமென்று கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். எனவே, கொள்கை குறிப்புகளை 2 நாட்கள் முன்னதாகவே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுடைய உணர்வை ஒட்டுமொத்தமாக இந்த அவையின் உணர்வாகக் கருதி, தொடர்புடைய அமைச்சர்களும், அந்த அமைச்சர்களது செயலகங்களும் எந்தக் கொள்கை விளக்கக் குறிப்பாக இருந்தாலும், அவற்றை 48 மணி நேரம் முன்னதாக, கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

*160-214-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மீன்வளத் துறை மற்றும் கால்நடைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீன் வளர்ச்சித் துறையைப் பொறுத்த வரையில் நான் முதலிலேயே குற்றம் சாட்ட விரும்புகிறேன். மீன் வளர்ச்சிக் கழகமானது கடந்த ஓராண்டுக் காலமாக சரியாக செயல்படாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனக் குறைவால் 1988–89-ல் லாபத்தை ஈட்டித் தந்த அந்தக் கழகம், இன்றைக்கு நஷ்டத்தை ஈட்டித் தந்துள்ளது என்பதை நான் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 1988–89-ல் சென்னை, மதுரை, கோவை, பெரியார், திருச்சி, திருவண்ணாமலை-சம்புவராயர், புதுக்கோட்டை ஆகிய 7 மாவட்டங்களில் 104 விற்பனை நிலையங்கள் மூலமாக 800 டன் எடையுள்ள மீனை 124 இலட்சம் ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். ஆனால் 1989–90-ல் 573 டன் மீனை 97 இலட்சம் ரூபாய்க்குத்தான் விற்றிருக்கிறார்கள். 1988–89-ல் வருமானம் 343.11 இலட்சம் செலவு 323.13 இலட்சம். ஆக நிகர லாபம் 19.98 இலட்சம். ஆனால் 1989–90-ல் வருமானம் 280.67 இலட்சம், செலவு 271.82 இலட்சம், லாபம் 8.85 இலட்சம். ஆக இந்தக் கழகம் சரியாகச் செயல்படவில்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதியில் ஒரு கோடி ரூபாய் செலவில் மத்திய அரசினுடைய நிதி உதவியோடு மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் நிலையம் கட்டப்பட்டிருக்கிறது. அது கட்டி முடிக்கப்பட்டது என்று 1988–89 பட்ஜெட்டில் தந்துள்ளார்கள். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படவில்லை என்று அறிவிப்பு தந்திருக்கிறார்கள். அங்கே அந்த மீன் குஞ்சு உற்பத்தி செய்யப்படுமா, செய்யப்படாதா என்ற அவல நிலையில் அந்த நிலையம் இருக்கிறது. தண்ணீர் விட்டால் அதில் தேங்குவதில்லை என்றும், அதிலே பல ஊழல்கள் நடந்திருக்கின்றன என்றும் கருதுகிறார்கள். அன்றைக்கு நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், இது குறித்து சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டுமென்று எழுதிக் கொடுத்திருந்தேன். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்கே ஒரு கோடி ரூபாய் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அதற்கு 50 இலட்சம் ரூபாய்க்கு மேலே செலவாகும் என்று அதிகாரிகள் கணக்கு கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. யார் இந்தத் திட்டத்தைப் போட்டார்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அதிகாரிகள் மீது

நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை யார் காண்ட்ராக்ட் எடுத்தாரோ அவர் மீது நடவடிக்கை எடுத்து அந்த நஷ்ட ஈடு வசூல் செய்யப்பட வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

11-05 மணி

அடுத்து பவானிசாகர் நீர்த்தேக்கப் பகுதியிலே மீனவர்கள் மீன் பிடிக்கின்றார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் ஆட்சியில் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய ஒப்பந்தமே 3-ல் இரு பங்கு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கும், ஒரு பங்கு அவர்களுக்கும் கொடுப்பது என்பதுதான். ஆனால் அதற்குப் பதிலாக அந்த மீன் வளர்ச்சிக் கழகம் அந்த மீனை ஒரு கிலோ என்ன விலைக்கு விற்கிறதோ அந்த அடிப்படையில் கொடுத்து வருகிறார்கள். அதிலே ஒரு ரூபாய் குறைவாக இருக்கிறது என்று சொல்லி, இரண்டு ரூபாய் அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்ட நேரத்திலே, புரட்சித் தலைவர் ஆட்சியிலே அது உயர்த்திக் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது அது குறைக்கப்பட்டு இருக்கிறது. கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்பு பவானிசாகரில் மீனவர்கள் உண்ணா விரதம் கூட இருந்தார்கள். அவர்கள் உண்ணாவிரதம் இருந்தும் கூட எந்தப் பயனும் இல்லாமல் இருக்கிறது. ஏழ்மை நிலையில் இருக்கிற அந்த மீனவ சமுதாயத்திற்கு உடனடியாக மீன் வளர்ச்சிக் கழகத்தில் இருப்பவர்களை அணுகி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்தத் தொகையைக் கூட்டித் தர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு 3,000 வீடுகள் கட்டித் தருவதாக அறிவித்து இருக்கிறீர்கள். பவானிசாகரில் இருக்கிற மீனவர்கள் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பகுதியிலே குடியேறி இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு வசதி எதுவும் இல்லை. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலம் ஆயிரக்கணக்காக இருக்கிறது. ஆகவே அதை ஆர்ஜிதம் செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீனவர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டத்தை உருவாக்கித் தருமாறு இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறை குறித்து சில விஷயங்களை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் கால்நடைகளின் பெருமையை இந்த நாட்டுக்கு உணர்த்துகின்ற வகையிலும், நாம் எல்லாம் உணருகின்ற வகையிலும், 'மாட்டுக்கார வேலன்' என்ற படத்திலே அவர் மாட்டிலே பால் கறந்து கொண்டு ஒரு பாட்டுப் பாடுகிறார். ''வளர்த்தவரே உன்னை மறந்து விட்டாலும், அடுத்தவர் இடத்தில் கொடுத்து விட்டா

லும், வளர்ந்த இடத்தை நீ மறக்காதே செல்வம்''. என்று பசுவினுடைய பெருமையை உயர்த்துகின்ற வகையிலே, அமைத இந்த நாட்டு மக்கள் உணருகின்ற வகையிலே கருத்துகளை எடுத்து வைத்து இருக்கின்றார்கள். அந்த பசு இனத்தை, கால் நடைகள் இனத்தை இன்னும் நன்றாகப் பராமரிக்க வேண்டும்; போற்றிக் காப்பாற்ற வேண்டும். அவைகளைப் பராமரிக்கும் கால்நடை மருத்துவர்களுக்கு, எம்.பி.பி.எஸ். மருத்துவர்களுக்கும், சித்த மருத்துவர்களுக்கும் இணையான சம்பளம் வழங்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தத் துறையிலே பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கின்றார்கள். இன்றைக்கு அவர்கள் அமைச்சராக வரவில்லை என்றால், கால்நடை மருத்துவர்களின் கோரிக்கையிலே அவர்களும் ஒருவராகத்தான் இருந்திருப்பார்கள். ஆகவே நான் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு கொள்வது, 1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் கால்நடை மருத்துவர்களையும், எம்.பி.பி.எஸ். மருத்துவர்களையும் சமமாகக் கருதி, அரசு பதிவுபெற்ற அலுவலர்களாக, கெசடட் ஆபீசர்களாக அறிவித்தார்கள். பின்னர் அவர்களுக்கு அடிப்படை ஊதியம் எம்.பி.பி.எஸ். மருத்துவர்களுக்கு இணையாக வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் தந்து இருக்கிறார்கள். எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள் 2,200 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் கால்நடை மருத்துவர்கள் 2,000 ரூபாய் தான் சம்பளமாக வாங்குகிறார்கள். அவர்களுக்கும் அந்த 200 ரூபாயை கூட்டித் தந்து, பசுவின் இனத்தை பாதுகாக்கும் அவர்களின் மனம் புண்பட்டு இருப்பதை அமைச்சர் அவர்கள் ஆற்ற வேண்டும், பக்குவப்படுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

கால்நடைகள் கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குக் கடத்தப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைத் தடுக்க வேண்டும்.

கால்நடை மருத்துவர்கள் வேலை செய்யும் இடத்திலேயே தங்க வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்று. அவர்கள் சில நேரங்களில் வீடு கிடைப்பது இல்லை என்று சொல்லி வெளியூருக்குச் சென்று விடுகிறார்கள். போன் செய்தாலும், நேரிலே சென்றாலும் யாரும் சிகிச்சைக்காக வருவதில்லை. அந்த நிலையிலே கிராமப் புறங்களிலே ஆடு, மாடுகள் இறந்து விடுகின்றன. எனவே கிராமப் புறத்திலே பணியாற்றுகின்றவர்கள் உதவி கால்நடை மருத்துவராக இருந்தாலும் சரி, உதவி ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி, வேறு ஊழியர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம்

பணியாற்றுகின்ற கிராமங்களிலேயே, ஹெட் குவார்டர்ஸிலேயே தங்கிப் பணியாற்ற வேண்டும் என்று ஒரு கண்டிப்பான உத்திரவு போட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காவல் துறையில் ஜீப் கொடுத்து இருக்கிறீர்கள். சப் இன்ஸ்பெக்டருக்கு மோட்டார் சைக்கிள் கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் பாவம், கால்நடைத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு எந்த உதவியும் கிடையாது. அவர்கள் கிராமத்திலே இரவிலே ஒரு அவசர கேஸுக்குச் செல்ல வேண்டுமென்றால் அவாகள் செல்ல முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் அந்த ஆடோ, மாடோ இறந்து விடுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன், கால்நடை மருத்துவர்களுக்கு ஒரு ஜீப் கொடுத்தால் அரசுக்கு நிதி உதவி போதாது என்று சொல்லுவீர்கள்; எனவே, அவர்களுக்கு ஒரு புல்லட் மோட்டர் சைக்கிள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வழங்கினால் அதில்மூன்று பேர் ஏறிச் செல்ல வாய்ப்பாக இருக்கும். அவர்கள் உதவிக்காக தங்களோடு இருவரை அழைத்துச் செல்வார்கள். அவரிடம் வருகின்ற விவசாயியைக் கூட அழைத்துச் சென்று கால்நடைக்கு மருத்துவம் செய்ய வாய்ப்பாக இருக்கும். உடனடியாக அவர் அந்தக் கால்நடைகளைக் காப்பாற்றுவதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, நிச்சயமாக இதை வழங்க வேண்டும்.

11–10 பணி

ஆம்புலன்ஸ் வண்டியும் எந்த இடத்திலேயும் இல்லை. ஆம்புலன்ஸ் வண்டி என்பது மிக அவசியமான ஒன்று. எம்.பி.பி.எஸ்., படித்தவர் மருத்துவ மனைகளிலே நிறைய ஆம்புலன்ஸ்கள் இருக்கின்றன. ஆகவே, இவர்களுக்கும் ஒரு ஆம்புலன்ஸ் வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது இந்த ரிஸ்க் அலவன்ஸ் என்பது இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தக் கால்நடை ஆய்வாளர்களுக்கு அது கொடுக்கப்படுவது இல்லை. இதைத்தான்—1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதி அவர்கள் ஒரு வெள்ளி விழாக் கூட்ட நிகழ்ச்சியை நடத்தியிருக்கின்றார்கள். அதிலே கலந்து கொண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் இதிலே இரக்கத்தோடு கவனிப்பதாகக் கூறி, நிச்சயமாக இந்த ரிஸ்க் அலவன்ஸ் நூறு ரூபாய் எப்படி கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதோ அதுபோல உங்களுக்கும் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்கும் அது கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மயில்சாமி கவுண்டர் என்பவர், இந்தக் கோழி முட்டைக்கு —என்னமோ நடந்தது, அவர் மயில் விரித்து ஆடினாரா அல்லது தோகை விரித்து ஆடினாரா என்று தெரியவில்லை. ஆனால், அந்தக் கோழித் தீவனங்களுக்கு இன்று ஐந்து பர்சென்ட் வரிச் சலுகை அறிவித்திருக்கிறார்கள். வரவேற்கப் பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், மாட்டுத் தீவனங் களுக்கு இன்றைக்கு வரியை அதிகமாக உயர்த்தியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் பேசுகின்றபொழுது, கோழி முட்டைக்கு என்று ஏதோ சொல்ல வந்தார், பிறகு கையை விரித்து விட்டார். அது என்ன என்பதைக் கொஞ்சம் தெளிவாக விளக்கமாக அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தோகை விரித்தாரா என்று சந்தேகம் கேட்கிறார். மயில்சாமி கவுண்டர் தோகை விரித்தாரா என்று கேட்கிறார். (சிரிப்பு)

திரு வி. கே. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, மயில்சாமி கவுண்டரின் ஒரு அறிக்கை பக்கம் பக்கமாக வந்தது. வாழ்த்து தெரிவித்தார். முட்டைகளை இலவசமாகத் தருகிறோம். முதலிலே மாண்புமிகு முதல்வ ரவர்கள் சத்துணவுக்குக் கொடுப்பதன் மூலமாக எத்தனையோ இலட்சம் முட்டைகளைத் தருவதாகச் சொன்னார். அந்த முட்டைகளெல்லாம் கெட்டுப் போனது, குஞ்சு இருந்தது, என்னென்னமோ இருந்தது. அது வேறு. இருந்தாலும். . . .

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் அபாண்ட மாக ஒருவர் மீது பழி சொல்லக் கூடாது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பல்லாண்டு காலமாகக் கோழி வளர்ப்போர் சங்கத்தின் சார்பாக, கோழி தீவனத்திற்குப் போடப்பட்டிருக்கின்ற இரண்டு சதவீத வரியை விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டு அவர்கள் போராடி வந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எத்தனை முறை அவர்கள் உங்களை அணுகி அந்தக் கோரிக்கைகளை வைத்திருப்பார்கள்? எத்தனை முறை முதலமைச்சரைச் சந்திப்பதற்கு முயற்சி செய்து முடியாமல் திரும்பியிருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, அவர்கள் கோரிக்கையிலே இருக்கக் கூடிய நியாயத்தை உணர்ந்து, அந்தச் சங்கத்தின் சார்பாக யாரும் முதலமைச்சரவர்களை வந்து சந்திக்காமலேயே, ஏற்கனவே இருந்த அவர்களுடைய

[திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

கோரிக்கை துறையினால் பரிசீலிக்கப்பட்டு, அந்த இரண்டு சதவீத வரி விலக்கு அளிக்கப்பட்டது. அதன் காரணமாக' சேலம் மாவட்டம், பெரியார் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற பல்வேறு மாவட்டங்களிலே இருக்கக்கூடிய சிறு விவசாயிகள் எந்த அளவிற்குப் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த இரண்டு சதவீத வரி விலக்கு அளித்ததன் காரணமாகத்தான் அவர்கள் சமீபத்தில் கலைஞர் அறிவித்த அந்த இலவச முட்டை வழங்கு கின்ற திட்டத்திற்கு இரண்டு இலட்சம் முட்டைகளைப் பல்வேறு மாவட்டங்களிலே இருக்கக்கூடிய சிறு விவசாயிகள் தாங்களாக முன் வந்து, அந்த அமைப்பின் சார்பாக இருபது இலட்சம் முட்டைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் வழங்குவதாக அறிவித்து, அந்த இருபது இலட்சம் முட்டை களும் பல்வேறு மாவட்டங்களுக்கு அந்தச் சங்கத்தின் சார் பாகவே எடுத்துச் செல்லப்பட்டது. அதிலே குஞ்சு, குழந்தை களுக்குத் தரப்படுகிற நேரத்திலே இல்லை. ஒருவேளை முட்டைகளிலேயிருந்து குஞ்சுகள் வருவது உண்மை என்றாலும் கூட, வழங்கப்பட்ட முட்டைகளில், குழந்தைகளுக்குத் தரப்படுகின்ற நேரத்திலே அந்த முட்டை கெட்டுப் போகவும் இல்லை; அதிலேயிருந்து குஞ்சுகள் வரவில்லை. எனவே, இப்படிப்பட்ட அபாண்டமான பழிகளை மாண்புமிகு உறுப் பினரவர்கள் கண்ணியம் மிக்க இந்த அவையிலே தெரிவிக்கக் கூடாது என்று நான் அறிவிக்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சரவர்கள் புரட்சித் தலைவரவர்கள் அவர்களைச் சந்திக்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு இன்றைய அமைச்சரும் அங்கே இருந்தவர்கள் தான். அங்கேயிருந்து, அமைச்சராக இருந்து பணியாற்றியவர்கள் தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கும் அதற்கும் என்ன தொடர்பு?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : அங்கே இருந்தவள் தான். என்னாலேயும் சந்திக்க முடியாததன் காரணமாகத்தான் வெளியேறினேன்.

திரு. வி. கே. சின்னசாமி : நாங்களெல்லாம் சந்தித்துக் கொண்டு இருந்தோம். அவர்கள் சந்திக்கவில்லை என்றால் அதற்கு காரணம் அவர்களுக்குத்தான் தெரியும் ஏன் சந்திக்கவில்லை என்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கோழியைப் பற்றிப் பேசுங்கள். இல்லையென்றால் சேவலைப் பற்றி ...து பேசுங்கள். (சிரிப்பு).

திரு. வி. கே. சின்னசாமி : நான் சொல்வது, மயில்சாமி கவுண்டருக்காக, அவர் மட்டும்தான் ஒரு விளம்பரத்தைக் கொடுத்து, அந்த முட்டை விலையைக் குறைக்கிறேன் என்று என்னென்னமோ—சரி, அதை விடுங்கள். ஆனால், நான் சொல்வது இன்றைக்கு முட்டை விலையைக் குறைப்பதாகக் காணோம்; முட்டை விலை ஏறியிருக்கிறது. அதை, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். முட்டை விலை ஏறி உள்ளதை அமைச்சரவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எதன் காரணமாக முட்டை விலை உயர்ந்திருக்கிறது ? மயில்சாமி கவுண்டர் அவர்கள் விளம்பரம் கொடுத்ததன் காரணமாகவா ? அல்லது இரண்டு சதவீதம் கோழித் தீவனங்களுக்கு வரி விலக்கு அளித்ததன் காரணமாகவா ? அல்லது சத்துணவுக் கூடங்களுக்கு இலவச முட்டைகளை வழங்குவதாக அறிவித்து அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோமே, அதன் காரணமாகவா ? எதன் காரணமாக முட்டை விலை உயர்ந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்?

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் இலவசமாக முட்டை தருகிறோம் என்று சொல்லி ஒரு அறிவிப்பைக் கொடுத்து விட்டு பிறகு விலையேற்றம் செய்திருக்கிறார்கள். அதுதான் நான் சொல்கிற குற்றச்சாட்டு. அவர்கள் விலையேற்றத்தை....

11-15 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : துணைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு செய்தியை அவைக்கு தருவதற்கு முன்னால் அதுபற்றி தீர விசாரிக்க வேண்டும். முட்டை விலையை முட்டை உற்பத்தியாளர்கள் உயர்த்த முடியாது. இதற்கென்று தேசிய முட்டை அபிவிருத்தி கழகம் National Egg Co-ordination Committee என்ற அமைப்புஇருக்கிறது அந்த கமிட்டிதான் வாரம் ஒரு முறை கூடி அன்றைய முட்டை விலையை நிர்ணயம் செய்கிறார்கள். முட்டை விலை என்பது ஆண்டுதோறும் ஒரே விலையில் விற்பதல்ல. ஒரு வாரம் கூடும், ஒரு வாரம் குறையும். இது ஒரே விலையில் ஆண்டு முழுவதும் விற்பதல்ல. எனவே, அதற்கும் இதற்கும் முடிச்சு போட வேண்டாம்.

1990 ஏப்ரல் 5]

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் தருகிறபோது முட்டை விலை ஏறும் இறங்கும் என்று சொல்கிறார்கள். சேலத்தில் முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகூட்டம் நடைபெற்றபோது 52 காசு முட்டை விலை இருந்தது. பிறகு தொடர்ந்து 62 காசுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்பதைத்தான் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : துணைத் தலைவர் அவர்களே, முட்டையை மக்கள் அதிகமாக விரும்பிச் சாப்பிடத் தொடங்கி இருக்கிறார்கள். முட்டையின் தேவை அதிகரித்து இருக்கிறது. தேவை அதிகரிக்கிற நேரத்தில் விலை ஏறுகிறது. அதற்கும் இந்த அரசின் அறிவிப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் தொடர்ந்து நீங்கள் நான்கு மணித்துளிகள் பேசிவிட்டால் ஓர் உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் பேசமுடியாமல் போகும். (குறுக்கீடு) முடியாது.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, அடுத்து மாட்டுத் தீவனத்தின் விலையை தற்போது உயர்த்தி இருக்கிறீர்கள். கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு இந்த மாட்டுத் தீவனம் குறிப்பிட்ட நேரத்தில் வருவதில்லை. 10 நாள், 15 நாள் அவர்களுக்கு மாட்டுத் தீவனம் வந்து சேராத அவல நிலை இருக்கிறது. நானும் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வாங்குகிறேன். ஒரு விவசாயி என்ற முறையில் நான் பாதிக்கப்பட்டு இருக்கிறேன். ஆகவே, ஒரு புறத்தில் வரி குறைப்பு என்பதும் ஒரு புறத்தில் விலை அதிகம் என்பதும் தான் என்னுடைய குற்றச்சாட்டு என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, புல்கரணை விற்கிறார்கள். விவசாயி வறட்சி நிலையால் பாதிக்கப்பட்டிருக்கிறான்; தீவனம் கிடைக்காத காரணத்தால் புல்கரணை கொடுக்கிறார்கள். 10 ரூபாய்களுக்கு விற்றுக் கொண்டிருந்த 1,000 கரணை இருக்கிற கட்டை இப்போது 30 ரூபாய்களுக்கு உயர்த்தி இருக்கிறார்கள். அதை இலவசமாக அவர்களுக்கு தரவேண்டும். புல் கரணையை அப்படி தந்தால் தான் பசு மாட்டிற்கும், மற்ற கால்நடைகளுக்கும் விவசாயிகள் கொடுக்க உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் மாடு, ஆடு இறைச்சி விலை 30 ரூபாய், 40 ரூபாய்க்கு வந்து விட்டது. தமிழ்நாட்டில் இருக்கிற மாடு களை இறைச்சிக்காக—உழவு மாடுகள், கறவை மாடுகள், கன்று களை கேரளாவிற்கு லோடு லோடாக லாரியில் வைத்து அனுப்பு கிறார்கள். இவைகளை செக் போஸ்டில் தடுத்து நிறுத்தி அப்படி கடத்துபவர்கள் மீது குண்டர்கள் சட்டத்தின்கீழ் நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவி லிருந்து தண்ணீர் கொடுக்க மறுக்கிறார்கள் . ஆனால், இத்தனை மாடுகள் அநியாயமாக அங்கே போய்க்கொண்டிருக்கின்றன.

அடுத்து, மருந்துகள் வாங்க 20 ஆயிரம் ரூபாய் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது முன்பு 10,000 ரூபாய் என்று இருந்ததை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் 15,000 ரூபாய் என்றும், பிறகு 20,000 வரையில் அவருடைய ஆட்சிக் காலத்தில் உயர்த்தி தந்தார்கள். இன்றைக்கும் அது 20,000 ரூபாயாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மருந்துகளின் விலை மூன்று மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஆனால், நாம் 20,000 ரூபாய் தான் தந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் 60,000 ரூபாய்க்கு மேல் மருந்தகத்திற்கு தர வேண்டும். அப்படி இல்லாத நிலையில் குறைந்தது 50,000 ரூபாயாவது தந்தால் தான் அந்தப் பகுதியில் இருக்கிற ஆடு மாடுகளைப் பாதுகாக்க மருத்துவர்களுக்கு உதவியாக இருக்கும், கால்நடைகள் காப்பாற் றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கிளை மருந்தகத்திற்கு 4,000 ரூபாய் தருகிறீர்கள். 10 கிலோ மீட்டர் வரையில் இருக்கிற கால்நடைகளை பராமரிக்க அந்தத் தொகை எப்படி போதுமானதாக இருக்கும் என்பதை பார்க்க வேண்டும். எனவே, அதையும் 10,000 ரூபாய் வரையில் உயர்த்தி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கர்ப்பமாக இருக்கிற தாய்மார்களைக் காப்பாற்றுவதற்காக 200 ரூபாய் உதவித் தொகை, குழந்தை பிறப்பதற்கு முன்பும் பிறந்த பின்னால் இரண்டு மாதத்திற்கும் வழங்குகிற திட்டத்தை அறிவித்துள்ளார்கள். அப்படி குழந்தை பெற்ற தாய்மார்கள் அந்த குழந்தைகளுக்கு பால் கொடுக்க மறுத்தாலும் கூட, அநாதைகளாக விட்டுவிட்டால் கூட, அந்த குழந்தைகளுக்கு பால் கொடுத்து காப்பாற்றுகிற இனம் பசு இனம் என்பதை பணிவோடு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட அந்த பசு இனம் கரு தரிப்பதற்கு, சினையாகி கன்று போடு வதற்கு, சினை ஊசி போடுவதற்கு ஒரு ரூபாய், ஐந்து ரூபாய் என்று வசூல் செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண் இனத்தை காப்பாற்ற 200 ரூபாய் உதவித் தொகை தருகிற போது, அந்த பெண் இனத்தோடு சேர்த்து பசு இனம் கரு தரிப் பதற்கு போடுகிற சினை ஊசியை இனாமாக போட வேண்டும்.

11-20 மணி

இதனால் விவசாயிகள் பலன் அடைவார்கள், கால்நடைப் பெருக்கம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னொன்று, காங்கேயம் காளை, காங்கேயம் காளை என்று சொன்னால், அது புகழ் பெற்ற காளை, அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத்திலும் சரி, பெரியார் மாவட்டத்திலே காங்கேயம் காளை என்றால், கம்பீரமான காளை என்று சொல்வார்கள். கம்பீரமான ஒரு ஆளைப்பற்றிச் சொல்வதாக இருந்தால், இவன் காங்கேயம் காளையைப் போல இருக்கிறான் என்று காங்கேயம் காளையை உவமையாகக் கூடச் சொல்வார்கள். அப்படிப்பட்ட காங்கேயம் காளைகள் அதிகமாக இருக்கின்ற பெரியார் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு என்று கால் நடை மருத்துவக் கல்லூரியைத் துவக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் பவானி சாகரிலே துவக்கவேண்டும். காரணம் அங்கே டாம் இருக்கிறது, தண்ணீர் வசதி இருக்கிறது, போதுமான இட வசதி இருக்கிறது மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றன. ஆகவே தந்தை பெரியார் அவர்களுடைய பெயரிலே கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றினை பெரியார் மாவட்டத்திலே துவக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; அடுத்து, திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் வாய் பேசாத ஐந்து அறிவு படைத்த விலங்குகளுக்கும் மருத்துவ மனை அமைத்து வரலாற்றில் இடம் பெற்றார் மன்னர் அசோகர். அதைத் தொடர்ந்து தமிழ்த் திருநாட்டில் (குறுக்கீடு) ஏழை எளிய மக்களுக்கு பல்வகை நன்மைகள் செய்து அவர்களின் உள்ளங்களில் குடியிருக்கிறார் நம் முதல்வர் அவர்கள். (குறுக்கீடு).

திரு. வி.கே. சின்னசாமி : துணைத் தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன கலாட்டா பண்ணுகிறீர்களா, தொகுதியிலே கல்லூரி வேண்டுமென்று கேட்டீர்கள், காளையைப் பற்றிப் பேசிவிட்டீர்கள். உங்களையும் காளையையும் இணைத்துப் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) நான்தான் இங்கே எதையும் சொல்லவேண்டும். உட்காருங்கள். நீங்கள் அடிக்கடி பேசுகிறீர்கள். ''Point of Order''

சின்னசாமி என்பது எல்லோருக்கும் தெரியும். உட்காருங்கள். பின்னாலே பேசலாம். (குறுக்கீடு) கருணை என்பதால், ஒரு மணித்துளி கொடுக்கிறேன். திரு. சுப்பிரமணிய பிள்ளை, நீங்கள் உட்காருங்கள். கருணை மனுவிற்கு எப்போதும் மதிப்பு உண்டு. (சிரிப்பு).

திரு வி. கே. சின்னசாமி ; நன்றி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் கிளை நிலையம் ஒன்றை காவலிபாளையத்திலே அமைக்க வேண்டும் என்று நான் பலமுறை கேட்டிருந்தேன். குடுமந்தூரிலே 1988—89 இல் கிளை நிலையம் மருந்தகமாக உயர்த்தப்பட்டது. அதை அப்படியே மாற்றி, காவலிபாளையத்திலே அமைக்க வேண்டும் என்று கேட்டோம். அதற்கான உத்தரவு டைரக்டருக்கு வந்திருக்கிறது. அவர்கள்தான் உத்தரவு போடவேண்டும். ஒரு வருடம் ஆகிய அந்த உத்தரவை குடுமந்தூரிலே செயல்பட்டு அந்தக் கிளை நிலையத்தை காவலிபாளையத்திலே திறப்பதற்கான உத்தரவை உடனடியாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செண்பகப்புதூர், மாக்கினாங்கோம்பியில் இருக்கிற கிளை நிலையங்களை மருந்தகங்களாக உயர்த்தப்பட்டு, அவைகள் மருந்தகங்களாக செயல்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கருணையோடு அனுமதித்த உங்களுக்கு நன்றியைக் கூறி, என்னுடைய உரையினை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு கே. சுப்பிரமணிய பிள்ளை ; மக்களுக்கு பல விதத்திலும் பயனுள்ள நன்றியுள்ள கால்நடைகளுக்கு, வாய் பேச முடியாத ஐந்தறிவுள்ள கால்நடைகளின் பால் கருணை கொண்டு, அவைகளின் நலனில் அக்கறை கொண்டு, ஆசியாவிலேயே முதன் முதலிலே கால்நடைகளுக்கென ஒரு பல்கலைக் கழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி 20—9—1989-ல் அமைத்தவர் நம் முதல்வர் அவர்கள்.

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கேற்ப கால்நடை மருத்துவத்துறையில் டாக்டர் பட்டம் பெற்ற டாக்டர் சந்திரசேகரன் அவர்களைக் கால்நடை துறைக்கு அமைச்சராக நியமித்து, நன்முறையில் கால்நடைத் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு சிறப்பாக செயல்பட்டுவரும் வேளையில் விவசாயக் குடும்பத்தில் பிறந்து கால்நடைகளோடு பழகிவரும் நான் கால் நடைத்துறையின் வளர்ச்சிக்காக கால்நடை மானியக் கோரிக்கையை முன்மொழிந்து சபை முன் வைக்கிறேன்.

கலப்பு இனச் சேர்க்கை அபிவிருத்தி மூலம் தற்போது கால்நடை இனப்பெருக்கம் நடைபெற்று வருகிறது. பிரஸ்யின், ஜெர்சி போன்ற இன மாடுகள் வளர்க்கப்படுகின்றன. ஜெர்சி இன மாடுகள் அதிக பால் தருவதில்லை. ஆனால் பிரஸ்யின் இன மாடுகள் 8 லிட்டருக்கு மேல் தருகிறது. பிரஸ்யின் இன மாடுகள் வளர்க்க ஏற்ற இடம், ஊட்டி, கோடைக்கானல், ஏற்காடு என்று சிபார்சு செய்யப்பட்டு இருக்கிறது. அவ்வின மாடுகளை நல்ல வளமான சீதோஷ்ண நிலையுள்ள தண்ணீர் வசதி, மேய்ச்சல் நிலம் அதிகம் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்க்கவும் சிபார்சு செய்ய வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தடிக்காரங்கோணம், கீரிப்பாறை ஆகிய இடங்களில் அரசுக்குச் சொந்தமான மலை இடங்கள் இருக்கின்றன. அங்கு நல்ல சீதோஷ்ண நிலை உள்ளது. தண்ணீர் வசதி உள்ளது. அவ்விடங்களில் கால்நடைப் பண்ணைகள் அமைக்க வேண்டுகிறேன். எல்லா வசதிகளும் உள்ள குமரி மாவட்டத்தில் தென் மாவட்டங்களுக்கு என்று ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியைத் தொடங்க வேண்டுகிறேன்.

11-25 மணி

தற்போது கால்நடைகளுக்கான விந்து வறட்சிப் பகுதியான நெல்லை மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டியில் தயாரிக்கப்படுகிறது. அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலும் கால் நடைப் பண்ணைகளை அமைத்து அங்கிருந்து விந்து தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

விவசாயிகளின் தேவையை முன்னிட்டு தற்போது தமிழகம் முழுவதிலும் கால் நடை மருத்துவமனைகளில் திரவ விந்தை உபயோகித்து சினை ஊசி போடுவதை மாற்றி உறை விந்து உபயோகப்படுத்த வழிவகை செய்துள்ளார்கள். திரவவிந்தை சினை ஊசிக்காக வழங்கிய போது ஒரு நாளைக்கு 2 அல்லது 3 மாடுகளுக்கு மேல் சினை ஊசி போட முடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால் தற்போது உறைவிந்து வழங்கியதன் மூலம் எத்தனை மாடுகளுக்கு வேண்டுமானாலும் சினை ஊசி போட ஏற்பாடாகியுள்ளது. தற்போது உறைவிந்து பயன்படுத்தப்படுவதால் கால் நடை கிளை நிலையங்களை மாலை நேரத்திலும் திறந்து வைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். உறைவிந்தை பாதுகாக்க 15 நாட்களுக்கு ஒரு முறை திரவ நைட்ரஜன் ஊற்ற வேண்டியுள்ளது. திரவ நைட்ரஜன் பற்றாக்குறையால் திரவ நைட்ரஜன் சரியாக விநியோகிக்காமல் உறைவிந்து கெட்டு விடுகின்றது. இதனால் சினை பிடிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. எனவே மாவட்டந்தோறும் ஒரு திரவ நைட்ரஜன் தயாரிக்கும் ஆலை உருவாக்கி திரவ நைட்ரஜன் ஒழுங்காக விநியோகிக்க அரசு வழி வகை செய்ய வேண்டும்,

பசு மற்றும் எருமைகளுக்கு சினைப் பருவம் வரும்போது காலையில் சினைப்பருவம் வந்தால் மாலையிலும், மாலையில் சினைப் பருவம் வந்தால் மறுநாள் காலையிலும் சினை ஊசி போட்டால்தான் சினை பிடிக்கும் என்பது விஞ்ஞான உண்மை. சினைத்தருணம். ஆரம்பித்த 8 மணி நேரத்திற்குள் சினை ஊசி போட வேண்டும். அப்போதுதான் சினை பிடிக்க வாய்ப்புண்டு. எனவே கால்நடைக் கிளை நிலையங்கள் காலை, மாலை ஆகிய இரண்டு நேரங்களிலும் செயல்பட வைக்கவேண்டும்.

இன உற்பத்தி செய்ய செயற்கை முறை கருவூட்டலுக்கு குறிப்பிட்ட தொகை வசூலிக்கப்படுகிறது. அதை மாற்றி முந்தைய நம் கழக ஆட்சியில் இருந்தது போல இலவசமாக வசதி செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

குஜராத் மாநிலத்தில் தரம் உயர்ந்த கிடேரி கன்றுகள் அரசு கால்நடைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. இத் திட்டத்தை தமிழ்நாட்டிலும் செயல்படுத்தி நல்ல இன கால்நடைகள் உருவாக்க வழி செய்ய வேண்டுகிறேன். (குறுக்கீடு).

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மானிய கோரிக்கைமீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. மீன் சத்துணவு என்று சொல்லப் படுகிறது. அப்படியானால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மீன் ஒரு துண்டு வழங்கப்படுமா என்பதைத் தெரிவிக்கக் வேண்டுகிறேன். தீட்சிதரையும் என்னையும் தவிர்த்து (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீன் துண்டு வழங்க முன்வந்தால் ஆவலோடு சாப்பிடுவதற்கு நானும் தயாராக இருக்கிறேன் (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே சைவம் சாப்பிடுகிறவர் களும் இருக்கிறார்கள். அசைவம் சாப்பிடுகிறவர்களும் இருக்கி றார்கள். அதனால் அதை வழங்க இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. எம். இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சைவம் சாப்பிடுகிறவர்களுக்கு நீர் வாழைக்காயும், அசைவம் சாப்பிடுகிறவர்களுக்கு விரால் மீனும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மகிழ்ச்சி. அதே நேரத்திலே மீன் மானியத்தில் மீன் வழங்கலாம், ஆனால்.

இறைச்சி மானியத்தில் என்ன வழங்கப்போகிறீர்கள்? மாடு நலத் துறை இருக்கிறது அல்லவா, அப்போது மாட்டு இறைச்சியை வழங்குவீர்களா? அதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா? (சிரிப்பு).

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மேற்படி கன்றுகள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யும்போது பண விரயம் தவிர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு உண்மையான பலன் கிடைக்க வாய்ப்புண்டு.

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை தடுக்கும் மருந்து பெங்களூரிலிருந்து இங்கு தருவிக்கப்படுகிறது. அதைத் தவிர்த்து அதை ராணிப்பேட்டையில் தயாரிக்க ஆவன செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் மருந்து தட்டுப்பாடு ஏற்படாது. அதோடு பணமும் மிச்சப்படும். நம் கழக ஆட்சியில் குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் மாதம் இரு முறை முட்டைகள் வழங்கப்படுகின்றன. அதற்கு ஏராளமான முட்டைகள் தேவைப்படுகிறது. முட்டைகள் தட்டுப்பாட்டை நீக்க கிராமங்கள் தோறும் கோழிப் பண்ணைகள் அமைக்க ஆவன செய்யவேண்டுகிறேன். நாமக்கல்லில் உள்ள கோழிப் பண்ணைகளில் 80 சதவிகிதத்திற்கு மேல் தனியார்கள் நடத்துகின்றனர். அதேபோல், மாநிலத்தில் பிற இடங்களிலும், அக்கோழிப் பண்ணைகள் மாதிரி அமைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

11-30 மணி

எருமையின் ஆண் கன்றுகள் கவனிக்கப்படுவதில்லை. எருமைகளின் ஆண் கன்றுகளை விவசாயிகளிடமிருந்து விலைக்கு வாங்கி, அவைகளிலிருந்து இறைச்சி தயாரித்து வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்யலாம். அதுபோல், நம் மாநிலத்திலிருந்து கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு கடத்தப்படும் கால்நடைகளை தடை செய்து, நம் மாநிலத்திலே இறைச்சி உற்பத்தி நிலையம் ஏற்படுத்தி அங்கு இறைச்சியை பக்குவப்படுத்தி டப்பாக்களில் அடைத்து, விற்பனை செய்ய வேண்டுகிறேன். அவ்வாறு, இறைச்சி உற்பத்தி செய்யும்போது கால் நடைகளின் தோல், இரத்தம், குளம்பு, எலும்பு ஆகியவைகளைப் பயன்படுத்தி, பல பொருட்களைத் தயாரிக்கலாம். எடுத்துக் காட்டாக, கால்நடையின் ரத்தத்தில் இருந்து, அணுக்கள் எடுத்து, மனிதர்களுக்குப் பயன்படும் டானிக் தயாரிக்கலாம். அதுபோல, எலும்புகளிலிருந்து மருந்து பொடிகள் வைக்க, கேப்ஸல்ஸ் பை தயாரிக்க பயன்படுத்தலாம்.

கால்நடைத் துறையில் படித்து பட்டம் பெற்ற வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு கால்நடை பண்ணைகள் அமைக்க, கடன் கொடுத்து உதவ வேண்டும். அதுபோல், வேலையில் இருப்பவர்கள் 5 வருடங்களுக்கு லீவு கொடுத்து பண்ணை அமைக்க ஊக்கம் கொடுத்து செயல்பட வைக்கலாம்.

கிராமங்கள் தோறும், கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அப்போது கால்நடை அமைச்சராக இருந்த போது என் சொந்த ஊருக்கு நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருக்கும்போது, ஒரு கால்நடை மருத்துவமனை இயங்க அனுமதி நல்கினார். அப்போது, நான் அது இயங்க, வாடகை இல்லாமல் என் சொந்தக் கட்டிடத்தைக் கொடுத்தேன். அவ்வாறு செய்த காரணத்தால், இன்று என் ஊரில் ஒரு சிறந்த பால் பண்ணை இருக்கிறது; அந்தப் பால் பண்ணைக்கு பால் கொடுத்து பல ஏழை மக்கள் இன்று பலன் பெறுகின்றனர்.

இறைச்சிக்காக, தரமான பன்றிகளை வளர்க்க கிராமங்களில் பன்றி பண்ணைகள் அமைக்க அரசு உதவிபுரிய வேண்டும். சமீப காலங்களில், முகமூடிக் கொள்ளைகள் அதிகரித்து வருகிறது. வீட்டுக்கொரு நாய் வளர்ப்பதன்மூலம் கொள்ளையை தவிர்க்க இயலும். நகரங்களில் தரமான நாய்கள் வளர்க்கப்படுகின்றன. ஆனால், தரமான நாய்கள் கிராமங்களில் கிடைப்பதரிது. எனவே, அல்சேஷன், டாபர்மேன், லாப்ரடார், பாமரேன்யன் போன்ற உயர் இன நாய் இனங்கள் உற்பத்தி செய்ய மதுரை, கோவை, திருச்சி, ஆகிய இடங்களில் நிலையங்கள் அமைத்தால், பொதுமக்களுக்கு உதவியாக இருக்கும். அதோடு கால்நடைகளுக்கு வழங்கப்படும் மாட்டுத் தீவனம் தரமுள்ளதாகவும், கால்நடை உரிமையாளர்களுக்கு மானிய விலையிலும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுகிறேன். மருந்துகளின்விலை மாற்றத்தை கருத்தில் கொண்டு, மருந்து செலவினத்திற்கு கூடுதல் நிதி உதவி ஒதுக்கிட வேண்டுகிறேன்.

கால்நடைகளின் நோயைக் கண்டுபிடிக்க வசதியாக மாவட்ட தலைநகரில் எக்ஸ்ரே பிரிவு தொடங்கப்பட வேண்டும். இவ்வளவும் கால்நடைகளுக்கு செய்தது போக, அது சிறப்பாக செயல்பட வேண்டுமென்றால், அத் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் நம் கழக அரசு சில நன்மைகள் செய்தாக வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களின் சார்பாக சில கோரிக்கைகளை சமர்ப்பிக்கிறேன்.

பிளஸ் 2 முடித்து, 5 வருடம் படித்து முடித்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெறுகிறார் மனித டாக்டர். பிளஸ் டூ முடித்து 5 வருடம் படித்து முடித்து, பி.வி. எஸ்.சி. பட்டம் பெறுகிறார் கால்நடை டாக்டர். ஆனால் ஊதியத்தில் இருவருக்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. வாயில்லா மிருகங்களுக்கு சிகிச்சை செய்யும்போது, பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. கால்நடைகளின் நோயை கண்டுபிடித்து, குணப்படுத்தும் கால்நடை டாக்டரின் ஊதியம் சித்தா டாக்டர் பெறும் ஊதியத்தை விடக் குறைவாக இருக்கிறது. இந்நிலையை மாற்றி அமைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மருத்துவ மனைகளுக்கு அருகில் வாடகை இல்லா குடியிருப்பு அமைத்துக் கொடுக்க வேண்டும்.

கால்நடை பராமரிப்பு துறையில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகங்களில் மருந்து கலவைகள் தயார் செய்யவும், அதற்கான பதிவேடுகள் பராமரிக்கவும் தனியாக கால்நடை மருத்துவ கம்பவுண்டர்கள் நியமனம் செய்தல் வேண்டும்.

தமிழகத்திலுள்ள பல கால்நடை மருந்தகங்களில் அன்றாட சிகிச்சைக்கு 70 அல்லது 80 கால்நடைகள் வருகின்றன. இவை அல்லது கால்நடைகளுக்கு கருத்தரிக்க சினை ஊசி போடுதல், கால்நடைகளுக்கு காயடித்தல், குடற்புழு நீக்கம், கோழிகளுக்கு தடுப்பு ஊசிபோடுதல் போன்ற அன்றாட பணிகளும் நடை பெறுகின்றன. இம்மாதிரி சிகிச்சைக்கு வருகின்ற கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவ மனைகளாக தரம் உயர்த்த வேண்டும். நாற்பது கேசுகள் அல்லது அதற்கு மேல் சிகிச்சை பணி நடைபெறுகின்ற கால்நடை மருத்துவ மனைகளில்கூடுதலாக ஒரு கால்நடை உதவி மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும்.

கால்நடை மருத்துவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு சென்று கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்ய வசதியாக மோட்டார் சைக்கிள் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

கிராமங்களில் பணிபுரியும் கால் நடை விரிவாக்கப்பணியாளர்களுக்கு ரூ. 10,000 மதிப்புள்ள சிகிச்சைக்கு வேண்டிய மருந்துகளும் உபகரணங்களும் வழங்கிப் பொது மக்களுக்கு தொண்டு செய்ய வசதி செய்து கொடுக்க வேண்டும். கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வழங்கப்படும் ஆபத்து ஈட்டுப்படி ரூ. 100. அவர்களுக்கு உதவியாக செயல்படும் கால்நடை ஆய்வாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படி கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரியும் கால்நடை ஆய்வாளர்கள் 200 பேர்கள் தங்கள் சங்க தீர்மானப்படி, பேட்ஜ் அணிந்ததற்காக முந்தைய அரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது சுமத்தப்பட்ட பழி வாங்கும் நடவடிக்கையை ரத்து செய்து தற்காலிகப் பணி நீக்க காலத்தை பணிக்காலமாக மாற்றி அமைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கால்நடை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் செயற்கை முறை கருவூட்டும் கிளை நிலையங்களில் பணிபுரியும் தினக் கூலியாளர்கள் 10 வருடங்களுக்கு மேலாகியும் நிரந்தரமாக்காமல் இருக்

கிறது. அவர்களை நிரந்தர பணியாளர்களாக்க ஆவன செய் வேண்டுமென்று கேட்டு, இம் மாமன்றத்தில் கால் நடை மானிய கோரிக்கைபற்றி பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன்.

11-35 மணி

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக மீன் வளத் துறையைப் பொறுத்த வரையில் கடற்கரைப் பகுதியில் இருக்கின்ற மீனவர் கள் எல்லாம் அஞ்சி வாழ்கின்ற, பயந்து வாழ்கின்ற சூழ்நிலையில் தான் இருக்கிறார்கள். காரணம் அந்தக் கடற்கரையில் உள்ள மீனவர்கள் பல்வேறு வகையான துன்புறுத்தலுக்கும், அச்சுறுத்த லுக்கும் விடுதலைப் புலிகளால் ஆளாக்கப்படுகிறார்கள். நாம் எல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்ந்து அந்த சிலோனில் இருக்கின்ற இலங்கை அகதிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் பல்வேறு வகையான உதவிகளை எல்லாம் எல்லோரும் சேர்ந்து தமிழர் என்ற உணர்வோடு செய்தோம். ஆனால் அந்த உணர்வே அதுவே நம்மை தாக்குகின்ற நிலையை நாம் பார்க்கிறோம். தினம் தினம் கடற்கரைப் பகுதியில் உள்ள மீனவர்கள் எல்லாம் உயிரை தன் கையில் பிடித்துக் கொண்டு வாழ்கிற சூழ்நிலை தான் இருக்கிறது.

சமீபத்திலே நாகப்பட்டினத்திலே 28ஆம் தேதி விடியற் காலை அந்தப் பகுதியில் 3 மணிக்கு அந்த மீனவர்கள் அதாவது கீச்சாங் குப்பம், அக்கரைப் பேட்டை, செருதூர் போன்ற 3 கிராமங்களி லிருந்து மீனவர்கள் அதிகாலை 3 மணிக்கு மீன் பிடிக்கச் சென் றார்கள். அவர்கள் மீன் பிடிக்கச் சென்றபோதும் அந்தப்பகுதியில் பரம்பரையாக, நிரந்தரமாக எந்த இடத்தில் மீன் பிடிப்பார் களோ அதே இடத்தில் தான் மீன் பிடிக்கச் சென்றார்கள். சென்ற இடத்தில் 9 மணிக்கு அங்கே சென்றார்கள். 9½ மணிக்கு சாப்பிட்டுக்கொண்டு இருக்கும் போது திடீரென்று 3 விடுதலைப் புலிகள், 3 நீல நிற ஸ்டீமர்களில் வந்த அந்த விடுதலைப் புலிகள் அந்த மீனவர்களை அச்சுறுத்தி, பயமுறுத்தி துப்பாக்கியைக் காட்டி உடனடியாக எங்களோடு வர வேண்டும் என்று சொல்லி அந்த 58 விசைப் படகுகளில் உள்ள மீனவர்களை 2 விடுதலைப் புலிகள் 2 ஸ்டீமர்களில் முன்னே செல்ல பின்னால் ஒரு விடுதலை புலி ஸ்டீமரில் செல்ல அவர்களை கடத்திக் கொண்டு போய் அங்கே இன்புறுத்தி என்ற ஊருக்கு கடத்திச் சென்றார்கள். அந்த இன்புறுத்தியில் உள்ள மீனவர்கள் தான் இவர்களுக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், எல்லா வகையான உதவிகளையும் செய்து இருக்கிறார்கள்.

1990 ஏப்ரல் 5]

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற அத்தனை செய்தியும் ஏற்கனவே இந்த அவையில் பேசப்பட்டு முதலமைச்சர் அவர்கள் தகுந்த விளக்கம் அளித்து விட்டார்கள். இப்போது மறுபடியும் அதே பிரச்சினையைப் பேசுவது அந்த முடிந்து போன பிரச்சினையை, அதுவும் மீனவர்கள் திரும்ப வந்ததற்குப் பின்னர், வந்து முதலமைச்சர் அவர்களைப் பார்த்து நன்றி தெரிவித்து விட்டு போனதற்குப் பின்னர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்சினையைப் பேசுவதால் என்ன புதிய விளக்கத்தைப் பெற விரும்புகிறார் என்று தெரியவில்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே மீனவர்கள் திரும்பி வந்ததும், அவர்கள் நன்றி சொல்லி மாலை அணிவித்ததும் எங்களுக்கும் மகிழ்ச்சிதான். எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அந்த மீனவர்களை கடத்திச் சென்றார்கள். விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றார்கள். கடத்திச் சென்றதினுடைய காரணம் என்ன? தமிழர்களைத் தமிழர்கள் கடத்துவதா? அந்த இலங்கை அரசு வந்து இவர்களைப் பிடித்தால் பரவாயில்லை..

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கடத்துகிற வேலை அவரவர்களுக்கு வேண்டியவர்கள்தான் செய்வார்கள். (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஐ.பி.கே.எப். அந்தக் கப்பல் படை இருக்கின்ற வரை இந்த சூழ்நிலை ஏற்படவில்லை. இந்த மீனவர்கள் பல ஆண்டுகளாக அங்கே மீன் பிடித்தவர்கள். நான் சொல்ல விரும்புவது, அவர்கள் இப்போது அந்த இடத்தில் மீன் பிடிக்கச் செல்ல முடியவில்லை. வந்து விட்டார்கள். ஆனால் அவர்களை அங்கே விடுதலைப் புலிகள் பயமுறுத்தி மீண்டும் அந்த இடத்திற்கு வந்தால் சுட்டுத் தள்ளுவோம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலையில்....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஐ.பி.கே.எப். அங்கே இருக்கிறபோது கூட, நம்முடைய மீனவர்கள் சிலபேர் அவர்களால் பிடிக்கப்பட்டு அதற்குப் பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். காரணம் ஒரு வரையறை, எல்லைக் கோடு ஒன்று, அவரவர்களுடைய எண்ண ஓட்டத்திற்கு தகுந்தாற்போல் அவ்வப்போது குறிப்பிடப்படுகிறது. மத்திய அரசு அந்த எல்லைக் கோட்டை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அந்த எல்லைக் கோட்டைக்

கடந்து செல்வதாக அவர்கள் கருதுகிறபோது இப்படி ஒரு நிலைமை தொடர்ந்து ஏற்பட்டுக்கொணடிருக்கிறது. இது பறறி இந்த அவையில் விளக்கம் சொல்லப்பட்டது, ஆந்திர மாநிலத்தினுடைய கடற்கரை ஓரத்திற்குப் போனபோது கூடப்பிடித்து வைத்துக்கொண்டார்கள். பிறகு சொல்லித்தான் மீனவர்கள் வர வேண்டி இருந்தது என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு மீனவர்களை பிடித்துச் சென்று இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையில் நாகையைச் சுற்றி இருக்கின்ற மீனவர்களை ஒரு போதும் யாரும் கடத்திச் செல்லவில்லை. அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற மீனவர்கள் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தது. இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் பாக் ஜல சந்தியிலே ஆண்டாண்டுக் காலமாக இந்தப் பகுதியிலே மீன் பிடித்தவர்கள் தான் அந்தப் பகுதியிலே மீன் பிடித்து இருக்கிறார்கள். மீன் பிடிக்கச் சென்றவர்களை கடத்திச் சென்றதோடு அல்லாமல் அங்கே அழைத்துச் சென்று மிரட்டி இருக்கிறார்கள். இவர்கள் சொல்லுவதுபோல் மீனவர்கள் தான் அவர்களுக்கு உணவு வழங்கினார்களே தவிர அங்கே இருக்கின்ற எல்.டி.டி.யினர் உணவு வழங்கவில்லை. எல்.டி.டி.யினர் சொன்னது மீண்டும் அந்தப் பகுதிக்கு மீன் பிடிக்க வருவீர்களேயானல் நீங்கள் சுட்டுக் தள்ளப்படுவீர்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவனம் என்பது அந்தப் பகுதியில் போய்தான் மீன் பிடித்து ஆகவேண்டும். அந்த நிலைமை இருக்கின்ற காரணத்தால் தான் அதை நண்பர் திரு. சிங்காரம் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

11-40 மணி

திரு. எஸ். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் ஏதோ நேரில் கண்கண்ட சாட்சிபோல, பக்கத்திலே இருந்து எல்லாவற்றையும் கேட்டதைப்போல இங்கே சொல்கின்றாரே, அதற்கான ஆதாரங்கள் ஏதாவது கையிலே வைத்துக் கொண்டு பேசுகிறாரா அல்லது பேசுவதற்கு பொறுப்பு ஏற்றுக கொண்டு பேசுகிறாரா? அங்கே நடந்தது இவருக்கு எப்படி தெரியும்? யார் இவருக்கு தகவல் கொடுத்தது? இங்கே, சபையிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அதையெல்லாம் சொன்னால் உதவிகரமாக இருக்கும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற உறுப்பினர் சிங்காரம் அவர்கள் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று அவரோடு வேறுசில மீனவ நண்பர்களும் சென்று, தம்முடைய சில சட்டமன்ற உறுப்பினர்களும் சென்று, அவர்களை விசாரித்து, அவர்கள் அளித்த

1990 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

சாட்சியத்தை பதிவு செய்துகொண்டு வந்துதான் இங்கே பேசுகின்றார்கள். நிச்சயமாக பேசுகின்ற உறுப்பினர் முழு பொறுப்பும் ஏற்றுக்கொள்வார் என்று நான் உறுதி அளிக்கின்றேன்.

திரு. என். கணபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது பாலசுப்பிரமணியத்தைப் பொறுத்தவரை எனக்கு சிங்காரம் அவர்கள் கடல் கடந்து சென்று அந்த மீனவர்களிடம் சென்று, அங்கே சென்று இருந்தார் என்ற தகவல் எனக்குத் தெரியாது. இப்போதுதான் தெரிய வருகிறது. ஆனால் சிங்காரம் பொறுப்பு ஏற்றுக்கொண்டு பேசுவதைப்பற்றி பாலசுப்பிரமணியத்திற்கு எப்படித் தெரியும் என்று எனக்குப் புரியவில்லை. என்ன ஆதாரம் இருக்கிறது என்பதையும் தெளிவாக விளக்கினால் நன்றாக இருக்கும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, சிங்காரம் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய முக்கிய ஒரு உறுப்பினர். எல்லா உறுப்பினர்களைப் போலவே அவருக்கும் உரிமை உண்டு. அந்தக் கட்சியின் சார்பிலே அவர் சொல்லுகிற காரணத்தினாலே நாங்கள் அவர் சார்பிலே உறுதி அளிக்கலாம். அவர் கடல் கடந்து செல்லவில்லை. கடல் கடந்து சென்று இருந்தால் நாம் எல்லோருக்கும் தெரிகின்ற வகையிலேதான் செல்வாரே தவிர மறைந்து செல்கின்ற பழக்கம் அந்த உறுப்பினருக்கு நிச்சயம் வராது. ஆனால், மீண்டு வந்த மீனவர்களிடம் சென்று, உரையாடி, அவைகளை ஒரு நாடாவில் பதித்துக் கொண்டு இங்கே வந்திருக்கிறார்கள். அந்த நாடா கைவசம் இருக்கிறது. அங்கே போட்டு காட்டிய படம் கூட மகிழ்ச்சியான படங்கள் அல்ல, விடுதலைப் புலிகள் என்னென்ன செய்தார்கள் என்பதைப் பற்றிய அந்தப் படங்களைப் போட்டுக் காட்டிய காரணத்தினாலே அந்த மீனவர்கள் பீதி அடைந்தார்களே தவிர அச்சப்பட்டார்களே தவிர வேறு இல்லையென்பதனை அந்த நாடாவிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் அத்தாட்சி.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் சொன்னார்கள். பெரிய பெரிய ஆசாமிகளெல்லாம் யாரிடத்திலும் சொல்லாமல் கடல் கடந்து போகிறபோது நான் ஒரு சின்ன....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அதற்குக்கூட துணிச்சல் தேவை.

திரு. ஆர். சிங்காரம் : அந்தத் துணிச்சல் காங்கிரஸ் காரனுக்கு நிரந்தர சொத்து, ஆகவே, நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். எங்களுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் சொன்னதைப் போல நான் தக்க ஆதாரத்தோடு தான் பேசுகிறேன். டேப் ரெக்கார்டர் இருக்கிறது. நீங்கள் எப்போது கேட்டாலும் போட்டுக் காட்டத் தயார். ஆனால் நான் சொல்வது, விடுதலைப் புலிகளும் தமிழர்கள்; கடத்தப் பட்ட மீனவர்களும் தமிழர்கள். நீங்களும் தமிழர்கள்; நாங்களும் தமிழர்கள். ஆக எல்லா தமிழர்களும் ஒன்று சேர்ந்து மீனவத் தமிழர்களுக்கு இவ்வளவு பெரிய தொல்லை யைக் கொடுக்கவேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. சாதாரண ஒரு பெண், மத்திய சர்க்காரிலே உள்துறை அமைச்ச ராக இருக்கிறவருடைய மகள் கடத்தப்பட்ட செய்தி மத்திய சர்க்காரையே குலுக்கியது. மத்திய சர்க்காரே எல்லாவித மான உரிமைகளையும் விட்டுக்கொடுத்து அந்தப் பெண்ணை மீட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் 311 மீனவர்கள் இரண்டு நாட்களாக அங்கே துன்புறுத்தி வைக்கப் பட்டார்கள் என்று சொன்னால்

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுதான் விடுதலைப் புலிகளுடைய பெருமை. ஏனென்றால், ஒரு அரசாங்கம் கெஞ்சி கேட்கவேண்டிய தேவையில்லாமலேயே தெரிவித்த உடனேயே அவர்களை அனுப்புவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : அப்படியென்றால், கடத்தல் தானே ? நான் சொல்வது, கடத்தப்பட்டது ஏன் ? நம்முடைய தமிழர்களை, நம்முடைய தமிழர்கள் ஏன் கடத்துகிறார்கள் ? அதற்கு அவர்கள் சொன்ன பதில் எப்போதுதான் எங்களை விடுவீர்கள் என்று கேட்டதற்கு, தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொண்டு விடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் இவர்களை அனுப்பியது தமிழக முதல்வரா ? கடத்திச் சென்று

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தவறான எண்ண ஓட்டம் வரும்படிச் சொல்லக் கூடாது. தமிழக முதல்வர் கேட்டுக்கொண்ட செய்தி அவர்களுக்குப் போயிருக் கிறது. அதனாலே தமிழக முதல்வர் கேட்டுக்கொண்டதால் அனுப்புகிறோம் என்று சொல்லி இருப்பார்கள். தமிழக முதல்வரைக் கேட்டுக்கொண்டுதான் அனுப்புவோம் என்று சொன்னதாக எந்தச் செய்தியும் இருக்க நியாயமில்லை. மற்றொன்று, ஏன் கடந்துகிறார்கள் ; ஏன் கடத்துகிறார்கள் என்றால், மீன் தான் காரணமாக இருந்தது. அதனால் கடத்துகிறார்கள்.

1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியம் தொடர்பாகப் பேசுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மீனவர்களுடைய பிரச்சினைதான் அது. மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத் தான் இதைப் பேசுகிறேன். நான் சொல்வது. அன்று முதலமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுக்கின்றபோது, காணாமல் போன மீனவர்கள் என்று சொன்னார்கள். கடத்தப்பட்ட என்ற வார்த்தை வரவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய உத்தரவின் பேரில் நான் நேரடியாகச் சென்று, அந்த மூன்று குப்பத்திற்கும் சென்றேன். 3 குப்பத்திற்கும் சென்று, கிச்சாங்குப்பம் என்ற கிராமத்தில் வாளையன் என்பவரையும் அக்கரைப்பேட்டை என்ற கிராமத்தில் சண்முகராஜ், வேலாயுதம், என்பவர்களையும், செருஹர் என்ற கிராமத்தில் கந்தசாமி என்ற மீனவரையும் இன்னும் பல கிராம மக்களையும், எல்லா கட்சியினுடைய மக்களையும் சேர்த்து, விசாரித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். அதற்கு நான் கடல் கடந்து போக வேண்டிய அவசியம் இல்லை. ஆக, நான் சொல்வது, ஐ.பி.கே. எஃப். இருக்கின்ற வரையில் அங்கே எந்தவித கோளாறும் கிடையாது. அவர்கள் சுதந்திரமாக மீன் பிடித்த இடம்தான் அந்த இடம். அந்த இடத்திலே தான் அவர்கள் மீன் பிடிக்கிறார்கள். அந்த இடத்திற்கு இனிமேல் வந்தால் சுட்டுவிடுவோம் என்று சொல்லுகின்ற விடுதலைப் புலிகளுடன் தயவுசெய்து இந்த அரசு பேச வேண்டும். சொல்ல வேண்டியவர்கள் யார்? இலங்கை அரசு சொல்ல வேண்டும். எல்லையிலே பிரச்சினை இருக்குமானால் இந்த எல்லைக்கு நீங்கள் வரக்கூடாது என்று அந்த அரசு சொல்லவேண்டும்.

11-45 மணி

ஆனால் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தில்தான் அந்தப் பகுதிகள் எல்லாம் இருக்கின்றன என்று காண்பிப்பதற்குத்தான் அத்தகைய நடவடிக்கையை அவர்கள் எடுத்தார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் உடனடியாக அதிலே தலையிட்டு, மீனவர்கள் அந்த இடத்தில் தொடர்ந்து தங்கள் தொழிலை செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நான்கைந்து நாட்களாக வேலைக்குப் போகவில்லை, மீன் பிடிக்கவில்லை. பட்டினியால் அவர்கள் குடும்பம் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே டாக்டர் கலைஞர் அவர்கள் இதிலே உடனடியாகத் தலையிட்டு, அந்தப் பகுதி மீனவர்கள் தங்களுடைய தொழிலை அங்கே செய்யும் வகையில் இந்தப் பிரச்சினையை முடித்துவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்கள் பிரச்சினையில்

விடுதலைப் புலிகள் தலையிடவேண்டாம் என்றும், மீனவர்கள் நிரந்தரமாக தங்கள் தொழிலைச் செய்யவும் முதல்வர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும்.

நான் வேண்டுமானால் டேப்பைத் தருகிறேன். பாருங்கள். அதிலும் நம்பிக்கை இல்லையென்று சொன்னால், உங்கள் கட்சியின் சார்பாக குழு ஒன்றை அங்கே அனுப்புங்கள். பாதிக்கப்பட்ட மீனவர்களே சொல்லுவார்கள். விடுதலைப் புலிகள் ஒன்றிரண்டு வீடியோ படங்கள் போட்டுக் காட்டிய தாகவும் இங்கே சொன்னார்கள். நான் கூட நினைத்தேன். முதல்வர் அவர்கள் எழுதிய பாலைவனச்சோலை படத்தைத் தான் காட்டினார்கள் அல்லது மு. க. முத்து நடித்த படத்தைக் காட்டினார்கள் என்று நினைத்தேன். ஆனால் விடுதலைப் புலிகள் தாங்கள் செய்த செயல்களைப் படம் பிடித்துத்தான் காட்டியிருக்கிறார்கள். அந்தப் படம் அவர்களை அச்சுறுத்தும் வகையிலேதான் இருந்தது என்று, எந்த நேரத்தில் தங்கள் உயிர் போய்விடுமோ என்றும் எந்த நேரத்தில் நம்மை சுட்டுத் தள்ளுவார்களோ என்றும் பயந்து போய்த்தான் அந்தப் படத்தைப் பார்த்திருக்கிறார்கள். அந்தப் படத்தைப் பார்த்த நேரத்தில் பலருக்கு பேதியே ஆகிவிட்ட தாகவும்சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களுக்கு மட்டும் அல்ல. கடற்கரைப்பகுதிகளில் இருக்கிற எல்லா மீனவர்களும் அப்படிப்பட்ட நிலையில் இருப் பதால்,கடற்கரைப் பகுதி மீனவர்களுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்கப்படவேண்டும். அந்த அளவுக்கு தொல்லை ஏற்படக் காரணம் இலங்கை அரசல்ல, நம்முடைய நண்பர்களாகிய விடுதலைப் புலிகள் தான் தொல்லை கொடுக்கிறார்கள் என்பதால், தயவுசெய்து இதை நீங்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். மீன வர்கள் இறந்து போனால் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் மிகவும் நீண்ட காலம் கழித்து அந்தப் பணம் வழங்கப் படுகிறது. மீனவர்கள் கடலில் இறந்தால், உடனடியாக போஸ்ட் மார்ட்டம் காப்பி, எப். ஐ. ஆர். காப்பி எல்லாம் வாங்கி, அரசுக்கு அனுப்பி பணத்தை சாங்ஷன் செய்ய வேண்டும். ஆனால் அதற்கு ஏதாவது காலவரைமுறை கிடையாதா? நான் கூட முதல்வர் அவர்களிடம் கேட்டேன் நடைமுறை உண்டா என்று. விரைவில் வழங்கப்படும் என்று சொன்னார்கள். கழுங்கரை என்ற கிராமத்தில் கூட ஒரு சம்பவம். நமது அமைச்சர் அவர்களுக்குக் கூட தெரியும். அங்கே இரண்டு பேர் இறந்து போனார்கள். ஒருவர் ராமு. இன்னொருவர் சத்தியமூர்த்தி. (மணியடிக்கப் பெற்றது).

1990 ஏப்ரல் 5]

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : போஸ்ட் மார்ட்டம் நடக்கிறது என்று அவர் சொல்கிறார். அப்படியானால் மீனவர்கள் கொலை செய்யப்படுகிறார்களா? சாதாரணமாக இறந்தால் போஸ்ட் மார்ட்டம் நடக்குமா?

திரு. ஆர். சிங்காரம் : அது அவருக்குத் தெரியாது. யார் இறந்தாலும் அதாவது மீனவர் கடலில் இறந்தால் அந்த பாடி கரைக்கு வந்தவுடன், போஸ்ட் மார்ட்டம் செய்வார்கள். அதை டாக்டர் கொடுக்க வேண்டும். போலீஸ் ஸ்டேஷனில் எப்.ஐ.ஆர். போட வேண்டும். அதைப்பெற்று, இந்த இரண்டும் ரெவின்யூ டிபார்ட்மெண்ட் மூலம் மீன் வளத்துறைக்கு வரவேண்டும். பின்னர் அவர்கள் அரசாங்கத்துக்கு அனுப்பி சாங்ஷன் பண்ண வேண்டும். மாண்புமிகு தீட்சிதர் அவர்களே, இதைப் புரிந்துக் கொள்ள வேண்டும். நான் தலைமை எழுத்தராக இருந்தவன். எனக்கு நிர்வாகம் புரியும். (மணியடிக்கப் பெற்றது) குறுக்கீடுகள் இருக்கின்றன. முடித்துக் கொள்கிறேன்.

ஆக இந்த இரண்டு பேரில் ஒருவருக்கு 14 மாதம் கழித்துத் தான் பணம் கிடைத்தது. இன்னொருவரான சத்தியமூர்த்தி குடும்பத்திற்கு இதுவரையில் பணம் கிடைக்கவில்லை. அங்கே ஒரு விழாவில் முதல்வர் நிவாரணத் தொகையிலிருந்து தருவார்கள் என்று சொல்லப்பட்டது. இன்னமும் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு 15 பேர் இறந்து விட்டார்கள். அவர்களுக்கும் இதுவரை நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை.

அடுத்ததாக திருவாடனை தொகுதியில் நம்புதாளையில் கடந்த புயலின்போது சிக்கி 13 மீனவர்கள் இறந்தார்கள். அதிலே 6 பேருக்கு உதவி வழங்கப்பட்டது. மீதி 7 பேருக்கு நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை. அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் புயலில் சிக்கி உடைந்த படகுகள், வலைகள் போன்றவைகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

மீனவர்களுக்கு 3,000 வீடுகள் கட்டித் தர சென்ற ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் எத்தனை ஊர்களுக்கு அது வழங்கப்பட்டது? தஞ்சை மாவட்டத்தில்தான் 25 சதவீத மீனவர்கள் இருக்கிறார்கள் என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. அமைச்சரும் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையில் அங்குள்ள மீனவர்களுக்கு போன வருஷம் எந்த வீடுமே கட்டப்படவில்லை. பேராவூரணி, வேதாரண்யம், நாகப்பட்டிணம் போன்ற பகுதிகளில் மீனவர்களுக்கு 3,000 வீடுகள் கட்டுவதற்கான மானியம், திரும்பவும் அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன். அதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தரவேண்டுமென்று கேட்டு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான மீன் வளத்துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய பணிவான கருத்துக்களை இந்த அவையில் தெரிவிக்க விரும்பு கிறேன். தமிழ்நாட்டில் மீனவர்கள், கல்வி, பொருளாதார, சமூக வளர்ச்சி ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள் என்பதை கழக அரசுக்குத் தெரிவித்து ஒருசில கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்

11–50 மணி

கடந்த நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய ராயபுரம் தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கையான ராயபுரம் மேம்பாலம் கட்டுவது குறித்து டாக்டர் கலைஞர் அவர்கள் 13.2 கோடி ரூபாய் தாராளமாக ஒதுக்கி அனைத்து தரப்பு மக்களின் நெடு நாளைய கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே இதற்காக நாங்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இப்போது ஆந்திரா பிரச்சினை பற்றிப் பேசினார்கள். கடந்த 8–11–1989 அன்று ஆந்திரப் பகுதியில் ஏற்பட்ட கொடுமை யான புயலில் சிக்கி உயிரிழந்த 26 மீனவ குடும்பத்தினருக்கு. . . .

திரு. கே. ஆர். ராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மீனளம் குறித்த விவாதம் நடந்து கொண் டிருக்கும்போது அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் இங்கே இல்லாமல் இருக்கிறார்கள். . (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கேதான் இருந்தார்கள். உட்காருங்கள்.

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, 26 மீனவ குடும்பத்தினர் குடும்பங்களுக்கு தாய் உள்ளத்தோடு உடனுக் குடன் நிவாரணம் வழங்கிய அன்புத் தலைவர் கலைஞர் அவர் களுக்கு மீனவ சமூகத்தின் சார்பாக இதயம் கனிந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் எந்த அரசும் இது போன்று உடனுக்குடன் வழங்கியதில்லை என்பதை நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று இப்போது அடிக்கடி தீப்பற்றிக் கொள்கிற நிலைமையில் ஆங்காங்கே உதவித் தொகை வழங்குகிற போது சென்ற அரசு ஒரு மாதம், 10 நாள் 15 நாள் கழித்துத்தான் நிவாரணம் வழங்கியது. ஆனால் இன்றைய கழக அரசு எப்போது

1990 ஏப்ரல் 5] [திரு. இரா. மதிவாணன்]

பாதிப்பு ஏற்படுகிறதோ, அப்போதே, அதாவது அன்றையதினமே அல்லது மறுதினமே உடனுக்குடன் அந்த நிவாரண நிதியினை வழங்கிவிடுகிறார்கள். இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்து வருகிற அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதுபோன்று வீடு கட்டுகிற திட்டம் உள்ளது. ஆதி திராவிடர்களாக இருந்தாலும் சரி, மீனவர்களாக இருந்தாலும் சரி. இந்த ஆண்டிலே திட்டங்கள் இருக்கின்ற காரணத்தாலே ராயபுரம் பகுதியில் செட்டித் தோட்டம் என்ற ஆதி திராவிடர்கள் வாழ்கிற பகுதியிலும், சிங்காரவேலர் நகர் என்ற பகுதியிலும் வீடு கட்டுகிற திட்டம் அரசிடம் உள்ளதால் உடனடியாக அவற்றைக் கட்டித் தர வேண்டும் என்று நான் கழக அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கழக அரசின் இரால் வளர்ப்புத் திட்டம் உள்ளது. சென்னை, செங்கை அண்ணா மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் விஷத்தன்மை வாய்ந்த கழிவு நீர் கடலில் கலப்பதால் மீன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தக் கடலை நம்பி வாழும் மீனவர்கள் பெரும் நட்டத்திற்கு ஆளாகின்ற அவல நிலைமை இருக்கிறது. இதற்கு மாற்றாக தமிழ்நாட்டில் 37,000 உவர் நீர் நிலைப் பகுதிகளில் இரால் வளர்ப்பை மேம்படுத்த நல்ல வாய்ப்புகள் உள்ளன. அந்த வகையில் நடப்பாண்டில் 5,000 ஏக்கரில் இரால் வளர்க்கும் திட்டத்தில் மீனவர்களுக்கு முழுக்க, முழுக்க முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற கழக அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, செங்கை அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த விசைப்படகுகள்-இங்கேயுள்ள கடலில் மீன் வளர்ச்சி குறைந்து இருக்கின்ற காரணத்தால், மீன் கிடைக்காத காரணத்தால்-ஆந்திரப் பகுதிக்குச் சென்று 4 நாட்கள் தங்கியிருந்து மீன்களைப் பிடித்து வரும் சமயத்தில் ஆந்திரப் பகுதி மீனவர்கள் அந்த விசைப்படகுக்காரர்களை மடக்கிப் பிடித்து அதில் இருக்கும் மீன்களையும், இரால்களையும் மற்றும் உடைமைகளையும் எடுத்துக்கொள்வதோடு ஒவ்வொரு விசைப்படகுக்கும் அபராதத் தொகை என்று பல ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான தொகையை வசூல் செய்கிறார்கள். ஆகவே, இது குறித்து இருதரப்பு அரசு அதிகாரிகளும் இருதரப்பு மீனவர்களையும் அழைத்து ஒரு சுமுகமான உறவு ஏற்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும். இருதரப்பு அரசு அதிகாரிகள் கலந்து பேசுகிற நேரத்தில் ஒருவர் மீது ஒருவர் பழி சொல்கிற நிலைமை இருக்கிறது. இவர்களைக் கேட்டால் நாங்கள் எல்லைக்குள்ளேதான் மீன் பிடித்தோம் என்று சொல்கிறார்கள். அவர்களைக்கேட்டால் இவர்கள் எல்லையை மீறி மீன்களைப் பிடித்து எங்கள் வலைகளைச் சேதப்படுத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். இதுபற்றிக் கண்

டறிய சாட்சியம் இல்லாத காரணத்தால் இந்த இரண்டு தரப்பு அதிகாரிகளையும், இரண்டு தரப்பு மீனவர்களையும் கொண்ட குழுவை அமைக்க வேண்டும் என்று பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இதே போன்று ஆந்திரா பகுதியைச் சேர்ந்த வைசாக்கிலேயிருந்து ஆயிரம் விசைப்படகுகள் வட மாநிலங்களான ஒரிஸ்ஸா, மேற்கு வங்கம் போன்ற பகுதிகளுக்குச் சென்று மீன்களைப் பிடித்துக்கொண்டு வருகிறார்கள். அப்படி மீன்களைப் பிடித்து வரும் ஆந்திரா விசைப்படகுகளை ஒரிஸ்ஸா மீனவர்களையோ; மேற்கு வங்க மீனவர்களையோ பிடித்து மீன்களை எடுத்துக்கொள்வதில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

11-55 மணி.

மேலும், சென்னை இராயபுரம் தொகுதியிலே உள்ள மீன்பிடி துறைமுகத்திற்கு பிங்கர் ஜெட்டி கட்டும் திட்டத்திற்கு, மீன் ஏலம் விடும் தளம் கட்டுவதற்கு ரூ. 6 கோடி திட்டம் உள்ளதால் அதை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கட்டித்தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இராயபுரத்தில் தொழிற்சாலைகள் அமைக்க இடம் வசதி இல்லை. ஆனால், வணிக நிலையங்கள் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. வணிகர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் பல முனை வரியை ஒரு முனை வரியாக மாற்றியமைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடலரிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மாற்று இடமும், கடலரிப்பைத் தடுக்க நிலையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு மீனவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைய தொழில் வாய்ப்பு குடிசை வேலைகளுக்கான வாய்ப்புக்களை உருவாக்க இந்த அரசு உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மத்திய மாநில அரசுகளுக்குச் சொந்தமான நிறுவனங்கள், அதாவது, கப்பல் போக்குவரத்துக் கழகம், கப்பல் படை, துறைமுகத்தில் கடலில் வேலை செய்யும் மீன்பிடி கப்பல்கள் மற்ற இதுபோன்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்களில் மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்றுதான் சங்கு. தமிழக கடல் பகுதிகளில் எடுக்கப்படும் சங்குகளை நம் அரசு வெளி மாநிலத்திற்கு விற்கிறது. ஆனால், நம் மாநிலத்தில் சங்குத் தொழில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், நம் அரசு அங்கே விற்கின்ற மேற்கூறிய

1990 ஏப்ரல் 5] [திரு. இரா. மதிவாணன்]

சங்குகளை நம் மாநிலத்தில் நமக்கே விற்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. வி. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கால்நடை, பால்வளம், மீன்வளம் சம்பந்தமாக பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் பட்ஜெட்டிலே ஆசியாவிலேயே இல்லாத அளவுக்கு, தமிழகத்தில் சென்னையில் கால்நடைப் பல்கலைக் கழகம் ஆரம்பித்து இருப்பது குறித்து என்னுடைய சார்பிலேயும், என்னுடைய கட்சியின் சார்பிலேயும் மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக இன்றையதினம் நாமக்கல்லிலே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரி, அது ஆராய்ச்சி நிலையமாக மாற்றப்பட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதை விரிவுபடுத்தி செம்மைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இந்த மருத்துவப்பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய மருத்துவர்களுக்கு ஏற்றத்தாழ்வான சம்பளம் இருக்கிறது. குறிப்பாக இரண்டாவது ஊதிய கமிஷன் போது, அன்றைய தினம் அவர்களுக்கு கீழே இருக்கக்கூடிய மருத்துவர்களுக்கு ரூ. 25 குறைவாக பெற்றார்கள். இன்றையதினம் அதே மருத்துவர்கள் 5 –வது சம்பளக் குழு பரிந்துரையில் ரூ. 200 குறைந்து வாங்குகிறார்கள். ஆகவே, மருத்துவர்கள் என்ற முறையில் டாக்டர்கள் என்ற முறையில், கால்நடை மருத்துவர்களுக்கு வித்தியாசம் இல்லாமல், அந்த 200 ரூபாயை அரசு அவர்களுக்குவழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் மருத்துவமனைகள் சகல வசதிகளும் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால், மருத்துவர்கள் தங்கி தங்களுடைய பணியைச் செய்வதற்கு அந்த இடத்திலே வீட்டுவசதி இருக்க வேண்டும். பல இடங்களிலே வைக்கப்பட்டிருக்கின்ற மருந்தகங்களுக்கு மருந்து கிடைக்கவில்லை. அதே சமயத்தில் அவர்களுக்குத் தேவையான சகலவசதிகளும் அங்கே இல்லை என்று சொல்லப்படுகிறது. அதையெல்லாம் கவனித்து கால்நடை வளர்ப்புக்கு அந்த முறையில் மருந்து உதவி செய்ய வேண்டும் என்று அரசுக்கு எடுத்துச்சொல்வதோடு ஒவ்வொரு ஒன்றியத்திலும் அங்கே இருக்கக்கூடிய கால்நடை ஆய்வாளர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மாதம் 21 நாட்கள் கிராமப்புறத்திற்குச் செல்கிறார்கள். அவர்களிடமும் அந்த மருந்துகளைக் கொடுத்து அவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்தால் அவர்களும் கிராமப்புறத்திலே அந்தப் பணியைச் செய்ய உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கால்நடை வளர்ப்பு என்று நாம் சொல்லக் கூடிய நேரத்தில், மாவட்டத்தில் ஒரு இடத்திலாவது தேவை யான இடத்தில், மையமாக இருக்கக்கூடிய இடத்தில் அந்த நவீன மருத்துவக் கருவிகள் அங்கே வைக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல, கால்நடைகள் ஏதாவது விபத்தில் அடிபட்டு போனால் அதை எடுத்துச் செல்வதற்கு ஆம்புலன்ஸ் வேண்டும். அதே சமயத்தில் மாவட்டத்தின் மையத்திலாவது எக்ஸ்ரே கருவி கள் வைக்கப்படுவதன் மூலமாகத்தான் கால்நடைகளை நாம் நன்கு கவனிக்க முடியும். அதற்கான உதவிகளை செய்ய வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

12-00 மணி

அப்படிப்பட்ட நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். கால் நடை தீவனம் ஊட்டச் சத்துள்ளதாக இருக்க வேண்டும். இப்போது அப்படி இல்லை. தனியார் கொடுக்கக்கூடிய தீவனத்தில் மிகவும் குறைந்த அளவுதான் ஊட்டச் சத்து உள்ளது. இத்துறையிலுள்ள அதிகாரிகளுடைய பரிசோத னைக்குப் பிறகு, அத்தாட்சிக்குப் பிறகுதான் தனியாருடைய கால்நடை தீவனம் வெளியே கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு போதுமான அளவுக்கு கால்நடை மருத்துவ மனைகளையும், வேண்டிய அளவுக்கு மருந்தகங்களை அமைக்க வேண்டும். கிராமப்புற வாழ்க்கையோடு இணைந்திருக்கிற கால் நடை வளர்ப்பு திட்டமானது இன்றைக்கு விவசாயிகளுக்கும், வாழ்வு இழந்தவர்களுக்கும் நம்பிக்கைக்குரிய ஒன்றாக இருக்கி கிறது. இதில் அரசு முன்னணியிலிருந்து செயல்பட்டாலும்கூட, கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற பல்வேறு விளைவுகளைப் பொறுத்தமட்டிலும், நோய்களைப் பொறுத்தமட்டிலும், ஏற் கெனவே தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த காலங் களில் இவற்றை வைத்து பாதுகாக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்களோ அந்த இடங்களில் எல்லாம் இதற்குரிய ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலே இருக்கிற கால்நடைத் துறையை பொறுத்தவரையிலும் கால்நடைகளை வளர்த்தல், தீவனம் தயாரித்தல், இனப் பெருக்கம், இதற்கு உட்பட்ட பால்வளம் போன்ற நிலைமைகளை எல்லாம் இன்னும் செழுமைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து , மீனளத்தைப் பொறுத்தவரையிலும் தமிழகத்தில் கடலோரப் பகுதிகளில் எண்ணற்ற இறால் மீன்கள் கிடைக் கின்றன. இவற்றை நல்லமுறையில் பயன்படுத்தினால் நமக்கு

1990 ஏப்ரல் 5] [திரு. வி. இராமசாமி]

அந்நியச் செலாவணி நிறைய கிடைக்கும். மக்களுக்கும் குறைந்த விலையில் அது கிடைக்கும். அந்தவகையிலே இதிலே விரைந்து நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றையதினம் ராமேஸ்வரம் முதல் மதுரை வரை, அதுபோல தஞ்சாவூரிலிருந்து திண்டுக்கல் வரை வருகிற மீன்களை எல்லாம் உடனடியாக மற்ற மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்ல சரியான போக்குவரத்து வசதி இல்லை. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தால் உடனடியாக மக்களுக்கு விற்பனைக்குக் கிடைப்பதுடன் இந்நிலைமையில் ஒரு செழுமையான நிலை உருவாகும் என்பதால் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு மேட்டூர் போன்ற இடங்களில் மீன் பண்ணைகள் இருக்கின்றன. ஆனால் இத்திட்டம் இப்போது நல்லமுறையில் செயல்படவில்லை. காரணம் அங்கேயிருந்து இப்போது கிடைக்கிற மீன்கள் தரமும் சுவையும் பின்தங்கி விட்டது என்று பொதுமக்கள் சொல்கிறார்கள். ஆகவே, மேட்டூர் போன்ற அணையிலிருந்து கிடைக்கிற மீன்களைப் பொறுத்தவரையில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, காவிரி கரையிலிருந்து, கரூர் வரை, ஆற்றின் இரண்டு கரைகளிலும் வாழ்கின்ற மீனவர்கள் நீண்ட காலமாக, பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலை செய்து வருகிறார்கள். அந்தத் தொழிலை பரம்பரையாக செய்துவருகிற அந்த மக்களுக்கு அங்கே எந்த வசதியும் உருவாக்கப்படவில்லை. அவர்களுக்கு சில திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஓடப்பள்ளி, கொக்கராயன்பேட்டை போன்ற பகுதிகளில் அப்படிப்பட்ட சொசைட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன்மூலம் அந்த மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். மீனவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். நான் அவர்களைப் பற்றி பேசக்கூடியதெல்லாம் என்னவென்றால், ஆதிதிராவிட மக்களை விட மிகவும் கஷ்டமாக வாழும் அவர்கள் பிறப்பது கடலோரத்தில், வாழ்வது கடல் ஓரத்தில், தொழில் செய்வது கடலில், இப்படி நாள்பூரா கடலில் வாழும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-05 மணி

இப்போது 3 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்கிறார்கள். 3 ஆயிரம் வீடுகள் போதாது. அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அந்த மீனவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களுக்கு குறைந்த விலையில் கட்டுமானங்களையும், வலையையும், மற்ற சௌகரியங்களையும் செய்து கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற வசதிகளைச்

செய்து கொடுத்து, அவர்கள் உயிரையே பணயம் வைத்து மீன் களைப் பிடித்துவர ஊக்குவிக்கும் வகையில் அரசு உதவி இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, குளம், குட்டைகளில் இருக்கக்கூடிய மீன் களை ஆங்காங்கே இருக்கக்கூடிய தனியார்களே பொறுப்பை எடுத்துக்கொண்டு, அந்த மீன்களைப் பிடித்து, அவர்கள் இஷ்டத் திற்கு லாபம் வைத்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, குளம், குட்டைகளில் இருக்கக்கூடிய மீன்களை அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியமோ அல்லது ஊராட்சி மன்றமோ பிடித்து, அவர்கள் மூலம் விற்க நடவடிக்கை எடுப்ப தன் மூலம், நல்ல விலை கிடைக்குமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து பால்வளம் சம்பந்தமாக தமிழக அரசு இன்றைய தினம் 68 கோடி ரூபாயைச் செலவழிக்க உள்ளதை வரவேற் கிறேன். மேலும், மாடு, ஆடு, கோழி வளர்க்க கடன் முழுமை யாகக் கிடைக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இதுமட்டுமல்ல. என்னுடைய மாவட்டத்திலே மேச்சேரியில் ஆட்டுப் பண்ணை இருக்கிறது. அந்த ஆட்டுப் பண்ணையை விரிவுபடுத்த வேண்டுமென்று போன பட்ஜெட் காலத்திலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது முழுமையாகச் செயல்படவில்லை. அதைச் செயற்படுத்தி, அந்த மேச்சேரி ஆட்டு இனத்தை மற்ற இடங்களிலும் விஸ்தரிக்க அரசு நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஒன்றியத்திலும் கோழிப் பண்ணை அமைக்க வகை செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல. இன்றைக்கு நம்முடைய கால்நடை மருத்துவ மனைகளில் பகலிலே வேலை செய்யக்கூடிய காவலர்களை இரவு நேரத்திலும் பணிக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவ ஆய்வாளர் களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்காமல் இருப்பது, கொடுக்கப் பட வேண்டும். இந்தத் துறையிலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பல ஆண்டுகள் வேலை செய்தும், நிரந்தரப் பணி யில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை அரசு நிரந்தரமாக்கி, அவர்களுடைய கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பின்னணியில் இந்த மானியக் கோரிக்கைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

என்னுடைய திருச்செங்கோடு தொகுதியில் மீன் பண்ணை ஒன்றும், கால்நடை மருத்துவ மனை ஒன்றும் அமைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், நீண்ட நெடுங்காலமாக அந்த மக்களின் கோரிக்கை, அங்கே ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்பதாகும். மதிப்பிற் குரிய டாக்டர் சுப்பராயன் அவர்கள் காலத்திலிருந்து இதுவரை அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே கலைக் கல்லூரி கிடையாது. அதை அமைப்பதற்கு நம்முடைய தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 5] [திரு. வி. இராமசாமி]

என்னுடைய தொகுதியில் சிறு தொழில்கள் அதிகமாக இருப்பதால், மின்சார வெட்டு ஏற்படும்போது, அங்கே உள்ள சிறு தொழிற்சாலைகளும், விசைத் தறிகளும் மின்வெட்டைச் சந்திக்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, உஞ்சனை கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல பள்ளிப்பாளையத்திலும் துணை மின்நிலையம் அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி சொல்லி, அமைகிறேன், வணக்கம்.

12-10 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மீனளம், கால்நடை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் பங்குகொள்ளும் வாய்ப்புக் கொடுத்ததற்கு முதலிலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டில் கால்நடை என்பது முக்கியமான ஒரு 'புள்ளி'. அந்தக் காலத்திலே இதையெல்லாம் யோசனை பண்ணித்தான், பசுவை ஒரு தெய்வமாகக் கொண்டாட சொல்லி இருக்கிறார்கள் கோசம்ரக்ஷணம் வைத்து இருக்கிறார்கள். எவனாவது மாட்டை அடித்துத் தின்று விடப்போகிறான்; அதனால் நாட்டின் வளம் குறைந்து போய் விடும் என்று எண்ணி இதற்கு ஒரு தர்மமே எழுதி வைத்து இருக்கிறார்கள். பசு மாட்டின் மேலே இத்தனை தெய்வங்கள் இருக்கின்றன: பசு மாட்டின் மேலே தான் தெய்வங்கள் பூராவும் இருக்கின்றன; அதை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு சாஸ்திரமே எழுதி வைத்து இருக்கிறார்கள். அதனால்தானோ என்னவோ இப்போது நம்முடைய சர்க்கார் அதையொட்டிப் பல கோடி ரூபாய் கிட்டத்தட்ட 46,98,32,000 ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அது சாமானியப் பணம் அல்ல; ஜனங்களின் வரிப்பணம். அதை ஒழுங்காகச் செலவழிக்க வேண்டும். பஞ்சாமிர்தம் போலச் செலவழிக்கக்கூடாது. அதைப் பாசானம் மாதிரி நினைக்க வேண்டும். வரிப் பணத்தை நல்லபடியாகச் செலவழிக்கவேண்டும். நாம் எல்லாம் ஆறறிவு படைத்தவர்கள். ஆனால் காலநடைகள் ஐந்தறிவு படைத்த மிருகங்களைச் சேர்ந்தவை. அப்படிப்பட்ட மிருகங்களைப் பராமரிப்பது சாமான்யமான காரியம் அல்ல. அவைகள் முதலில் தங்குவதற்கு இடம், அவைகளைப் பராமரிக்க ஜன சமூகம், அதற்குமேலே அவைகளுக்கு வியாதி வந்தால் சிகிச்சை பண்ண வேண்டும்: அவைகளுக்கு இத்தனைச் சமாச்சாரம் இருந்தால் தான் அவைகள் வாழ முடியும். அதற்கு மேலேயும் இன்னும் எத்தனையோ சமாச்சாரம் இருக்கின்றது.

நம்முடைய நாட்டுக் கால்நடைகளைப் பார்த்தால், இந்த அறிக்கையின்படி அவைகள் பால் வளம் இல்லாமலும், விருத்தி இல்லாமலும் இருக்கின்றன. அவைகளுக்கு வெளி மாநிலங்களிலே

இருந்து கொண்டுவந்த கால்நடைகள் இணை சேர்ந்த பிறகு தான் விருத்தியே ஏற்படுகிறது. அவைகளின் பால் வளத்தையோ திடகாத்திரத் தன்மையையோ நாம் பார்ப்போமேயானால், அவைகள் எருமையாக இருந்தாலும் சரி பசுக்களாக இருந்தாலும் சரி, சென்னை மாகாணம் ஒன்றாக இருந்தபோது நம்முடைய நாட்டில் காங்கேயம் வர்க்கம் இருந்தது; அவைகள் நல்ல கன மாகத் தான் இருந்தன; நெல்லூர் பசுக்கள் இருந்தன; அது மட்டுமல்லாமல் நாம்பெரியபுள்ளிகளிடம் வக்கீல்களிடம் போனால் நெல்லூர் பசு மாதிரி அந்தப் பணக்காரன் வந்து இருக்கிறான்; நெல்லூர் பசு மாதிரி அவனை நன்றாகக் கறக்கலாம் என்று கூட வழக்கில் சில வார்த்தைகள் சொல்வது உண்டு—பழையகோட்டை பட்டாக்காரருக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் இருக்கிறது; அவர் ஈரோட்டுக்குப் பக்கத்தில் இருப்பதால் நமக்கும் பேச உரிமை உண்டு. அந்த காங்கேயம் வர்க்கப் பசுக்களைப் போய்ப் பார்த்தால், காலை நேரத்திலே அவைகளின் முகத்தில் விழித்தாலே பண்ணிய பாவங்கள் எல்லாம் போய்விடும். அப்படி இரண்டு ஜோடி வந்தது என்று சொன்னால், அவைகளை விற்கும் போது நாம் விலை கேட்டால், அவர்கள் சொன்னது தான் விலை, சந்தைக்கு 500 ஜோடி வந்தது என்றால் அவைகளில் முதல் விலை காங்கேயம் ஜோடிக்குத்தான் இருக்கும். வேறு ஜோடிகளை அதோடு மதிப்பிட முடியாது. அந்த ஜோடி எங்கேயோ பிறந்து, வேறு எங்கோ போய் விட்டது என்றால், அங்கு அதை இந்தக் காளையா அல்லது அந்தக் காளையா என்று சொல்ல முடியாது; அப்படி இருக்கும் அது. அவைகளை எப்படித் தான் வளர்த்தார் களோ? அவைகளை இன்னும் வளர்த்துக்கொண்டுதான் இருக் கிறார்கள். அவைகளினுடைய வளர்ப்பு இன்னும் நீங்கிவிடவில்லை இருந்து கொண்டுதான் இருக்கின்றது. அவைகளை வருமானமாகக் கொண்டு, அவைகளை அழகாக, திடகாத்திரத்தோடு அவர்கள் வளர்க்கிறார்கள். அவர்களிடம் இருக்கும் வரை, பழைய கோட்டைவர்க்கத்தில்இருப்பவர்களிடம் நல்லாகத்தான் இருக்கும்.

அந்தப் பட்டாக்காரரிடத்தில் இருந்து அவைகளை வாங்கிக் கொண்டுவந்து, வீட்டில் வைத்து, நான்கு நாட்கள் கழித்துப் பார்த்தால், அவைகள் எப்படி இளைத்துப் போய் இருக்கும் தெரியுமா? அங்கு அவர்கள் எவ்வளவு தீவனம் போட்டாலும் சரி, அவர்கள் அவைகளை வரன்முறையோடு வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கால் நடைகளுக்கு வேலை வாய்ப்பு எப்படி இருக்கிறது என்றால் அவைகளின் வேலை வாய்ப்பு கம்மியாக இருக்கிறது. உழுவதிலிருந்து, போர் அடிப்பது, வண்டிகள் இழுப்பது வரை எல்லாவற்றையும் அவை கள் தான் செய்து வந்தன. இப்போது மெஷின் வர வர அவை களின் உபயோகம் குறைவாகப் போய்விட்டது. இப்போது இரட்டை மாட்டு வண்டியே இல்லை; சலங்கை போட்ட வண்டியே இல்லை; காங்கேயம் மாடு ஜோடிகளைப் பார்க்கவே முடியவில்லை. இப்போதெல்லாம் இரண்டு சக்கர வண்டிகள்

1990 ஏப்ரல் 5] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

தான் வருகின்றன. ஹெல்மட் போடலாமா, வேண்டாமா என்கிறார்கள். சின்ன கார்கள் வந்துவிட்டன. ஆட்டோ வந்து விட்டது. எல்லோரும் அதிலேதான் பிரயாணம் செய்கிறார்கள்.

கிராமத்திலே கூட போர் அடிக்க இயந்திரம் வந்து விட்டது; உழுவதற்கு டிராக்டர் வந்துவிட்டது. எனவே கால்நடைகள் என்னதான் பண்ணும்? அவைகளின் மீது கவனம் இல்லாமல் போய் விட்டது. இந்த அறிக்கையிலே போட்டு இருப்பது பசுவைப் பற்றித்தான். ஏதோ பொலிகாளை உற்பத்தி பண்ணுவது என்பது இந்த அறிக்கையிலே இன விருத்திக்குத்தான் போடப் பட்டு இருக்கிறது. வேறு ஒன்றும் அதிலே போடப்படவில்லை. ஆட்டை விருத்தி பண்ண வேண்டும், கோழியை விருத்தி பண்ண வேண்டும், பசுவை விருத்தி பண்ணவேண்டும் என்று இதிலே போட்டு இருக்கும்போது பொலி காளைகளைக் கொண்டுவந்து அவைகளை இன விருத்தி பண்ண வேண்டியிருக்கிறது. பாவம் காளைகள் வர்க்கம் என்ன பண்ணுமோ? தெரியவில்லை. அவைகள் கொஞ்சம் விருத்தி ஆகிவிட்டன என்றால் அவைகள் நூற்றுக்கணக்கில் ஆயிரக் கணக்கில் வெளியேறிக்கொண்டு இருக்கின்றன. அவைகள் மலையாள தேசத்திற்கு போகின்றன. அங்கு அவைகளை என்ன பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை. கல்ஃப் கன்ட்ரிக்கு இறைச்சிக் காக அவைகள் அனுப்பப்படுவதாகச் சொல்கிறார்கள். தினமும் நாம் ரோடுகளில் சொந்தக் காரிலோ, பஸ்ஸிலோ போகும் போது பார்த்தால் நூற்றுக்கணக்கான ஆயிரக் கணக்கான கால் நடைகள் போகும். அவைகளை அவன் 'பளிச் பளிச்' என்று அடிப்பதைப் பார்த்தால் பாவமாக இருக்கும். அவன் அடிக்கிற சத்தத்தாலே நம்முடைய காதே போய்விடும் போல் இருக்கும். அவன் அவைகளுக்கு ஜீவனம் கொடுக்கிறானோ இல்லையோ அவைகளை கேரளாவுக்குக்கடத்திக் கொண்டுபோய்விடுகிறான். அவன் இன்றைக்கு மட்டும் அவைகளைக் கடத்தவில்லை; பல வருடங்களாகக் கடத்திக்கொண்டு இருக்கிறான். அதுபற்றி நாங்களும் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம். அதுபற்றி கேள்வி கேட்பாரே இல்லை. அப்படி இருக்கும் நிலையில் எப்படி கால்நடைகள் விருத்தி ஆகும்? நாம் இவ்வளவு கஷ்டப்பட்டு கால்நடைகளுக்காக இத்தனை கோடி ரூபாய் செலவழிக்கிறோம். அப்படிச் செலவழித்து அவைகளை அபிவிருத்தி பண்ணினோம் என்றால், அங்கே இருக்கிறவர்கள் மாமிசவிலை அதிகமாகப் போய்விட்டதால் அதிக விலை கொடுத்து அவைகளை வாங்கி...

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் இரண்டு மூன்று செய்திகளை ஒன்றாக ஒரே கண் ணோட்டத்தில் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்காக நான் விளக்க விரும்புகிறேன். இன்று தரம் உயர்த்துவது அறி வியல் முறை. நம்முடைய கால்நடைகள் இயல்பாகவே தரம்

குறைந்து கொண்டே வந்து விட்டன. அதாவது நம்முடைய கால்நடைகளைப் போல் நான்கு மடங்கு பால் தருவது மேல்நாட்டுக் கால்நடைகளுக்கு சாதாரணமாக இருககிறது. இன்றைக்குப் பால் உற்பத்தியைப் பெருக்கித் தரம் உயர்த்த வேண்டி இருக்கிறது. பால் உற்பத்தியைப் பெருக்கி தரம் உயர்த்த வேண்டுமானால், தரமான காளைகள் மூலமாகக் கிடைக்கக்கூடிய விந்தைப் பயன்படுத்தி அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டி இருக்கிறது.

12-15 மணி

ஆனால், கேரளாவுக்குச் செல்லுகின்ற கால்நடைகள், நம்மவர்களால் கைவிடப்படக் கூடிய நிலைமையில், பெருமளவிற்குச் சரியான முறையிலே பராமரிக்கப்படாத கால்நடைகள்தான் அங்கே போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதை ஒன்றுக்கொன்று நேரடியாக கேரளாவிற்குப் போகிற கால்நடைகளையெல்லாம் தடுத்து வைத்துக்கொண்டால் பொருளாதார வளர்ச்சி ஏற்படுமா என்று கேட்டால் அப்படி உறுதியாகச் சொல்ல வழி கிடையாது. நாமே வேண்டுமானால், கேரளாவிலே செய்கின்ற காரியத்தை இங்கே செய்யலாம். ஆகவே, அந்த அளவிலேதான் அது இருக்கிறதே தவிர, கால்நடைகளினுடைய தரம், நீண்ட நெடுங்காலமாக இந்த மண்ணிலே வளர்ந்த கால்நடைகள்—பல கால்நடைகளும், பலவகையான கால்நடைகளும், ஆடுகள்கூட தரம்குறைந்து வந்துவிட்டன என்பது தான் இன்றையப் புள்ளி விவரம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: அமைச்சருடைய அறிவுரையானது, தமிழக மக்களுக்குச் சரியான முறையிலே கால்நடைகளை வளர்க்கத் தெரியவில்லை, வளர்க்க முடியவில்லை, அதனால் ஏற்படுகின்ற கஷ்டத்தை நானும் உணர்கிறேன். அதுவும் வாஸ்தவம்தான். நம் நாட்டிலே இது வரையிலே இருந்த கால்நடைகளைப் பார்த்தால் சரியாக இல்லைதான். ஆடாகட்டும், மாடாகட்டும், எல்லாம் வெளிநாட்டு இறக்குமதி. இனி மேல் ஆம்பளை பொம்பளையைக் கூட வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யவேண்டி வருமேயொழிய நம் நாட்டிலே ஒன்றும் அதைச் சரியாக விருத்தி பண்ணுவதற்கு ரைட் இல்லை என்பது நமக்குத் தெரிகிறது. அப்படித்தான் நாட்டிலே இருக்கிறது. போய்க் கல்யாணம் பண்ணிக்கொண்டு வா என்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகையினாலே, இந்தக் கால்நடையானது.....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே, கொஞ்சம் வசதியான குடும்பத்திலே உள்ளவர்கள் எல்லாம் அந்தக் காரியத்திலே ஏற்கெனவே ஈடுபட்டு விட்டார்கள். (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : ஆகையினாலே, இந்தக் கால்நடைகளைப் பற்றி—நாழ் எனக்குக் கொடுக்கமாட்டார். பெல் அடித்துவிடப் போகிறார்—கால்நடைகளை வளர்ப்பதற்குச் சரியான முறையிலே பராமரிப்பதற்கெல்லாம் ஆஸ்பத்திரியிலே எல்லாம் வைத்திருக்கிறீர்கள்.

அதற்குத் தீவனம், மழை பெய்தால்தான், காடுகளிலே, நடை நீர்ப் பாசனம் தண்ணீர் விட்டோ, பம்பு செட்டு வைத்தோ கட்டுப்படியாகாது. மழை என்பது வருணபகவான் நாட்டிலே பாவமோ என்னமோ ரொம்ப வஞ்சிக்கிறான். வருண பகவான் இல்லை என்றால், இந்த மழைக்கு டிமாண்ட். கொழுக்கத்தி புல் என்று நான் அந்தக் காலத்திலே கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போதும் இருக்கிறது. அந்தக் கொழுக்கத்திப் புல் போதவில்லை. பல விதமான புல் வர்க்கங்கள் வந்திருக்கின்றன. இருந்தாலும் முக்கியமாக தீவனம் என்றால் வைக்கோல். நெல்லூர் சம்பா நடும்போது ஒரு ஆள் உள்ளே போனால் தெரியாது. அவ்வளவு உயரம் வளரும். அறுத்தால், கிட்டத்தட்ட 90 கட்டு, 100 கட்டு வைக்கோல் காணும். இப்பொழுது இருக்கிற கட்டு மாதிரி இல்லை. அதை நான்காகக் கட்டி விடுகிறான். இப்பொழுது வளர்வது எப்படி இருக்கிறது என்றால், நெல்லூர் சம்பா போய், ஃபாரின் சீட்ஸ் எல்லாம் வரும்போது, கிட்டத்தட்ட ஒரு முழுத்திற்கும் கம்மியாகத்தான் வளரும். எங்கே புல் தீவனம் கிடைக்கும்? தீவனம் எல்லாம் இல்லாமல் பசுக்கலெல்லாம் பயந்து கொண்டு ஓடிப்போய் விடும் போல இருக்கிறது. அவனாக அனுப்புவதற்கு முன்னாலே நாம் போய் விடுவோம் என்று போய்விடும் போல் இருக்கிறது. நாட்டிலே தீவனம் கிடைக்காது. இவ்வளவு உயரம், கிட்டத்தட்ட ஐந்தடி, ஆறடி வளரக்கூடிய புல்லாக இருந்தது. இப்பொழுது ஹைபிரீட் வெரைட்டி எல்லாம் வந்த பிறகு கிட்டத்தட்ட ஒரு முழத்திற்குள்ளே வளர்கிறது. மூன்றில் ஒன்று, நான்கில் ஒன்றுதான் உயரம் வளர்கிறது. புல்லெல்லாம் ரொம்பக் கம்மி. 100 கட்டு வைக்கோல் காணுகின்ற, தீவனம் காணுகின்ற ஒரு ஏக்கரிலே இப்போது 10, 15 கட்டுகள் தான் காண்கிறது. அதற்கு என்ன செய்வது? நிறைய விளையவேண்டுமென்று கொண்டு வந்து போடுகிறார்கள். எப்படியாவது கால்நடைகளுக்கு ஆகாரம் இருக்க வேண்டும். இல்லையென்றால் அதை வளர்க்கமுடியாது. அப்படிப்பட்ட இடத்திலே அதற்குப் புல் எல்லாம் கொண்டு வந்து போடுவதற்கு ரொம்ப சந்தோஷப்படுகிறேன்.

அதற்கு ட்ரீட்மெண்ட், எங்கே போனாலும் ட்ரீட்மெண்ட், மனிதனுக்கு ட்ரீட்மெண்ட் பண்ணுவதே கஷ்டமாக இருக்கிறது. மாட்டுக்கு ட்ரீட்மெண்ட் பண்ணுவது இன்னும் கஷ்டம். மனிதனுக்கே ஊசி போடும்போது, ஊசி வேண்டாம் என்கிறான். கிட்டே போகும்போது ஊசியை டாக்டர் கொண்டு வந்தவுடன் ஓடிப்போய் விடுகிறான். பயந்து கொண்டு: கை கால் எல்லாம்.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 ஏப்ரல் 5

நடுங்குகிறது. மாடுகளுக்கு வியாதிக்கு சிகிச்சை செய்வது என்பது சாமான்யமான காரியம் அல்ல. அப்படிச் சிகிச்சை பண்ணுகிற மருத்துவர்களுடைய நிலைமை என்ன? அவனும் ஐந்து வருஷம் தான் படிக்கிறான். அந்த மருத்துவமும் ஐந்து வருஷம்தான். நமக்கு, மனிதனுக்கு ஊசி போடுகிறானே அவனும் ஐந்து வருஷம் தான் படிக்கிறான். ஆனால் படித்தவன் பலன் என்னவென்றால், மாட்டுக்கும் ஊசி போட வேண்டும், நமக்கு ஊசி போடுவது என்றால் இரண்டு சி.சி. போட்டால் போதும், மாட்டுக்கு 20 சி.சி போடவேண்டியிருக்கிறது. நமக்கு உள்ளுக்கு மாத்திரை கொடுக்க வேண்டுமென்றால் 5 கிராம் இருந்தால் போதும்: அதற்கு 100, 200 கிராம் உள்ளே செலுத்த வேண்டும். மனிதன் அவனாகவே சாப்பிட்டு விடுவான்: ஆனால் மாட்டுக்கு ஆகாரம் செலுத்தவே முடியாது, நான்குபேர் ஐந்து பேர் பிடித்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஆப்பரேஷன் செய்யும்போது பத்து பேர்களுடைய உதவி வேண்டும். இப்படி, கஷ்டப்பட்டு இவ்வளவு வேலை செய்கிற, அந்த மிருகங்களிடத்திலே வேலை செய்கிற டாக்டர்கள் என்னவென்றால் அவனும் ஐந்து வருஷம்தான் படிக்கிறான்: எல்லாம் அதே மாதிரிதான், இதே மருந்துதான்: இதே ஊசிதான், இதே ஆகாரம்தான், மாத்திரைதான் கொடுக்கிறான். இத்தனையும் கொடுக்கிறான். ஆனால் அவனுக்குச் சம்பளம் என்று வரும்போது, அவனுக்கும் இவனுக்கும் வித்தியாசம். அவனுக்குச் சம்பளம் கொடுக்கும்போது இருக்கின்ற வித்தியாசம் இருக்கிறதே, ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. அவனுக்கு இத்தனை ரூபாய், இவனுக்கு இத்தனை ரூபாய், அதைப்போலவே அங்கே இருக்கிற பியூன்கள், வேலை செய்கிறவர்களுக்கு இத்தனை ரூபாய், இங்கே வேலை செய்கிறவனுக்கு இத்தனை ரூபாய், இப்படி என்று வித்தியாசம் இருக்கிறதே, அதைப் பார்க்கும் பொழுது அவர்களுக்கு ஊக்கம் குறைந்து போய்விடும்.

நாட்டிலே மனிதனுக்கு வியாதி வந்தால் சொல்லகூடிய வாய்ப்பிருக்கிறது. ஆனால் அந்த மாட்டுக்கு வந்தால் சொல்ல முடியாது. நாமே கண்டு பிடிக்க வேண்டும். அந்தக் காலத்திலே கண்டு பிடிக்கலாம், நாடியெல்லாம் போய் விட்டது. நாடி வைத்தியம்போயே போய் விட்டது. நாடிக்கு எதற்காக வருகிறேன். என்றால், சித்த வைத்தியன் நாடியைக் ரொம்பப் பார்ப்பான். இப்படிக் கையை பிடித்தால் இவள் மூன்று மாத கர்ப்பம் என்று சொல்லுவான். தப்பித் தவறி எங்கேயாவது ஏமாந்து போனாள் என்றால் கண்டு பிடித்து விடலாம். சித்த வைத்தியத்தில், இதை மாதிரியான முறையெல்லாம் இருந்தது. இப்பொழுது ஓடிப் போய் விட்டது. நாட்டிலே தமிழை வளர்க்க வளர்க்கத் தமிழ் நாட்டிலே வைத்தியம் எல்லாம் எங்கோயோ போய் விட்டது. அதிலே இருந்த வரைமுறையெல்லாம் மறைந்துபோய் விட்டது. ஆகையினாலே, அந்த சித்த வைத்தியர்களுக்குக் கூட சம்பளம். கூடக் கொடுக்கிறோம். ஆனால் மாட்டு வைத்தியர்களுக்கு சம்பளம் கம்மியாக இருக்கிறது. அதையெல்லாம் நீங்கள்

பார்த்து, அவர்களுக்கு ஊக்கம் குறைந்து விடாமல், நல்லபடியாக ஊக்கம் கொடுத்து, கால்நடைகளை வளர்க்க அவர்களுக்கு சம்பளத்தை ஏற்றித் தர வேண்டும். அவர்களுக்கு சமநிலைமைக்கு இதனை உயர்த்த வேண்டும். அதிலே ஒன்றும் குறைந்து விடாது.

12-20 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மீன் வளம் பற்றிக் கொஞ்சம் பேசுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மீன்வளம் பற்றியும் பேச இருக்கிறேன். இப்போது நம்முடைய உறுப்பினர் சேட் அவர்கள் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். கால்நடை மருத்துவ மனை மற்றும் கால்நடை மருந்தகம் வேண்டுமென்பது அவருடைய கோரிக்கை. இந்த இரண்டும் இப்போது தனித்தனியாக இருக்கிறது. இரண்டும் ஒன்றாக இருந்தால் நன்றாக இருக்கும்.

மீன்வளம் பற்றிப் பேச வேண்டும் என்று சொல்கிறீர்கள், ரொம்ப சந்தோஷம்தான். மீன் வளம் என்பது நாட்டில் நீர் வளத்தைப்பொறுத்தது ஆகும். காவிரியில் தண்ணீரே வருவதில்லை. இனிமேல் நாம் போய் கர்நாடகாவில் கேட்க வேண்டும். காவேரியில் தண்ணீர் விடுங்கள், எங்களுக்கு மீன் வளர்க்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம். காரணம் அதற்குத் தண்ணீர் அதிகமாக இருக்க வேண்டும்.

பாசன வாய்க்கால்களுக்கு எல்லாம் அன்றைக்கு குடிமராமத்து வாய்க்கால் என்று பெயர், வெகுநாட்கள் கால்வாய்களை எல்லாம் ஏலம் விட்டு, பாசி குத்தகை என்று விட்டுக் கொண்டிருந்தோம். கிராமப் புறங்களில் கவர்ன்மெண்டின் எந்த விதமான உதவியும் இல்லாமல் காரியங்களை நாங்கள் செய்து கொண்டிருந்தோம். இப்போது அந்த பாசி குத்தகை நின்று விட்டது. தண்ணீர் வந்தால்தானே பாசி குத்தகை விட முடியும்? குளம், குட்டைகளில் எல்லாம் இப்போது தண்ணீர் இறங்கி விட்டது. கிரவுண்ட் வாட்டர் இறங்க இறங்க குளம் குட்டைகள் எல்லாம் காய்ந்து வருகின்றன. எப்படி மழைக்காலத்தில் தண்ணீர் வந்தாலும், 10, 15 நாட்கள், ஒரு மாதம் அளவிற்குதான் நிரம்பியிருக்கும் என்பதால் அந்தக் குளம், குட்டைகளில் மீன் வளர்க்க வாய்ப்பே இல்லை. ஆகவே, நாம் நம்புவது எல்லாம் கடல் மீன்களைத்தான்....

திரு உ. ரா. வரதராசன் : துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மதிப்பிற்குரிய தீட்சிதர் அவர்கள் மாடுகளைப் பற்றி பேசினார்கள். பால், வெண்ணெய்

உண்ட அனுபவத்தால் அதனை பேசியிருக்கலாம். மீன்களைப் பற்றி பேசுகிறாரே, மீன் சுவைப் பற்றி எப்படிப் பேசுகிறார். அனுபவ அறிவா, ஆராய்ச்சி அறிவா, எந்த அடிப்படையில் பேசுகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: துணைத் தலைவர் அவர்களே, எந்த ஊருக்கு போனாலும் மீன்காரத் தெரு என்று இருக்கிறது. ஸ்ரீரங்கத்தில் இரண்டு மீன்காரத் தெருக்கள் இருக்கின்றன. சின்ன மீன்காரத் தெரு, பெரிய மீன்காரத் தெரு. எனவே மீன்காரத் தெரு இல்லாமல் ஊரே இல்லை. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருந்தார். கடலோரங்களில் வாழும் மீனவர்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமாம். உள்ளூரில் இருக்கிற மீன்காரர்கள் என்ன ஆவார்கள்? அந்தக் காலத்தில் நிறைய தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மீனைப் பிடித்துக் கொண்டு இருந்தார்கள். ஏரி, குளம் எல்லா வற்றிலும் மீன் பிடித்துக் கொண்டு இருந்தார்கள். எனவே, மீன்காரத் தெரு என்பது எல்லா ஊர்களிலும் இருக்கிறது. ஆகவே, மீனவர்களோடு சேர்ந்து பழகுபவர்கள்தான் நாம் எல்லோரும். அதற்காக நாம் மீன் சாப்பிட வேண்டும் என்று அர்த்தமா என்ன? அது தான் நம்முடைய கொள்கை என்று அர்த்தமா? என்ன? அதெல்லாம் இல்லை. நமக்கு உள்ளது நம்முடைய கொள்கை. அவர்களுக்கு இருப்பது அவர்களுடைய கொள்கை. அவர்களின் வருவாய்க்கு ஏற்றபடி உதவி கொடுக்க வேண்டும். இப்போது எல்லாம் அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். காரணம் அவர்களுக்கு மீன் சரியாக கிடைப்பதில்லை. இதற்காக கூட்டுறவுச் சங்கம் என்று வைத்தார்கள். அந்தச் சங்கமும் சரியாக செயல்பட வில்லை. காரணம் அவர்களுக்கு மீன் கிடைத்தால்தானே செயல் பட முடியும். மீன் 10 பவுண்ட் கிடைக்கிற இடத்தில் 2 பவுண்ட் தான் கிடைக்கிறது. அப்போதெல்லாம் பவுண்ட் என்று தான் சொல்வார்கள். இப்போது கிலோ கணக்கில் சொல்கிறோம்.

இப்போது எக்கச்சக்கமான பம்ப் செட்டுகள் வந்து விட்டன. கொஞ்ச நஞ்சம் இருக்கிற தண்ணீரையும் பம்ப் செட் வைத்து இறைத்து விடுகிறார்கள். ஆகவே, நாட்டில் நீர்வளம் இல்லை. காவிரி, ஏரி, குளம், குட்டையில் மீன் உற்பத்திக்கு வசதி இல்லை. ஆகவே, அந்த மீன்காரர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். நாம் கடலோர மீன் காரர்களைப் பற்றித் தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதுபற்றி சர்ச்சை ரொம்பவும் ஜாஸ்தியாகி விட்டது. ஆகவே, உள்ளூர் மீனவர்களுக்கும் வீடு கட்ட உதவிகளைச் செய்ய வேண்டும். கடலில் சென்றால் எப்படியும் மீன் பிடித்து விடலாம். இவர்களுக்கு அந்த வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உள்ளூரில் இருக்கிற மீன்காரர்களுக்கு

1990 ஏப்ரல் 5] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

முதலில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். மற்ற மீன்காரர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகிறதோ அத்தனை சலுகைகளும் நதி நீர் பாசனத்தில் இருக்கிற உள்ளூர்காரர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

அடுத்தப்படியாக கோழி, செம்மறி ஆடு போன்றவைகள் வருகின்றன. அன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எட்டு பொம்பளை ஆடுகளுக்கு ஒரு ஆண் ஆடு என்று சொன்னார்கள். ஒரு ஆட்டுப்பண்ணையில் கேட்டுக் கொண்டிருந்தேன்(சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆண் ஆடு என்று சொல்வது கிடையாது. ''கிடா'' என்று சொல்வார்கள்....

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, என்ன சார் இப்படியெல்லாம் பேசுகிறார்களே.... இந்த மாதிரி வார்த்தைகளை எல்லாம் உபயோகப்படுத்தலாமா....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆண் ஆடு, பெண் ஆடு என்று சொல்வது ''unparliamentary'' இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: இதில் ஒன்றும் குறை இல்லை. அமைச்சர் அவர்கள் கேள்வி வந்த போது ஒரு நாள் சொன்னார் எட்டு பெண் ஆடுகளுக்கு ஒரு கிடா ஆடு என்று சொன்னார்கள்.

12-25 மணி.

எனக்கு அப்போதே யோசனை வந்தது. என்ன ஐயா இது 8 முடியுமா என்று. அன்றைக்கே கேட்கலாம் என்று இருந்தேன். இடம்கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அதைப் பற்றிக் கவலையில்லை. (சிரிப்பு) இதெல்லாம், சபை என்றால், அப்படித்தான். இது கொச்சையான வார்த்தையல்ல. இது நடைமுறையிலே இருப்பதுதானே தவிர, கொச்சையான வார்த்தை என்று சொல்வதிலே அர்த்தம் இல்லை. நாம் இப்போது வெளி மாநிலங்களுக்கு எல்லாம் கமிட்டியின் மூலமாகப் போய் வருகிறோம். அங்கேயிருக்கிற ஆடுகள் எல்லாம் எவ்வளவு பெரியதாக, ரொம்ப உயரமாக இருக்கிறது. காஷ்மீரத்தில் உள்ள ஆடுகள், இவ்வளவு தூரம் கிட்டத்தட்ட இடுப்பு அளவிற்கு மேலே வருகிறது. ஆனால் இங்கே உள்ள ஆடுகள் எல்லாம் அவ்வளவு உயரமாக வளர்வதற்கான சக்திகள் இல்லை. ஆட்டுப் பண்ணை வைத்து, இவ்வளவு கோடி ரூபாயை ஒதுக்கி, அதை விருத்தி செய்வதற்கு நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கோழி, முட்டை இதைப் பற்றியெல்லாம் நான் சொன்னால், நீங்கள் சாப்பிடுகிறீர்களா என்றுகூட கேட்பார்கள். எல்லோரும் சாப்பிடுவதால்தான், வெகுவாக உள்ள ஜனங்கள் இதைச் சாப்பிடுவதால்தான் முட்டையின் விலை ஏறிவிட்டது. நாம் சொல்லிச், சொல்லி, எல்லோரும் முட்டையை சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள். அதனால் விலை கூட ஏறிவிட்டது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. என். கணபதி : துணைத் தலைவர் அவர்களே, முட்டை சைவாள் உணவு என்று சொல்கிறார்களே, அதை தீட்சிதர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சைவம் என்று சாப்பிடுகிறவன் சொல்வான். நான் ஒத்துக்கொள்வதற்கு எப்படி முடியும். நான் நிச்சயமாக ஒத்துக்கொள்ள முடியாது. நாங்கள் கண்ணாலே பார்ப்போமே தவிர, அதைச் சாப்பிடுவது கிடையாது. இப்போது சைவ உணவு என்பது அதிகமாக விருத்தியாகிக் கொண்டு இருக்கிறது. அமெரிக்காவிலே கூட சைவ உணவுக்காரர்கள் தனிக் கட்சியே வைத்திருக்கிறான். பொலிட்டிகல் மாதிரி. இண்டர்நேசனல் லெவலிலே, சைவ உணவை சாப்பிடுகிற கட்சி இன்றைக்கு கருத்தரங்கு, பட்டிமன்றம் எல்லாமே நடத்துகிறார்கள். சைவ உணவு தேவலாமா, அந்த உணவு தேவலாமா என்று. அது வேறு விஷயம். முட்டை சாப்பிடுகிறவன் மட்டும் என்ன இவ்வளவு பெரியதாகவா இருக்கிறான். இல்லை. சாதாரண உணவு சாப்பிடுகிறவன் இத்தனை பெரியதாக இருக்கிறான். அசைவ உணவைச் சாப்பிடுகிறவர்களில் எவ்வளவோ பேர்கள் தேறவே மாட்டேங்கிறார்கள். அதைப் போய்க் கேளுங்கள். அவன் என்ன ஆஸ்பத்திரிக்குப் போகாமல் இருக்கிறானா ? ஆஸ்பத்திரிக்குப் போய் பாருங்கள். எல்லாம் அசைவ உணவுச் சாப்பிடுகிறவர்கள்தான் 100-க்கு 99 பேர்கள் இருக்கிறார்கள். பாக்கி ஒருவன்தான் சைவ உணவு சாப்பிடுகிறவன் இருக்கிறான். இதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. எனவே, நாட்டில் உள்ள பால் வளம், மீன்வளம், முட்டை இவைகளைப் பற்றி எல்லாம் இந்த மானியக் கோரிக்கைகளை சேர்ந்தாற்போல் கொடுத்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையின் விவாதத்திலே கலந்து கொள்ள வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக மீனளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வந்து இருக்கிறேன். மீனளத் துறையைப் பற்றிப் பேசுகின்றபோது, இந்த இலாக்காவிற்கு என்று ஒதுக்குகின்ற பணம் சரியாகச் சென்று சேருகிறதா என்றால் இல்லை

1990 ஏப்ரல் 5] [திரு. மா. சுந்தரதாஸ்]

ஒதுக்குகின்ற பணம் நிர்வாகச் செலவிற்கே செலவழிக்கப்படுகிறதே தவிர, அந்த ஏழை மீனவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. வீடுகள் கட்டுகின்ற திட்டம் என்று சொன்னாலும்கூட பல பேர்களுக்குத் தெரியும், கடந்த ஆண்டுகூட, முந்தைய சர்க்காரிலேகூட, ஒதுக்கிய பணம் நிர்வாகத்திற்கு செலவு செய்யப்பட்டதே தவிர, அந்த வீடுகள் கட்டப்படவில்லை. Poorest of the poor என்று சொல்கிற ஜனங்களுக்கு ஒதுக்குகின்ற பணங்கள் குறைவாக இருக்கின்றன. அந்தப் பணம் போய்ச் சேருவதில்லை. வருகிற பணங்கள் எல்லாம் நிர்வாகச் செலவுக்கே செலவு செய்யப்படுகிறது என்பதைத்தான் நான் என்னுடைய முதல் குற்றச்சாட்டாக சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மீனவர்கள் எந்த அளவிற்கு நசுக்கப்படுகிறார்கள், ஒடுக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றி நான் சொல்லிக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆந்திர மாநிலத்திற்குச் சென்றால், அங்கே மீனவர்களை ரவுடிகள் தாக்கிப் பிடித்துக்கொள்கிறார்கள். நேற்றையதினம் கூட உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் பேசினார்கள். நான் அதைத் திரும்பவும் பேச விரும்பவில்லை. அங்கேயிருக்கின்ற பிரச்சினை ஒன்று.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மீனவர்களுக்கு இன்றைக்கு இருக்கிற பிரச்சினை, அவர்கள் கேரள மாநிலத்திற்குச் சென்று மீன்பிடிக்க முடியாது. அங்கே அவர்களை ஒதுக்குகிறார்கள். தமிழகத்திலே இருக்கிற மீனவர்கள், ஆந்திர மாநிலத்திற்குச் சென்றாலும் மீன்பிடிக்க முடியவில்லை. மண்டபம் போன்ற பகுதிகளிலே இருப்பவர்கள் சென்றால், சிலோனில் உள்ளவர்களுடைய தொந்தரவு காரணமாக மீன்பிடிக்க முடிவதில்லை. கேரள எல்லையிலே இருப்பவர்கள் அங்கே சென்றால், கேரளாவிலே உள்ளவர்களின் தொந்திரவு காரணமாக அவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலையில் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் கேட்டால், There is no demarcation line in the sea என்று சொல்கிறார்கள். அவர்கள் படிக்காதவர்கள், ஏழை, இல்லிட்டரேட். ஒரு ஏழை மீன்பிடிக்கச் சென்றால், அங்கே டீமார்க்கேஷன் என்று சொல்கிற நிலைமையிருக்கிறது. இதற்கு நான் கேட்டுக்கொள்வது, அந்தந்தப் பகுதியிலே, நம்முடைய கோஸ்டல் கார்டுகளை, மத்திய அரசிலே வேண்டிக்கொண்டு, மத்திய அரசினுடைய கோஸ்டல் கார்டுகளை நியமனம் செய்து, அந்தப் பகுதியிலே நீங்கள் மீன்பிடிக்கலாம் என்று சொன்னால், நிச்சயமாக நன்றாக இருக்கும். வேதாரண்யத்திலே நடந்தது, நாகைப்பட்டினத்திலே நடந்தது என்ன என்றால், நீங்கள் வரக்கூடாது என்று மிரட்டியிருக்கிறார்கள். அப்படி என்றால் அவர்கள் எப்படி மீன்பிடிக்கப் போக முடியும்? இதைப்போல ஆந்திராவிலே நடந்த சம்பவத்தைப் பற்றி நான் இரண்டு முறை கேள்வி எழுப்பியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இது அந்தப்

பிரச்சினை போல இல்லை. பக்கத்திலே இருக்கிற மாநிலத்திலே இருக்கிற பிரச்சினையைப் பற்றி, ஆந்திர முதலமைச்சர் அவர்களும், நம்முடைய முதல்வர் அவர்களும் பேசி இதை முடிக்க வேண்டுமே தவிர, இதை நீட்டிக் கொண்டே போவது சரியானதல்ல.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பிரச்சினையைப் பொறுத்தவரையில் சொன்னால், எங்களுக்கு என்று அங்கே 'ஃபிஷ்ஷிங் ஹார்பர்' கிடையாது. உங்களுக்கு நன்றாகத் தெரியும். சின்னமுட்டம் ஃபிஸ்ஸிங் ஹார்பர் வேலை எத்தனை ஆண்டுக்காலமாக நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் இன்னும் முடிந்தபாடில்லை. அங்கே ஒருசில பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை அதிகாரிகளால் பேசி முடிக்க முடியவில்லை என்று சொன்னால், எந்தப் பிரச்சினையை அவர்கள் முடிக்கப் போகிறார்கள். நேற்றைக்குக் கூட தேங்காய்ப்பட்டணத்திலே ஒரு ஃபிஷ்ஷிங் ஹார்பரை உருவாக்க முடியுமா என்று கேட்டால், முடியாது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். நாங்கள் அந்த டிமாண்டிலே கலந்துகொள்ளாமல் வெளிநடப்பு செய்த காரணத்தால், அதைத் திருப்பிக் கேட்க முடியவில்லை. ஏறத்தாழ எங்களுடைய மாவட்டத்திலே பாதிப் பேர்கள், Second major population என்று சொல்லக் கூடிய சமுதாயம் மீனவச் சமுதாயம். அந்தச் சமுதாயத்திற்கு ஒரு பிஷ்ஷிங் ஹார்பரைக் கேட்டால் இல்லை என்று சொன்னால், எந்த அளவிற்கு அது நன்றாக இருக்கும். அந்தக் காலத்திலே ஏற்கனவே தொடங்கப்பட்ட சின்னமுட்டம் ஃபிஷ்ஷிங் ஹார்பர் வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை. நாம் என்றைக்கும் கேரளாவிற்குச் சென்று கையேந்த வேண்டுமா? கன்னியாகுமரியிலே இருக்கின்ற மீனவர்கள் பம்பாய்வரையில் செல்லுகின்ற ஒரு அவல நிலைமை இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் நம்முடைய தமிழக அரசு, நான் இந்த அரசைச் சொல்லவில்லை, முந்தைய அரசையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எந்த அரசு மீனவர்களுக்காக சரியான முறையிலே பணம் ஒதுக்கினாலும், அந்தப் பணம் சரியான முறையிலே அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதைத்தான் சொல்கிறேனே தவிர, இந்த அரசை மாத்திரம் நான் சொல்லவில்லை. முந்தைய அரசும் அப்படித்தான் செய்து கொண்டிருந்தது.

12-30 மணி

கேரளத்தைப் பொறுத்தவரையில் ஒரு மீனவன் கடலிலே சென்று திரும்பி வரவில்லை என்று சொன்னால் கூட ஹெலிகாப்டரை ஆப்பரேட் பண்ணி தேடச் சொல்லுகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இது குறித்து முந்தைய அரசிடமே கூட சொல்லியிருக்கிறோம். போட் வாங்குவதாகச்

·1990 ஏப்ரல் 5] [திரு. மா. சுந்தரதாஸ்]

சொன்னார்கள் ஆனால் வாங்கவில்லை. ஆனால் குமரி மாவட்டத்தில் ரஃப் சீ என்று கடல் மாறும்போது பல்வேறு நபர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களை தேடி பிடிப்பதற்கு ஃபிஷ்ஷிங் டிபார்ட்மென்ட்டை அணுகினால் போட் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஹெலிகாப்டர் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் கேரள மாநிலத்தில் ஒரு தனி நபருக்குக்கூட ஹெலிகாப்டர் ஆப்பரேட் செய்து அவர்களை தேடிப்பிடித்து வருகிறார்கள். அந்தச் சூழ்நிலையை இங்கே தமிழகத்திலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்று சொன்னால் இங்கே பேசி விடுவதனாலே மரியாதை இருக்காது. இது அடிக்கடி இங்கு பேசுவது தான். ஒதுக்கப்படுகின்ற பணங்கள் அந்த ஏழைக்கு சென்று சேர வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே 3 ஆயிரம் வீடுகள் கட்டுவதாகச் சொன்னார்கள். என்னுடைய பகுதியிலே என்னுடைய தொகுதியில் 350 வீடுகள் கட்டுவதாக சொன்னார்கள். அதாவது நீரோடை மார்த்தண்டம் பகுதிகளில் 300 வீடுகள் கட்டுவதாக சொன்னார்கள்; அங்கே நடப்பது என்னவென்று சொன்னால் ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தினுடைய பணம். அங்கே ஒரு அசிஸ்டென்ட் டைரக்டர் சொல்லுகிறார்—நான் தான் தேர்ந்தெடுப்பேன் ஆட்களை என்று சொல்லுகிறார். நாம் எப்படி விட முடியும், ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நார்ம்ஸ் இருக்கிறது. லோக்கல் பஞ்சாயத்து போர்டு சேர்மன், எம்.பி., எம்.எல்.ஏ., ஆர்.டி.ஓ. மற்ற ஆபிஷியல்ஸ் சேர்ந்து ஒரு கமிட்டி போடுகிறார்கள். அதில் தேர்ந்தெடுக்கிறார்கள். ஃபிஷரீஸ் டிபார்ட்மென்ட் என்ன சொல்லுகிறார்கள் என்றால் நாங்களே செய்துக் கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் செய்தால் கூட பரவாயில்லை. ஆனால் ஊருக்குள் சென்றால் அங்கே சொல்லுகிறார்கள், அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று. நான் இதை ஒப்பனாக சொல்லுகிறேன். 2 ஆயிரம் கொடு 3 ஆயிரம் கொடு என்று கேட்கிறார்கள். ஏன் பணக்காரர்களுக்கு வீடு கட்டுவதற்காக. ஏன் இதற்காக நீங்கள் நிதி ஒதுக்குகிறீர்கள் என்று கேட்கிறேன். இங்கு டைரக்டர்கள் எல்லாம் இருக்கிறார்கள், அதனால் இதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் பணம் ஒதுக்குகிறோம் என்று சொன்னால் அது ஏழைகளுக்குச் சென்று சேரவேண்டும். ஆனால் அங்கே அந்த ஏழை மீனவன் கடலுக்குள் சென்று விடுகிறான். வசதி படைத்த மீனவன்தான் அங்கே உட்கார்ந்திருக்கிறான். அவனிடம் மால் வாங்குவதற்காக அங்கே அசிஸ்டென்ட் டைரக்டர் உட்கார்ந்திருக்கிறார்கள்.

நாங்கள் அதை திருப்பி திருப்பி பார்த்து விட்டு, நீங்கள் சொல்வது சரியல்ல அப்படி தேர்ந்தெடுக்கக் கூடாது, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நார்ம்ஸ் இருக்கிறது அதன்படிதான் தேர்ந்து எடுக்க வேண்டுமென்று சொன்னால் இல்லை எங்களுக்கென்று ஒரு தனி சட்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணி செய்வதற்கு மற்ற துறைகளுக்கும் உங்களுக்கும் தனிச் தனிச் சட்டங்கள் கொடுத்திருக்கிறீர்களா அல்லது எங்கள் குமரி மாவட்டத்தினுடைய அசிஸ்டென்ட் டைரக்டர் அல்லது யாரோ சொல்லி கேட்பதையெல்லாம் நடவடிக்கை எடுக்கிறீர்களா, இல்லை அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையெல்லாம் கலந்துக் கொண்டு முடிவு செய்யப் போகிறீர்களா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

இது எங்களுடைய மாவட்டத்தினுடைய நிலைமை. மற்ற மாவட்டங்களில் எப்படி நிலைமை என்பது எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லா ஜனநாயக பிரதிநிதிகளையும் அங்கீகரித்து அங்கே ஒரு கமிட்டி போட்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எந்த அளவு நார்ம்ஸ் இருக்கிறதோ அந்த அளவுக்கு தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்று சொன்னால் அந்த அப்பாவி மீனவனுக்கு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. அங்கேயுள்ள வசதி படைத்த மீனவர்கள்தான் அதிகாரிகளை ஜால்ரா செய்துக் கொண்டு அதிகாரிகளை வசீகரித்துக் கொண்டு அந்த வீடுகளை அடைவார்கள். அவர்களுக்குத்தான் அந்த வீடுகள் சென்றுவிடும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்லேண்டு ஃபிஷர் மேனைப் பொறுத்தவரையில் ஆளியாறு டேம் போன்று பல டேம்களுக்கு, அந்த டேம்களில் மீன் பிடிப்பதற்கு யாருக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் ஃபிஷர்மேன் அல்லது இன்லேண்டு பிஷர்மேனுக்குத்தான் கொடுக்கவேண்டும். ஆனால் ஆளியாறு போன்ற பல்வேறு டேம்களில் அந்த அதிகாரிகளுக்கு சொந்தக்காரர்களுக்கே கொடுத்திருக்கிறார்கள். ஷேர் பிஷர்மேன் என்ற வகையில் அவர்களை சேர்த்திருக்கிறார்கள். அது குறித்து பல்வேறு போராட்டங்கள் அந்த டேம் பகுதியில் இருக்கின்றன. அது குறித்து அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். எங்காவது அப்படி ஷேர் பிஷர்மேன் என்ற

வகையில் அதிகாரிகள் நியமனம் செய்தால், அங்கு இன்லேண்டு பிஷர்மேன் நியமிக்கப்படவில்லை என்று சொன்னால், அதை உடனே மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மீனவர்களுடைய படகுகளுக்கு லோன் கொடுக்கப்படுகிறது. போட் மிக மோசமான நிலைமையில் இருந்தால் கூட அந்த லோனை ரைட் ஆப் செய்வது இல்லை. டீசல் விலை வேறு ஏறியிருக்கிறது. டீசலுக்கு சப்சிடி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, தமிழ்நாடு பேர்ல்ஸ் நிறுவனம் என்ற ஒன்று இருக்கிறது. அது ஜாயின்ட் வென்சாரில் நடப்பதால் லாஸில் போகிறது, நிச்சயமாக அதை அரசு எடுத்து நடத்தினால் லாபத்திலே ஓட்ட முடியும் என்பது என்னுடைய கருத்து. அதேபோல பிஷ்ஷர் பேக்டரி என்று ஒன்று மெட்ராசில் இருக்கிறது. அங்குள்ள ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட வில்லை. அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். அதே போல பிஷ்ஷரிஸ் டிபார்ட்மென்ட்டிலே ஜாயின்ட் வென்சாரில் நடத்துகின்ற பல தொழிற்சாலைகள் எல்லாம் நஷ்டத்திலே ஓடுகின்றன. அவைகளை தனிப்பட்ட முறையிலே நம்முடைய தமிழ்நாடு பிஷ்ஷரீஸ் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனே எடுத்து நடத்தினால் நிச்சயமாக லாபமாக நடத்த முடியும். அதேபோல ஃபைபர் கிளாஸ் போட்டுகளுக்கு ஒரு பேக்டரி கட்டி இருக்கிறார்கள். அது கூட லாஸிலே ஓடிக் கொண்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று சொல்லி, மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வீடுகள் சரியாக கட்டி கொடுக்கப்பட வேண்டும். அதிலே இருக்கிற இடைத் தரகர்களை, அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்று ஆணித்தரமாக இந்த அரசை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் அமைச்சருக்கு தெரியாது. அங்கே இருக்கிற அசிஸ்டென்ட் டைரக்டர் என்னென்ன செய்து வருகிறார்கள் என்பது அமைச்சருக்கு தெரியாததால் அப்படி சொல்லுகிறேன். அந்த பணங்கள் ஏழைகளுக்குச் சென்று சேர வேண்டும். இன்னும் அதற்கு அதிகமாக தொகை ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்த மக்களுக்கு லோன் அதிகமாக கொடுக்க வேண்டும். அதேபோல அண்டை மாநிலத்திலிருக்கிற பிரச்சினைகளை தீர்த்து நம்முடைய மீனவர்கள் நிம்மதியாக மீன் பிடிப்பதற்கான வசதிகளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மீன் வளத்தில் பேச்சை முடித்துக் கொண்டு அடுத்தபடியாக கால்நடை பராமரிப்புத் துறையில் சிலவற்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

12—35 மணி

அடுத்தபடியாக கால்நடை பராமரிப்பைப் பற்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைப் பராமரிப்பைப் பொறுத்தவரையிலே ''There is three tier system in Tamil Nadu''. 1977-லிருந்து ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருந்தது. டி.எ. வர்கீஸ் கமிஷன் என்ற அந்த கமிஷனின்படி, 'த்ரீ டையர் சிஸ்டம்'

நடைமுறையில் இருக்கிறதா என்றால் இல்லை. ஏனென்று சொன்னால், ஜாயின்ட் டேரக்டர் என்று சொன்னால், டிஸ்ட்ரிக்டுக்கு ஒரு ஜாயின்ட் டேரக்டர், அதேபோல் ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு அஸிஸ்டண்ட் டேரக்டர் இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்களின் தொகுதியிலுள்ள மாவட்டத்திற்கு ஜாயின்ட் டேரக்டர் கிடையாது. நான் சார்ந்துள்ள மாவட்டத்திற்கும் ஜாயின்ட் டேரக்டர் கிடையாது. அதேபோல் ஊட்டியில் இல்லை என்று நினைக்கிறேன். பெரியார் மாவட்டத்திலும் இல்லை. ஏன் இந்த 3 அல்லது 4 மாவட்டங்களுக்கு 'த்ரீ டையர் சிஸ்டம்' இம்ப்ளெமென்டேஷன் பண்ணவில்லை. எனவே, 'த்ரீ டையர் சிஸ்டம்' உருவாக்கினால்தான், அந்த கமிஷனுடைய ரிப்போர்ட்டை—பரிந்துரையை நாம் அமல்படுத்துகிறோம் என்று அர்த்தம். இப்போது ஜாயின்ட் டேரக்டர் என்று இருந்தால் கூட, அதிகாரம் எல்லாம், டேரக்டரிடம் தான் இருக்கிறது. ஒரு பியூனை மாற்றவேண்டுமென்று சொன்னால் கூட Joint Direct r will go and seek permission f om Director. அதனாலே, பினான்ஷியல் கமிட்மென்ட், டிரான்ஸ்பெர், போஸ்டிங் அனைத்தையும் ஜாயின்ட் டேரக்டரிடம் கொடுக்கப்பட வேண்டும். அதனால்தான், நிர்வாகத்தைச் செம்மையாக நடத்த முடியும்.

தற்போது டெபுடி டேரக்டர்களையெல்லாம் மாற்றுகிறார்கள். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பதவியைப் பொறுத்தவரையில், '3 டையர் சிஸ்டம்' எல்லா மாவட்டங்களிலேயும் அமல்படுத்தப்பட வேண்டும். அப்படி என்று சொன்னால், குமரி மாவட்டத்திற்கு நிச்சயமாக உடனடியாக—அமைச்சர் அவர்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் சேர்த்து சொல்கிறேன்—ஜாயின்ட் டேரக்டர் நியமிக்க வேண்டும். உருவாக்குவார்கள் என்று நினைக்கிறேன்.

அதேபோல், 'இன்டென்சிவ் கேட்டில் டெவலப்மென்ட் புராஜெக்ட்' என்று சொன்னால் 'புரோஸன் செமன்' எடுத்து, 'இன்செமினேஷன்' செய்து, நல்ல வெரைட்டிகளை—மாடல்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு—அபிஷேகப்பட்டி, திருநெல்வேலியில்தான் இருக்கிறது; கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, மண்டே மார்க்கெட்டில் இடம் செலக்ட் பண்ணினால்கூட, அந்த இடத்திலே அது உருவாக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணமோ, தெரியவில்லை. அந்த அளவுக்கு 'புரோஸன் செமனைப்' பொறுத்தவரையில் அதிக தூரம் கொண்டு போகமுடியாது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு ஜாயின்ட் டைரக்டர் என்று நியமிக்கப்பட்டால்தான், அந்த நிறுவனத்தை உருவாக்க முடியும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், டாக்டர்களுடைய ஊதியத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டாக்டராக இருந்தவர்கள்—ரூ, 2,200 பேசிக், எம்.பி.பி.எஸ். டாக்

1990 ஏப்ரல் 5] [திரு. மா. சுந்தரதாஸ்]

டர்களுக்கு இருக்கும்போது, இவர்களுக்கு ரூ. 2,000 கொடுக்கிறார்கள். படித்தவர்கள் எல்லாம் ஒன்றுபோலத்தான் படிக்கிறார்கள். கேரளா மாநிலத்திலேகூட ரூ. 2,200 ரூபாய் என்று சொன்னால், எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கும் வெடெரினரி டாக்டர்களுக்கும் ஒரே சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே பேச்சலர் ஆப் இன்டியன் மெடிசன்ஸ் (பி.ஐ.எம்.) படித்தவர்களுக்கு, எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் சம்பளம் கொடுக்கும்போது, நம்முடைய வெடெரினரி டாக்டர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் கூட வேலை செய்கின்ற 'லைவ்ஸ்டாக் அஸிஸ்டென்ட்', அதேபோல் மந்தை ஆய்வாளர்களுக்கு எல்லாம் அந்த 'ரிஸ்க் அலவன்ஸ்' கொடுப்பதில்லை. எனவே, எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்குக் கொடுக்கக்கூடிய சாலரியை நம்முடைய வெடெரினரி டாக்டர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி.ஜி. ஸ்டுடன்ஸுக்கு ரூ. 250 தான் ஸ்டைபன்ட் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அதை ரூ. 1,200 ஆக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'நான்-பிராக்டிஸிங் அலவன்ஸ்' என்று கிராமத்திலே வேலை செய்கின்ற டாக்டர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அவர்களின் நீண்டகால கோரிக்கையாக அது இருக்கிறது. அதேபோல் 'டிஸ்பென்ஸரி' என்று ஒன்று இருக்கிறது. மருந்தகம் என்று ஒன்று இருக்கிறது. 40 மாடுகள் தினம் வந்து கொண்டிருக்கின்றன என்றால், அதை டிஸ்பென்ஸரியாக மாற்றலாம். மருந்தகத்திலிருந்து அதை அவ்வாறு மாற்றலாம். அங்கே அஸிஸ்டன்ட் டேரக்டர் அளவிலே நியமனம் செய்தால் நன்றாக இருக்கும். 40 சென்டர்களிலே செலவு செய்யப் பட்டிருக்கிறது. மீதி இருக்கின்ற இடங்களிலே, 40 மாடுகள் தினம் வருகின்ற பகுதியை அந்த அளவுக்கு உயர்த்தலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். 'எக்ஸ்டென்ஷன் ஆபிஸர்ஸ்' என்று இருக்கின்ற பஞ்சாயத்து ஊழியர்களுக்கு, கணக்கு பார்க்கிற வேலையைத் தவிர, லோன் கொடுக்கக் கூடிய ரெகமண்டேஷன் வேலையைத் தவிர ஒன்றும் இல்லை. அவர்களிடத்திலேயும், மருந்து கொடுத்தால், அந்தப் பகுதியிலே — சுற்றுப் பகுதியிலேயுள்ள மருந்தகத்தை உபயோகிக்கக்கூடிய வகையிலே, மருத்துவமனையை பஞ்சாயத்து யூனியன் பக்கத்திலே உருவாக்கினால், டாக்டர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். "நடமாடும் வெடெரினரி சென்னையிலே இருக்கிறது என்று நினைக்கிறேன். கிராமப் பகுதியிலே, மற்ற மாவட்டங்களிலே நடமாடும் வெடெரினரி

டிஸ்பென்ஸரி இல்லை. அதை எல்லா மாவட்டங்களிலேயும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மந்தை ஆய்வாளர்கள் என்று சொல்லப்படுபவர்களை, 'லைவ்ஸ்டாக் அஸிஸ்டென்ட்' புரமோஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், மீனளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக வரக்கூடிய மானியக் கோரிக்கையின் மீது, என்னுடைய கருத்துக்களைக்கூற நான் வருகிறேன்.

எனக்கு முன்னதாக பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம், தமிழகத்தில் மீனளம் என்று சொன்னால், மனிதனுடைய உணவை ஒரு வகையில் பூர்த்தி செய்யக்கூடிய உணவு தானியமாக அது அமைந்திருக்கிறது.

12-40 மணி

அநேகமாக 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையோரப் பகுதிகளை அடைந்திருக்கிற மாநிலம் தமிழ்நாடுதான் என்று சொல்ல முடியும். 41,000 சதுர கிலோ மீட்டர் தூரம் மீன் வளத்திற்கேற்ற வகையான தூரங்களைத் தமிழ்நாட்டில் நாம் பெற்றிருக்கிறோம். அந்த வகையில் தமிழகத்திலே மீன் உற்பத்திகளைப் பெருக்குவதற்கும், எரால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மீன் பண்ணைகளை அமைப்பதற்கும் சான்றதொரு இடங்கள் தமிழகத்தில், அமைந்திருக்கின்றன என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கக் கூடிய ஒரு அரசு.

அந்தவகையில், கடலோரப் பகுதியில் மீன் வளர்க்கின்ற, எரால் வளர்க்கின்ற பொறுப்பினை, அரசு சொல்லிக் கொண்டு வருகின்ற அந்த அடிப்படையில் தொடர்ந்து அதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ளவேண்டும். இன்றைய தினம் அரசு உற்பத்தி செய்யக்கூடிய மீன் வளங்களைவிட தனியார் மீன் உற்பத்தி, எரால் உற்பத்தியில் கொள்ளை லாபங்களை அடையக்கூடிய ஒரு சூழ்நிலை தமிழகத்திலே இருந்து வருகிறது. அதைத் தடுப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அதற்கேற்ற இடங்கள், கடலோரப் பகுதிகளில் நல்ல வளமான இடங்கள் அமைந்திருக்கின்றன. அந்த வகையில் எரால் உற்பத்தியை வளர்ச்சிபெறச் செய்ய வேண்டும். பல்வேறு வெளி மாநிலங்

1990 ஏப்ரல் 5] [திரு. ஜி. பழனிச்சாமி]

களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய எரால் என்பது, தமிழகத்தில் உயர்ந்த எரால் உற்பத்தி ஆகக்கூடிய நிலைமையில் இன்றைய தினம் அது அமைந்திருக்கிறது. அதேபோல் மீன் பிடிப்புத் துறைகளை எடுத்துக்கொண்டால், கடலோரப் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள், வெளி நாட்டு மீனவர்கள், விசைப்படகு மீனவர்கள் என்ற ஒரு பிரச்சினை நாளுக்குநாள் எழுந்து கொண்டு வருகிறது.

அந்தப் பிரச்சினைகளுக்கு அடிப்படைத் தீர்வு காண்ப தற்கு அரசு சட்டரீதியாக ஒரு ஆலோசனைக் கமிட்டியை அமைத்து அவர்களையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு காணுவதன் மூலமாக, அதற்கு செம்மையான தீர்வு ஏற்படும். இல்லையென்றால், ஒவ்வொரு நேரத்திலும் பிரச்சினை எழுகிறபோது அவர்களிடையே வரக்கூடிய கலவரங்களைத் தவிர்த்ததற்குப் பின்னால்தான், அதிலே கவனம் செலுத்தக் கூடிய முறையில் அரசு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்று இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நீண்ட நாட்களாகவே இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளைப் பண்ண வேண்டும். அதேபோன்று எனக்கு முன்னதாக உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். ஏதோ தமிழ்நாட்டு மீனவர் களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் இன்றைய நேற்றைய தினம் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. கடந்த காலத்தில் தொன்று தொட்டு பல ஆண்டுக்காலமாகவே தமிழகத்தி னுடைய மீனவர்கள், மீன் பிடிக்கின்ற நேரங்களில் இலங்கையில் இருக்கக்கூடிய மீனவர்கள், அந்த விடுதலைப் புலிகள், அரசு, அந்த சர்க்கார் கடத்திச் செல்கின்ற நிலைமைகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டு வருகிறது. அதுபோன்று ஆந்திராவிலேயும் அத்தகைய நிலைமைகள் இருக்கின்றன. அதற்கு ஒரு எல்லையை மத்திய அரசு வரையறுத்தபோதிலும் கூட, நம்முடைய மீனவர்களைப் பாதுகாக்கின்ற வகையில் நம்முடைய ராணுவத்தை, நேவியை வைத்து அதன் மூலமாக அவர்களுடைய பிரச்சினைகளைக் களைவதற்கு இந்த அரசு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் மீனவர்களைக் கடத்துகின்ற நேரத்தில் நாம் அவர்களை நம்முடைய நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வருவதற்காக, அந்த அரசுகளை அணுகுகின்ற முறையை நாம் பார்க்க முடிகிறதே தவிர, ஆனால் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதியில்தான் அநேகமாக தஞ்சை மாவட்டத்தில், அருகில் கச்சத் தீவு இருக்கிறது. அங்கே ஆண்டாண்டுக் காலமாக பல்வேறு வழக்குகள் நடந்து, இங்கே இருக்கிற நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்கஸ் மீன்

[திரு. ஜி. பழனிச்சாமி] [1990 ஏப்ரல் 5

பிடிக்கின்ற நேரத்தில், அவர்கள் ஓய்வு எடுப்பதற்கும், சிலர் தங்களுடைய வலைகளை உலர்த்துவதற்கும் அந்தக் கச்சத் தீவிற்குச் சென்று வருவது வழக்கம். இன்றையதினம் இங்கே இருக்கக் கூடிய மீனவர்கள் யாரும் கச்சத்தீவிற்குச் செல்ல முடியவில்லை. அவர்கள் அச்சப்படுகிறார்கள். அதற்குக் காரணம், அங்கே இருக்கக்கூடிய விடுதலைப்புலிகள் அவர் களைக் கடத்துகிறார்கள். அவர்கள் அந்தப் பகுதி களுக்குச் செல்ல முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகளை அந்த இலங்கை அரசோடு நமது அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, அவ்வாறு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதுபோன்று, மீன் வளர்ச்சி என்று சொல்கிறபோது என்னுடைய தொகுதியில்தான் அங்கே முத்துப்பேட்டை அருகாமையில் இருக்கக்கூடிய தொண்டியக்காடு பகுதி எரால் வளர்ப்பதற்கேற்ற வகையான பகுதி. ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நிலப்பரப்புள்ள பகுதி. அந்தப் பகுதியிலே எரால் வளர்ச்சியிலே மிகவும் லாபம் தரக்கூடிய விதத்திலே இருக்கிறதென்று அந்த எரால் வளர்ச்சி சங்கத்தின் மூல மாகக் கேட்கும்போது தெரிகிறது. அரசு முயற்சி செய்தால் நிச்சயமாக லாபங்கள் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்து, இன்றையதினம் எரால் வளர்ப்பதற்காக சொல்லக்கூடிய கோரிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைவிட மேலாக, மீனவர்களுக்கு இன்றைக்கு 9 மாதங் களுக்கு—மாதத்திற்கு 10 ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. மழைக்காலங்களில் புயல் காலங்களில், அவர்களுக்கு அரசு வழங்குகின்ற சலுகை 3 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் கேரளாவிலே எடுத்துக்கொண்டால், மீனவர்களுக்கு அந்த மூன்று மாதங்களுக்கு உணவு அளிக்கக்கூடிய அத்தியா வசியப் பொருட்களை அரசே எடுத்துக்கொண்டு வழங்கக் கூடிய நிலை இருக்கிறது. அதைப்போல தமிழகத்திலும் மீன்வளத் துறையில் அந்த முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, இங்கே கால்நடை வளர்ப்பு பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

12.45 மணி.

அதே போல் 1990–91 ஆம் ஆண்டு கால் நடை வளர்ப்பை எடுத்துக் கொண்டாலும் கூட அந்த விவசாயிகளுக்கு மிகப் பெரிய நன்மை தரக்கூடிய கால் நடை வளர்ச்சி மிகவும் ஆதாயம் தரக்கூடிய அந்த சொத்துக்களை இன்றைக்கு பராமரிக்க இந்த அரசு முயற்சிக்க வேண்டும். அனேகமாக பல்வேறு இனங்களை காளைகளை, பசுக்களை நாம் வளர்ச்சிக்காக வெளி

1990 ஏப்ரல் 5] [திரு. ஜி. பழனிச்சாமி]

நாடுகளிலிருந்து கொண்டுவந்து இனப் பெருக்க ஊசி போட்டாலும் கூட உள்நாட்டில் வளரக்கூடிய கால்நடைகளையும் பராமரிப்பதற்கு, பாதுகாப்பதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும்கூட ஒரு கணக்கைப் பார்த்தேன். 2 கோடியே 65 இலட்சம் மாடுகள் தான் தமிழகத்தில் இருப்பதாக தெரிகிறது. அனேகமாக 217 மருத்துவமனைகளும், மருந்தகங்களும் தமிழகத்தில் இருக்கின்றன. இது போதுமானதாக இல்லை தமிழ்நாட்டின் மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து கணக்குப் பார்த்தோம் என்று சொன்னால் மக்களுக்கு தேவைப்படக்கூடிய பால், மோர் அனேகமாக எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் கூட நோயாளிகள் தன்னிடம் வந்தால் அவர்களுக்கு கூறுகின்ற ஆலோசனை என்பது உணவுக்கு என்று சொல்லக்கூடிய நேரத்தில் பால், மோர் அதிகமாக சேர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் உடல் நலத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று தான் டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அது நாட்டு மாடுகளாக இருந்தாலும், நாட்டு பசுக்களாக இருந்தாலும், இல்லை மற்ற இனவிருத்திச் செய்யப்பட்ட அந்த மாடுகளாக இருந்தாலும், பசுக்களாக இருந்தாலும் இதுபோன்று பாதுகாப்பதில் நமது அரசு ஒரு முன்னணி பாத்திரமாக விளங்க வேண்டும். நாம் இதிலே ஏற்படுகிற பலவீனத்தை மட்டும் தான்சொல்கிறோம். இதை மேலும்வலுப்படுத்தவேண்டும் என்று சொல்லுகிறோமே தவிர அதற்காக நாம் என்ன ஏற்பாடாக தமிழகத்தில் ஒரு மாவட்டத்தில் ஒரு எல்லை இருக்கிறது, நாங்கள் செய்து காட்டியிருக்கிறோம் இப்படி வளர்த்து இருக்கிறோம் என்று சொல்லக்கூடிய விதத்தில் நமது அரசு முன்னுக்கு வர வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாக இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையில் ஒரு அறிவியல் பல்கலைக் கழகம் ஒன்றை தமிழக அரசு துவக்கியிருக்கிறது என்பதை நான் பார்க்கும்போது உண்மையில் நான் அதை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது ஒரு நல்ல காரியம். ஏன் என்றால் வாய் பேசக் கூடிய மனிதர்களைப் பார்த்து பேசிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் வாய் பேச முடியாத நோய் வாய்ப்பட்டு இருக்கிற அந்த பிராணிகளைப் பற்றி அதனுடைய வளர்ச்சியைப் பற்றி, அதனுடைய வைத்திய முறைகளைப் பற்றி நாம் அந்த பல்கலைக் கழகத்தின் மூலம் காணப் போகிறோம். அந்த வகையில் அப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது.

[திரு. ஜி. பழனிச்சாமி] [1990 ஏப்ரல் 5

அதே போல் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் இன்றைக்கு கொறுக்க பசு என, உம்பளச் சேரி பசு என ஒரத்த நாட்டில் இருக்கக் கூடிய பசுப் பண்ணை போன்ற பண்ணைகள் இருக்கின்றன. ஒரு சிறந்த பண்ணையாக இருந்தது. உம்பள சேரி காளை என்றால் தமிழகத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட காளை அங்கே இருக்கிறது. உம்பளச்சேரி பசுப் பண்ணை என்று சொன்னால் தமிழகத்தில் ஒரு சிறந்தப் பண்ணையாக விளங்குகிறது. அனேகமாக பல ஆண்டு காலமாக இந்த அரசு பற்றி நான்சொல்லவில்லை பல ஆண்டு காலமாக அந்தப் பண்ணையை நசித்து விட்டார்கள். பார்ப்பதற்கே அது சகிக்கவில்லை. தமிழகத்திலே முன் மாதிரியாக இருந்த அந்தப் பண்ணையை இன்றைக்கு மூடக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அந்தப் பண்ணை இனங்களே அழிந்து விட்டது. அது மீண்டும் உற்பத்தி செய்வதற்கு, திரும்ப அதை ஊக்கப் படுத்துவதில் கூட இன்றைக்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கூட என்னுடைய தொகுதியில் சுற்றுப் பயணம் செய்கிற போது நான் அந்த இடத்தை காண்பிக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம், ஆனால் அன்றைக்கு கால அவகாசம் இல்லை, பார்த்ததாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் இப்போது அந்த இனங்கள் அழிந்து இருக்கிறது. மிகப் பெரிய இனம் ஆயிரக் கணக்கான ஏக்கரில் புல் வளர்க்க செய்ய ஏற்ற வகையான இடம், மாடுகளை மேய்ப்பதற்கு ஏற்ற வகையான இடம். அது போன்ற இடங்களை எடுத்து அரசு முன் மாதிரியாக அந்த மாடு வளர்ப்பு திட்டங்களை முயற்சிக்க செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் உம்பளச்சேரி, கொறுக்கை இனம் இருக்கிறதே அது முற்றிலும் இன்று மூடப்பட்டு விட்டது. அந்தப் பண்ணை மூடப்பட்டு விட்டது. இருந்தாலும் நம்முடைய இந்த மானியக் கோரிக்கையில் அதை அறிவித்து இருக்கிறார்கள். நான் பெருமைப்படுகிறேன். மீண்டும் அதை புனர் அமைப்பதற்கான முயற்சியை இந்த அரசு செய்ய வேண்டும். அதே போல் ஈச்சங்கோட்டையில் ஒரு கல்லூரி திறக்க வேண்டும். இன்றைக்கு இருக்கக் கூடிய அந்த ஈச்சங்கோட்டை பால் பண்ணையில் ஒரு கல்லூரியை துவங்க அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோல் கோழி வளர்ப்பைப் பொறுத்த வரையில் அனேகமாக பல்வேறு மாவட்டங்களில் கோழி வளர்க்கின்ற அந்தத் திட்டம் இன்றைக்கு சிறந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலும் அதற்கு ஏற்றவகையான வெட்ப நிலை இருக்கிறது. அதற்கு ஏற்ற வகையான இட வசதிகள் இருக்கின்றன. அங்கே அந்தக் கோழிப் பண்

1990 ஏப்ரல் 5] [திரு. ஜி. பழனிச்சாமி]

ணையை வளர்த்து உணவு தரக்கூடிய சத்துள்ள முட்டைகளை தயாரிப்பதற்கு இன்றைய சூழ்நிலையில் நம்முடைய அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கால்நடையை எடுத்துக் கொண்டால், மருந்தகங்கள், மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த மருந்தகங்களிலும் மருத்துவமனைகளிலும் அனேகமாக இன்றைக்கு மருந்து கிடைக்கவில்லை. வித விதமான நோய்கள் இப்போது வருகின்றன. இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், மாட்டு பண்ணை என்று சொல்கிறோம், கிடை என்று சொல்கிறோம், இப்படி கிராமப்புறத்தில் பழக்கம். அங்கே நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மாடுகளை ஒன்றாகச் சேர்த்து கிடை கட்டுவார்கள் உரத்திற்காக வேண்டி அங்கே நோய் வருகிறது. என்ன நோய் வருகிறது என்றே தெரியவில்லை. மருத்துவர்களிடம் போய் சொன்னால் அவர்கள் மருந்து இல்லை என்று சொல்லுகிறார்கள். எழுதிக் கொடுக்கிறார்கள், நூற்றுக்கணக்கான ரூபாய் போட்டு மருந்துகள் வாங்க வசதி இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. உதவி மருத்துவர்கள் இல்லை. கம்பவுண்டர்கள் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. அதோடு மட்டும் அல்லாமல் பல்வேறு மருத்துவமனைகளுக்கு போதிய கட்டிடங்கள் இல்லை. அவைகள் வாடகைக் கட்டிடங்களில்தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அந்த மருத்துவமனைகளுக்கு கட்டிட வசதியை செய்து கொடுக்க வேண்டும். மருத்துவர்களுக்கு வசதியாக அதே இடத்தில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். வீடு கட்டிக் கொடுத்து அவர்கள் தங்குவதற்கான வாய்ப்பினை உண்டாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

12-50 மணி

அதோடு, மருத்துவமனைக்குத் தொலை பேசி தொடர்பு செய்து கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதுதான், கிராமத்திலே 10 கிலோ மீட்டருக்கு அப்பாலிருக்கிற அந்த மருந்தகத்தோடு தொடர்பு கொண்டு அவர்கள் வைத்தியம் பார்ப்பதற்கு உதவியாக இருக்க முடியும். மனிதர்களைப் போல, மாடுகளைக் கொண்டுவந்து வைத்தியம் பார்க்க முடியாது. அந்த வகையிலே, அவர்கள் அந்தச் சலுகைகளைச் செய்ய வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, அந்த மருத்துவர்களுக்கு இன்றைக்கிருக்கிற பல்வேறு கோரிக்கைகளை நான் சொல்லியாக வேண்டும். சென்ற தடவை சட்டமன்றக் கூட்டத்தில் நான் பேசியபொழுது, குறிப்பிட்டவை பற்றி, அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, அவர் அந்த மருத்

துவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அதுபற்றி அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் ஆபத்துப் படித் தொகை வழங்குவதாகவும், மற்ற வற்றைப் பரிவோடு தான் கவனிப்பதாகவும், அதிலே ஒரு மருத்துவருக்கும் உதவியாளருக்கும் ஒரு வேளையில் இரு முறை இருக்கக் கூடாது ; அதை நான் நிச்சயமாக நிறைவேற்றித் தருவேன் என்று வாக்குறுதி அவர்களிடத்திலே கொடுத்திருக் கிறார்கள். அவர்களும் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் காரமணாக, இந்த அரசு அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மருத் துவர்களை அதிகப்படுத்த வேண்டும். உறுப்பினர்கள் நிறைய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அவைகளை நீங்கள் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்களுக்கும் பி.வி.எஸ்.சி. (கால்நடை) மருத்துவர்களுக்கும் பாகுபாடு இல்லாமல் அடிப் படைச் சம்பளத்தை அளிக்க வேண்டும். நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய கால்நடைகளை அதிகப்படுத்த வேண் டும். கால்நடைகளை வளர்ப்பதில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. அ. மு. ஹமீது இப்ராகிம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை மானியக் கோரிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக சில கருத் துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

எனது கடலாடி தொகுதி கடலோரப் பகுதியாகும். அங்கு மீன் பிடிக்கும் தொழில்தான் முக்கியமானதாகும். எனவே, மீன் பிடிக்கும் தொழில் வளர இந்த அரசு முழு கவனம் செலுத்தி, மீனவர்களை வாழ வழி செய்ய வேண்டுமாய் மிகவும் பணிவன் புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் கடற்கரை ஓர பகுதியான கன்னி ராஜ புரம், வாலி நோக்கம், ஏர்வாடி, கீழக்கரை, பெரியப்பட்டினம்: வேதாலை, மண்டபம் தென்புரம் பாம்பன் இந்த எட்டு ஊர் களிலும் இன்னும் சில மாவட்டங்களிலும் சங்கு குளி தொழிலில் அப்பகுதியில் வாழும் மக்கள் அத்தொழிலைத் தவிர வேறொரு தொழில் தெரியாதவர்களாக இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்ற னர். இத்தொழிலையே நம்பி இருக்கும் மக்களுக்கு 1971 ஆம் வருடம் ஒன்றுக்கு ரூபாய் பத்து அரசுக்குக் கட்டனம் செலுத்தி, சங்கு குளிக்க உரிமம் வழங்க பெற்று தொழிலாளர்கள் சங்கு

1990 ஏப்ரல் 5] [திரு. அ. மு. ஹமீது இப்ராகிம்]

குளிக்கலாம் என்று இருந்ததை கடந்த அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்ததும் அங்கு வாழ்கின்ற சங்கு குளி தொழிலாளர்கள் குடும்பத்தில் நிம்மதியை சீர்குலைக்கும் வண்ணம் சங்கு குளிக்கும் உரிமத்தை ரத்து செய்துவிட்டது. கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை மாற்றியமைத்து டாக்டர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை மீண்டும் கொண்டு வந்து அத்தொழிலாளர் குடுபங்களை நிம்மதியாக வாழ வைக்கவும், தமிழ்நாடு முழுவதும் உள்ள மீனவ குடும்பங்களையும் வாழ வைக்கவும் உதவி புரியுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள காஞ்சினகுடிக்கு அருகில் ஆத்துவா என்ற ஏரி கடலுடன் கலக்கக் கூடியதாக உள்ளது. அந்தப் பகுதியில் ஏராளமான, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் மிகவும் பள்ளமாகவும் விவசாயத்திற்குப் பயன்படா வண்ணமும், எந்தவித உபயோகம் இல்லாத வண்ணமும் இருக்கின்றது. இப்பகுதியை மேலும் ஆழப்படுத்தி நான்கு புறங்கள் கரையமைக்கப்பட்டு கடல் நீரை உள்ளே விட்டு அதில் மீன் வளர்ப்பு அல்லது இறால் வளர்ப்பு ஆகியவற்றை அரசே ஏற்படுத்தித் தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் கடற்கரையோரப் பகுதிகளில் மீனவ சமுதாயப் பெருமக்கள் ஏராளமானோர் வாழ்கின்றனர். அம்மக்களின் நலனைக் கருதி அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேலும் உயர்வதற்கு சின்னமுட்டம், வாலிநோக்கம், தொண்டி மற்றும் கீழக்கரை ஆகிய வாய்ப்புள்ள ஏதாவதொரு இடத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அப்பகுதியில் பிடிக்கப்படுகின்ற மீன்களைப் பதப்படுத்துவதற்கும், குளிர்படுத்துவதற்கும் தேவையான நிலையங்களை ஏற்படுத்தித் தரவேண்டும். மீனவர்கள் பிடிக்கின்ற மீன்களை நகரப்புறங்களில் விற்பதற்கு எடுத்துச் செல்வதற்கு மீன் வியாபாரிகள் சில நேரங்களில் பேருந்துகளில் எடுத்துச் செல்ல மறுப்பதால் சைக்கிள் வைத்தும் அதிகக் கட்டணங்கள் கொடுத்தும் வாகனங்கள் அமைத்தும் நகர்ப்புறங்களுக்குப் எடுத்துச் செல்லக்கூடிய கஷ்டங்களை மீன் வியாபாரிகள் அடைகிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மானிய விலையில் மீன் விற்பனை செய்வதற்கு ஊர்தி வாங்குவதற்கு தேவையான மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. மு. ஹமீது இப்ராகிம்] [1990 ஏப்ரல் 5

12–55 மணி

மீனவர்/சமுதாய பெருமக்கள் வாழ்கின்ற பகுதிகளில் எல்லாம் வடிகால் வசதியற்ற நிலைமையில், பள்ளமான பகுதிகளில் காலனி வீடுகள் கட்டப்படுகின்றன. அதில் மழைக் காலங்களில் அவர்கள் வீட்டிற்குள்ளேயும் முழங்கால் வரையில், இடுப்பளவும் கூட தண்ணீர் வீட்டின் உள்ளே சென்றுவிடுகிறது. மழைக் காலங்களில் இவ்வீடுகளில் இருக்க முடியாமல் கஷ்டமடைகிறார்கள். இந்நிலையை போக்குவதற்கு மீனவ சமுதாய பெருமக்கள் வாழ்கின்ற பகுதிகளில் பள்ளமான பகுதிகளை உயரமாகச் சமப்படுத்தி, அதன் பின்னாலே மேடான பகுதிகளிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மீனவ சமுதாய பெருமக்களுக்கு குறைவான அளவிலேயே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, அங்கே நிறைய அளவில் அவர்களுக்கு தரமான வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்வளம் மற்றும் கால்நடைத் துறை மானியக் கோரிக்கைகள்மீது ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பினை உருவாக்கித் தந்ததற்காக முதலிலே நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிற போது சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள்; நிறைகளையும் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற கால்நடைத் துறை சம்பந்தப்பட்ட சில குறைபாடுகளை உங்கள் முன்னாலே கோடிட்டுக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப் பின்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவுரை ஆற்ற இருக்கிறார்கள்.

எங்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் சின்னசாமி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிறபோது கோழித் தீவனத்திற்கு வரியை ரத்து செய்திருக்கிறார்கள். ஆனால் மாட்டு தீவனத்திற்கு வரியை ரத்து செய்யவில்லை என்று சொன்னார்கள். மனுநீதிச் சோழன், பசு நீதி கேட்கிற நேரத்தில் பசுவினுடைய கன்றின் மீது தன் மகன் தேரை ஏற்றிகொன்ற தவறுக்கு நீதி கேட்கிற நேரத்தில்

1990 ஏப்ரல் 5] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

தன் மகன்மீது தேரை ஏற்றிக் கொன்ற மனுநீதிச் சோழனுடைய சரித்திரத்தைப் பேசிக்கொண்டிருக்கிற நீங்கள் கால் நடைத் தீவனத்தை இன்றைக்கு வாங்குகிறவர் யார் இருக்கிறார் என்று சொல்லி கோழித் தீவனத்திற்கு வரியை ரத்து செய்திருக்கிறீரகள். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், வங்கியிலே கடன் வாங்கும் தகுதி படைத்தவர்கள் இவர்களுக்கு எல்லாம் கோழித் தீவனத்திற்கு வரியை ரத்து செய்த நீங்கள்—அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அடித்தளத்திலே உழைத்துக் கொண்டிருக்கிற ஐ.ஆர்.டி.பி.யிலே கடன் வாங்குகிற ஏழை எளிய தொழிலாளர்கள் அடித்தளத்திலே உழன்று கொண்டிருக்கிற ஆதிதிராவிடர்கள். ஏழை எளிய விவசாயிகள் அவர்களுடைய கறவை மாடுகளுக்கு வேண்டிய கால்நடைத் தீவனத்திற்கு வரியை ரத்து செய்திருக்கிறீர்களா என்றால் இல்லை. இந்த அரசு அதை பரிவோடு பார்க்கவில்லை. அதைத்தான் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதற்கு என்ன காரணம் என்று சொன்னால் எனக்கு முன்னாலே உரையாற்றுகிறபோது சிலர் சில கருத்துக்களைச் சொன்னதைப்போல கோழித் தீவனத்திற்கு வரியை ரத்து செய்ததற்குக் காரணம் கோழி ஒரு காலத்தில் தங்க முட்டை இட்டுக்கொண்டிருந்த காரணத்தால் அந்த வரி ரத்து செய்யப் பட்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்கின்ற அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னபோதிலும் அந்த வரி ரத்து செய்யப் படாமல் இருப்பதற்குக் காரணம் இதுதான் என்று நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே கருத்துக்களைச் சொல்லுகிறபோது, செயற்கைக் கருவூட்டுத் திட்டம் இன்றைக்கு சரியான முறையில் செயல்படுகிறதா என்றால் கிடையாது. 4 முறை, 5 முறை செயற்கைக் கருவூட்டம் ஊட்ட வேண்டுமென்று சொல்லி, அது இன்றைக்கு இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். 4 முறை அல்லது 5 முறை சென்றால்தான் செயற்கைக் கருவூட்டம் நடக்கிறது என்கிற நிலைமையை புரிந்துகொண்ட பிறகு, ஒரு விவசாயி தன்னுடைய கால்நடைக்கு 4 முறை அல்லது 5 முறை நான்கு மாதம் அல்லது 5 மாதம் தொடர்ந்து சென்று செயற்கை கருவூட்டத்தைச் செய்கிறபோது பெருத்த காலதாமதம் ஏற்படுகிறது. அதேநேரத்தில் அதற்குத் தேவையான தீவனங்களை அவன் போடவேண்டியிருக்கிறது.

1990 ஏப்ரல் 5] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

அவர்களுக்கு லாபம் கிட்டாமல், அங்கே பால் கிடைக்காமல் ஒரு அவல நிலை ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்த்து இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் இருக்கிறதா என்று உணர்ந்து மிக விரைவிலே (மணியடிக்கப்பெற்றது).

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன் : அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்தாகவேண்டும். இன்றைக்கு நடைபெறுகிற பல்வேறு காரியங்களை இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். குறிப்பிட்டுக் காட்டுகிறபோது, கால்நடை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். கால்நடை ஆய்வாளர்கள் கால்நடைகளைப் பராமரிக்கிறபோது பல்வேறு இடையூறுகள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. அதற்காக ரிஸ்க் அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வேண்டுமென்று கேட்கிறபோது, மருத்துவர்களுக்கு நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். மருத்துவர்களுக்கு வழங்கியதற்குப் பிறகு, கால்நடை ஆய்வாளர்களாக இருக்கிறவர்களுக்கெல்லாம் 100 ரூபாய் வழங்கவேண்டுமென்று சொல்லி நீங்கள் ஒரு, நிகழ்ச்சியில் ஆய்வாளர்களுடைய நிகழ்ச்சி நடைபெறுகிறபோது, ஒரு மாநாட்டிலே முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கைக்கு முன்னாலே நாங்கள் உங்களுக்குத் தேவையான ரிஸ்க் அலவன்ஸைத் தருகிறோம் என்று வாக்குறுதி தந்ததற்குப் பிறகும், இன்றைக்கு தரப்பட்டிருக்கிறதா என்றால், கிடையாது. அந்த 100 ரூபாய் தரப்படவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இதுபற்றி கோடிட்டு சொல்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதைப்போலத்தான், எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்களுக்கெல்லாம் 2,200 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் கால்நடை மருத்துவர்களுக்கு 2,000 ரூபாய் தரப்படுகிறது என்று சொன்னால், இந்த மருத்துவர்கள் கால்நடைகளைப் பராமரிக்கின்ற நேரத்தில், பாதுகாப்பு இல்லாத சூழ்நிலைகளில் கிராமப்புறங்களுக்குச் சென்று, சிகிச்சை அளிக்கின்றபோது அவர்களுக்கும் 200 ரூபாய் கூட்டித் தரவேண்டுமென்ற நிலையினை அவர் எடுத்துச் சொல்கிறபோது, இந்த அரசு பரிவோடு செய்யும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் பரிவு இல்லை. சொல்வதைச் செய்வோம் ; செய்வதைத்தான் சொல்வோம் என்று சொல்லி, மாநாடு நடைபெற்றபோது நீங்கள் வாக்குறுதி தந்திருக்கிறீர்கள். ஆனால் மாநாடு முடிந்த உடனேயே கைதட்டல் வாங்கி வந்து விடுகிறீர்கள். ஆனால் நிதிநிலை அறிக்கை இங்கே இருக்கிறபோது, கால்நடை பராமரிப்புத் துறை மானியம் வருகிற

1990 ஏப்ரல் 5] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

போது அதை நீங்கள் தருகிறீர்களா என்றால், கிடையாது. இந்த நிலையிலே இன்றைக்கு நீங்கள் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த நிலை இருக்கிற காரணத்தாலேதான், கால் நடை என்பது ஒரு விவசாயம் அல்ல. கிராமப்புறங்களிலே இருக்கிறவர்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு அன்றாட வாழ்க்கைக்கு அவர்களுக்கு தொழில் கிடைக்காத நேரத்தில் ஒரு தொழிலாக அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள், ஆடு வளர்க்கின்றவர்கள், கோழி வளர்க்கின்றவர்கள் போன்ற அத்தனை பேருடைய கண்ணீரைத் துடைக்கவேண்டுமென்று சொன்னால் இவர்களுடைய குறைபாடுகளைக் களைந்து ஆக வேண்டும். அந்த அடிப்படையிலே இந்த அரசு நடைபெறுகிறதா என்றால், கிடையாது. அதே நேரத்தில் இன்றைக்கு நாம் பார்க்கிறோம்; கால்நடைகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லி, புதிய இனவிருத்திக் கன்றுகளை கொண்டுவரவேண்டுமென்று சொல்லி நீங்கள் செயற்கைக் கருவூட்டல்களை கொண்டு இன்றைக்கு ஜெர்சி போன்ற அபிவிருத்திக் கன்றுகளை கொண்டு வருகிறீர்கள். இந்த அரசு அப்படி கொண்டு வருகிறநேரத்தில் மாவட்டங்கள் தோறும் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் இருக்கிற நேரத்தில், பால் அதிகமாக வருகிற நேரத்தில், அந்தப் பாலைக்கூட நீங்கள் வாங்குவதில்லை. கால்நடைகளை நீங்கள் உற்பத்திச் செய்கிறீர்கள். அப்படி உற்பத்தி செய்கிறபோது, அந்தக் கால்நடைகளை வாங்குவதற்கு கடன் பெறுகிறவர்கள், கடன் பெற்று, கால்நடைகளை வாங்கி, அந்தக் கால்நடைகள் மூலம் பால் உற்பத்திச் செய்யப்படுகின்றவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு உங்களிடத்தில் உள்ளதா என்றால் கிடையாது. இரண்டு வார காலத்திற்கு முன்னாலே, இலட்சக்கணக்கான லிட்டர் பாலை கீழே ஊற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பால் வளத்திற்கென்று தனியாக ஒரு மானியம் இருக்கிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அது தனியாக இருக்கிறது, கால்நடைகள் சம்பந்தப்பட்டவை என்பதற்காகச் சொன்னேன். கால்நடைகளுக்கு புதிய இன விருத்தி கன்றுகள் வேண்டுமென்று சொல்கிறீர்களே தவிர, அந்த இனவிருத்திக் கன்றுகளால் வரும் பாலை நீங்கள் எப்படி பாதுகாப்பது, அவர்களை எப்படி வழி நடத்திச் செல்வது, கால்நடைகளுக்கு தீவனங்களைப் போடுகிறார்களே, அந்தத் தீவனங்களுக்குக்கூட வங்கியிலே கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு.கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் புதிதாக உற்பத்தி செய்கின்ற பாலையெல்லாம் பக்குவப்படுத்துவதற்கும் அதை முறைப்படி விநியோகிப்பதற்கும் அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று கேட்டார்கள். இதுவரை கடந்த ஆண்டிலும் தினமும் 1 இலட்சம் லிட்டர் பால் கூடுதலாக வந்ததைக்கூட, ஓரளவு நம்மால் சமாளித்து விநியோகிக்க முடிந்து இருக்கிறது. இந்த வருடம் மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தை ஆரம்பிக்க இருக்கிறோம். அதன் சார்பாக, திருநெல்வேலி பால் பண்ணையும், தென்னாற்காட்டில் இருக்கின்ற பால் பண்ணையும் சென்னையில் இருக்கின்ற பால்பண்ணையும், இவைகளையெல்லாம் புதியதாக அமைத்து இருக்கிறோம். அதுவெல்லாமல் ஈரோட்டிலே 30 டன் பால் பவுடர் உற்பத்தி ஆலையை அமைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பால் எவ்வளவு அதிகமாக வந்தாலும் வேண்டாம் என்று சொல்லாமல் நிச்சயமாக விவசாயிகளிடமிருந்து பாலை இந்த அரசு எடுத்துக் கொள்ளும். பணம் அந்தந்த மாதத்தில் பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற ஒரு பெரிய குறையை பல்வேறு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதையெல்லாம் ஆய்வு செய்து உடனடியாக விவசாயிகளுக்கு அந்தந்த மாதத்தில் அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13—05 மணி

திரு. கே.ஏ. செங்கோட்டையன் : நாள்தோறும் பால் உற்பத்தி 16 இலட்சம் லிட்டர் என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறீர்கள். ஆனால் பால் குளிரூட்டும் நிலையம் 12 இலட்சம் லிட்டர் பாலைத்தான் பக்குவப்படுத்த முடியும் என்ற நிலை இருக்கிறது என்று முன்பு கால்நடை—பால்வள அமைச்சராக இருந்தவர் புள்ளி விவரத்தைத் தந்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவர்கள் தவறான தகவல்களைத் தந்து அத்தனையையும் வாங்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை நான் தருகிறேன் என்று சொல்லக்கூடாது. 12 இலட்சம் லிட்டர் பால் தான் நமது பால் குளிரூட்டும் நிலையங்களின் கொள்ளளவு என்றாலும், இன்றைக்கு 13 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அந்த 13 இலட்சம் லிட்டரையும் இன்றைக்கு செல்லுபடியாக்கிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு சென்னை நகரத்தில் விற்ற பாலின்

1990 ஏப்ரல் 5] [திரு. கே. என். நேரு]

அளவு ஐந்தரை இலட்சம் லிட்டர். ஆனால் இப்போது சென்னையின் பால் தேவை 6.70 இலட்சம் லிட்டர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மேலும் எவ்வளவு பால் உற்பத்தி செய்யப்பட்டாலும், இந்த அரசு அவ்வளவையும் விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் 1 மணிக்கு மேல் ஆகிவிட்டது. கோழிகள், முட்டை பற்றிப் பேசலாமே.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: கோழிதான் தங்க முட்டையிடுகிறது என்று தங்களிடத்தில் சொன்னேன். ஆகவே, கோழியை விட்டுவிட்டு, அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலாவது தேவையான பால் குளிரூட்டும் நிலையங்களை உருவாக்கித் தந்தாலே போதும். அதையே மேலும் மேலும் விவாதித்துக் கொண்டுபோனால் நீங்கள் மணியடித்து உட்காரச் சொல்லிவிடுவீர்கள்.

இன்றைக்குக் காங்கேயம் காளைகள் உலகத்திலேயே சிறந்தது என்ற பெயர் பெற்றவை என்று சொல்வார்கள். பெரியார் மாவட்டம் காங்கேயத்தில் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. அங்கே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்கப்பட வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். எல்லா மாவட்டங்களிலும் சர்வே செய்ததில், பெரியார் மாவட்டத்தில்தான் அதிகமாக கால்நடை இருக்கின்றது என்ற புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார்கள். ஆகவே அங்கே கால்நடை மருத்துவமனை ஒன்றை உருவாக்குவது உங்கள் கடமை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப் போல, பெரியார் மாவட்டத்தையும் திருச்சி மாவட்டத்தையும் இணைத்து மண்டல இணை இயக்குநர் என்ற ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அவரிடத்திலே ஏதாவது கோரிக்கை வைக்கவேண்டுமென்றால், அல்லது அவர் இடங்களைப் பார்வையிடவேண்டுமென்று சொன்னால், 350 மைல் தொலைவு பயணம் செய்யவேண்டும். தர்மபுரியிலும் ஒரு மண்டல இணை இயக்குநரைப் போட்டிருக்கிறீர்கள். திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் ஒருவரை போட்டிருக்கிறீர்கள். ஆனால் பெரியார் மற்றும் திருச்சி மாவட்டங்களை இணைத்து ஒரே ஒரு மண்டல இணை இயக்குநர் இருக்கிறார் என்று சொன்னால் நாங்கள் அவரிடம் விரைவில் தொடர்பு கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் பிரச்சினைகளையும் சொல்ல முடியவில்லை. அவரும் எந்த ஊருக்கும்

அடிக்கடி வந்து மாவட்டத்திலே உள்ள அதிகாரிகளைக் கலந்து பேசி, குறைபாடுகளையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு உடனடியாக பெரியார் மாவட்டத்திற்கு ஒரு அதிகாரியை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மதுராந்தகத்தில் கால்நடை மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லை. அவர்களை ஆடு வளர்ப்புத் திட்டத்தில் மாற்றிவிட்ட காரணத்தால் இப்படி பல்வேறு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாத ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்றி, அங்கே மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, இராணிப்பேட்டையில் கால்நடை ஆராய்ச்சி மையம் ஒன்று இருக்கிறது. இந்த ஆராய்ச்சி மையத்தில் கடந்த ஓராண்டில் வெக்கை நோய்க்கான சிகிச்சை வசதியில்லாமல், கால்நடைகள் இறந்திருக்கின்றன. நோய் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. நோய்க்கான மருந்து உற்பத்தி நிலையம் இருக்கிறது. தர சோதனை இயக்குநர் இருக்கிறார். இவ்வளவும் இருக்கிறபோது, நோய் வருகிற நேரத்தில் பாதுகாப்பு இல்லை. அவர்களே அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்கிறபோது, அதை உடனடியாகப் பரிசீலனை செய்து, அந்த மையத்தை வேறு ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைத்துப் பரிசீலிக்கிற நேரத்தில்தான் இந்தத் தவறுகள் ஏற்படாமல் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீன் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு குறைபாடுகள் காணப்படுகின்றன. தூத்துக்குடியிலும், ராமநாதபுரம் போன்ற இடங்களிலும் புதிய மீன் வலைகள் செய்து தரப்படுவதாக சில புள்ளிவிவரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். மீனவர்கள் வலை உற்பத்தி செய்கின்ற நேரத்தில், கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு உற்பத்திக் குறைந்திருக்கிறது என்று தெரிகிறது. அதற்கு என்ன காரணம் என்பதில் அமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி, வலைகள் உற்பத்திக்கு முனைப்புக் காட்டி, அதன் தரம் குறைந்ததா, அல்லது அதை வாங்குவதற்கு ஆட்கள் இல்லையா என்பதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

13–10 மணி

அதேபோல் பவானிசாகர் அணையிலே மீன்குஞ்சு வளர்ப்பதற்காக ஒரு கோடி ரூபாயில் நீங்கள் திட்டங்கள் தீட்டி குறிப்பாக மீன் தொட்டிகளை அங்கே கட்டியிருக்கிறீர்கள்.

1990 ஏப்ரல் 5] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

அந்த மீன் தொட்டிகளைப் பயன்படுத்த முடிகிறதா என்றால் பயன்படுத்த முடியவில்லை. தண்ணீர் நிரப்பப்பட முடிகிறதா என்றால் தண்ணீர் நிரப்பப்பட முடியவில்லை. அந்த அளவுக்கு ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே ஒரு கோடி ரூபாயில் கட்டப்பட்டிருப்பதைப் பயன்படுத்த முடியாத ஒரு அவலநிலை இருக்கின்ற காரணத்தால் அதைப் பரிசீலனை செய்து உடன் நடவடிக்கை எடுத்து மீன் குஞ்சுகளை வளர்த்து நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே தவறுகள் இருக்குமேயானால் அந்தத் தவறு யாருடையதோ அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு இங்கே மீன் வளர்ப்பதைப் பொறுத்த வரையிலே மீனவர்களுக்காக கடலோரப் பகுதிகளில் செய்ய வேண்டிய காரியங்கள் பற்றி இங்கே கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் இன்றைக்குப் பாது காப்புத் தரவேண்டும் என்ற அடிப்படையில் வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். அதேபோன்று பல இடங்களில் மீன் வளர்க்கின்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வீடுகளை கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் வந்து விட்டார்கள். மணியும் அடித்து விட்டார்கள். ஆகவே என்னுடைய உரைக்குத் திரையிட்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு மற்றும் மீனளம் குறித்த மானியக் கோரிக்கைகளுக்கான விவாதத்தின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களை இந்த அவைக்கு அளித்து இருக் கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் நல்ல ஆலோசனைகளையும் இந்தத் துறையின் மூலமாக ஆய்வு செய்து அந்தத் கருத்துக்களின் உண்மை நிலைகளை எல்லாம் உணர்ந்து இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடை வளர்ப்புத் துறையின் மூலமாக நிறைவேற்றப்படுகிற ஒருசில திட்டங்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப் படையில், அவர்களுக்கு பதில் அளிக்கிற வகையில் என்னுடைய பதிலுரையை அமைத்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியமான நோக்கங் களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் இந்தத்

துறையின் முக்கியமான குறிக்கோள்கள் எல்லாம், நோக்கங்கள் எல்லாம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அடிப்படையாக தமிழகத்தில் தரம் உள்ள கால்நடைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சியினுடைய உற்பத்தியைப் பெருக்குவதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையில் தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் இந்த அரசின் மூலமாக, துறையின் மூலமாக நிறைவேற்றப்பட்டு இருக்கின்ற ஒருசில நல்ல காரியங்களால் நம்முடைய தமிழகத்தில் பால் உற்பத்தி பெருகி இருக்கிறது. அதேபோல் முட்டை உற்பத்தியும் பெருகி இருக்கிறது. அந்த அடிப்படையில் பால் உற்பத்தியைப் பெருக்குகிற நோக்கத்தில் தமிழகத்தில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை, கால்நடை வளர்க்கிற திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. நம்முடைய அடிப்படை நோக்கமே பால் உற்பத்தியைப் பெருக்குவது என்பதுதான். ஆனால் நம்முடைய தமிழகத்திலே உள்ள நாட்டினப் பசுக்கள், எருமைகள் எல்லாம் குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைகளாக இருக்கின்றன. அதாவது ஒரு லிட்டர் அல்லது 2 லிட்டர் என்று குறைந்த அளவில் தான் பால் கொடுக்கின்றன. எனவே வெளிநாட்டிலிருந்து உயரின காளைகளை இறக்குமதி செய்து அதன் மூலமாகப் பெறுகின்ற விந்தினை பல வகைகளில் பதப்படுத்தி நம்முடைய துறையின் மூலமாக இயங்குகிற கால்நடை மருத்துவ நிலையங்களின் மூலமாக செயற்கை முறையில் இனவிருத்தி செய்து அதன் மூலமாக கலப்பினக் கன்றுகளை உற்பத்தி செய்து அதன்மூலம் நம்முடைய பால் உற்பத்தியை நாம் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழகத்தில் ஜெர்சி, ஹோல்ஸ்டீன், பிரீஷியன் போன்ற இன காளைகளின் மூலம் செயற்கை முறையில் இனவிருத்தி செய்யப்படுகின்றது.

கால்நடை மருந்தகங்கள் 766, கிளை நிலையங்கள் 2,004 ஆக மொத்தம் 2,770 நிலையங்களில் அந்த செயற்கை முறை கருவூட்டல் பணி நடைபெற்று வருகிறது. இவற்றில் உறைவிந்துத் திட்டத்தின் மூலமாக 1,819 நிலையங்களில் உறைவிந்து மூலம் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்யப்பட்டு வருகின்றது. திரவ விந்தின் மூலமாக 951 நிலையங்களில் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்யப்படுகிறது. இந்த உறை விந்து பற்றியும், திரவ விந்து பற்றியும் உங்களுக்கு ஐயம் எழலாம். உறை விந்து என்பது குறைந்த அளவு காளைகளின் விந்தைப் பயன்படுத்தி நிறைந்த அளவில் கருவூட்டல் செய்கிற வகையில் நம்முடைய மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் இந்த உறைவிந்துத் திட்டத்தை விரிவாக்கம் செய்து அதன்மூலம் கிராமங்களில் உள்ள பசுக்களுக்கு இனவிருத்தி செய்கிற வகையிலே, எருமைக்கு இனவிருத்தி செய்கிற வகையிலே இந்தத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்திக்கொண்டு வருகிறது.

13–15 மணி

அந்த அடிப்படையிலே நம்முடைய தமிழகத்திலே; திரவ விந்தை பயன்படுத்துகின்ற நிலையங்கள் 951 நிலையங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு தமிழகத்திலே இருக்கின்ற 48 பொலிகாளை நிலையங்களில் விந்துக்களைச் சேகரித்து ஆங்காங்கே அருகாமையிலுள்ள 24 மணி நேரத்திற்கு மட்டும் தான் திரவ விந்தினைப் பயன்படுத்த முடியும். ஆனால் உறை விந்தைப் பொறுத்த மட்டிலும் பல ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட அந்த காளைகள் இறந்தபிறகும் கூட அந்த உறை விந்தினை பயன்படுத்தப்படுகின்ற அளவுக்கு அறிவியல் ஆராய்ச்சிகள் இன்றைய தினம் முன்னேறி இருக்கிறது. அந்த அடிப்படையிலே உறைவிந்தினை விரிவாக்கம் செய்யும் வகையிலே இந்த அரசு கால்நடை உற்பத்தி அதாவது கலப்பின கன்றுகளை உற்பத்தி செய்கின்ற நல்ல நோக்கத்தோடு இந்த ஆண்டு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு 50 நிலையங்களுக்கு உறைவிந்து திட்டததை விரிவாக்கம் செய்வதற்கு ரூபாய் 7.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்திலே மொத்தம் இப்போது 15 லட்சம் கருவூட்டல்கள் உறைவிந்து மூலமாக செயல்பட்டு வருகின்றன. இதுவன்றி, நமக்கு இன்னும் ஒரு 25 லட்சம் கருவூட்டல்கள் செய்வதற்கு உறைவிந்து குச்சிகள் தேவையாக இருக்கின்றன. இவற்றைத் தற்சமயம் கேரளாவிலே உள்ள, கேரளா லைவ் ஸ்டாக் டெவலப்மென்ட் போர்ட் மற்றும் INDIA FROZEN SEMEN BANK, ஹசர்ன்கோட்டா, பெங்களூர் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இது போன்ற நிறுவனங்கள் மூலமாக உறைவிந்து குச்சிகளை அங்கேயிருந்து பெற்று கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக உறைவிந்து கருவூட்டல் செய்யப்பட்டு வருகிறது. இந்தத் துறையிலே இயங்குகின்ற நிலையங்கள் மூலமாகச் செய்யப்பட்டிருக்கிறது. 1989–90ஆம் ஆண்டில் 6.7 லட்சம் உறை விந்துகுச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டில் 1990–91ஆம் ஆண்டில் 12 லட்சம் உறை விந்து குச்சிகள் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அந்த அடிப்படையிலே இன்றைய தினம் தமிழகத்திலே கால்நடை வளர்ப்புத் துறையினுடைய மானியக கோரிக்கை விவாதம் நடைபெறுகின்ற இன்று இரவு மேற்கு ஜெர்மனி நாட்டிலிருந்து 140 காளைகள்—(80 ஜெர்சி காளைகளும், 60 ஒல்ஸ்டீன்--பெரிசியன் காளைகளும்) இறக்குமதி செய்யப்பட இருக்கின்றன என்ற நல்ல செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். நாம் பல ஆண்டுக்

காலமாக உறை விந்து மற்றும் செயற்கை முறையில் கருவூட்டல் செய்வதன் மூலமாக நம்முடைய தமிழகத்திலே 20 சதவிகிதம் நாட்டின பசுக்கள் எல்லாம், கலப்பின பசுக்களாக மாறியிருக்கின்றன. கலப்பின எருமைகளாக மாறி இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே நமக்கு கலப்பு இன காளைகள் தேவைப்படுகின்றன. அவ்வாறு கலப்பின காளைகள் மூலமாக பெறப்படுகின்ற விந்தினை பயன்படுத்தி இன்னும் நல்ல முறையிலே நல்ல உற்பத்தி திறன் மிக்க பசுக்களை உற்பத்தி செய்கின்ற நல்ல நோக்கத்தோடும் மற்றும் தமிழகத்திற்கு பல்வேறு கிராமங்களுக்கும் சென்றடைகின்ற நோக்கத்திலே, அந்த வகையிலே இன்னும் சிறப்பாக ஒரு திட்டத்தினை நிறைவேற்றவேண்டும் என்ற அடிப்படையிலேயும் இன்னும் தமிழகத்திலே இருக்கின்ற இரண்டு உறை விந்து வங்கிகள் இப்போது தஞ்சை மாவட்டத்திலே ஈச்சங்கோட்டையிலும், திருநெல்வேலியிலே உள்ள அபிஷேகப்பட்டியிலும் மட்டும் இப்போது உறை விந்து வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் பல இடங்களிலே ஹோசூரிலேயும் (மாவட்ட கால்நடை பண்ணை, ஹோசூர்) செட்டிநாடு மற்றும் சாத்தூர் போன்ற இடங்களிலே எல்லாம் உறை விந்து வங்கிகளை தொடங்கி அதன் மூலமாக பசுக்களை உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு திட்டமிட்டு சற்றேறக்குறைய 47.07 கோடி ரூபாய் செலவில் ஒரு கால்நடை வளர்ப்பு திட்டத்தினை உலக வங்கியினுடைய உதவியுடன் செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு கால்நடை உற்பத்தியாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை இந்த அரசு நன்கு ஆய்வு செய்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றுதான் நாம் செயல்படுகிறோம்.

ஆனால் நம்முடைய தமிழகத்தினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப நம்மால் அரசாங்கத்தின் மூலமாக என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ அந்த அடிப்படையிலே மக்களுக்கு அவர்கள் கால்நடைகளை உத்தியாக வளர்க்கின்ற அளவுக்கு விஞ்ஞான தொழில் நுட்ப கருத்தினை அவர்களுக்கு சொல்லிக் கொடுத்து, அதன் மூலம் கால்நடை உற்பத்தி செய்து தன்னிறைவு அடைகின்ற வகையிலே திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கம். அத்தோடு கடந்த ஆண்டு மானிய கோரிக்கை விவாதத்தின் போதே நான் தெரிவித்தேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் டேனிடா உதவியுடன் ஒரு கால்நடை வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தேன். டேனிடாவுடன் ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றுகின்ற வகையிலே காலதாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு அந்த திட்டம் தொடங்கப்பட

இருக்கிறது. அதாவது கீரனூர் பகுதியில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 123 பஞ்சாயத்துக்கள் பயனடைகின்ற வகையிலே ரூ.4.4 கோடி செலவில் ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டம் ஒன்றை இந்த அரசு செயல்படுத்த இருக்கிறது. அதைப்போல கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன. கன்று வளர்ப்புத் திட்டம் என்கிற பெயரில் ஒரு திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளிலே நல்ல முறையில் செயல்பட்டு, 1989–90--ல் 1,254 கன்று வளர்ப்பு அலகுகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு அரசு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை. அப்படி இருந்தும், இத்திட்டத்தை மக்கள் வரவேற்கிறார்கள். 'நபாாட்' உதவியுடன் இத்திட்டம், 12 விழுக்காட்டு வட்டியுடன், வங்கிகளோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்கு கடன் கொடுக்க ஏற்பாடு செய்து இத்திட்டத்தை இன்றைய தினம் மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறோம்.

அதோடு கால்நடைகள் என்றாலே அதையொட்டி செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் மற்றும் கோழிகள் எல்லாமே கால்நடைகளில் சேர்ந்து விடுகின்றன. அந்த அடிப்படையில் செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் கடந்த ஆண்டு ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் இணைந்து 13.67 கோடி ரூபாய் செலவிலே ஒரு திட்டத்தை 6 மாவட்டங்களில், அதாவது செங்கை-அண்ணா, வட ஆற்காடு அம்பேத்கார், சம்புராயர், சேலம், தர்மபுரி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம், தமிழகத்திலே இறைச்சி உற்பத்தியில் திறன் குறைந்திருக்கும் நிலையை மாற்றி, அதாவது 15 கிலோ, 20 கிலோ என்கின்ற அளவில் இறைச்சி கொடுக்கின்ற ஆடுகளின் உற்பத்தித் திறனை 40 கிலோ அளவுக்கு உயர்த்துவதற்கு வகை செய்கின்ற 5 ஆண்டுத் திட்டமாக இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக, முதல் ஆண்டுத் திட்டம் நிறைவேறி இருக்கிறது. முதல் ஆண்டுப் பணிகள் முறையாக நடந்து முடிந்திருக்கின்றன. அடுத்து, இரண்டாமாண்டு பணியாக இந்த ஆண்டு பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ஏக்கரில் புல் வளர்ப்பும், 6 இலட்சம் ஆடுகள் ஐந்து ஆண்டுக்குள் விவசாயிகள் பெறுகின்ற வகையிலும், இறைச்சி உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலும், ஏழை விவசாயிகளுடைய வருவாய் பெருகவும், மேய்ச்சல் நிலம், தீவனப் பயிர் உற்பத்தி போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 150 கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் இத்திட்டப் பணிகளை நிறைவேற்ற இந்த அரசு தீர்மானித்திருக்கிறது. இரண்டாவது ஆண்டு பணியாக இந்த ஆண்டு 60 பெட்டை ஆடுகளும், 10 கடாக்

களும் வருகின்ற அக்டோபர் திங்களில் வெளிநாட்டிலிருந்து குறிப்பாக ஆஸ்திரேலியா மற்றும் டெக்சாஸ் மாநிலத்திலிருந்து அந்த டோர்சட் (Dorset) என்று சொல்லப்படுகிற இன ஆடுகளைத் தருவித்து, அந்த ஆடுகளை ஹோசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலே வைத்து, இன விருத்தி செய்வதன் மூலம் பெறுகின்ற கிடாக்களை விவசாயிகளுக்குக் கொடுத்து அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, இறைச்சி உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே இத்திட்டம் நடை பெற்று வருகிறது. அதோடு இத்துறையின் மூலம் பல்வேறு நிலையங்களின் மூலமாக இவ்வாறு கால்நடை உற்பத்தித்திறனை பெருக்குகின்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு இப்படிப்பட்ட கால்நடைகளின் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு போவதோடுகூட அவற்றின் நலன் காக்கும் பணியையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்தில் பல்வேறு நிலையங்களின் மூலமும், கால்நடை மருத்துவமனைகளின் மூலமும், கால்நடை மருந்தகங்களின் மூல மும், கிளை நிலையங்களின் மூலமும் இங்கே இருந்து வருகின்ற மாடுகளுக்கும், கால் நடைகளுக்கும் சிகிச்சை தடுப்பூசி மேற் கொள்கின்ற பல்வேறு பணிகள் இன்றைய தினம் நடைபெற்று வருகின்றன. பல்வேறு சோதனை சாலைகளும் மற்றும் நடமாடும் கால்நடை மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசும்போது நடமாடும் கால்நடை மருந்தகம் என்ற ஒன்று இல்லையென்று குறிப்பிட்டார் கள். அவர் கன்னியாகுமரியில் இல்லை என்பதைச் சொன்னாரா அல்லது மற்ற இடங்களிலும் இல்லையென்ற கருத்தில் சொன் னாரா என்று தெரியவில்லை. ஆனால் தமிழகத்தில் இன்றைய தினம் 50 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வரு கின்றன.

இங்கே பேசிய ஏறக்குறைய அனைத்து உறுப்பினர்களுமே அவரவர்களுடைய தொகுதிகளிலுள்ள இடங்களில் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டும், கால் நடை மருந்தகங்கள் எல்லாம் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார் கள். இதுமட்டுமல்ல, பொதுமக்களிடமிருந்தும் இம்மாதிரி ஏராளமான கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு, 1990-91 ஆம் நிதியாண்டில் 10 கால்நடை மருந்தகங்களைத் துவங்க இசைவு அளித்து, ரூபாய் 11.39 இலட்சம் இதற்காக நிதி ஒதுக்கீட்டை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

13-25 மணி

அதோடு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கிளை நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ மனைகளுக்கு மருந்துகளுக்காகக் கொடுக்கும் உச்சவரம்புத் தொகை குறைவாக இருக்கிறதென்று சொன்னார்கள். கடந்த ஆண்டுதான், 1989–லே தான், கிளை நிலையங்களுக்கு 2,000 ரூபாயாக இருந்ததை 4,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அதைப்போல கால்நடை மருந்தகங்களுக்கு 20,000 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு மருந்துகள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. கால்நடை மருத்துவமனைகளுக்கு 40,000 ரூபாயும், மற்றும் பெரும் மருத்துவமனைகளுக்கு 50,000 ரூபாயும் இன்றைய தினம் வழங்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் நிதிநிலைக்கேற்ப அவ்வப்போது கால்நடை கிளை நிலையங்கள், மருத்துவமனைகளுக்கெல்லாம் மருந்துகள் வாங்குகின்ற அளவை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு கவனத்துடன் பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு 57 கால்நடை மருத்துவமனைகளிலே கால் நடை உதவி மருத்துவர்கள் பணி புரிந்த இடங்களிலே உதவி இயக்குநர்கள் பணி புரிவார்கள் என்ற உத்தரவை இந்த அரசு செயல்படுத்த இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வெக்கை நோய் பற்றி இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் வெக்கை நோய் கிருமிகள் பற்றியும், வெக்கை நோய் பற்றியும் தெரிவித்தார்கள். வெக்கை நோய் சம்பந்தமாக நம்முடைய தமிழகத்திலே 18 மாவட்ட தடுப்புக் குழுக்களும், 10 விழிப்புக் பிரிவுகளும், 10 சோதனைச் சாவடிகளும் செயல்பட்டு வருகின்றன.

கடந்த காலத்திலே நடைபெற்ற தவறுகளின் காரணமாக, அந்த விழிப்புக் குழுக்களிலும், சோதனைச் சாவடிகளிலும் இருந்த தடுப்பு ஊசியாளர்களை கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட காரணத்தால், அந்தப் பதவிகள் மீண்டும் புதுப் பிக்கப்படாத காரணத்தால், அந்தப் பணியில் சிறு தேக்கம் இருக்கிறது. அவற்றை நிறைவேற்றும் வகையிலே இந்த அரசு துரிதமான நடவடிக்கைகளை எடுக்கும் வகையிலே, அந்தத் தடுப்பு ஊசியாளர்கள் பதவிகளை எல்லாம் ஏற்படுத்தி தடுப்பு ஊசியாளர்களை பணியமர்த்தி, மீண்டும் தமிழகத்திலே நல்ல

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

முறையிலே அனைத்து கால்நடைகளுக்கும் வெக்கை நோய் தடுப்பு ஊசி போடப்பட வேண்டுமென்று இந்த அரசு செயல்பட்டு வருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது, இந்தத் துறையில் இருக்கின்ற அலுவலர்களை வைத்துத்தான் நாங்கள் அந்தத் தடுப்பு ஊசிப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அடுத்து கால் மற்றும் வாய் நோய்த் தடுப்பு ஊசிப் பணிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்கள். அதாவது, இராணிப்பேட்டையில் கால் மற்றும் வாய் நோய் தடுப்பு ஊசி உற்பத்தி செய்கின்ற யூனிட்டைத் தொடங்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். இப்போது பெங்களூரிலிருந்தும், ஐசட் நகரிலிருந்தும் வாங்கப்படுகிறது. இப்போது இராணிப்பேட்டையில் உள்ள நிலையத்தில் கால் மற்றும் வாய் நோய் தடுப்பு ஊசி மருந்தை உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். ஆனாலும் நம்முடைய தமிழகத்திலே கால் மற்றும் வாய் நோய் எந்த அளவுக்கு இருக்கிறதென்பதை நம்முடைய துறை ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு உதவுகின்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தைப் பொறுத்தவரையில், சற்றேறக்குறைய 30 வகையான நோய்த் தடுப்பு மருந்துகள் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. பேக்டீரியல் வேக்சின், வைரல் வேக்சின் என்று சொல்வார்கள். அந்த வகையில் 30 வகையான தடுப்பு ஊசி மருந்துகளை அந்த நிலையம் உற்பத்தி செய்து, இந்தியத் திருநாட்டிலேயே ஒரு சிறப்பு மிக்க நிலையமாக அந்த நிலையம் செயல்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், பல்வேறு மாநிலங்களுக்குப் பயன்படுகிற வகையிலே அந்த நிலையம் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலையத்திலே குவாலிட்டி கன்ட்ரோல் அண்ட் புரொடக்ஷன் என்ற இரண்டும் தனித் தனியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இப்போது குவாலிட்டி கன்ட்ரோல் யூனிட், ப்ரொடக்ஷன் யூனிட் என்று தனித் தனியாகத்தான் அங்கே இயங்கி வருகின்றன. அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. இன்னும் அதை விரிவு படுத்தும் வகையிலே, இராணிப்பேட்டையிலே உள்ள நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் வகையிலே, அதை நவீனப்படுத்தும் வகையிலே ஒரு திட்டத்தை, 6 கோடி ரூபாயிலே உலக வங்கி உதவியுடன் செயல்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துகொள்கிறேன். இதோடு மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளின் மூலமாகவும் கால்நடை பராமரிப்பு துறையின் மூலமாகவும் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறப்புக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் என்று, ஏழை எளிய வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்கிற ஏழை விவசாயிகளுக்கு மானிய அடிப்படையிலே பல்வேறு நல்ல திட்டங்களை இந்த அரசு முனைப்போடு செயல்

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்புக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆடு, பன்றி, கோழி மற்றும் கன்று வளர்ப்புத் திட்டங்கள் இந்தத் துறையின் மூலமாகவும், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலமாகவும், டேப்கோ நிறுவனத்தின் மூலமாகவும் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 1989–90 ஆம் ஆண்டில் இதன் மூலம் 187 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. வர இருக்கின்ற 1990–91 ஆம் ஆண்டில் 328 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்தின் மூலமாகச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13–30 மணி

அதுபோல சிறப்பு மத்திய உதவித் திட்டம் என்ற ஒன்று இருக்கிறது. அது இந்து ஆதிதிராவிட மக்களுக்கு 50 சதவீத மானியத்துடன் ஆடு வளர்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களிலே செயல்பட்டு வருகின்றது. இதன் மூலமாக கடந்த 1989–90 ஆம் ஆண்டில் 84 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு இருக்கின்றது. வர இருக்கின்ற 1990–91 ஆம் ஆண்டில் 200 இலட்சம் ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக பழங்குடியினர் வாழ்கின்ற பல்வேறு மாவட்டங்களில் அவர்களுக்கு 50 சதவீதம் மானியமாக ஆடுகள், மாடுகள், கறவை மாடுகள், கன்று வளர்ப்புப் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைப் பகுதிக்கு மட்டும் 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 1989–90 ஆம் ஆண்டில் 53.28 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கின்றது. வர இருக்கின்ற 1990–91 ஆம் ஆண்டில் 66 இலட்சம் ரூபாய் இதன் மூலமாக செயல்படுத்த இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவன்றி, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று ஒரு திட்டம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது, நீலகிரி மாவட்டத்தில். கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போதே அதுபற்றித் தெரிவித்தேன். ஊத்துக்குளியிலே உறை விந்து வங்கி செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தேன். அப்பணிகள் எல்லாம், பூர்வாங்கப் பணிகள் எல்லாம் முழுமை பெறுகின்ற ஒரு சூழ்நிலையில் வருகின்ற ஓரிரு மாதங்களில் அந்த உறை விந்து தயாரிக்கின்ற பணி துவங்கப்படும் என்ற நல்ல செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் மூலம், நாம் எவ்வளவு தான் கால்நடைகள் வளர்த்தாலும்

இங்கே தீவனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தீவனப் பற்றாக்குறை மற்றும் தீவனக் கன்றுகள் தயாரிக்க வேண்டும், தீவனப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்திலே வறட்சிக்கு இலக்காகின்ற மாவட்டங்களிலே வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் மூலமாக தீவனக் கன்றுகள் விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களை எல்லாம் இந்த அரசு நல்ல முறையிலே செயல்படுத்திக்கொண்டு வருகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருசில பேர் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதாவது, கேரளாவுக்கு கால்நடைகள் ஏற்றுமதி செய்வது பற்றி, கால்நடைகள் கடத்தப்படுகின்றன; ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று இங்கே தெரிவித்தார்கள். அது குறித்து கேரளாவுக்கு நம்முடைய தமிழகத்தில் இருந்து கடந்த 1989-90ஆம் ஆண்டில் கேரளாவுக்கு மட்டுமல்லாமல், எல்லா வெளி மாநிலங்களுக்கும் 2 இலட்சத்து 73 ஆயிரத்து 884 கால்நடைகள் சென்று இருக்கின்றன. அதே நேரத்தில் வெளி மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு 1 இலட்சத்து 31 ஆயிரத்து 377 கால்நடைகள் வந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்கின்ற கால்நடைகளை நாம் தடை செய்வோமேயானால், இதனால் சில பின் விளைவுகள் ஏற்படுகின்ற சூழ்நிலையும் ஏற்படுகின்றது. தேசிய வேளாண்மைக் குழு என்ன சொல்கிறது என்றால், ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குக் கால்நடைகள் செல்வதைத் தடுக்கக் கூடாது என்று சொல்கிறது. அதோடு கால்நடைகள் என்றால் மாடுகள் மட்டுமல்லாமல், கோழிகள், ஆடுகள், செம்மறி ஆடுகள் போன்ற எல்லா இன வகைகளும் அதில் வந்துவிடுகின்றன. நாம் மாடுகள் கேரளாவுக்குச் செல்வதைத் தடை செய்வோமேயானால், அதே நேரத்தில் ஆந்திராவிலிருந்து வருகின்ற ஆடுகளை அவர்கள் தடை செய்வார்கள்; இங்கு அவைகளை அனுப்பக்கூடாது என்று சொல்வார்கள். அதே நேரத்திலே இங்கே சென்னையிலே இப்போது மட்டன் விலை அதிகமாக உயர்ந்து இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த மட்டன் விலை உயருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். அதுபோல முட்டை ஆந்திராவிலிருந்து இப்போது இங்கு வந்து கொண்டிருக்கிறது. முட்டை வருவது தடுக்கப்படுமேயானால், முட்டை விலை அதிகமாக உயருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். இவ்வாறு பின் விளைவுகள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தினாலும், அதே நேரத்தில் வளர்ந்து வருகிற நம்முடைய நாட்டில் கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலும் கிராமத்திலே எலும்பும் தோலுமாக உள்ள மாடுகளை வைத்துக்கொண்டு தங்களுடைய வயிற்றுக்கே ஆகாரம் இன்றி இருக்கின்ற சூழ்நிலையில் அங்குள்ளவன் அந்த மாட்டுக்கு எவ்வாறு தீனி கொடுப்பான் என்ற நிலையையும்

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ள மாடுகள் தான் கேரளாவுக்கோ மற்ற மாநிலங்களுக்கோ இன்றையதினம் சென்றுகொண்டு இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் மற்ற மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்துக்கு வருகிற கால்நடைகள் நல்ல தரம் உள்ள மாடுகளாக இருக்கின்றன. இதையெல்லாம் கருத்தில் கொண்டு தான் அவ்வாறு வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற கால்நடைகளைத் தடை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற ஒரு முடிவினை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

13–35 மணி

அதே நேரத்திலே, கேரளாவுக்குச் செல்லுகின்ற அந்த மாடுகளையெல்லாம் நம்முடைய மாநிலத்திலேயே கேரளாவிலே எப்படிச் செய்கிறார்களோ அந்த அடிப்படையிலே நம்முடைய மாநிலத்திற்கு அன்னியச் செலாவணியை ஏற்படுத்தித் தருகின்ற வகையிலே திட்டங்கள் ஏதாவது செயல்படுத்தப்படுமா என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அந்தத் திட்டத்தையும் ஒரு நல்ல கருத்தினை நம்முடைய தமிழகத்திலே அந்தக் கால்நடைகளையெல்லாம் — தமிழகத்திலேயே ஸ்லாட்டர் ஹவுஸ் வைத்து, அவற்றைத் தமிழகத்திலிருந்து அந்த இறைச்சியாக நாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து, அதன் மூலமாக அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமா என்பதைக் குறித்தும் இந்த அரசு ஆய்வு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பல்வேறு உறுப்பினர்கள், கின்ற, கால்நடைப் பராமரிப்புத் துறையிலே பணியாற்றுகின்ற கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள், பல்வேறு பிரிவினர்களுடைய கோரிக்கைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கனிவோடு தெரிவித்தார்கள். இந்த அரசு பரிவோடு கவனிக்கும் என்று சொல்லியும் அவற்றைக் கவனிக்கவில்லை என்று தெரிவித்தார்கள். அவ்வாறு அல்ல. தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரவர்கள் நிச்சயமாக சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற அடிப்படையிலே அவர்களுக்கு உரிய கோரிக்கைகள், குறைகள் எல்லாவற்றையும் பரிவோடு கவனித்து அவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அவர்கள் அனைவருக்கும் விரைவிலே அவர்களுக்கு நல்ல முடிவுகள் கிடைக்கின்ற வகையிலே அவர்களுக்குப் பயன் கிடைக்கின்ற வகையிலே நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறையோடு இணைந்திருக்கின்ற கோழி வளர்ப்பு நிறுவனத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் இங்கே சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு,

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மூலமாகக் கடந்த ஆண்டு, திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டிலே ஒரு குஞ்சு பொறிப் பகம் தொடங்கப்படும் என்று சொல்லியிருந்தேன். நம்முடைய தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மூலமாக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும், நம்முடைய தமிழகத்திலே கோழி வளர்ப்புப் பணிகள் வளர்ச்சியடைய வேண்டுமேயானால் நம்முடைய விவசாயிகளுக்கு—கோழி வளர்ப்பாளர்களுக்கு அவர் களுக்குத் தேவையான குஞ்சுகளையும், தீவனத்தையும் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. அரசாங்கத்தால் எந்த அள விற்குச் செய்து கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குச் செய்து கொடுப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலேதான், கடந்த ஆண்டு ஒரு குஞ்சு பொறிப் பகம் அமைக்கப்படும் என்று அறிவித்து, கொட்டப்பட்டியிலே, அந்தக் குஞ்சுப் பொறிப்பகம் பணிகளெல்லாம்—பூர்வாங்கப் பணிகளெல்லாம் இப்பொழுது நடைபெற்று, விரைவிலே அந்தக் குஞ்சு பொறிப்பகம் திறக்கப்பட இருக்கின்றது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 1990–91ஆம் ஆண்டில், வளர்ந்து வருகின்ற தேவையினைப் பூர்த்தி செய்கின்ற அடிப்படையிலே, தென் மாவட்டங்களுக்கு மையமாக வைத்து, இராசபாளையத்திலே ரூபாய் 30.95 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு குஞ்சு பொறிப்பகம் அமைக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தெற்குப் பாளையத்திலே—கோவை மாவட்டம் தெற்குப் பாளையத்திலே 4.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு Dressing Plant, காடைகள் Dressing Plant ஒன்று அமைக்கப்பட இருக்கின்றது.

அரசூர் ஹேச்சரியை, அரசூர் குஞ்சு பொறிப்பகத்தினை மேம் படுத்துவதற்காக, நவீனப்படுத்துவதற்காக 18.9 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவு செய்யப்பட இருக்கிறது.

தீவன உற்பத்தியை நாம் பெருக்க வேண்டுமென்ற அடிப்படை யிலே, தீவனங்கள் விவசாயிகளுக்கு, கோழிப்பண்ணையாளர்களுக் குக் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்திலே, நம்முடைய நந்த னத்திலே இருக்கின்ற அந்தத் தீவன நிலையம் மேம்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனத்தோடு இருந்த அந்தத் தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் கடந்த காலத்தில இறைச்சி நிறு வனம், கோழி வளர்ப்பு நிறுவனம் என்று தனித்தனியாக இயங்கி வந்தது. அதை இன்றைக்கு இணைக்க வேண்டுமென்ற அடிப் படையிலே அரசு கொள்கையளவில் முடிவெடுத்து, இனி வரு கின்ற காலத்தில் தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனத்தோடு அந்த இறைச்சி நிறுவனமும் செயல்படும்.

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

பெரம்பூரிலே இருக்கின்ற இறைச்சிக் கூடத்தினை மத்திய மாநில அரசுகளின் கூட்டு சேர்ந்து பெரம்பூரிலே இருக்கின்ற இறைச்சிக் கூடத்தினை நவீனப்படுத்துகின்ற திட்டம் ஒன்று, அதாவது மாடுகள் அறுவைக் கூடத்திற்கு 60 இலட்சம் ரூபாய் செலவிலும் ஆடுகள் அறுவைக் கூடத்திற்கு 300 இலட்சம் ரூபாய் செலவிலும் ஒரு திட்டத்தினை தயாரித்து, 50 சதவீத மத்திய அரசாங்கத்தினுடைய உதவியினைக் கோருகின்ற நோக்கத்திலே அந்தத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, மாடுகள் அறுவைக்கூடத்திற்கு 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு முதல் கட்டமாக 11 இலட்சம் ரூபாய் அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, 11 இலட்சம் ரூபாயை மத்திய அரசு வழங்கியிருக்கிறது. மாநில அரசினுடைய பங்காக 11 இலட்சம் ரூபாயையும் வழங்கி, 22 இலட்சம் ரூபாய் செலவில் பெரம்பூர் இறைச்சி கூடத்தினை நவீனப்படுத்துகின்ற திட்டத்தின் முதல் கட்டப் பணி விரைவில் தொடங்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிகள் உள்ள இடங்களிலும், நகராட்சிகள் உள்ள இடங்களிலும் நகராட்சி, மாநகராட்சி மற்றும் மாநில அரசு, மத்திய அரசு இணைந்து இறைச்சிக்கூடங்களை நிறுவுகின்ற, நவீன முறையில் இறைச்சிக்கூடங்கள் நிறுவப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே அந்தத் திட்டத்தினை ஆய்வு செய்து செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை இந்த அரசு ஆய்வு செய்து நல்ல முடிவினை எடுக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

13-40 மணி

அடுத்து தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். 1904-ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ் நாட்டில், 1904-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிற அந்த கால்நடை மருத்துவக் கல்லூரியை மையமாக வைத்து, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 20—9—1989 முதல் துவங்குவதற்கு அனுமதி வழங்கி, அது செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1904-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அந்த கால்நடை மருத்துவக் கல்லூரியில் கிட்டத்தட்ட 23 துறைகள் செயல்பட்டு வருகின்றன. மக்களுக்கு நேரிடையாக பயனளிக்கக்கூடிய சிகிச்சை பிரிவு, நோய் புலனாய்வு பிரிவு போன்றவை எல்லாம் அந்த கால்நடை மருத்துவக் கல்லூரியில் செயல்பட்டு வருகின்றன.

1957 ஆம் ஆண்டு முதல் அது ரீஜனல் போஸ்ட் கிராஜுவேட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டாக—தென்மண்டல பட்டப்படிப்பு மையமாக செயல் பட்டு வருகிறது. 1977 ஆம் ஆண்டு முதல் பி.எச்டி. பட்டப்படிப்பு அங்கே வழங்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட சிறப்புமிக்க சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியை மையமாக வைத்து, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருக்கிற உழவர் பயிற்சி மையங்கள், கால்நடை மேம்பாட்டு மையங்கள், கோழியின அபிவிருத்தி மையங்கள் போன்ற இந்த மையங்களை எல்லாம் ஒருங்கிணைத்து, பல்வேறு ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்கிற வகையில், கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையில் இந்த கால்நடை மருத்துவப்பல்கலைக் கழகம் துவங்கப்பட்டு இருக்கிறது. இதற்கான அங்கீகாரத்தை மத்திய அரசு வழங்க, நம்முடைய தமிழினத்தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அங்கீகாரம் வேண்டுமென்ற வேண்டுகோளை-நம்முடைய மாண்புமிகு துணைப் பிரதமர் அவர்களிடத்தில் வைத்து, அவர்களும் செய்வதாக உறுதி அளித்து இருக்கிறார்கள். அந்தப் பல்கலைக் கழகத்திற்கு அங்கீகாரம் கிடைத்த பிறகு, பயனளிக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை, பல்வேறு இடங்களில் இன்னமும் நல்ல முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மையங்கள் இருக்கிற அளவிற்கு, நோய் புலனாய்வு பிரிவு, சிகிச்சை பிரிவு ஆகியவைகளை ஆரம்பிக்கிற வகையில், இந்தப் பல்கலைக் கழகம் திறம்பட செயல்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கொடுவல்லியில் இறைச்சி கூடத்தை கட்டினார்கள். 70 இலட்சம் ரூபாய் செலவில் அது கட்டப்பட்டது. அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால் மற்றும் பல்வேறு காரணங்களால் அந்த கட்டிடங்கள் எல்லாம் இப்போது பாழாகி இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்தி நம்முடைய கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தில் மேலும் சிறப்பாக்க திட்டம் ஏதாவது வகுக்க முடியுமா என்று ஆய்வு செய்யப்பட்டது. இன்னும் ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் செங்கோட்டையன் போன்றவர்கள், பால் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது, ஆனால் அதற்குரிய விலை கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்கள். நம்முடைய தமிழகத்தில் எவ்வளவு பால் புராசசிங் கெபாசிட்டி இருக்கிறதோ, அதற்கு அதிகமாக பால் உற்பத்தி செய்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற நிலையில், இவ்வாறு சங்கடங்கள் எல்லாம் ஏற்படும். அந்த சங்கடங்களை எல்லாம் எவ்வாறு தீர்க்க வேண்டும் என்று அந்த அடிப்படையில் தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பால் அறிவியல் பொறுத்த வரையில் பால் உற்பத்தி பெருகி வருகிற சூழ்நிலையில், தமிழகத்

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

தில் பால் அறிவியல் பட்டப்படிப்பு கல்லூரியோ பால் அறிவியல் கல்லூரியோ எதுவும் இல்லை. இதை அடிப்படையாக வைத்து—

Milk production, Milk Processing, Dairy Technology, Dairy Micro–biology Dairy Engineering Dai y chemistr y. போன்ற பிரிவு களை எல்லாம் மையமாக வைத்து, Dai y Science college ஆரம் பிக்கும் சாத்தியக் கூறுகளை இந்தக் கால்நடை மருத்துவப் பல் கலைக் கழகம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக பால் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கப்படுமேயானால் அங்கே பட்டயப் படிப்புகளும், பட்டப் படிப்புகளும், மேல்நிலைப் படிப்புகளும், தொடங்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அதன் மூலமாக நாம் இந்தக் திட்டங்களை எல்லாம், மேற் கொண்டு நிறைவேற்றுகிற திட்டங்களின் மூலமாக பால் உற்பத்தி பெருகுகிற ஒரு சூழ்நிலையில் பால் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குகிற ஒரு நோக்கத்தோடு, இந்தப் பல்கலைக் கழகம் செயல்படும். இந்த ஆண்டு பகுதி-2 திட்டத்தில் கூட தமிழ் நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மூல மாக பல்வேறு ஆராய்ச்சி திட்டங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

13-45 மணி

அதாவது 14.88 இலட்சம் ரூபாய் செலவில் தீவன அபி விருத்தி மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சியை வெள்ளாட்டுக் கிடா பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் தெரிவித்தார்கள், 20 ஆடுகளுக்கு ஒரு கிடா போதுமா, அல்லது 8 ஆடுகளுக்கு ஒரு கிடா போதுமா என்று கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள் அதை அடிப்படை யாகக் கொண்டுதான் மாடுகளிலே எவ்வாறு செயற்கை முறை யில் இனவிருத்தி செய்கிறோமோ அந்த அடிப்படையிலே வெள்ளாடுகளிலும் செயற்கை முறையில் இனவிருத்தி செய்ய முடியுமா என்ற கருத்தை அடிப்படையாக வைத்து ஒரு ஆராய்ச்சியை 1.70 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மேற்கொள்ள இருக்கிறது.

அதேபோல் நோய் ஆய்வுப் பணிக்காக 2.97 இலட்சம் ரூபாயும், காட்டுப்பாக்கத்திலே வெள்ளாடு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதற்கு 3.72 இலட்ச ரூபாயும், மொத்தம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சிப் பல்கலைக் கழகத் திலே 14.88 இலட்சம் ரூபாய்ச் செலவில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இன்னும் பல நல்ல திட்டங்கள் எல்லாம், இந்திய வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்து டன் இணைந்தும் மற்றும் பல்வேறு நிறுவனங்களுடன்இணைந்தும்,

தமிழ்நாடு கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதாவது கிராமங்களிலே கால்நடைகள் திடீரென்று இறக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும், திடீரென்று நோய்க்கிளர்ச்சி ஏற்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே மாண்புமிகு உறுப்பினர் பழனிச்சாமி என்று நினைக்கிறேன் அவர்கள் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கோ அல்லது கிளை நிலையங்களுக்கோ சென்று தடுப்பு ஊசி மருந்துகளைக் கேட்டால், இல்லை என்று சொல்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அது உண்மையான நிலைதான். அதாவது தேவையிருப்பின் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே, அவர்கள் ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த்தடுப்பு நிலையத்திலே இருந்துதான் பெற்று அவர்கள் மருந்துகளை வினியோகிக்க வேண்டும். நம்முடைய மக்களுக்கு நிலை என்ன என்று கேட்டால், அந்த மக்கள் திடீரென்று எங்களுடைய ஊரில் கால்நடைகள் இறந்துவிட்டன, எங்களுடைய மாடுகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட வேண்டும் என்று தெரிவிப்பார்கள். ஆனால் 2 , 3 நாட்கள் கழிதது, அங்கே மருத்துவர்களோ, அல்லது ஆய்வாளர்களோ ராணிப்பேட்டை கால்நடை தடுப்பு நிலையத்திற்கு இன்டென்ட் செய்து, தடுப்பு ஊசி மருந்துகளைப் பெற்றுப்போட வேண்டும் என்று போகிறபோது, இப்போது போட வேண்டாம். இப்போது எங்களுக்குத் தேவையில்லை என்று தெரிவிப்பார்கள், இதையெல்லாம் கருத்திலே கொண்டு, தமிழகத்திலே பல்வேறு மண்டலங்களில் உள்ள தலைநகரங்களில் இந்த கால்நடை நோய் தடுப்பு மருந்துகளை ஸ்டாக் செய்து, உடனுக்குடன் வினியோகம் செய்ய, எந்த அளவிற்கு இயலும் என்ற வகையிலே ஆராய்ச்சி செய்து, 4.20 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து—அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், எப்போது வேண்டுமானாலும் கால்நடை தடுப்பு மருந்துகள் அதாவது ராணிப்பேட்டையில் இருக்கிற தடுப்பு மருந்துகள் அந்தந்த மாவட்டத்தினுடைய தேவைக்கேற்ப — அந்தந்த மாவட்டத்திலேயே ஸ்டாக் செய்து, வைப்பதற்கான திட்டத்தை இந்த அரசு நிறைவேற்ற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். அதாவது Financial powers to the Offices of the Department என்பது பற்றித் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தைக் குறித்து இந்த அரசு ஏற்கனவே ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது. அதாவது துறையிலே உள்ள மண்டல இணை இயக்குநர்கள் , துணை இயக்குநர்கள், உதவி

இயக்குநர்கள் இவர்களுக்கெல்லாம் என்னென்ன அதிகாரங்கள் பிரித்து வழங்கப்படவேண்டும், எந்தெந்தவகையிலே மக்களுக்குப் பயனை அளிக்கக்கூடிய வகையிலே அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டால், அது மக்களுக்குப் பயனை அளிக்கும், மக்களுக்குப் பயன் தரும் என்பதை எல்லாம் தீவிரமாக ஆய்வு செய்து நிச்சயமாக நல்ல முடிவுகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல உறுப்பினர்கள் இந்த துறையிலே பணியாற்றுகிற 1,079 தற்காலிக ஊழியர்கள்—அதாவது கேசுவல் லேபர்கள் என்று சொல்கிறார்களே, அவர்கள் தினக்கூலிப் பணியாளர்களாக பணியாற்றுகிறார்கள்—கால்நடைப் பண்ணைகளிலேயும், பல்வேறு இடங்களிலேயும் அவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இது குறித்து இந்த அரசு ஆய்வு செய்து, எந்த அளவிற்கு செய்ய இயலும் என்பதை ஆய்வு செய்து, ஒரு நல்ல முடிவை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் பெரியார் மாவட்டத்திலே கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.சின்னசாமி அவர்கள் பவானிசாகரிலே அதை ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். இது குறித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்திலே இப்போது இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. சென்னையிலே ஒரு கல்லூரியும், நாமக்கல்லிலே ஒரு கல்லூரியும் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. சென்னையில் வருடம் ஒன்றுக்கு 140 மாணவர்கள் சேர்ந்து அவர்கள் 5 ஆண்டுக்காலம் படித்து பட்டதாரிகளாக வெளியே வருகிறார்கள். அதைப்போல, நாமக்கல்லிலே 80 பேர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இந்த 220 மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து 5 ஆண்டுகள் படித்து, அதற்குப் பிறகு, துறையின் மூலமாகவும், பல்வேறு வங்கிகளின் மூலமாகவும், பல்வேறு நிறுவனங்களின் மூலமாகவும் அவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

13-50 மணி

பட்டதாரிகளுக்கு $5\frac{1}{2}$ ஆண்டுக்காலம் படித்துவிட்டு வருகிறவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாகவோ மற்றத் துறைகளின் மூலமாகவோ வேலை வாய்ப்பு இல்லை என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அது ஒரு விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும். அந்த அடிப்படையிலேயும் இன்றைய தேவையை அடிப்படையாக கொண்டும் கருதிப் பார்த்து நம்முடைய தமிழகத்தில் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் இருப்பது

போதும் என்றே நான் கருதுகிறேன். வருகிற காலங்களில் நம்முடைய தரமான கால்நடைகளின் உற்பத்தி அதிகமாகு மானால் அப்போது, ஏற்படும் தேவையின் அடிப்படையில் வேண்டுமானால் வருகிற காலங்களில்—கால்நடை மருத்துவக் கல்லூரியை துவக்குவதற்கு நாம் சிந்தனை செய்யலாம் என்ற கருத்தினை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அடிப்படை யாக நம்முடைய விவசாயிகளுக்கு பயன் அளிக்கக்கூடிய வகை யிலேதான் திட்டங்களைத் தீட்ட வேண்டுமே தவிர, பெரிய பட்டதாரிகளை அதிகமாக உருவாக்கி அவர்கள் அந்த $5\frac{1}{2}$ ஆண்டு களுக்கு பின்னால் இந்த அரசாங்கத்தை வேலை வேண்டுமென்று தொந்திரவு கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்ற காரணத்தினாலேதான் இப்போது அந்த திட்டம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அந்த அடிப் படையிலே பார்க்கிற நேரத்தில் தேவை ஏற்படும்போது அது பற்றி சிந்தித்துக் கொள்ளலாம்.

இன்னும் கால்நடை பராமரிப்புத் துறை சம்பந்தமாக பல் வேறு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக தமிழ் இனத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக் களையெல்லாம் தீவிரமாக ஆய்வு செய்து முறையான நட வடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக மீனளத் துறை மூலமாக இந்த அரசு செய்து வருகிற நடவடிக்கைகள் குறித்தும் துறை மேற்கொள்ளு கிற பணிகளைக் குறித்தும் நான் ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். மீனளத் துறை என்று எடுத்துக்கொண்டால் அதனுடைய குறிக்கோள்கள், அதனுடைய நோக்கங்கள் குறித்து நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பு களிலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே அதாவது கடலோரப் பகுதிகளிலே இருக்கிற மீனவர்களுடைய நலன் காக்கின்ற வகையிலேயும், அதேபோல் உள்நாட்டிலே மீனளத் துறை மூலமாக மீன் பிடிக்கும் பணியை மேற்கொண் டிருக்கிற அந்த மீனவர்களுடைய நலனும் காக்கின்ற வகையிலே தான் இந்தத் துறை செயலாற்றி வருகிறது. உள்நாட்டு மீன் வளம், கடல் மீன் வளம் என்று இரண்டு வகையாக பிரிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

உள் நாட்டு மீன் வளத்தைப் பொறுத்தமட்டிலே நம்முடைய தமிழகத்திலே கடந்த ஆண்டுகளிலே உள்நாட்டு மீன்வளம் குறைந்துக்கொண்டே வருகின்றன. இதனுடைய அடிப் படை கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக அறி வார்கள். ஏனென்று கேட்டால் கடந்த காலத்திலே ஏற்பட்ட

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

வறட்சியின் காரணமாக, நீர்நிலைகளிலே ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, தண்ணீர் இல்லாததன் காரணமாக, ஆறுகளிலே தண்ணீர் போகின்ற சூழ்நிலை எப்போதாவது ஒரு தடவைதான் ஏற்படுகிற காரணத்தினாலேயும் உள் நாட்டு மீன் உற்பத்தியினுடைய திறன் குறைந்துக் கொண்டே வருகிறது.

இருப்பினும் நம்முடைய தமிழகத்திற்கு தேவையான, தமிழகத்திலுள்ள அனைத்துக் குளம் குட்டைகளிலும் நீர் பரப்புகளிலும் நாம் மீன் வளர்க்கின்ற பணியை மேற்கொள்ள வேண்டுமானால் நம்முடைய தமிழகத்திற்கு 170 மில்லியன் தரம் உள்ள குஞ்சுகள் தேவைப்படுகின்றன. ஆனால் இப்போது நம்முடைய தமிழகத்திலுள்ள மீன் வளர்ச்சித் துறை மூலமாகவும் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவும் 60 மில்லியன் மீன் குஞ்சுகளை மட்டுமே உற்பத்தி செய்ய இயலுகின்றன. அப்படி இருப்பினும் இன்னும் அரசாங்கத்தின் மூலமாக நிறைவேற்றுகிற திட்டங்களின் மூலமாக முழுவதுமாக 170 மில்லியன் மீன் குஞ்சுகளையும் உற்பத்தி செய்ய இயலாத ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்.

பவானிசாகரைப்பற்றி இங்கே தெரிவித்தார்கள். மணிமுத்தாறு பவானிசாகர் ஆகிய இரண்டு தேசிய மீன் பண்ணைகளிலும் எந்த அளவிற்கு மீன் உற்பத்தியை, குஞ்சுகள் உற்பத்தியை செய்ய முடியும் என்று கேட்டார்கள். இந்த இரண்டு இடங்களிலும் பணிகள் முடிக்கப்பெற்றால் 40 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். இந்தச் சூழ்நிலையில் இன்னும் 50 மில்லியன் மீன் குஞ்சுகள் நமக்கு குறைவாகவே இருக்கிற காரணத்தினால், இதனை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு இந்த ஆண்டு ஒரு திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம். விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே தனியார்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களுக்கு மீன் குஞ்சு பண்ணையை ஏற்படுத்துகிற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே ஒரு ஹெக்டேர் பரப்பில் மீன் பண்ணை அமைத்து அதிலிருந்து ஒரு மில்லியன் மீன் குஞ்சு உற்பத்தி செய்து வழங்கிடலாம். அதற்கு சுமார் 3·60 லட்சம் செலவு ஆகும். அந்த செலவினத்திலே ஒரு தொகையை மானியமாக வழங்குவதற்கு இந்த அரசு முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

13-55 மணி

அதே நேரத்தில், இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி. கே. சின்னசாமி அவர்களும், மற்றும் திரு. செங்கோட்டையன் அவர்களும், பவானிசாகரிலேயுள்ள தேசிய மீன் பண்ணையிலுள்ள மீன் பண்ணையைப் பற்றி தெரிவித்தார்கள். ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு, அமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாயை

யும் செலவு செய்து, அது வீணாகி இருக்கிறது என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். இந்த அரசு, ஆட்சி பொறுப்பை ஏற்பதற்கு முன்பாகவே அந்த ஒரு கோடி ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாக, இந்த திட்டப் பணிகள் எல்லாம் முறையாக எடுக்கப்படாத காரணத்தினால்—அதோடு திட்டம் தீட்டுகின்ற நேரத்திலே கூட, அந்தத் திட்டம் எந்த முறையிலும் சரியில்லாத காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அரசு அதனை எல்லாம் கருதாமல், அந்தத் திட்டத்திலே உள்ள குறைகளையெல்லாம் களைந்து, எந்த அளவுக்கு மீன் பண்ணைகளையெல்லாம் உருவாக்கப்பட முடியும் என்று ஆய்வு செய்து, அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்கின்ற வகையிலே, ஈடுபட்டு வருகிறது. நிச்சயமாக வருகின்ற ஆகஸ்டு திங்களுக்குள்ளாக அந்த மீன் பண்ணைகளையெல்லாம், மீன்கள் உற்பத்தி துவங்குவதற்கான அனைத்து பூர்வாங்க நடவடிக்கைகளையும் எடுக்கும் என்ற உறுதிமொழியினை இங்கே வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் நன்றாகவே அறிவார். யார் யார் அதிலே இருந்தார்கள் ; எப்படிப்பட்ட சூழ்நிலையில் அது நிறுத்தப்பட்டது. அந்தத் திட்டம் எப்படி தவிர்க்கப்பட்டது என்ற நிலையை எல்லாம் அறிவார்கள். இந்த அரசு, யார் தவறு செய்திருந்தாலும், அவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை குறித்து, இந்த அரசு ஆய்வு செய்தது. வெளிநாடுகளிலே ஸ்ரீலங்கா, மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே, அலங்கார மீன் வளர்ப்பிலே, அன்னிய செலாவணியை, அவர்கள் அதிகமாக ஈட்டுகிறார்கள். அந்த அடிப்படையிலே, நம்முடைய தமிழகத்திலே, அலங்கார மீன்களை உற்பத்தி செய்து, அதன் மூலமாக அன்னிய செலாவணி கிடைப்பதற்கு வழிவகை செய்ய இயலுமா என்பதை இந்த அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. ஏனென்று கேட்டால், ஸ்ரீலங்காவிலே, வருடம் ஒன்றிற்கு, 25 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி இதன் மூலமாக ஈட்டுகிறார்கள். சிங்கப்பூரிலே 150 கோடி ரூபாய் இதன்மூலம் ஈட்டுகிறார்கள். இந்தத் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த முடியுமா என்று ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. பரீட்சார்த்த முறையிலே, பூம்புகாரிலே, அரசாங்கத்தின் மூலமாக இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற முடியுமா என்று இந்த அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடலோரத்திலுள்ள மீனவர்களுக்கு பயனளிக்கின்ற வகையிலே, இந்தத் துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதேபோல், தஞ்சை மாவட்

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

டத்திலே கடலோரப் பகுதியிலே — அதாவது கடைமடைப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் எப்போதும் கிடைப்பது கிடையாது. ஏதாவது ஒரு நேரத்திலே வரும். தண்ணீர் நின்று விட்டால், கதிர் அறுவடை முடிகின்ற வரையிலும் தண்ணீர் இருக்காது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, அந்த விவசாயிகளுக்கும் பயன் அளிக்கின்ற வகையிலே, அதே நேரத்தில் அந்த இடத்திலேயே மீன் வளர்க்க முடியுமா என்ற ஒரு திட்டத்தினை ஆய்வு செய்து, தஞ்சை மாவட்டத்திலே பல இடங்களிலும், சிறந்த முறையில் இந்தத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள்.

பண்ணைக் குளங்கள் அமைக்கின்ற ஒரு திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக 48 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு ஏக்கர் நிலத்திலே ஒரு குளத்தினை ஏற்படுத்தி அதன் மூலமாக கட்லா, ரோகு போன்ற மீன்களையெல்லாம், வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலத்திலே, திருத்துறைப்பூண்டி, ஒரத்தநாடு போன்ற பகுதிகளில் எல்லாம் இந்தப் பணிகளை, ஒருசில விவசாயிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அதை ஊக்குவிக்கின்ற வகையில் அரசாங்கத்தின் மூலமாக 1991 ஆம் ஆண்டில், ரூ. 98 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, கடலோரப் பகுதியில் வாழ்கின்ற மீனவர்களுக்கு, இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள்கூட இங்கே தெரிவித்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற மீன் துறையிலே உள்ள அதிகாரிகள் எல்லாம் முறைகேடாக நடந்துகொண்டு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டினை இங்கே அவர்கள் எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், யார் அப்படிப்பட்ட அதிகாரிகள் எந்த உதவி இயக்குநராக இருந்தாலும், துணை இயக்குநராக இருந்தாலும், அவ்வாறு லஞ்சம் வாங்குகிற முயற்சியில் ஈடுபடுவார்களேயானால், அவர்களுடைய பெயர்களை என்னிடம் குறித்துக் கொடுப்பீர்களேயானால், இந்த அரசு நிச்சயமாக தவறு செய்கிறவர்கள் மீது முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற உறுதிமொழியினை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அதே போல், கடலோரப் பகுதியிலே வாழ்கின்ற மீனவர்களைக் காக்கின்ற வகையிலே, பல்வேறு திட்டங்களின் மூலமாக பல்வேறு பணிகள் எல்லாம் கடந்த காலத்திலே நடைபெற்று வந்திருக்கின்றன. அவர்கள் வாங்கிய கடன்களை முறையாகச் செலுத்தாதக் காரணத்தினால், வங்கிகளில் கடன் பெறுகின்ற போது, ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது. மீண்டும் கடன் வேண்டுமென்று அவர்கள் வங்கிகளை அணுகினால், வங்கியிலே கொடுக்க மறுக்கிறார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு, தமிழகத்திலே இருக்கின்ற— அந்த கடலோரப் பகுதி

யிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு நம்முடைய அரசாங்கமே ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 4.50 லட்சம் ரூபாய் கொடுத்தது, அதன் மூலமாக அவர்கள் கூட்டுறவு சங்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கு, 30 பேர்களுக்கு கடன் உதவி அளித்து, அதன் மூலமாக படகுகளை, கட்டுமரங்களை வாங்குகின்ற ஒரு திட்டத்தினை, சுழல்நிதித் திட்டம் என்ற ஒன்றினை இந்த ஆண்டு பரீட்சார்த்த முறையில் துவக்கி இருக்கிறோம்.

14-00 மணி

இதன் மூலமாக, கடலோரத்திலே இருக்கின்ற, 3 கூட்டுறவுச் சங்கங்கள் பயன் அடைகின்ற வகையில் 1990-91 ஆம் ஆண்டில் 13.50 இலட்சம் ரூபாய் இந்த அரசு செலவு செய்ய இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் பெரிய மீன் பிடிக் கழகங்கள், கட்டுமரங்கள், விசைப்படகு மற்றும் பெரிய அளவிலான படகுகள் வழங்குகின்ற நோக்கத்திலே 20 சதவிகிதம் மானியத்திலேயும் ஒரு திட்டம் இந்த மீனவர்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அதேபோன்று, நாட்டுப் படகுகளை இயந்திரமயம் ஆக்குகின்ற ஒரு திட்டமும், அதாவது ''இன்-போர்டு அண்டு அவுட்-போர்டு என்ஜின்ஸ்'' பொருத்துகின்ற ஒரு திட்டமும் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டில், அதாவது இப்போது வர இருக்கின்ற ஆண்டில், 1,000 இன்ஜின்கள் வழங்க ரூபாய் 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதன் மூலமாக கடல் மீன் உற்பத்தியினை 2.85 இலட்சம் டன்னிலிருந்து 2.92 இலட்சம் டன்னாக உயர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கு துறைமுகப் பணிகளைப் பற்றித் தெரிவித்தார்கள். பல்வேறு இடங்களில் துறைமுகங்களுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சின்னமுட்டம் துறைமுகப் பணி மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்தார்கள். அந்தப் பணிகளிலேயுள்ள சில பிரச்சினைகளைப் பற்றியும் இங்கே தெரிவித்தார்கள். கடந்த காலத்தில் 1982 ஆம் ஆண்டிலேயே துவங்கப்பட்ட திட்டம்,. 1982 ஆம் ஆண்டிலே மத்திய அரசு, மாநில அரசு 50 விழுக்காடு, 50 விழுக்காடு என்ற அடிப்படையிலே இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி பல்வேறு காரணங்களினால், கடந்த காலங்களில் அந்ததப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தினால் அந்தத் திட்டம் முழுமையாக இன்னும் நடைபெறாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதிலுள்ள பணிகள் பற்றி எல்லாம் தினசரி அறிக்கை அனுப்பப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டு, இப்போது

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

அந்தப் பணிகள் வேகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன. விரைவிலேயே 1990-ஆம் ஆண்டு முடிவடைகின்ற சூழ்நிலையிலே, இந்த ஆண்டிலேயே அந்தப் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தொண்டியிலே உள்ள துறைமுகப் பணியும் அதிலுள்ள தேக்க நிலையையும் நீக்கி, வருகின்ற மே மாதத்தில் அந்தத் தொண்டி துறைமுகம் மீனவர்களுக்குப் பயன்படுகின்ற வகையில் அளிக்கப்பட இருக்கின்றது. அதேபோல்தான் வாலி நோக்கத்திலுள்ள பணியும். அதிலுள்ள தேக்க நிலையை நீக்கி விரைவாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுரைகள் வழங்க, தினசரி அறிக்கைகள் அரசிற்கு அனுப்பப்பட வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பித்து, அந்தப் பணிகள் எல்லாம் முறையாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. விரைவிலே அவைகள் எல்லாம் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே சைமன் என்ற இடத்திலே துறைமுகம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஆனால் அறிவியல் ஆராய்ச்சியின் காரணமாக பல்வேறு இடங்களிலே கிழக்குக் கடற்கரைப் பகுதியிலே எந்த இடத்தில் துறைமுகம் அமைக்க இயலுமோ அந்த இடத்தில்தான் அமைக்க இயலும். கண்ட இடத்திலே எல்லாம் அமைக்க இயலாது. நம் நாட்டினுடைய நிதிநிலைமைக்கு அவ்வாறு எந்த இடத்திலேயும், நினைத்த இடத்திலே துறைமுகம் அமைத்து விடுவது என்பது முடியாத காரியம். அந்த அடிப்படையிலே ஆராய்ச்சி நிபுணர்களுடைய கருத்து, அங்கே அமைக்க இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் முடியாது என்ற கருத்தினை இங்கே தெரிவித்திருக்கிறேன்.

அதேபோன்று தமிழ்நாடு கடலோர உவர் நீர் உற்பத்தித் திட்டத்தின் மூலமாக எரால் உற்பத்தி. மாண்புமிகு உறுப்பினர் பழனிச்சாமி போன்றவர்கள் எல்லாம் இங்கே எரால் உற்பத்தியைப் பற்றி தெரிவித்தார்கள். நம்முடைய கடற்கரைப் பகுதியில் உவர் நீர் நிலங்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தால், ஒரு 10,000 ஹெக்டேர் நிலங்கள், அந்த எரால் தயாரிப்புக்குப் பயன் உள்ள நிலங்கள் என அறியப்பட்டு, அந்த நிலங்களை எல்லாம் மீனவர்களுக்குப் பயன்படுகின்ற வகையில், எரால் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு ஆய்வு செய்து, அந்த நிலங்களை எல்லாம், எந்தெந்த இடங்களிலே எரால் தயாரிப்புக்கு உகந்த இடம் என்று ஆய்வு செய்து, அவற்றை ஒதுக்கீடு செய்து, அந்த மீனவர்கள் பயன்படுகின்ற வகையிலே நம்மு

டைய தமிழகத்திலே மேலும் எரால் உற்பத்தியிலே தன்னிறைவு அடைந்து, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற வகையில் அந்தத் திட்டத்தினை இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக் கிறது. விரைவாக நிறைவேற்றி முடிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய இந்திய அரசு, தமிழகத்திலே சி.எல்.ஆர்.ஐ. என்று சொல்வார்களே, தோல்ஆராய்ச்சி நிறுவனம் போன்று மத்திய அரசு ஒரு இன்ஸ்டிடியூட்'—மத்திய கடலோர உவர்நீர் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நம்முடைய சென்னையிலே, தமிழகத்திலே அமைப்பதற்கு மத்திய அரசு முடிவு எடுத்து இருக் கின்றது. அந்த அடிப்படையிலே மத்திய அரசிற்கு தமிழ்நாட்டின் சார்பாக நம்முடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். அடுத்தபடியாக, மீனவர்கள் நலன் காக்கின்ற வகையில் பல்வேறு திட்டங்கள் இந்தத் துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது, தேசிய மீனவர் நல உதவித் திட்டத்தின் மூலமாக,

14-05 மணி

கடந்த 2 ஆண்டுகளில் 5 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு 50 சதவீத மத்திய அரசின் நிதி உதவியோடு அந்த கிராமங் களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறோம். வருகின்ற 1990–91 ஆம் ஆண்டில் மேலும் 5 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு அந்த 5 கிராமங் களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக் கின்ற திட்டங்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் உள்நாட்டு மீனவர்களுக் கும் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இது சிறப்பான முறையில் கடல் ஓரப் பகுதிகளில் வாழ்கின்ற அந்த மீனவர்களுக்காக உள்ள திட்டமாகும். இந்த திட்டத்தின் மூலமாக கடந்த ஆண்டு ஒரு 3 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அந்தத் திட்டப் பணிகளில் கால தாமதம் ஏற்பட்டது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏன் என்று கேட்டால் அதை எவ்வாறு நடைமுறை செய்வது, எந்த அளவுக்கு நாம் செயல்படுத்தவேண்டும் என்று ஆய்வு செய்து அந்த ஆய்வுப் பணிகள் காரணமாக அதில் சிறிது தேக்கம்

ஏற்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அப்படி இல்லாமல் இந்த ஆண்டு 3 ஆயிரம் வீடுகளும் சேர்த்து அந்தப் பணிகள் எல்லாம் விரைவாக முடிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். அதில் எங்காவது முறைகேடுகள் அதாவது தேர்வு செய்கின்ற இடங்களில் ஏதாவது முறை கேடுகள் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் நிச்சயமாக உடனுக்குடன் அந்த குறைகளை தீர்த்து வைக்கின்ற பணியில் நாங்கள் ஈடுபடுவோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மீனவ கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துகின்ற ஒரு திட்டமும் இந்த அரசு மேற்கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் எத்தனை கிராமங்கள் இவ்வாறு இருக்கின்றன, மீனவ கிராமங்கள் இணைப்புச் சாலைகள் இல்லாத கிராமங்களாக இருக்கின்றன என்றும் அவைகளுக்கு எல்லாம் இணைப்புச் சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலே ஆய்வு செய்யச் சொல்லி 113 கிராமங்கள் இப்போது அவ்வாறு இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு படிப்படியாக இணைப்புச் சாலைகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கையை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டகால முடிவிற்குள் நிறைவேற்றுவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் கடந்த காலத்திலே இருந்த மீனவ சேமிப்பு நிவாரணத் திட்டம், மீனவ விபத்து காப்புறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் கூறும்போது அந்த மீனவ காப்புறுதித் திட்டத்தின் மூலமாக பணம் கிடைக்க நீண்ட நாட்கள் ஆகின்றன, இறந்த மீனவருக்கு உடனடியாக கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே வைத்தார்கள். நம்முடைய தமிழகத்தில் இருந்து மட்டும் தான் அந்த மீனவ காப்புறுதித் திட்டத்தின் மூலமாக அதிகமான பேர் பலன் அடைந்து இருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலையில் 25 நபர்கள் தான் பாக்கியாக இருக்கிறார்கள். நம்புதாளை கிராமத்தில் இருந்து 5 பேருக்கு கொடுக்கவில்லை என்று இங்கே சொன்னார்கள். நம்புதாளை கிராமத்தில் நம்முடைய முதலமைச்சர் நிதியிலிருந்து முதல் கட்டமாக 10 ஆயிரம் ரூபாய் வழங்க ஆவன செய்து இருக்கிறார்கள். 7 பேருக்கு வழங்கியிருக்கிறார்கள். மீதம் உள்ள 5 பேருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தமாக தமிழகத்தில் 25 பேர் தான் பாக்கி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கும் உரிய அரசு விதிமுறைகளை பின்பற்றி ஒழுங்கு முறை

களை பின்பற்றி அதில் முறைகேடுகள் நடைபெறாத வண்ணம் கவனித்து வழங்கவேண்டிய சூழ்நிலை இருப்பதால் தான் அதில் சிறிது கால தாமதம் ஏற்படுகிறது. அதையும் தவிர்த்து விரைவில் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள் முத்து நிறுவனத்தைப் பற்றி. கடந்த காலத்தில் அந்த முத்து நிறுவனம் தமிழ்நாட்டில் தூத்துக்குடியிலும் இராமநாதபுரம் பகுதியிலும் முத்துக் குளிப்பு நடத்தி வந்திருக்கிறது. ஸ்பிக் நிறுவனமும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும் இணைந்து அந்த முத்துத் தொழிலில் ஈடு பட்டது. ஆனால் இடையிலே பல்வேறு காரணங்களால் அந்த நிறுவனம் மூடப்பட்டு இருந்தது. அதை மீண்டும் திறந்து அந்தத் தொழிலை ஊக்கப்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் எந்த வகையில் செயல்படவேண்டும் என்று ஆய்வு செய்ததில் அது செயற்கை முறையில் தான் நாம் அந்தத் திட்டத்தை செயல்படுத்த இயலும் என்று அறிவியல் வல்லுநர்கள் எல்லாம் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினை எந்த அளவுக்கு செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அந்த முத்து நிறுவனத்தை மீண்டும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமே ஏற்று நடைமுறைப்படுத்துவது என முடிவு எடுத்து இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக பல்வேறு பணிகள் நடைபெற்று வந்திருக்கிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நஷ்டத்தில் இயங்குகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னச்சாமி அவர்கள் ஒரு பெரிய குற்றச்சாட்டாக இங்கே எடுத்து வைத்தார்கள். மீன் வளர்ச்சிக் கழகம் லாபத்தில் தான் இயங்கி வந்து கொண்டிருக்கிறது. கடந்த காலத்திலே இருந்த நஷ்டத்தை எல்லாம் ஈடுகட்டி இப்போது அந்த நஷ்டத்தை எல்லாம் இன்னும் நாங்கள் ஒழுங்குப்படுத்த முடியாத சூழ்நிலையில் இந்த அரசு நிறுவனம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால் குமுலேட்டிவ் லாஸ் என்று சொல்வார்களே அந்த நஷ்டந்தானேயொழிய இந்த ஆண்டு நஷ்டம் ஏற்படவில்லை என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

14-10 மணி

அதோடு மட்டுமல்லாமல், மீன் வளர்ச்சிக் கழகத்திலே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளின் மூலமாக ஊதியம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பல்வேறு உறுப்பினர்களுடைய கருத்துக்கள், பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் ஓரளவிற்கு நான் பதில் அளித்து இருக்கிறேன் என்று நான்

1990 ஏப்ரல் 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

நம்புகிறேன். இன்னும் ஒருசில கருத்துக்கள் விட்டுப்போயிருக்குமேயானால் அவைகள் குறித்தும் இந்த அரசு தீவிரமாக அந்தக் கருத்துகளையெல்லாம் மனதிலே கொண்டு அவற்றையெல்லாம் ஆய்வு செய்து முறையாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்ற உறுதிமொழியினை உங்கள் முன் வைத்து இந்தக் கால்நடை மற்றும் மீனளம் குறித்த கருத்துக்களை நல்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும், ஆலோசனை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்து, உங்களுடைய வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் திரும்பப்பெற்றுக்கொண்டு, இந்தத் துறைகளுக்கு வழங்கப்படவேண்டிய தொகையினை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களையெல்லாம் அறிவித்தார்கள். அதற்கு என்னுடைய வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேந்திர கிராமத் திட்டம் என்று சொல்லக்கூடிய முறையிலே, அந்தத் திட்டம், மாநிலத்திலே, நாகர்கோயில், கோயில்பட்டி, சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருச்சி மற்றும் மன்னார்குடி ஆகிய 8 இடங்களில் 583 கிளை நிலையங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகின்றது. இந்தக் கிளை நிலையங்களிலே, பல கிளை நிலையங்களில் லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட், அதாவது கால்நடை உதவியாளர்கள் இல்லாமல் வெறும் அந்த நிலையங்கள் மட்டும் இருக்கிறதே தவிர, 3, 4 கிளை நிலையங்களுக்கு ஒரு லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட் இருப்பதால் அவர்களால் வர முடியவில்லை, போக முடியவில்லை. ஆகவே, அந்தப் பணி செயல்படாமல் இருக்கிறது. இப்போது லைவ்ஸ்டாக் அசிஸ்டென்ட் டிரெயினிங்கூட கிடையாது, கால்நடை உதவியாளர்களை பயிற்றுவிக்கக்கூடிய டிரெயினிங்கூட இப்போது இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, எல்லா கிளை நிலையங்களுக்கும் ஒரு லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட் இருக்கக்கூடிய முறையிலே, அந்தக் கிளை நிலையங்கள் செயல்படும் முறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கிளை நிலையங்களிலேயும் கால்நடை ஆய்வாளர்களை அமர்த்தவேண்டுமென்று இந்த அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. கால்நடை ஆய்வாளர் இல்லாத ஒருசில கிளைநிலையங்கள் இருக்கலாம். கால்நடை ஆய்வாளர் பயிற்சியினை மீண்டும் துவக்குவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு கால்நடை அமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்கு ஒன்றை கொண்டு வருகிறேன். தர்மபுரி மாவட்டம் ஒசூர் வட்டத்தில்தான் நீண்டகாலமாக அரசினுடைய கால்நடைப் பண்ணை இருக்கிறது. இதை மைய மாகக் கொண்டு அங்கே ஒரு கல்லூரியை உருவாக்க அரசு பரிசீலிக்கவேண்டும்.

சென்னையிலும் நாமக்கல்லிலும் இருக்கக்கூடிய கல்லூரி மாணவர்களெல்லாம்கூட பயிற்சிக்காக அங்கே செல்கிறார்கள். அதைவிட அந்த இடத்திலேயே அந்த மாணவர்களுக்கு கல்வியும் பயிற்சியும் இணைந்து போதிப்பது பேருதவியாக இருக்கும் வகையில், ஒரு அரசு கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைக்க அரசு முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு விரிவான விளக்கத்தினை வழங்கி இருக்கின்றேன். ஏனென்று கேட்டால் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கின்றபோது, தமிழ கத்திலே இப்போது 220 பட்டதாரிகள் ஆண்டொன்றுக்கு வெளியே வந்துகொண்டு இருக்கிறார்கள். அந்த 220 பேர் களுக்கும் அரசாங்கத்தின் மூலமாக வேலை வழங்க இயலாது. வேலைவாய்ப்பு இன்மை என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால் அது விபரீத விளைவுகளை ஏற்படுத்தும். ஒசூரிலே கால்நடை உற்பத்தி அதிகமாக இருக்கலாம். அந்த அடிப்படையிலேதான் ஒசூரை மையமாக வைத்து ஒசூரிலே ஒரு உறைவிந்து வங்கி துவங்கப்படவிருக்கிறது. ஒசூர் மாவட்ட கால்நடை பண்ணை தமிழகத்திலேயே ஒரு மிகப் பெரிய பண்ணை. அந்தப் பண்ணை யினுடைய அபிவிருத்திப் பணிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே சில திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி இருக்கின்றோம். கால்நடை மருத்துவக் கல்லூரி என்பது இப்போது தேவையில்லை. துவக்குகின்ற போது, அது தேவை என்று கருதுகின்றபோது அதனை ஆய்வு செய்வோம் என்று தெரிவித்துக்கோள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக்காட்டினார்கள். பல கால்நடை மருந்தகங்களிலே உதவி மருத்துவர்கள் இல்லை என்று சுட்டிக்காட்டினார்கள். என்னுடைய தொகுதி நிறைய கால்நடை செல்வம் உள்ள தொகுதி. அந்தத் தொகுதியிலே இருக்கிற பொங்கலூர் அரசு கால்நடை மருந்தகத்திலேகூட உதவி மருத்துவர் இல்லாத நிலைமை இருக்கிறது. இவைகளெல்லாம் மாற்றி அமைக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம்]

ஒரு முக்கியமான கேள்வி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலப்பின மாடுகளை இங்கே உற்பத்தி செய்வதற்காக ஜெர்சி காளைகளும, ஃபிரிஷியன் காளைகளும் இங்கே தருவிக்கப்படு கின்றன என்று சொன்னார்கள். 140 காளைகள் வர இருப்ப தாகச் சொன்னார்கள். இந்த இரண்டு ரகக்காளைகள் வருகின் கின்றன. ஏன், ரெட்டேனை அறவே நாம் ஒதுக்குகிறோம்? ரெட்டேன், ஏன் தருவிக்கப்படுவதில்லை? ரெட்டேன் நமக்கு ஒத்துவருவதில்லையா என்று அறிய விரும்புகிறேன். காரணம், ரெட்டேன் வகைகள், அதைவிட அதிகமாகப் பால்தருவதாக பொதுவான கருத்து இருக்கிறது. எனவே ரெட்டேனை தருவிப் பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

14-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர்கள் பதவிகள் காலியாக இருக்கின்றன என்று தெரிவித்தார்கள். தற்சமயம் அவ்வாறு நிலை இல்லை. ஏதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தால் அவர்கள் விடுமுறையில் சென்றிருக்கக் கூடும். அப்படி காலியாக இருப்ப தாகக் குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 'ரெட்டேன்' இறக்குமதிபற்றி சொன்னார்கள். நம்முடைய தமிழ் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு 'ரெட்டேன்' ஒத்து வராது. அதன் காரணமாக இறக்குமதி செயப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடம்புக்கு ஒத்துவராது என்பதுதான் ஒரே வரி விடை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்பகுதிகளில் தடுப்பூசி போடுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் ஊரிலும் தடுப்பூசி போட்டார்கஸ். எனக்கும் ஆடு, மாடு நிறைய இருக்கிறது. அந்த ஆடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதில் 10–15 நாட்க ளுக்குப் பிறகு கடந்த வாரம் நான் ஊருக்குச் சென்றிருந்த நேரத்தில், அப்படித் தடுப்பு ஊசி போடப்பட்ட ஆடுகள் என்னுடைய பட்டியில் சில ஆடுகள் இறக்கின்ற தருவாயில். இருந்தன. பக்கத்தில் விசாரித்ததில் 7–8 ஆடுகள் இறந்திருப்ப தாக சொன்னார்கள். அதுகுறித்து ஆய்வு செய்து தரமான மருந்துகள் போட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : அவருடைய ஆடுகள் 1—2 இறக்கும் தருவாயில் இருப்பதாகச் சொல்கிறார். எல்லா மருந்துகளுக்கும் சைடு ஆக்ஷன் இருந்து ஒரு சில ஆடுகளுக்கு ஒத்துக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். அதையெல்லாம் கருத்தில் கொள்ள இயலாது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பிய பொருளாதார அடிப்படையில் அங்கிருந்து 13 கோடி ரூபாய் செலவில் ஆடுகளை வாங்குகிற காரணத்தால் ஏற்கெனவே அங்கே கால்நடை மருந்துகங்களில் பணியாற்றிய மருத்துவர்கள், அந்தப் பணிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். ஆகவே செங்கை அண்ணா மாவட்டத்தில் மிக முக்கியமான மருத்துவப் பணியாளர்கள் இடங்கள் காலியாக இருக்கின்றன. அவைகளை நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதோடு மட்டுமல்லாமல் (குறுக்கீடு) இன்றைக்கிருக்கிற பிரச்சினை எல்லாம், பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்து நாம் செய்வது எல்லாம், ஆடுகளையும் மாடுகளையும் வேறு மாநிலங்களுக்குக் கொண்டு சென்று வெட்டுவதற்கான வழிவகை இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். தாய்ப் பால் இல்லாத குழந்தைகளுக்கும் பால் கொடுக்கிற பசுமாடுகளை வெட்டுவதை அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : அரசு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை ஆய்வு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 21 மீனளம்.

திரு. என். பழனிவேல் மற்றும் திரு. ஆர். நடேசன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ரூ. 10,04,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 22 கால்நடை வளர்ப்பு.

திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி மற்றும் திரு. ஆர். சிங்காரம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,98,32,000–க்கு மேற்படாததொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6—4—1990) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 14–19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

2. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

71. கோரிக்கை எண். 21—மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

72. மீன்வளத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1990–91 (ஆங்கிலம்).

73. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை 1989-90 (தமிழ்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) கோரிக்கை எண். 22 கால்நடை வளர்ப்பு.

திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி மற்றும் திரு. ஆர். சிங்காரம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,98,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6—4—1990) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 14-19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

2. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

71. கோரிக்கை எண். 21—மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

72. மீன்வளத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1990-91 (ஆங்கிலம்).

73. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை 1989-90 (தமிழ்).

[1990 ஏப்ரல் 5

74. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை 1989–90 (தமிழ்).

75. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை 1989–90 (தமிழ்).

76. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

(65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மீன் வளத்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1990–91.

1. முன்னுரை :

மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கு புரதச்சத்து இன்றியமையாதது ஆகும்.

உடல் நலிந்தோருக்கு ஏற்றதாகவும் புரத சத்துள்ள உணவாகவும் உள்ளதால், மீன் ஊட்டச்சத்துள்ள உணவின் தரத்தினை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் ஊட்டச்சத்தின் குறைவினை சீர்செய்யும் நாட்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காணவும், வேலைத் திறனை அதிகரிக்கவும் வழி வகுக்கிறது. தமிழ்நாட்டில், அதிக அளவில் , உள்நாட்டு மற்றும் கடல் மீன் வளங்கள் உள்ளன. இந்த வளத்தினை நன்கு பாதுகாத்து வளர்த்திடவும், மீன் தொழிலையே நம்பியிருக்கும் மீனவ மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தினை சீராக்கிடவும் குறிக்கோளாகக் கொண்டு, மீனளத்துறை 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வரும் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளின் பயனாக, இத்துறை மிகப் பெரிய அளவில் மீனள அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த முடிகிறது. இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் 15 விழுக்காடு தமிழ்நாடு உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

[1990 ஏப்ரல் 5

74. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை 1989–90 (தமிழ்).

75. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை 1989–90 (தமிழ்).

76. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

இணைப்பு I.

(65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மீன் வளத்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1990–91.

1. முன்னுரை :

மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கு புரதச்சத்து இன்றியமையாதது ஆகும்.

உடல் நலிந்தோருக்கு ஏற்றதாகவும் புரத சத்துள்ள உணவாகவும் உள்ளதால், மீன் ஊட்டச்சத்துள்ள உணவின் தரத்தினை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் ஊட்டச்சத்தின் குறைவினை சீர்செய்யும் நாட்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காணவும், வேலைத் திறனை அதிகரிக்கவும் வழி வகுக்கிறது. தமிழ்நாட்டில், அதிக அளவில் , உள்நாட்டு மற்றும் கடல் மீன் வளங்கள் உள்ளன. இந்த வளத்தினை நன்கு பாதுகாத்து வளர்த்திடவும், மீன் தொழிலையே நம்பியிருக்கும் மீனவ மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தினை சீராக்கிடவும் குறிக்கோளாகக் கொண்டு, மீனளத்துறை 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வரும் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளின் பயனாக, இத்துறை மிகப் பெரிய அளவில் மீனள அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த முடிகிறது. இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் 15 விழுக்காடு தமிழ்நாடு உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

1990 ஏப்ரல் 5]

2. மீன்வளம் குறித்த அரசின் கொள்கை :

2.1. மீனள அபிவிருத்தி மற்றும் மீனவர் சமுதாய நலத்தினை மேம்படுத்துதல் இத்துறையின் கொள்கைகளாகும். துறையின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :—

1. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்.

2. குறைந்த விலையில், எளிதில் கிடைக்கக்கூடிய புரதச் சத்துள்ள மீன் உணவை அளித்தல்.

3. அந்நியச் செலாவணியை அதிகரித்தல்.

4. வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

5. மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

6. ஊரக வருவாயை அதிரிக்க உதவுதல்.

2.2. கடந்த காலத்தில் இத்துறை தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியால், தமிழ்நாட்டில் 1952-ல் 0.82 இலட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி, 1989-90-ல் 3.75 இலட்சம் டன்னாக குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது.

2.3. எனினும் தமிழ்நாட்டில் மீனள அபிவிருத்திக்கு சில இடர்பாடுகளும் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து நிலவிவரும் வறட்சி காரணமாக மீன் உற்பத்தி செய்யக் கூடிய நன்னீர் நிலங்களின் பரப்பளவு கணிசமாக குறைந்து விட்டது. கடல் மணல் சேர்ந்து, முகத்துவாரங்கள் அடைபட்டதால், உவர் நீர் மீன் வளர்ப்பில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இது போன்று இயந்திர உதிரி உறுப்புகள் மற்றும் எரியெண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாக கடல் மீன் உற்பத்தியிலும் தேக்கம் ஏற்பட்டது.

2.4. ஊட்டச்சத்து மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இருக்கின்ற மீன்வள வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதுதான் துறையின் முக்கிய கோட்பாடாகும். இதற்கென மீன்பிடிப்பு, பதப்படுத்துதல், விற்பனை செய்தல், மீன்பிடி தளவாடங்களின் பராமரிப்பு மற்றும் உள்ளமைப்பு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான சீர்திருத்தங்களை மேற்கொள்வது முக்கிய குறிக்கோளாகும். இதற்கென பல வளர்ச்சிப் பணிகளை துறை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ள உத்தேசித்து உள்ளது.

[1990 ஏப்ரல் 5

3. மீன்வள வாய்ப்புகள் :

3.1. உள்நாட்டு மீன்வளம் :

தமிழகத்திலுள்ள 7.98 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர் நிலைகளில் மீன் வளர்ப்பிற்கு உகந்தது 3.70 இலட்சம் ஹெக்டேர் மட்டும் தான். இவற்றில் 0.52 இலட்சம் ஹெக்டேர் நீர்த் தேக்கங்களும், 0.97 இலட்சம் ஹெக்டேர் பெரும் பாசனக் குளங்களும், 1.58 இலட்சம் ஹெக்டேர் சிறு பாசனக் குளங்களும், குட்டைகளும் ஆகும். இவற்றைத் தவிர ஆறுகள், கால்வாய்கள், கழிமுக நீர்ப்பரப்பு, உப்பங்கழிகள் மற்றும் இதர நீர்ப்பரப்புகளும் அடங்கும். தரமான மீன் குஞ்சுகள் உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்குவதற்கு முக்கிய தேவையாகும். 27 ஹெக்டேர் பரப்பளவுள்ள மீன் விதை பண்ணைகளில் பொறிப்பக முறையில் 42 மில்லியன் மீன் குஞ்சுகளையும் நீர்நிலைகளில் இயற்கையாக கிடைக்கும் மீன்குஞ்சுகளை சேகரிப்பதன் மூலம் 18 மில்லியன் மீன்குஞ்சுகளையும் துறை உற்பத்தி செய்கிறது. மேலே குறிப்பிட்ட 0.52 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள அனைத்து பெரும் நீர்த்தேக்கங்களிலும் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆனால் பாசனக் குளங்களில் 32,000 ஹெக்டேர் மட்டுமே மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீன் வளர்ப் போர் மேம்பாட்டு முகமை மூலமாக 4,000 ஹெக்டேர் சிறு குளங்களில் தீவிர மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகமான நீர் நிலைப் பரப்புகளை மீன் வளர்ப்பின்கீழ் கொணர்தல், ஒரு ஹெக்டேர் பரப்பில் ஆண்டு மீன் உற்பத்தியினை அதிகரித்தல் ஆகியவை நன்னீர் மீன்வளர்ப்பின் வளர்ச்சிக்கென துறை மேற்கொண்டுள்ள முக்கிய முயற்சிகள். இதற்கான வழி அதிகமான மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் அக்குஞ்சுகளின் தரத்தை உயர்த்துதல் ஆகும்.

3.2. கடல் மீன்வளம் :

தமிழ்நாட்டில் 1,000 கி.மீ. நீளமுள்ள கடலோரப் பகுதியும், அதனையொட்டி 41,412 சதுர கி.மீ. கடற்படு நிலத் தொடரும் (continental shelf) உள்ளது. தமிழகத்தின் அடிப் படை வசதிகளுடன் கூடிய, 9 பெரிய மீன் இறங்குதளங்கள் உள்ளன. இது போன்ற வசதிகள் மேலும் மூன்று இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கடலோரப் பகுதியில், கடல் மீன்பிடிப்பில் 7,677 விசைப் படகுகளும், மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளும், 42,621 நாட்டுப் படகுகளும் ஈடுபட்டுள்ளன. 4.64 இலட்சம் மக்கள் தொகை கொண்ட கடல் மீனவ சமுதாயத்தில், கால்பங்கு மீனவர் மீன்பிடி தொழில் செய்பவர்கள். இந்தியாவின் பிரத்தியேகப் பொருளாதார எல்லைப் பகுதியில் (E.E.zone) உள்ள தூரக்கடல் பகுதிகளில்

1990 ஏப்ரல் 5]

தீவிர மீன்பிடிப்பு மேற்கொள்ள முயற்சிகள் இன்னும் எடுக்கப்பட வேண்டும். நமது கடல் மீன்வள வாய்ப்பு வருடத்திற்கு 8 இலட்சம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக்குறியீட்டினை எய்த மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை மற்றும் உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும்.

3.3. கடலோர மீன் வளர்ப்பு :

0.56 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உவர் நீர்ப்பரப்பும், அதனையொட்டிய தாழ்வான நிலப்பகுதியும் தமிழ்நாட்டில் உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. துறையின் முன்மாதிரி ஆய்வின் மூலம் இருக்கின்ற மொத்தப் பரப்பில் சுமார் 0.16 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு நவீன மீன் பண்ணைகள் அமைத்திட உகந்தவை எனத் தெரிய வந்துள்ளது. மேலும் நுண்ணிய ஆய்வினை இத்துறை மேற்கொண்டு 3,000 ஹெக்டேர் நிலப்பரப்பு இறால் வளர்ப்பிற்கு உகந்ததென தேர்ந்தெடுத்துள்ளது.

3.4. நிதிநிலை :

3.4.1. மீனளத்துறையின் ஏழாவது ஐந்தாண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 2,400 இலட்சம் ஆகும். முதல் நான்காண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 2,052.58 இலட்சம் ஆகும். 1989-90 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 603.94 இலட்சம் ஆகும். எனவே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்தச் செலவு ரூபாய் 2,656.52 இலட்சம் ஆகும்.

3.4.2. 1990–91-ம் ஆண்டில் மீன்வளத்துறை மேம்பாட்டிற்காக ரூ. 400.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை மீனவர் நலன், ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கம் ஆகிய திட்டங்களுக்கும் செலவு செய்யப்படும்.

3.4.3. 1990–91-ம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தில் ரூபாய் 21.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1990–91-ம் ஆண்டில் திட்டமில்லா பணிகளுக்கென ரூ. 667.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. 1990–91-ல் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் :

4.1. உள்நாட்டு மீன்வளம் :

4.1.1. கணிக்க இயலாத பருவமழை காரணமாக பயன்படுத்தத் தக்க நன்னீரியல் பரப்பு பெருமளவு மாறுபடுகிறது. இயற்கை நீர்நிலைகளில் மீன்வளத்தின் தரம் குறைவாக இருப்

[1990 ஏப்ரல் 5

பதால், அவற்றில் மீன் உற்பத்தி பெருகிட தரம் வாய்ந்த மீன் குஞ்சுகளை இருப்பு செய்வது அவசியமாகிறது. வருடத்திற்கு 170 மில்லியன் மீன்குஞ்சுகள் தேவைப்படுகிறது என கணக்கிடப் பட்டுள்ளது. ஆனால், மொத்தத் தேவையில் 60 மில்லியன் மீன் குஞ்சுகள்தான், மீன்குஞ்சு பொறிப்பகங்களிலிருந்தும், நீர் நிலைகளிலிருந்தும் உற்பத்தி செய்ய இயலும். வருடத்திற்கு 100 மில்லியன் மீன்குஞ்சு உற்பத்தித் திறனை எய்திட தற்போதுள்ள மீன் பண்ணைகளை விரிவுபடுத்துதல் மற்றும் பவானிசாகர் மற்றும் மணிமுத்தாறு ஆகிய இரண்டு 10 ஹெக்டேர் தேசிய மீன் பண்ணைகளின் கட்டுமானப் பணிகள் முடித்தல் ஆகியவற்றை துறை இலக்காகக் கொண்டுள்ளது. எஞ்சிய தேவையான 70 மில்லியன் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்ய வெளிநாட்டின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த திட்டமொன்றை கூட்டுறவுகளின் வழியாக செயல்படுத்தி அதன் மூலம் 20 மில்லியன் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதம் 50 மில்லியன் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய ஒரு மில்லியன் மீன்குஞ்சு உற்பத்தித் திறன் கொண்ட 50 நிலையங்களை நிறுவ தனிப்பட்ட மீன் வளர்ப்போர் அல்லது மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அல்லது கூட்டுறவுச்சங்கங்களுக்கு தேவைப்படும் உதவிகள் மற்றும் ஊக்கத் தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பகுதி தீவிர மீன் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், அதிக நீர்நிலைகளை துறை படிப்படியாக ஏற்கும்போது இத்தேவை அதிகரிக்கும். தனியார் துறையில் மீன் குஞ்சு உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது. எனவே, தனியார் துறையில் மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஒரு மில்லியன் மீன் குஞ்சு உற்பத்தி செய்ய அமைக்கப்படும் ஒரு நிலையத்திற்கான முதலீட்டுத் தொகை ரூ. 3.60 இலட்சம் ஆகும். 1990–91-ல் இத்தகைய நிலையத்தை துவக்கும் ஒரு மீன்வளர்ப்பவருக்கு மொத்த செலவினத் தொகையில் 25 விழுக்காடு ஊக்கத் தொகையாக அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.1.2. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திட்டத்தின் கீழ், ஊக்கமுடைய மீன்வளர்ப்போர்களால் கலப்பின மீன் வளர்ப்பு முறையில் ஹெக்டேருக்கு ஒரு டன் முதல் 3 டன்னுக்கும் மேலாக மீன் உற்பத்தி செய்யப்படுவதை கவனத்தில் கொண்டு வயல்களிடையே மீன்பண்ணை குட்டைகள் அமைக்கும் திட்டம் ஒன்று உருவாகியுள்ளது. இத்திட்டம் குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி டெல்டாவின் இறுதிப்பகுதியில் பல்வகைப் பயன்பெறும் நோக்குடன் செயல்படுத்தக் கூடிய திட்டமாகும். வயல்களிடையே சுமார் 8 அடி ஆழமுள்ள சிறு குட்டைகளை அமைத்து, அதில் மழைக் காலங்களில் உபரியாக ஓடும் நீரைத் தேக்கி வைத்துக்கொண்டு சுற்றியுள்ள நெற்பயிர் பாசனத்துக்கு பயன்படுத்தலாம். முடிந்தால் கோடையில் நீர் அதிகம் தேவைப்படாத பயிர்களை பயிரிடலாம்.

1990 ஏப்ரல் 5]

இக்குட்டையில் தீவிர மீன்வளர்ப்பும் மேற்கொண்டு கணிசமான கூடுதல் வருமானத்தைப் பெறலாம். கரையில் தென்னை, மூங்கில்களை வளர்க்கலாம். இத்திட்டம் கூடுதல் நீர்ப்பாசனத் ற்கும் மீன்வளம் மற்றும் இலாபம் தரும் மரங்கள் பயிரிடு வதற்கும் ஏதுவாக கிடைக்கும் உபரிநீரை விணாக்காமல் நல்ல முறையில் பயன்படுத்தி கூடுதல் வருவாய் பெறுவதற்கு உகந்த திட்டமாகும். ஒரு ஏக்கர் பரப்புள்ள குளம் அமைக்க ரூ. 48,000 செலவாகும். இதில் 20 விழுக்காடு அரசு மானியமாக வழங்கப்படும். விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பில் பயிற்சி அளிப் பதும் இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்தை செயலாக்க 1990-91-ல் முதன் முதலில் ஒரு ஏக்கர் பரப்புள்ள 10 பண்ணைக் குட்டைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 20 விழுக்காடு மான்யம் வழங்கவும், பயிற்சி அளிக்கவும் ரூ. 0.98 இலட்சம் செலவு ஆகும். இத்தகைய கூடுதல் நீர் வசதியில் நெல் உற்பத்தி ஏக்கருக்கு 400 கிலோ கூடுதலாகவும், மீன் உற்பத்தியில் ஆண்டுக்கு 800 கிலோவும் மகசூல் கிடைக்க வழி உண்டு. இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டால் படிப்படியாக அதிக அளவு விரிவுபடுத்தப்படும்.

4.1.3. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நன்னீர் நிலைகளில் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கென உயர் தொழில் நுட்ப மீன்வளர்ப்பு முறைகளை மேற்கொள்ளவும், நன்னீர் இறால் குஞ்சு பொறிப்பகம் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

4.1.4. தமிழ்நாடு உள்நாட்டு மீன்வள குத்தகை மற்றும் உரிமம் விதிகள் பழவேற்காடு ஏரியில் மீன் உரிமம் வழங்கும் முறைக்கு வழிவகை செய்கிறது. இவ்விதிகள் விரிவானது ஆக வும், உரிமம் வழங்குதல், குறைந்த உரிமத்தொகை நிர்ண யித்தல், மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும். வலைகளின் தன்மை, வலைக் கண்ணிகளின் அளவு ஆகியவற்றை நிர்ணயிப்ப தாகவும், இதனால் மீன் வளத்தை அழிக்கும் வகையில் மீன்கள் வளர்ப்பதற்கு முன் குஞ்சிலேயே அவைகளைப் பிடிப்பதைத் தவிர்க்க வழி வகுப்பதாகவும் உள்ளன. பழவேற்காடு ஏரியில் கீழ்க்கண்ட காரணங்களுக்காக உரிமம் வழங்கும் முறையைப் புகுத்த வேண்டும்.

(1) பழவேற்காடு ஏரியில் மீன்பிடித்தலை தொழிலாக மேற்கொண்டுள்ள சுற்றியுள்ள பல கிராமங்களில் மீனவர்களின் நலனை பாதுகாத்தல் மற்றும் அதன் மூலம் சட்டம் ஒழுங்கை பராமரித்தல்.

(2) இந்த ஏரியில் உள்ள மீன்வளத்தை பாதுகாத்து அதன் மூலம் நிலையான மீன் வளத்தைப் பராமரித்தல் மற்றும் அறி வியல் ரீதியில் மீன்பிடித்தலை முறைப்படுத்தல்.

[1990 ஏப்ரல் 5

தற்போது பழவேற்காடு ஏரியில் பாரம்பரிய முறையான 'பாடு' என்னும் முறையில் மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது. ஸ்ரீஹரிகோட்டா அணு ஆராய்ச்சி திட்டத்தின் காரணமாக வடக்கிலிருந்த நான்கு மீனவர் கிராம மக்கள் வெவ்வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டதன் விளைவாக பழவேற்காடு பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களிலுள்ள மீனவர்களிடையே பூசல் மற்றும் பகையுணர்ச்சி நிலவி வருகிறது.

உரிமம் வழங்கும் முறையை செயற்படுத்துவதன் மூலமாக இந்த அபாயகரமான போக்கினைத் தடுக்கும் சந்தர்ப்பம் வந்துள்ளது. 1990–91-ல் இந்த முறையை செயல்படுத்துவதன் மூலம், அனைத்து மீனவருக்கும் மீன்பிடிப்பில் சம உரிமை கிடைக்க வழிவகை ஏற்படுவதும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவும் கிடைக்க வழி ஏற்படும்.

4.1.5. மேற்குறிப்பிட்ட புதிய திட்டங்களுடன் தற்போது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்த்தேக்க மீன் வளத் திட்டம், சினைப் பொறிப்பகங்களை நிறுவுதல், மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் 32,000 ஹெக்டேர் நீர்ப்பரப்புள்ள பாசன குளங்களில் செயல்பட்டுவரும் தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டம், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மூலம் நவீன தொழில் நுட்ப முறைகளில் தீவிர மீன் வளர்ப்பினைத் தொடர்தல் ஆகிய பணிகள் 1990–91-ல் தொடரப்படும். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் நிர்வாகத்தில் 4,000 ஹெக்டேர் பரப்புள்ள சிறிய குளங்கள் உள்ளன. இவற்றில் ஆண்டுக்கு ரூ. 180 இலட்சம் மதிப்புள்ள 2,244 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு அதன் மூலம் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் 4,467 பேர் பயன் அடைகின்றனர்.

கடல் மீன் வளம் :

4.2.1. பிரத்யேக பொருளாதாரக் கடல் எல்லைக்குள், தமிழ் நாட்டிற்கு கடல் மீன் 3·82 இலட்சம் டன்னிலிருந்து 8.00 இலட்சம் டன் வரை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை நடத்திய அண்மைக் கடல் மீன் பிடிப்பினைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத் திட்டங்களில் ஆழ் கடல் மீன் பிடிப்பு மற்றும் தூரக் கடல் மீன் பிடிப்பு நடத்துவதற்காக அதிக முதலீடு செய்ய வேண்டும். பாரம்பரிய மீனவர்களால் பிடிக்கப்படும் கடல் மீன் அளவு மொத்த மீன் பிடிப்பில் சுமார் 52 விழுக்காடாகும். பெரும்பாலான பாரம்பரிய மீனவர்கள் சொந்த மீன் பிடி கலன்கள் இல்லாமல், மற்றவர்களிடமிருந்து வாடகைக்கு மீன்பிடி கலன்களை எடுத்து உபயோகிக்கின்றனர். பாரம்பரிய மீனவர்களின் வருவாயினை அதிகப்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

படுத்தவும் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கவும் உதவும் வகையில் அவர்கள் மீன்பிடி கலன்கள் வாங்கிக் கொள்ள தொடர்ந்து உதவி செய்ய வேண்டியுள்ளன. ஆனால் சிறு மீனவர்கள் தற்போதைய வங்கிக்கடன் வசதி திட்டங்களின் கீழ், வங்கிகளிடமிருந்து கடன் வசதி பெற மிகவும் கஷ்டப்படு கிறார்கள். மேற்கண்ட இடர்ப்பாடுகளிலிருந்து மீனவர்களை விடுவித்து மேம்பாடு அடையச் செய்திட சுழல் நிதித் திட்டம் என்ற திட்டத்தினை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக செயல்படுத்தப்படவுள்ளது.

4.2.2. இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவோர்களின் பங்கு மற்றும் வங்கிக் கடனை எதிர்பாராமல் மாநில அரசு 30 கட்டு மரங்கள் வாங்கிட ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 4.50 இலட்சம் கடனுதவி அளிக்கும். இந்த 30 கட்டு மரங்களும் 30 மீனவர்களுக்கு குலுக்கல் முறையில் வழங்கப்படும். மீனவர் களிடமிருந்து திரும்பப் பெறும் தொகைகளைக் கொண்டு மற்ற மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கட்டு மரம் வாங் கிக்கொள்ள நிதியுதவி அளிக்கப்படும். மீனவர்கள் அவர்கள் வாங்கும் கடன் தொகையை தாமாகத் திருப்பிச் செலுத்த வற்புறுத்தச் செய்வதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

4.2.3. 1990–91 ஆம் ஆண்டில் மூன்று மீனவர் கூட்டுறவுச்சங் கங்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைய உள்ளன. இதற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 13.50 இலட்சம் ஆகும். இந்த திட்டம் சீரிய முறையில் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினால் செயல்படுத் தப்பட்டால் அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 84 மீனவர்கள் பயனடைவார்கள்.

4.2.4. தமிழ்நாடு கடலோர குறிப்பிட்ட சில பகுதிகளில் கடல் மீன் பிடிப்பில் வள்ளங்கள் உபயோகித்து மீனவர்கள் மீன் பிடித்தலில் சாதனை படைத்தாலும் வெகு நாட்களாக அவர்கள் வள்ளங்கள் வாங்கிக் கொள்ள எந்த உதவியும் வழங் கப்படவில்லை. பாரம்பரிய மீனவர்கள், சொந்தமாக வள்ளங் கள் வாங்கிக் கொள்ள நிதியுதவி கேட்டு வருகின்றனர். மற்ற மீன்பிடி கலன்களுக்கு அரசு 20 விழுக்காடு மானியம் வழங் குவது போல வள்ளங்கள் வாங்குவதற்கும் மானியம் வழங்கப் பட வேண்டும். 20 விழுக்காடு பயனடைபவர் பங்குத் தொகை செலுத்த முன்வரும் பாரம்பரிய மீனவர்கள் இந்தத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வள்ளத்தின் விலையில் 60 விழுக்காடு மீனவர் வங்கியின் மூலம் கடன் வசதி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வள்ளத்தின் விலை சுமார் 0.60 இலட்ச ரூபாயில், 1990–91-ம் ஆண்டில் இத்திட்டத்தில் மீனவர்கள் 10 வள்ளங்கள் வாங்கிக் கொள்ள அரசின் 20 சதவிகிதம் மானிய மாக ரூ. 1.20 இலட்சம் வழங்கப்பட உள்ளது.

4.2.5. கட்டு மரங்கள், வள்ளங்கள் முதலியவைகளுக்குத் தேவையான தரமான மரங்களின் தட்டுப்பாட்டினாலும், மரத்தாலான படகுகளுக்குத் தேவையான தங்கு தள வசதிகள் அளிக்க செலவு அதிகரித்து வருவதாலும் கண்ணாடியிழையிலான படகுகள் கரையேற்றும் படகுகள் ஆகியவற்றை பிரபலப் படுத்த வேண்டியது அவசியமாகிறது. தற்போது அறிமுகப் படுத்தப்பட்ட மீன்பிடி தொழிலில் பயன் படுத்தப்படும் இப் படகுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். கரை யேற்றும் படகுகளின் மூலம் மீன்பிடி தொழிலின் இயக்கத் திறன் வரவேற்கத் தக்கவாறு உள்ளன. கண்ணாடி இழைப் படகு கரையேற்றும் படகு ஆகியவற்றை இத்துறையின் மூலம் பல இடங்களில் சோதனை ஓட்டம் நடத்தியதன் பயனாக கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் இப்படகுகளின் செயல் திறன் மற்றும் சிக்கனமான செலவினத்தையும் தெரிந்துள்ளார்கள். இதனால் இந்த புதிய வகையான கரையேற்றும் படகுகளைப் பெற்றிட மீனவர்களிடையே தேவையை ஏற் படுத்தி உள்ளது. இந்த மீன்பிடி கலன்கள் வாங்கிக் கொள்ள மீனவர்களை ஊக்குவிக்க முந்தைய ஆண்டுகளில் இருந்ததுபோல அரசின் 20 விழுக்காடு மானியம் வழங்கப்பட வேண்டும். இதன் படி மீனவர் தங்கள் பங்கு 20 விழுக்காடு செலுத்தி படகு மற்றும் வலையின் விலையில் 60 விழுக்காடு வங்கிக் கடன் வசதி பெறும் மீனவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைய தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 1990–91-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 3.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மானியத் திட்டத்தின் மூலம் ஒரு கரையேற்றும் படகு, வலையின் விலை ரூ. 1.80 இலட்சம் வீதம் 10 படகுகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது.

4.2.6. கட்டுமரம் மற்றும் நாட்டுப் படகுகளில் வெளிப் பொருத்தும் உட்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்திக் கொள்ள குறிப்பாக தென் மாவட்டங்களிலுள்ள பாரம்பரிய மீனவர்களிடையே அதிக அளவில் வரவேற்பு உள்ளது. 1987–88-ம் ஆண்டு முதல் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் 50 விழுக்காடு மானியம் ஒரு இயந்திரத்திற்கு ரூ. 7,500-க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது. 1989–90-ம் ஆண்டிற்கும் மத்திய அரசு 113 இயந்திரங்களுக்கு மானியம் வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளது. இதே திட்டத்தில் 1989–90-ல் மேலும் கூடுதலாக 600 இயந்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான மொத்த மானியத் தொகை ரூ. 53.48 இலட்சம் ஆகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5,000 இயந்திரங்கள் மானிய அடிப்படையில் மீனவர்களுக்கு விநியோகிக்கப்பட வுள்ளது. இத்திட்டத்திற்கான மானியத் தொகை ரூ. 375.00 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 1990–91-ம் ஆண்டில் 1,000 இயந்திரங்கள் விநியோகிக்க மானியம் ரூ. 75.00 இலட்சம் தேவைப்படும். 1990--91 ஆம் ஆண்டில் கடல் மீன் உற்பத்தியினை 2.85 இலட்சம் டன்னிலிருந்து 2.92 இலட்சம் டன்

1990 ஏப்ரல் 5]

ஆக உயர்த்துவதும், எட்டாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் 3.20 இலட்சம் டன் வரையிலும் அதிகரிப்பதே இத்திட்டங்களின் முக்கிய குறிக்கோளாகும்.

4.2.7. மீன் பிடித் தொழிலுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் மீன் பிடித் துறைமுகம், ஜெட்டி மற்றும் கரைச் சுவர் ஆகிய மீன் இறங்கு தள வசதிகள் ரூ. 1,581.15 இலட்சம் செலவில் ஒன்பது இடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவ்விடங்களில் 1,179 மீன் பிடிப் படகுகளும் மற்றும் 60 மீன் பிடி நாவாய்களும் தங்கிச் செல்ல முடியும். இது போன்ற வசதிகள் ரூ. 902.10 இலட்சம் செலவில், சின்ன முட்டம், வாலிநோக்கம் மற்றும் தொண்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வசதிகள் கட்டி முடிக்கப் பட்டு உபயோகத்திற்கு வந்த பின் மேலும் 490 படகுகள் மற்றும் 10 நடுத்தர வகை நாவாய்களுக்கு தங்குதள வசதிகள் கிடைக்கும். இம் மூன்று இடங்களுள், தொண்டி மீன் இறங்கு ஜெட்டி, 1990 மார்ச் திங்களில் முடிவுறும். புதுக் கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப் பட்டினத்தில் மேலும் ஒரு மீன் இறங்கு ஜெட்டி அமைக்கப்படவுள்ளது. இம் மீன் பிடி துறைமுகங்கள் அமைத்திட மத்திய அரசு 50 விழுக்காடு நிதியுதவி அளிக்கிறது.

4.2.8. ஒவ்வொரு மீன் பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு ஜெட்டியில் அடிப்படை வசதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. பனிக்கட்டி நிலையம், சமுதாய நலக் கூடம் மீன் உலர்த்தும் மேடைகள் வலை பழுது பார்க்கும் கூடம், இணைப்புச் சாலைகள் அமைத்தல் ஆகியவை முக்கிய அடிப்படை வசதிகளாகும். மேலும் மீன்பிடி துறைமுகங்கள்/தங்குதள வசதிகள் அமைக்க இயலாத முக்கிய மீன் இறங்கு தளங்களில் ஏலம் மற்றும் சிப்பகூடம், வலை பொத்தும் கூடம், சமுதாய நலக்கூடம், பனிக்கட்டி நிலையம், பழுது பார்க்கும் கூடம், இணைப்புச் சாலைகள், சுற்றுச் சுவர் நீர் மற்றும் மின்வசதி ஆகிய சிறு தங்குதள வசதிகளும் படிப்படியான திட்டமாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான வசதிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏர்வாடியிலும் ரூ. 37.60 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. படிப்படியாக இத்திட்டத்தின் கீழ் மேலும் 11 கரையோர கிராமங்களில் இவ்வசதிகள் ஏற்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் மற்றும் வெள்ளப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோடி முனை மற்றும் வள்ளவினை ஆகிய 4 இடங்களில் இவ்வசதிகள் ஏற்படுத்திட கருத்துரு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்படவுள்ளது.

4.2.9. விசைப் படகுகளை இயக்கிட மனித சக்தியை உருவாக்கவும், நல்ல செயல் முறையில் மீன் பிடித்தலுக்கும், மீனவ இளைஞர்களுக்கு பலதரப்பட்ட நவீன மீன்பிடிப்பு முறைகளி

[1990 ஏப்ரல் 5

லும், மாலுமியியலிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள 6 மீனவ பயிற்சி நிலையங்கள் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் இளநிலை கம்மியர் பயிற்சியும், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய மூன்று மீனவர் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. இந்நிலையங்களில் பயிற்சி பெறுபவர் துறைமுகக் கழகம், மத்திய அரசு நிறுவனங்கள், கடற்படை ஆகிய பிரிவுகளில் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

4.2.10. அண்மைக் கடல் பகுதியில் மீன்வள உள்ளாற்றலை மதிப்பிடவும் அதனை கரையோர மீனவர்களுக்கு தெரிவித்திடும் பொருட்டும், ஐந்து அண்மைக் கடல் மீன்பிடி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்நிலையங்கள் தூரக் கடல் பகுதிகளை அளவை செய்திடவும், கடல் மீனள விரிவாக்கப் பணியை மேற்கொள்ளவும் வேண்டி அதற்குத் தேவையான மீன்பிடிக் கலங்களை இந்நிலையங்களுக்கு அளிப்பதே எதிர்காலத் திட்டமாகும்.

4.2.11. 1983 ஜனவரி திங்கள் 6 ஆம் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு கடற்கரைப் பகுதி முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியில், கடலில் மீன்பிடிக் கலன்களைக் கொண்டு மீன்பிடிப்பதை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், தடை செய்தல், மற்றும் மீன்பிடிக் கலன்களை பதிவு செய்தல் ஆகியவற்றிற்கு வழி வகை செய்ய தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு முறைச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இச்சட்டம் இத்துறையின் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்களால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தை தீவிரமாகச் செயலாக்கத்திற்கென ரோந்துப் பணியில் ஈடுபடுத்த ரோந்துப் படகுகளை அதிகரிப்பதும், அதற்கான பணியாளர்களை அதிகரிப்பதும் வருங்காலத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

4.3. கடலோர மீன் வளர்ப்பு :

4.3.1. மத்திய அரசின் நிறுவனங்களுடன் கலந்து உவர் நீர்ப் பரப்புகளில் மீன் மற்றும் இறால் வளர்க்க தகுந்த முறைகளை மீன் துறை அபிவிருத்தி செய்துள்ளது. சுமார் 16,000 ஹெக். பரப்பளவு உவர்நீர் மீன் வளர்ப்பிற்கு ஏற்றதாக கண்டறியப்பட்டுள்ளது. 3,000 ஹெக். பரப்பில், நுண்ணிய அளவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை, உவர் நீர் மீன் வளர்ப்பிற்கென சுமார் 100 ஹெக். அரசாலும், தனிப்பட்ட நபர்களாலும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மாநிலத்தில் பரந்துள்ள உவர் நீர்ப் பரப்பில் கூடுதல் பகுதியினை உவர் நீர் மீன் வளர்க்கும்

TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 5]

பொருட்டு பயன்படுத்த அரசு தனது 1988 ஏப்ரல் திங்கள் 25-ம் நாளைய 474 எண்ணிட்ட வனம் மற்றும் மீன் துறையின் ஆணையில், இரால் வளர்ப்பிற்கென நில ஒதுக்கீடு செய்திட ஒரு கொள்கையை கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளது :

60 விழுக்காடு உவர் நீர்ப் பரப்பு நிலம் மீனவர் மற்றும் நடுத்தர மீன் வளர்ப்போருக்கு சாதாரண மற்றும் ஓரளவு தீவிர மீன் வளர்ப்பிற்கென ஒடுதுக்கீடு செய்யப்பட வேண்டும் ;

20 விழுக்காடு உவர் நீர்ப்பரப்பு நிலம், தீவிர மற்றும் ஓரளவு தீவிர மீன் வளர்ப்பு மேற் கொள்ள நிதி வசதியும், தொழில் நுட்ப வசதியும் கொண்ட நடுத்தர அளவில் தொழில் முனைவோருக்கு அளிக்கப்பட வேண்டும் ; மற்றும்

நாளது வரை அதிக முன்னேற்றமடைந்த தொழில் நுட்பத்தை கையாண்டு தீவிர மீன் வளர்ப்பை மேற்கொண்டு அதிக அளவில் மீன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடைய அதிக மூலதனம் போடக் கூடிய தொழில் முனைவோருக்கு, மீதமுள்ள உவர் நீர்ப் பரப்புக்களை குத்தகைக்கு விட வேண்டும்.

4.3.2. அரசு, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் துறையின் 1989 அக்டோபர் திங்கள் 30-ம் நாளிட்ட 510 எண் கொண்ட ஆணையில் உவர் நீர்ப்பரப்பு நிலத்தை ஒதுக்கீடு செய்வதற்காக, விதிமுறைகளை வகுத்து, இப்பணியை நடத்திட ஒரு உயர்மட்டக் குழுவையும் அமைத்துள்ளது. நில ஒதுக்கீடு செய்திட விரிவான விளம்பரம் கொடுக்கப்பட்டு நிலம் ஒதுக்கீடு வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மாண்புமிகு கால் நடை பராமரிப்பு மற்றும் மீன் துறை அமைச்சர் தலைமையில் அரசால் அமைக்கப் பட்டுள்ள இந்த உயர்மட்டக் குழு, விண்ணப்பதாரர்களுக்கு நில ஒதுக்கீடு செய்யும் பணியை ஏற்கனவே துவங்கி விட்டது. துறையினால் நடத்தப்படும் இரண்டு முன்னோடி திட்டப் பண்ணைகள் மற்றும் ஒன்பது செயல் விளக்கப் பண்ணைகளில், வருடத்திற்கு, ஒரு ஹெக்டேரில் 150 கிலோவிலிருந்து 1,400 கிலோ வரை இரால் உற்பத்தி செய்தது, இம்மாநிலத்தில் இரால் வளர்ப்பிற்கான வாய்ப்பு எவ்வாறு உள்ளது என்பதைக் காட்டுகிறது.

5. மீனவர் நல்வாழ்வு நடவடிக்கைகள்.

5.1. மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம்.

5.1.1. மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம் 1975-76 முதல் தொடர்ந்து கடல் மீன்வர்களின் நலன் கருதி செயல் படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 48,214 மீனவர் குடும்பங்கள் குடிசைகளில் வசித்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்

ளது. இம்மீனவர்களுக்கு சொந்தமாக நிலையான வீடுகள் கிடைக்கும் வகையில் அரசு இதுவரையிலும் 12,090 வீடுகள் கட்ட ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவற்றுள் இதுவரை 11,517 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

5.1.2. சென்ற ஆண்டு நிதி அறிக்கையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்ததைத் தொடர்ந்து கடல் மீனவர் களுக்காக 3,000 வீடுகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள், திருச்சினாங்குப்பம் மீனவர்களுக்காக 492 அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதும் அடங்கும். தமிழகத்திலேயே மீனவர் களுக்காக கட்டப்படவுள்ள முதல் அடுக்குமாடி கட்டிடத் திட்டம் இதுவேயாகும். இந்த 492 வீடுகளின் மதிப்பீடு ரூ. 116 இலட்சமாகும். இதர வீடுகளின் மதிப்பு ரூ. 372.52 இலட்ச மாகும். கடல் மீனவர்களுக்கான 2,311 வீடுகள் ஊரக வளர்ச்சித் துறை ஆணையரின் அதிகார வரம்பிற்குட்பட்ட பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலம் கட்டப்படும். இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடு ஒன்றின் மதிப்பு ரூ. 14,500 ஆகும். மீனவர்களுக்காக வீடு கட்டும் திட்டங்களிலேயே இவ்வாண்டிற் கான திட்டம் தான் பெரிய அளவினதாகும்.

5.2. இணைப்புச் சாலைகள் :

கடலோர மீனவர் கிராமங்களை அருகாமையிலுள்ள நெடுஞ் சாலைகளுடன் இணைப்பதற்காக மீன் துறை இணைப்புச் சாலை களை மீனவர் கிராமங்களில் அமைத்து வருகின்றது. இதனால் பிடிபடும் மீன்களை மீனவர்கள் அருகாமையிலுள்ள விற்பனை மையங்களுக்கு விரைவில் எடுத்துச் சென்று விற்பனை செய்திட வசதியாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு ரூ. 300.90 இலட்சம் மதிப்பீட்டில் 113 இணைப்புச் சாலைகள் அரசால் ஒப்ப ளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 160 கிலோ மீட்டர் நீளத்திற்கு 107 இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரின் கருத்திற்கிணங்க இணைப்புச் சாலைகள் மேலும் தேவைப்படும் மீனவ கிராமங்கள் குறித்து ஓர் ஆய்வு செய்யப் பட்டது. அதன்படி இணைப்புச் சாலைகள் இல்லாத 53 கிராமங் கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவ்விணைப்புச் சாலைகளை அமைக்க சுமார் ரூ. 600 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட செயற் குறிப்பில் 50 விழுக்காடு கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

5.3. தேசிய மீனவர் நலன் நிதித் திட்டம் :

இது மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்ட மாகும். இதன் கீழ் வீடுகள், சமூகக் கூடங்கள், குடிதண்ணீர் வசதி மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு நிதி உதவி போன்

1990 ஏப்ரல் 5]

றவை ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கிராமங்களில் ஏற்படுத்தும் வகையில். மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் 50 : 50 விகிதாச்சார நிதியுதவி அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. 1987–88-ல் தமிழ்நாட்டை பொருத்த மட்டிலும் வள்ளவிளை, இரட்சன்யபுரம், கீழத் தோட்டம், தாண்டவராயன் சோழகன் பேட்டை மற்றும் நைனார் குப்பம் ஆகிய ஐந்து கிராமங்களில் ரூ. 141.39 இலட்சம் செலவில் மேற்படி வசதிகள் செய்து கொடுப்பதற்காக தேர்வு செய்யப்பட்டன. இதில் இந்திய அரசின் பங்குத் தொகை ரூ. 43.67 இலட்சமாகும். இவ்வாண்டு தமிழ்நாட்டில் 500 வீடுகள், ஐந்து சமூகக் கூடங்கள், 100 குழாய்க் கிணறுகள் மற்றும் நிதியுதவி ஆகியவை ரூ. 64.14 இலட்சம் செலவில் அளிக்க மேலும் ஐந்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்கு மத்திய அரசின் ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது.

5.4. மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் :

மீன்பிடிப்பு சரியாக இல்லாத பருவகாலத்தில் மீனவர்கள் நிவாரணம் பெற மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் கடல் மீனவ கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகியுள்ள மீனவர்களிடமிருந்து மாதம் ரூ. 10 வீதம் ஒரு ஆண்டில் தொடர்ந்து 9 மாதங்கள் வசூல் செய்யப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மீனவருக்கும் மாநில அரசு அளிக்கும் ரூ. 90 உதவித் தொகையை சேர்த்து மொத்தம் 180 ரூபாயை, மாதம் ரூ. 60 வீதம் மீன் பிடிப்பில்லாத மூன்று மாதங்களுக்கு நிவாரணத் தொகையாக மீனவருக்கு அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் மீனவர்களுக்கு மிகவும் உதவிகரமானதாக விளங்குகிறது. மீனவர் கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் செயல்படுத்தப்படும் இத் திட்டத்தினால் 57,996 மீனவர்கள் பயன் அடைகிறார்கள்.

5.5. மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம் :

இறப்பு மற்றும் விபத்து ஆகிய பாதிப்புக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு மீனவர்களுக்கு காப்புறுதி வழங்க இத் திட்டம் செயல்படுகிறது. இத் திட்டத்திற்கான தவணைத் தொகை ஆண்டிற்கு ரூ. 9 ஆகும். மீனவர்கள் இதற்காக பணம் கட்டத் தேவையில்லை. இத் தொகையை மத்திய-மாநில அரசுகள் சமமாக ஏற்றுக் கொள்கின்றன. மீனவர் விபத்தினால் இறந்தால் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றால். ரூ. 15,000 காப்புறுதித் தொகையாக வழங்கப்படுகிறது. மீனவர்கள் ஒரு கை அல்லது கால் ஊனமுற்றாலோ அல்லது கண் பார்வை இழந்தாலோ ரூ. 7,500 வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் 1,49,539 மீனவர்கள் சேர்ந்துள்ளனர்.

735 மீனவர் குடும்பங்கள் இத் திட்டத்தினால் பயனடைந்து இதுவரை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நிவாரணம் வழங்கப் பட்டுள்ளது.

5.6. மீனவ கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இல்லாமல் தமிழ்நாடு மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் வராத மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்று இறந்தால் அல்லது ஊனம் அடைந்தால் மீனவர்களின் துயர் துடைக்க அரசு வழங்கும் நிவாரணத் தொகையினை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-க்கு அரசு உயர்த்தியுள்ளது. எனவே மீனவ கூட்டுறவு சங்க உறுப் பினராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் மீனவர்கள் விபத் தில் இறந்தால் அல்லது ஊனமுற்றால் அனைத்து மீனவர் களின் குடும்பத்திற்கு இவ்விழப்பினை ஈடு செய்ய அரசு நிவாரணம் வழங்கி வருகிறது என்பதை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

5.7. விரிவாக்கம் மற்றும் கல்வித் திட்டம் :

5.7.1. மீனவ சமூகத்தின் சமூகப் பொருளாதார முன் னேற்றத்தில் விரிவாக்கக் கல்வித் திட்டம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. மீன் பிடிப்பு மற்றும் மீன் வளர்ப்பில் நவீன முறைகளை ஒலி, ஒளி அமைப்பின் மூலம் முற்போக்கு எண்ண முடைய மீனவர்களுக்கும் மற்றும் தொழில் முனையும் தனியாருக்கும், இத்திட்டத்தின்கீழ் தெரிவிக்கப்படுகின்றது. விரிவாக்கத் திட்டத்தில் அரசு மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் மீனவர்களுக்கு அளிக்கப்படும் உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படு கின்றன.

5.7.2. தமிழ்நாடு மீன்துறை, மீன்பிடிப்பு மதிப்பீடு, மீனின் மதிப்பு, மீனின் விநியோக முறை, கடல் மீன் பொருட்கள் ஏற்றுமதி ஆகிய விவரங்களைச் சேகரித்து, பல நிறுவனங் களுக்கு அளிக்கிறது. தனி ஆவணம் பராமரித்தல், விவரம் சேகரித்தல் அதனை மற்ற நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துதல், துறையின் பண்ட பயனீட்டினை கண்காணித்தல், குறியீட்டில் எய்தப்பட்ட பணி விவரங்கள், தணிக்கைக் குறிப்புகள் இவை களைச் சேகரித்து பராமரிக்க இத்துறையின் பணியாளர் களுக்கு கம்ப்யூட்டரில் பயிற்சி அளிப்பதற்கும் இப்புள்ளி விவரங்களை சேகரித்தல், பதிவு செய்தல், அறிவித்தல் ஆகிய வற்றை கம்ப்யூட்டர் மயமாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகும் செலவினம் ரூ. 0.50 இலட்சமாகும்.

6. மீனவர் கூட்டுறவுகள் :

6.1. மீனவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டில் மீனவர் கூட்டுறவுகள் தொடர்ந்து முக்கிய பணியாற்றி வரு கின்றன. அவர்களின் மேம்பாட்டிற்கான வழி முறைகளை

1990 ஏப்ரல் 5]

கூட்டுறவின் மூலமாக வருக்க விழைகின்றன. இவை மீனவ மக்களுக்கு கடன் வசதிகள் அளித்தல், மீன்பிடி சாதனங்கள் வழங்குதல் ஆகிய பணிகளோடு பிடிக்கப்படும் மீன்களை விற்பனை செய்வதையும் மேற்கொண்டு வருகின்றன. சில சங்கங்கள் அத்தியாவசிய பண்டங்களின் விற்பனையும் மேற்கொண்டுள்ளன. கடன் வழங்குவது, இடுபொருள் வசதி மற்றும் மீன் விற்பது, மீனவர்களின் பொருளாதார மேம்பாடு ஆகியவை இக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒருங்கிணைக்கப்படுகிறது.

6.2. தமிழ்நாட்டில் 648 பதிவு செய்யப்பட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவைகளில் 1,49,442 மீனவர் மீனவ மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குத் தொகை வழங்க ஆண்டுதோறும் ரூ. 5.00 இலட்சம் அரசால் அளிக்கப்படுகிறது. ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு பங்குத் தொகை ரூ. 25,000-க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவிபெறும் வகையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உச்சக் கடனளவை அதிகரிக்கும் பொருட்டு அரசு பங்குத் தொகை வழங்கப்படுகிறது.

6.3. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை புத்துயிரூட்டி மேம்படுத்துவதே தற்போதைய நோக்கமாகும். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் விசைப் படகுகள், நாட்டுப் படகுகள், வலைகள் மற்றும் மீன் எடுத்துச்செல்ல வாகனங்கள் வாங்கவும், கிடங்குகள் மற்றும் மீன் பதனிடும் இடங்கள் அமைக்கவும், மீன் விற்பனை மேற்கொள்ளவும் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. இதுவரை 98 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 467.99 இலட்சங்கள் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

7. மீனவ மகளிர் விரிவாக்கத் திட்டம்:

7.1. இத் திட்டம் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் வங்காள விரிகுடாத் திட்டத்தின்கீழ் துவங்கப்பட்டு 1981 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துவக்கத்தில் இத்திட்டம் மூன்று கிராமங்களில் தொடங்கப்பட்டு, இப்போது 53 கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 7,928 ஆகும். மீன் விற்பனைக்கான கடன் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், சேமிப்பு பழக்கம் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றை ஊக்குவித்தல், பயிற்சி, அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குதல், மருத்துவ வசதி அளித்தல், முதியோர் கல்வித் திட்டம், வேலை வாய்ப்பு, பால்வாடிகள் மற்றும் காப்பகங்கள் மூலம் குழந்தைகள் நலம் பாதுகாத்தல், சமூக நல முகாம்கள் அமைத்தல் ஆகியவை மகளிர் கூட்டுறவுச்

சங்கங்களின் முக்கிய பணிகளாகும். இச்சங்கங்களின் சில பணிகள், மீனவ மகளிர் தங்களது வருவாயைப் பெருக்கவும், கல்வித் திறத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும். தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் ஆகும். அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சமும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 292 இலட்சமும் ஆகும்.

2. குறிக்கோள்கள் :

2.1. கீழ்க்காணும் திட்டங்களை உருவாக்குதல், நிர்மாணித்தல், முறைப்படுத்தல், நிர்வகித்தல், பராமரித்தல், மேம்படுத்தல் ஆகியவை இந்நிறுவனத்தின் நோக்கங்களாகும் :—

(அ) பெரிய வகை இழுவை நாவாய்கள், பெரிய இயந்திரப் படகுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன்பிடிப் பணிகளை மேற்கொள்ளுதல்;

(ஆ) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் வளர்த்துப் பிடித்தல்; மற்றும்

(இ) அனைத்து விதமான மீன்பிடித் தொழிலுக்கும் மீன் வளர்ப்பிற்கும் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான பணிகளையும் உதவிகளையும் செய்தல்.

இக்கழகம் தற்போது கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது :—

(1) கிழக்குக் கடற்கரையில் ஆழ்கடல் மீன்பிடி நாவாய்கள், இரண்டை இயக்குதல் ;

(2) நீர்த் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை வளர்த்து, மீன் பிடித்தல் ;

(3) தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல்;

(4) மீன்களை பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன மற்றும் உறைவைப்பு நிலையங்கள் மற்றும் பனிக் கட்டி நிலையங்களைப் பராமரித்தல் ;

1990 ஏப்ரல் 5]

(5) சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் சில்லறை மீன் விற்பனை நிலையங்களின் மூலம் தரமான மீன்களை சுகாதாரமான முறையில் நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்தல் ;

(6) தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளிலும் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்குவதற்காக தரமான மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் ;

(7) நீலங்கரையில் உள்ள இறால் பொறிப்பகத்தில் கடல் இறால் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து வழங்குதல்;

(8) மீனவர்கள் இயந்திரப் படகுகளை இயக்குவதற்காக மீன்பிடி துறைமுகங்களில் தங்கு தளங்களில் உள்ள டீசல் நிலையங்கள் மூலம் டீசல் விற்பனை செய்தல்.

3. கடல் மீன் பிடிப்பு :

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ''தஞ்சை'' மற்றும் ''நெல்லை'' எனும் இரு மெக்சிகன் மீன்பிடி நாவாய்களின் மூலம் விசாகப்பட்டினத்தை மையமாக வைத்து கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடிப்பு நடத்தி வருகிறது. இவ்விரு நாவாய்களின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 60 டன் இறாலும், ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள 80 டன் மீன்களும் பிடிக்கப்படுகிறது.

1989-90 ஆம் ஆண்டில் இவ்விரு நாவாய்களின் மூலம் பிடிக்கப்பட்ட இறால் மற்றும் மீன்களின் விவரம் பின் வருமாறு ;

ஆண்டு.		பிடிக்கப் பட்ட இறால் (டன்களில்)	பிடிக்கப் பட்ட மீன்கள் (டன்களில்).
1989-90 (ஜனவரி முடிய)	..	62.8	67.4
மதிப்பு (இலட்சத்தில்) ..	..	ரூ 57.39	ரூ 5.59

4. நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பு:

4.1. தமிழ் நாட்டில் 8 நீர்த் தேக்கங்கள் இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் முறையாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மீனவர்களைக் கொண்டு பங்கு முறையில் மீன்பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது. 1988-89 ஆம்

ஆண்டில் 733 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு அவை ரூ. 58.00 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. 1989-90 ஆம் ஆண்டில் ஜனவரி முடிய 382 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு அவை ரூ. 36.15 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. இப்பணி மேலும் தொடர்ந்து மேம்பாடடைய உள்ளது.

4.2 மீன்குஞ்சு உற்பத்தி:

சாத்தனூர் அணை மற்றும் ஆளியாறு ஆகிய இடங்களில் இக்கழகம் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களைப் பராமரித்து வருகிறது. மேலும் அமராவதி, திருமூர்த்தி, மஞ்சளாறு, பாலாறு—பொரந்தலாறு மற்றும் உப்பாறு பண்ணைகளில் மீன் குஞ்சு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங் களில் இருப்பு செய்யப்படுவதுடன், மீன் துறை, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தனியாருக்கு வழங்கப்படுகின்றன. 1988-89 ஆம் ஆண்டில் 625 இலட்சம் நுண் மீன் குஞ்சுகளும் 1989-90 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முடிய 504 இலட்சம் நுண் மீன் குஞ்சுகளும் இந் நிலையங் களில் உற்பத்தி செய்யப்பட்டன. இப்பணி 1990-91 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

5. மீன் பதப்படுத்தப்படும் நிலையங்கள்:

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் இம் மாநிலத்தில் 5 பனிக் கட்டி உற்பத்தி நிலையங்களையும், மூன்று மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகிறது. இந்த 5 பனிக் கட்டி உற்பத்தி நிலையங்களும் தினசரி 40 டன் எடையுள்ள பனிக் கட்டிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. 1989-90 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முடிய 4,817 டன் பனிக் கட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப் பட்டுள்ளன. சென்னை, மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று உலரவைப்பு பதனிடும் நிலையங்கள் தினசரி 26 டன் மீன்களை பதனிடும் திறன் கொண்டவை. இவற்றில் 150 டன் எடையுள்ள பதனிட்ட மீன்களை சேமித்து வைக்க முடியும். இந்த மூன்று மீன் பதனிடும் நிலையங்களும் இறால் மீன்கள் ஏற்றுமதி செய் வோருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. சென்னை மீன்பிடித் துறைமுகத்தில், 50 டன் குளிர்பதன கிடங்கு மற்றும் 300 டன் உறைவைப்பு பதனிடும் கிடங்கு ஆகியவை அடங்கிய ஒரு 100 டன் உற்பத்தி திறன் கொண்ட பனிக்கட்டி நிலையம் ரூ. 62 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. இந் நிலையம் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1990 ஏப்ரல் 5]

6. மீன் விற்பனை:

இக் கழகம் சென்னையிலும் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, பெரியார், திருவண்ணாமலை-சம்புவராயர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் 104 மீன் விற்பனை நிலையங்கள் மூலம் மீன் விற்பனை செய்து வருகிறது. 1988-89 ஆம் ஆண்டில் 800 டன் எடையுள்ள மீன்கள் ரூ. 124 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. 1989-90 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முடிய 573 டன் எடையுள்ள மீன்கள் ரூ. 97 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன.

7. உலர் மீன் இடங்கு:

கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி மேம்பாட்டுக் குழு நிறுவனத்தால் தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர் மீன் இடங்கை இக் கழகம் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. இக் கிடங்குகள் உலர் மீன் ஏற்றுமதியாளர்களுக்கு ஒருவருக்கு மாத வாடகை ரூபாய் 600 விகிதத்தில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

8. மீன் வலை தயாரித்தல்;

இராயபுரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 54 டன் மீன் வலை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று இக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 58.80 இலட்சம் மதிப்புள்ள 50 டன் வலைகள் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளன. 1989-90 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முடிய ரூ. 41.96 இலட்சம் மதிப்புள்ள 32.65 டன் வலைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

9. கரையோர மீன் வளர்ப்பு:

9.1 இறால் மீன் குஞ்சு பொறிப்பகம்:

இக் கழகம் சென்னைக்கு அருகிலுள்ள நீலங்கரையில் ஆண்டுதோறும் 16 மில்லியன் உற்பத்தித் திறனுடைய இறால் மீன் குஞ்சு பொறிப்பகம் ஒன்றை நிறுவியுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் இப்பொறிப்பகம் ரூ. 0.53 இலட்சம் மதிப்புள்ள 6.43 இலட்சம் இறால் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்தும், 1989-90 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முடிய ரூ. 0.61 இலட்சம் மதிப்புள்ள 6.32 இலட்சம் இறால் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்தும் இறால் மீன் வளர்ப்போருக்கு விற்றுள்ளது. மேலும் சில கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டதும் இப்பொறிப்பகம் தனது முழுத் திறனை அடையும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

10. டீசல் விற்பனை நிலையங்கள்:

இக்கழகம், இராயபுரம் மல்லிப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்பிடி விசைப் படகுகளை இயக்குபவர்களின் நன்மைக்காக 4 டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. 1988-89-ஆம் ஆண்டில் 8,900 கிலோ லிட்டர் டீசல், விசைப் படகுதாரர்களுக்கு இந்த விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டது. 1989-90-ஆம் ஆண்டில் ஜனவரி முடிய 7,740 கிலோ லிட்டர் டீசல் விற்கப்பட்டது.

11. கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள்:

1. வளர்ப்பு முத்து தயாரித்தல்:

இக்கழகம் வளர்ப்பு முத்துக்களை தயாரித்து வியாபார ரீதியில் செயல்படும் நோக்கத்துடன் மண்டபத்தில் கரு பொருத்தி முத்து வளர்க்கும் ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவியது. ஆனால் தேவையான முத்துச் சிப்பிகள் கிடைக்காத காரணத்தினால் இப்பணி மூன்று வருடத்திற்குமுன் நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் இப்பணியை துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. உவர்நீர் மீன் பண்ணை:

இக்கழகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் பழஞ்சூர் என்ற இடத்தில் 100 ஹெக்டேர் உவர்நீர் மீன் பண்ணை அமைக்க உத்தேசித்துள்ளது. இதற்கான திட்ட அறிக்கை கொச்சியில் உள்ள கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி மேம்பாட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

3. ஆழ்கடல் நாவாய்கள் வாங்குதல்:

இக் கழகத்தின் கைவசமுள்ள 2 நாவாய்களும் 12 வருடங்களுக்கு முன்னால் வாங்கப்பட்டவை. இந்த நாவாய்கள் தவிர மேலும் 2 புதிய ஆழ்கடல் நாவாய்கள் வாங்க இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

1990 ஏப்ரல் 5]

4, மேல்நாட்டு மீன்பிடி கப்பல்கள் ஒப்பந்த முறையில் எடுத்தல்.

இக்கழகம் 4 மேல் நாட்டு ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களை ஒப்பந்த முறையில் தனித்த இந்திய பொருளாதார எல்லைக்குள் மீன் பிடிப்பிற்காக இயக்க மத்திய அரசிடம் அனுமதி கேட்டு உள்ளது.

5. படகின் வெளிப்பொருத்தும் இஞ்சின்கள் இறக்குமதி செய்தல்:

இக்கழகம் மத்திய அரசால் அளிக்கப்படும் 50 சதவிகிதம் சுங்க வரி சலுகையை துய்த்து படகின் வெளிப் பொருத்தும் இயந்திரங்களை வாங்கி நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் நோக்குடைய மீனவர்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது.

6. தொழில் நுட்ப ஆலோசனைப் பிரிவு:

கடல் மீன்வளம், உள்நாட்டு மீன்வளம் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்பு ஆகிய துறைகளில் அனுபவம் மிகுந்தவர்களைக் கொண்டு இத்துறைகளில் திட்டங்கள் தயாரிக்கவும், திட்டங் களைச் செயல்படுத்துவதில் தொழில் நுட்ப ஆலோசனை கூறவும் வல்லுநர்கள் கொண்ட ஆலோசனைப் பிரிவு ஒன்று ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12. இக்கழகத்தின் நிதிநிலை:

1988-89-ஆம் ஆண்டில் இக்கழகம் ரூபாய் 323.13 இலட்சம் செலவினத்திற்கு ரூபாய் 343.11 இலட்சம், வருமானமாக ஈட்டி யுள்ளது. ஆக நிகர வருவாய் ரூபாய் 19.98 இலட்சமாகும். 1989-90-ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முடிய மொத்த வருவாய் ரூபாய் 280.67 இலட்சத்தில் செலவுத் தொகை ரூபாய் 271.82 இலட்சம் போக, நிகர வருமானமாக ரூபாய் 8,85 இலட்சம் ஈட்டப்பட்டது.

வரவு-செலவு—ஒரு கண்ணோட்டம்

விவரங்கள்.	1988-89 கணக்கு		1989-90 வரவு-செலவு திட்ட மதிப்பீடு.		1989-90 திருத்திய மதிப்பீடு.		1990-91 வரவு-செலவு திட்ட மதிப்பீடு,	
	திட்டம்.	திட்ட மில்லாதது.	திட்டம்.	திட்ட மில்லாதது.	திட்டம்.	திட்ட மில்லாதது.	திட்டம்.	திட்ட மில்லாதது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
					(ரூபாய் இலட்சத்தில்)			
கோரிக்கை எண் 21 வருவாய்	343.55	473.35	391.33	541.58	298.61	636.36	335.30	667.13
கோரிக்கை எண் 41 வருவாய்	—	0.42	—	76.48	—	11.73	—	0.01
கோரிக்கை எண் 58 மூலதனம்	188.94	0.88	118.62	0.01	88.68	0.78	86.99	0.01
கோரிக்கை எண் 59 கடன்	21.19	90.83	0.03	0.30	0.03	0.52	0.02	0.30
மொத்தம் ..	503.68	565.48	509.98	618.37	387.32	649.39	422.31	667.45

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 5]

கால்நடைப் பராமரிப்புத் துறை.

இணைப்பு-II

கோரிக்கை எண். 22

கால்நடைப் பராமரிப்பு கொள்கை விளக்கம் 1990-91

பகுதி I—பொதுத் தகவல்.

1. முன்னுரை:

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு கால்நடை வளர்ப்பும், விவசாயமும் ஒருங்கிணைந்து விவசாயிகளின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளன. விவசாயத்திற்குத் தேவைப் படும் உழவு சக்தியை மாடுகள் கொடுத்து வந்துள்ளன. இப் பொழுதும் கொடுத்து வருகின்றன. இது தவிர கால்நடைகள் புரத சத்து மிகுந்த பால், இறைச்சி, முட்டை போன்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறன் குறை வாக இருந்த காரணத்தால் விவசாயிகள் கால்நடை வளர்ப்பிலும், பால், இறைச்சி, முட்டை உற்பத்தியிலும் அதிகம் கவனம் செலுத் தாமல் இருந்தார்கள். ஆனால் சமீப காலங்களில் கால்நடை வளர்ப்பு, இனவிருத்தி, கால்நடை நோய்த் தடுப்பு முறைகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன்னேற்றத்தின் கார ணமாக கால்நடை வளர்ப்பு அதிக லாபம் தரும் வியாபார முறையில் செயலாகக் கூடியதாக அமைந்துள்ளது. கால்நடை வளர்ப்பு, மனிதனுக்குத் தேவையான பால், இறைச்சி, முட்டை இவற்றை உற்பத்தி செய்வதோடு, கிராமப் புறங்களில் வாழும் ஏழை விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பையும் உபரி வருமானத் தையும் கொடுத்து வருகிறது.

கால்நடை பராமரிப்புத்துறை தமிழ்நாட்டிலுள்ள பசுக்கள் எருமைகளின் பால் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியில் கணிசமான முன்னேற்றம் காணப் பட்டுள்ளது. இதனால் பால் உற்பத்தி பெருகி, 1978-79-ஆம் ஆண்டு 1.72 மில்லியன் டன்னாக கணக்கிடப்பட்ட பால்உற்பத்தி 1988-89-ஆம் ஆண்டு 3.23 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. இதனால் தமிழ்நாட்டில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கக் கூடிய பால் அளவு 1978-79-ஆம் ஆண்டில் இருந்த அளவான 99 கிராம் 1988-89-ஆம் ஆண்டு 164 கிராமாக உயர்ந்துள்ளது. இதே போல் 1978-79-ஆம் ஆண்டு கணக்கிடப்பட்ட முட்டை உற்பத்தி 782 மில்லியனிலிருந்து 1988-89-ஆம் ஆண்டு 2,287 மில்லியனாக உயர்ந்துள்ளது. இதனால் தமிழ்நாட்டில் ஒரு நபருக்கு கிடைக்கக்கூடிய முட்டை எண்ணிக்கை 16-லிருந்து 42 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பு மிகவும் பிரபலமடைந்துள்ளது. முக்கியமாக கோவை, சேலம் பெரியார் மாவட்டங்களில் அதிக அளவில் கோழி பண்ணைகள் காணப்படுகின்றன. தமிழ் நாடு தற்பொழுது அகில இந்திய அளவில் மொத்தமுட்டை உற்பத்தியில் மூன்றாவது இடத்தை வகித்து வருவது மாநிலத்திற்குப் பெருமை தரும் செய்தியாகும். கால்நடைப் பராமரிப்புத்துறை, மாடுகள், ஆடுகள், கோழிகள் ஆகியவற்றின் தர உற்பத்தியை மேற்கொள்வதோடு, ஏழை விவசாயிகளின் நன்மைக்காக கால்நடை வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தவிர, கால்நடை மேம்பாட்டின் முக்கிய பகுதியான பசுந்தீவன உற்பத்தியிலும் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. இதைத் தவிர கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்து, அவைகளுக்குத் தொற்று நோய்கள் ஏற்படாதவாறு உடல் நலம் பேணும் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. தமிழ் நாட்டிலுள்ள கால்நடை மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் எல்லா கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளித்து தொற்று நோய்களைத் தடுக்க தடுப்பூசிபோடும் பணியிலும் ஈடுபட்டுள்ளன. இவ்வித முயற்சியால் கால்நடைகள், கோழிகளின் உடல் நலம் நன்கு பேணப்பட்டு பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றின் உற்பத்தியும் குறையாமல் பாதுகாக்க முடிகிறது.

பகுதி II

துறையின் முக்கிய பணிகள்.

I. ஆவின் அபிவிருத்தி—

1. ஆவினங்களின் எண்ணிக்கை.

தமிழ்நாடு ஆவினங்கள், எருமைகள் எண்ணிக்கை ஏராளமாகிக் கொண்டுள்ளது. 1982-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் மொத்தம் 26.18 மில்லியன் கால்நடைகள் உள்ளன. இதில் ஆவினம், எருமைகளின் எண்ணிக்கை 13.58 மில்லியனாகும். இனப்பெருக்கத்திற்கேற்ற ஆவினங்களும், எருமைகளும் முறையே 3.49 மற்றும் 1.72 மில்லியன் உள்ளன. நாட்டின் ஆவினம் மற்றும் எருமைகளின் மரபு ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு கால்நடை பராமரிப்புத் துறை மாட்டின் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. நம் மாநிலத்தில் பால் உற்பத்தி பெருகியிருப்பதற்கு. இனப்பொருக்கத் திட்டத்தில் ஜெர்சி, ப்ரீசியன் போன்ற பால்வர்க்க அயலின ஆவினங்களையும், முர்ரா இன எருமைகளையும் அறிமுகப் படுத்தியதே காரணமாகும். கால்நடை பராமரிப்பு துறையின்

1990 ஏப்ரல் 5]

மூலம் செயல்படுத்தப்பட்ட இனப் பெருக்கத் திட்டங்களின் விளைவாக 1978–79இல், 1.72 மில்லியன் டன்னாக இருந்த மாநிலத்தின் பால் உற்பத்தி மதிப்பீடு, 1988–89இல் 3.23 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.

2. ஆவின் வளர்ப்புக் கொள்கை :

மாநில அரசின் ஆவின வளர்ப்புக் கொள்கையின்படி, (1) காங்கேயம், உம்பளாச்சேரி, உறனிக்கார் ஆகிய இனங்கள் மிகுதியாக வாழுமிடங்களில் அதாவது, சேலம், திருச்சிராப்பள்ளி, பெரியார் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் காங்கேயம் இனத்தையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உம்பளாச்சேரி இனத்தையும், தர்மபுரி மாவட்டத்தில் உறனிக்கார் இனத்தையும் தெரிவு செய்யப்பட்ட முறையில் இனவிருத்தி செய்வதாகும். மற்றும் (2) நாட்டின் ஆவினங்கள், அதிகளவு பால் கொடுக்கும் அயலினங்களான ஜெர்சி, மற்றும் ப்ரீசியன் பொலி காளைகள் கொண்டும், நாட்டு எருமைகள், சிறந்த பால்வர்க்கமான முர்ரா இனத்தைக் கொண்டும் தரமுயர்த்தப்படுகின்றன. ப்ரீசியன் இனம் மலைப் பகுதி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலும், ஜெர்சி இனம் சமவெளிப்பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. விவசாயிகள் ப்ரீசியன் பசுக்களைப் பெரிதும் விரும்புவதால் தற்பொழுது சமவெளியிலும், நகர்ப் பகுதிகளிலும் ப்ரீசியன் விந்து கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நம் மாநிலத்திலுள்ள கலப்பினப் பசுக்கள் கலப்பினக் காளைகளைக் கொண்டு பெரும்பாலும், ஜெர்சி-சிந்தி கலப்பினக் காளைகளின் மூலம் இனவிருத்தி செய்யப்படுகின்றன.

3. மாநிலத்தில் கால்நடை அபிவிருத்தி பெருந்திட்டங்கள் :

கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் :

ஆவினம், எருமைகளின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு மாநிலத்தின் 12 இடங்களில் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களை கால்நடை பராமரிப்புத்துறை செயல்படுத்தி வருகிறது. தற்போது, மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பண்ருட்டி, தாம்பரம், சிதம்பரம், உடுமல்பேட்டை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. திட்டமிடப்பட்ட இனவிருத்தி முறைப்படி, சிறந்த அயலினங்களான ஜெர்சி மற்றும் ப்ரீசியன் பொலி காளைகளைக் கொண்டும், முர்ரா எருமைகளைக் கொண்டும் முறையே நாட்டு மாடுகள் மற்றும் எருமைகளின் பால் உற்பத்தித் திறனை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கியப் பணி.

யர்கும். இத் திட்டம் 26 மண்டல செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் மற்றும் 687 கிளை நிலையங்களின் வாயிலாக 6.87 இலட்சம் இனப்பெருக்கம் மாடுகளை உள்ளடக்கி செயல்படுகின்றது. இத்திட்டங்களில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களும், கால்நடை ஆய்வாளர்களும், கருவூட்டல் செய்தல், சினைப் பரிசோதித்தல் கன்று பிறப்பைச் சரி பார்த்தல், பசுந்தீவனம் அபிவிருத்தி செய்தல் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை ஆற்றுகின்றனர்.

திட்டப் பகுதிகளில் பசுந்தீவனம் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, தீவனப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. இதனால் மாடுகளுக்கு பசுந்தீவனம் அதிக அளவில் கிடைக்கச் செய்வதால், மாடுகளுக்கு கொடுக்கப்படும் கலப்புத் தீவனத்தின் அளவு குறைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. 1988-89ஆம் ஆண்டில் 63.98 லட்சம் தீவனப் பயிர் நறுக்குகளும், 7.86 லட்சம் தீவன மரக்கன்றுகளும், 89.34 டன் தீவனப் பயிர் விதைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டப் பகுதிகளில் 1989-90ஆம் ஆண்டில் (31, டிசம்பர் 1989 வரை) 5,14,777 செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டு, 1,21,926 கன்றுகள் பிறந்துள்ளன.

4. கேந்திரக் கிராமத் திட்டம் :

மாநிலத்தில் நாகர்கோவில், கோயில்பட்டி, சிவகெங்கை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருச்சி, மன்னார்குடி ஆகிய எட்டு இடங்களில் 583 கிளை நிலையங்களின் மூலம் 5.83 இலட்சம் இனப் பெருக்க மாடுகளை உள்ளடக்கி கேந்திர கிராம திட்டங்கள் இயங்குகின்றன. இவை நன்5 ஒருங்கிணைக்கப்பட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் ஆவினம், மற்றும் எருமைகளுக்கு இனவிருத்தி செய்தல், தீவனப் பயிர் உற்பத்தி, நோய்க் கட்டுப்படுத்துதல் போன்றவற்றில் கவனம் செலுத்துவதின் மூலம் பலமுனை கால்நடை அபிவிருத்தி பணிகளை ஆற்றுவதை இத் திட்டம் நோக்காக கொண்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் 31, டிசம்பர் 1989 வரை மொத்தம் 2,76,031 கருவூட்டல்கள் செய்யப்பட்டு, 70,602 கன்றுகள் பிறந்ததை திட்ட அலுவலர்கள் கண்டறிந்துள்ளனர்.

1990 ஏப்ரல் 5]

5. பொலி காளை நிலையங்கள் ;

மாடுகள், எருமைகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு இனவிருத்தி நிலையங்களுக்கு தேவையான குளிர்ந்த திரவ விந்தை உற்பத்தி செய்து, விநியோகிப்பதற்காக மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மொத்தம் 48 பொலி காளை நிலையங்களை துறை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையங்களில், ஜெர்சி, ப்ரீசியன் காங்கேயம் உறனிக்கார் மற்றும் முர்ரா காளைகள் பராமரிக்கப்படுகின்றன. இங்கு 159 ஜெர்சி, 10 ப்ரீசியன், 31 காங்கேயம், 1 கலப்பினம் மற்றும் 161 முர்ரா காளைகள் உட்பட மொத்தம் 362 பொலி காளைகள் உள்ளன.

பசுக்கள், எருமைகளிடையே கருத்தரிப்பு விகிதத்தை அதிகரிக்க செய்ய பதப்படுத்தப்படும் விந்தின் தரம் சிரத்தையுடன் சோதிக்கப்படுகிறது.

6. உறை விந்து முறை விஸ்தரிப்பு ;

கால்நடை பராமரிப்புத் துறை 766 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 2,004 கிளை நிலையங்களின் மூலம் ஆவினம் மற்றும் எருமைகளுக்கான இனப் பெருக்க வசதிகளைச் செய்து வருகிறது. செயற்கை கருவூட்டல் வசதிகள் கொண்ட மொததம் 2,770 நிலையங்களில், 1,819 நிலையங்களில் உறை விந்தும், 951 நிலையங்களில் குளிர்ந்த திரவ விந்தும் பயன் படுத்தப்படுகின்றன. எஞ்சியுள்ள பிற நிலையங்களுக்கும் உறை விந்து கருவூட்டல் வசதிகளை ஏற்படுத்த துறை உத்தேசித்துள்ளது.

இரண்டு உறைவிந்து தயாரிப்பு வங்கிகளை முறையே, ஈச்சங்கோட்டையிலும், (தஞ்சாவூர் மாவட்டம்), அபிஷேகப் பட்டியிலும் (நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்) துறை செயல்படுத்தி வருகிறது. இவ்வங்கிகளில் ஜெர்சி, ப்ரீசியன் மற்றும் முர்ரா இன உறை விந்து) தயாரிக்கப்படுகிறது. பெரியார் மற்றும் கோவை மாவட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, காங்கேயம் உறைவிந்து உற்பத்தி பணி இவ்வாண்டு முதல் துவங்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ஓசூரிலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலத்திலும் ஏற்படுத்தப்பட்ட உறைவிந்து வங்கிகளில் உறை விந்து உற்பத்தி இப்பொழுது துவங்கப்பட்டுள்ளது.

செயற்கை முறை கருவூட்டலில் உறைவிந்து முறை கணிசமான அளவில் சமீப ஆண்டுகளில்தான் அறிமுகப்படுத்தப் பட்ட போதிலும், இதனால் உண்டான விளைவுகளும், விவசாயி

களிடையே காணப்படும் ஆர்வமும் ஊக்கமளிப்பதாக உள்ளது. 1989–90ஆம் ஆண்டில் உறைவிந்து தொழில் முறை ரூ. 11.04 இலட்சம் செலவில் மேலும் 100 நிலையங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. 1990–91ஆம் ஆண்டில் இம்முறை ரூ. 7.50 இலட்சம் செலவில் மேலும் 50 நிலையங்களுக்கு விஸ்தரிக்கப்படும். இதனால் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மிகவும் பயனடைவார்கள்.

இது தவிர, உள்ளூர் பசுக்களின் பால் கொடுக்கும் திறனை விரைவில் அதிகப்படுத்துவதற்காக, உறை விந்து உற்பத்தி வங்கிகளில் பராமரிப்பதற்காக சிறந்த ப்ரீசியன் ஜெர்சி காளைகளை இறக்குமதி செய்வதற்காக நடவடிக்கைகளை துறை மேற்கொண்டுள்ளது. 1990-ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதத்தில் காளைகள் தமிழ்நாடு வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1989–90ஆம் ஆண்டில் 0.782 இலட்சம் லிட்டர் திரவ நைட்டிரஜனும், 4,820 இலட்சம் டோஸ் உறை விந்தும் மேற்படி வங்கிகளில் தயாரிக்கப்பட்டன.

7. உட்கரு மாற்றல் உத்தியை அறிமுகப்படுத்துதல் :

ரூ. 5,42 இலட்சம் செலவில் உட்கரு மாற்றம் நிலையம் ஒன்று ஈச்சங்கோட்டையிலுள்ள அயலின கால்நடை வளர்ப்பு பண்ணையில் அமைக்கப்பட்டு வருகிறது. இம்முறையின்கீழ், சிறந்த பசுக்களுக்கு தரமான பொலிகாளை விந்து உபயோகப்படுத்தி செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டு அதில் உருவாகும் கருக்கள் எடுக்கப்பட்டு ஆற்றல் குறைவான பிற பசுக்களுக்கு செலுத்தப்படுகிறது. இம்முறையினால், வருடத்திற்கு ஒவ்வொரு சிறந்த பசுவிலிருந்தும் சாதாரணமாக கிடைக்கக்கூடிய ஒரு கன்றிற்கு பதிலாக 4 அல்லது 5 கன்றுகளை உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது.

கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர்களில் ஒருவர் இசட் நகரிலுள்ள இந்திய கால்நடை மருத்துவ ஆய்வு நிலையத்தில் உட்கரு மாற்றல் உத்தியில் பயிற்சி பெற்றிருக்கிறார்.

8. வம்சா வழி ஆய்வுத் திட்டம் :

இந்தத் திட்டத்தில் வருங்காலத் தலைமுறையின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, முறையான இனவிருத்தி மூலம் சிறந்த பால் உற்பத்தி ஆற்றலை வம்சா வழியாக மாற்றக்கூடிய காளைகளின் இயல்பு மதிப்பீடு செய்யப்படுகிறது. மாநிலத்திலுள்ள சிந்தி இனங்களின் ஆற்றலைப் பாதுகாத்து மேம்படுத்தும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பொருட்டு, தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூர் கால்நடைப் பண்ணையில் சிந்தியின வம்சாவழி ஆய்வுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சோதிக்கப் பட்ட காளைகளி லிருந்து சேகரிக்கப்படும் விந்து உறை நிலையில் வருங்காலத்தில் உபயோகத்திற்காக இருப்பில் வைக்கப்படுகிறது. இந்த விந்து மற்ற சிந்து இனப் பசுக்களின் இன விருத்திக்காகப் பயன்படுத்தப் படும்.

ஒரத்தநாட்டிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் முர்ரா எருமை இனத்திற்காக வம்சா வழி ஆய்வுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

9. பசுக்கள் எருமைகள் இன அபிவிருத்திக்கு கூடுதல் வசதிகள் :

கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்களுக்கு, பசுக்கள், எருமைகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டல் செய்வதில் பயிற்சி அளித்து அவர்களைக் கொண்டு கிராமப் புறங்களிலுள்ள விவசாயிகளின் வீடுகளிலேயே அவர்களுடைய மாடுகள், எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்கான வசதிகளை அளிக்கும் திட்டமொன்றை கால்நடை பராமரிப்புத் துறை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், பெரியார், சேலம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள வேலையற்ற படித்த 100 இளைஞர்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி அளிக்கப்பட்டு, விவசாயிகளின் பசுக்கள், எருமைகளைக் கருவூட்டல் செய்யும் கருவூட்டாளராக செயல் படுவார்கள்

செயற்கை முறை கருத்தரிப்பிற்கு தங்களுடைய கால்நடைகளைக் கிளை நிலையங்களுக்குக் கொண்டு வர முடியாத அளவுக்குக் குக்கிராமங்களில் வாழும் விவசாயிகளுக்கு இத்திட்டம் ஓர் வரப் பிரசாதமாகும். மேலும் கருவூட்டாளராகப் பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் உருவாகின்றது.

10. மக்கள் தொடர்பு முகாம் :

கால்நடை பராமரிப்பு செயற்பாடுகளை கிராம மக்கள் அறிவதற்காக களப் பணியாளர்கள் கிராம அளவில் மக்கள் தொடர்பு முகாம்களை முறையாக நடத்தி வருகின்றனர். சிகிச்சை அளித்தல், பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல், கன்றுகள், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் போன்ற வழக்கமான பணிகளை ஆற்றுவதுடன் கால்நடை பராமரிப்பினைப் பற்றி அறிவுறுத்தும் சாதனமாகவும் மக்கள் தொடர்பு முகாம் பயன்படு

கிறது. 1989–90 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1989 வரை) மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 10,054 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

11. (1) செம்மறி ஆடு வளர்ப்பு :

தமிழ்நாட்டில் மொத்தம் 55.37 இலட்சம் செம்மறி ஆடுகள் உள்ளன. ஆடு வளர்ப்பு மூலம் வறட்சியான காலங்களில்கூட கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு வருவாய் பெற வாய்ப்பு உள்ளது. எனவே, சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டம், சிறப்பு மத்திய உதவி திட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு முனைப்பு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் ஆடுவளர்ப்புக்கான நடவடிக்கைகளை துறை மேற்கொண்டுள்ளது. இத்திட்டங்களின் பணி விவரங்கள் சிறப்புத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

(2) ஆட்டுப் பண்ணைகள் ;

இரண்டு ஆட்டுப் பண்ணைகளையும் நான்கு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் துறை செயல்படுத்துகிறது. இங்குள்ள இந்திய இன செம்மறி ஆடுகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட இன விருத்தி (Selec ive b eeding) மேற்கொள்ளப்படுகிறது. சிறந்த கடாக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, உள்ளூர் இன செம்மறி ஆடுகளைத் தரம் உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதனால் அவற்றின் இறைச்சி கொடுக்கும் திறனில் முன்னேற்றம் உண்டாகிறது. இந்நிலையங்களில், மேச்சேரி, கீழக்கரிசல், இராமநாதபுரம், வெள்ளை, வேம்பூர் மற்றும் மாண்டியா இன செம்மறியாடுகள் பராமரிக்கப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் (31, டிசம்பர் 1989 வரை) 1,166 செம்மறியாடுகள் உற்பத்தி செய்யப்பட்டு 560 செம்மறியாடுகள் விநியோகிக்கப்பட்டன.

(3) செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ;

ஆடு வளர்ப்பு பெரும்பாலும் சிறு விவசாயிகள் குறு நில விவசாயிகள், நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் ஆகியோரின் பராமரிப்பிலேயே உள்ளது. கூட்டுறவு முயற்சியின் மூலமே ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஏழை விவசாயிகள் பயன் பெற முடியும். எனவே, அவர்கள் பயனடையும் பொருட்டு, செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 1,618 செம்மறி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில், 39

1990 ஏப்ரல் 5]

சங்கங்கள் வேளாண்மை மறுநிதி அபிவிருத்திக் கழகத்தின் கீழும் 190 சங்கங்கள் சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழும் 87 சங்கங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழும்; 4 சங்கங்கள் மலை வாழ் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 3 சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 949 சங்கங்கள் ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டு திட்டத்தின் கீழும், 346 சங்கங்கள் திட்டங்களற்ற பிற பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் அங்கத்தினர்கள் மேற்படி திட்டங்களின் மூலம் ஆடு வளர்ப்பில் பயன் அடைகிறார்கள்.

(4) செம்மறியாடுகளுக்கு உடல் நலம் பேணும் பணி திட்டம் :

ஆடு வளர்ப்பு தொழில் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய வருவாய், ஆடுகளின் உடல் எடையைப் பொறுத்ததாகும். இதற்கு அடிப்படையாவது ஆடுகளின் உடல்நலமே. செம்மறியாடுகளின் வயிற்றுக்குள் காணப்படும் குடல் புழுக்கள் ஆடுகளின் உடல்நலத்தை வெகுவாக பாதித்து, வளர்ச்சியை, பாதித்து உடல் எடையைப்பெரிதும் பாதிக்கும். எனவே, ஏழை விவசாயிகளின் ஆடுகளுக்கு அரசின் செலவிலேயே குடற் புழு நீக்கம் செய்து, ஆடுகளின் இறைச்சி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டமொன்று கால்நடை பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1989—90 ஆம் ஆண்டில் ரூ. 27.36 இலட்சம் செலவில், தென்னாற்காடு, வட ஆற்காடு-அம்பேத்கார், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

(5) ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக் குழு நிதி உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் :

ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக் குழுவின் நிதி உதவி பெற ஆடு வளர்ப்புத் திட்டம் ஒன்று ரூ. 13.67 கோடி செலவில் 1989—90 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ளது. உள்ளூர் செம்மறி ஆடுகளின் வளர்ச்சி மற்றும் இறைச்சி உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு இந்தத் திட்டம் செங்கை-அண்ணா, வட ஆற்காடு-அம்பேத்கார், தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுகிறது.

(அ) உள்ளூர் செம்மறி இனங்களுக்கு தெரிவு இனவிருத்தி செய்தல் (Selective breeding).

(ஆ) செம்மறியாடுகளுக்கு மேய்ச்சல் வசதிகள் ஏற்படுத்துதல்.

(இ) நோய் நீக்சுப் பணிகள் தீவிரப்படுத்துதல்.

போன்ற பணிகளின் மூலம் செம்மறியாடுகளின் வளர்ச்சியை, மேம்படுத்தி இறைச்சி உற்பத்தியை அதிகப்படுத்துவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம். இந்த திட்டத்தில் அயலின மானட்-டார்செட் (Dorcet) செம்மறியாட்டை இறக்குமதி செய்து குறிப்பிட்ட திட்டப் பகுதியில் கலப்பின இனவிருத்திக்கு உபயோகப்படுத்த உள்ளது.

செம்மறியாட்டுக் கிடாக்களை உற்பத்தி செய்யவும், பண்ணைகள், ஓசூர், சின்னசேலம், இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு, உள்ளூர் இன செம்மறியாடுகளின் உற்பத்தி ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்காக விவசாயிகளுக்குத் தரமான கடாக்கள் விநியோகிக்கப்படும்.

111. வெள்ளாடு வளர்ப்பு ;

தமிழ்நாட்டில் 52.46 இலட்சம் வெள்ளாடுகள் உள்ளன. வெள்ளாடுகளின் இறைச்சியும், பாலும் சத்துள்ள மிகச் சிறந்த உணவாகும். மேலும், வெள்ளாட்டின் பால் எளிதில் ஜீரணமாகக் கூடியது. மாநிலத்தில் வெள்ளாடு வளர்ப்பை மேம்படுத்துவதற்காக, இரண்டு வெள்ளாடு வளர்ப்புப் பிரிவுகள், முறையே புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், சின்ன சேலத்திலுள்ள செம்மறியாட்டுப் பண்ணையிலும் இயங்குகின்றன. இங்கு, தலைச்சேரி மற்றும் ஜமுனா பாரி வெள்ளாடுகள் வளர்க்கப்பட்டு, கடாக்கள், உள்ளூர் வெள்ளாடுகளின் தரம் உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன.

மேலும் உள்ளூர் வெள்ளாடுகளின் இனவிருத்திக்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட சில கால்நடை மருத்துவ நிலையங்களில் நெல்லிச்சேரி மற்றும் ஜமுனாபாரி வெள்ளாடுகளின் கடாக்கள் பராமரிக்கப்படுகின்றன.

1989–90 ஆம் ஆண்டில் இப்பிரிவுகளில் 70 ஜமுனாபாரி குட்டிகள் பிறந்துள்ளன. 95 ஜமுனாபாரி ஆடுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளுடைய வெள்ளாடு வளர்ப்பிற்கு நல்ல ஆதரவு இருப்பதோடு கொட்டில் முறையில் வெள்ளாடுகளை வளர்ப்பதில் பல விவசாயிகள் ஆர்வத்துடன் முனைந்துள்ளனர்.

1V கோழி வளர்ப்பு ;

தமிழகத்தில் கோழிகளின் எண்ணிக்கை 182.84 இலட்சமாகும் கோழி இறைச்சியும், முட்டைகளும் புரதச் சத்து மிக்கதும், குறைந்த விலையில், குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருளுமாகும். நாட்டுக் கோழிகளின் இறைச்சி மற்றும்

1990 ஏப்ரல் 5]

முட்டை கொடுக்கும் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு, அய லினமான வெள்ளை லெக்கார்ன் கோழிகளை கிராமங்களில் அறி முகப்படுத்துவதே கோழி வளர்ப்புத் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். கோழிப்பண்ணையில் விவசாயிக்குக் கிடைக்கக் கூடிய ஆதாயம், கோழிக் குஞ்சுகளின் தரத்தை பொறுத்ததே யாகும். இனவிருத்திக்கு வேண்டிய தரமான கோழிகளையும், கோழி வளர்ப்போருக்குத் தேவையான ஆலோசனைகளையும் அளிப்பதற்காக காட்டுப்பாக்கம் மற்றும் ஒசூர் ஆகிய இரண்டு இடங்களில் குஞ்சுகள் பொரிக்கும் நிலையங்களும், மாநிலத்தில் இதர இடங்களில் 27 கோழி விரிவாக்க நிலையங்களும் உள்ளன. இவை, தனியார் கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு, பண்ணை ஆரம்பிக்கத் தேவையான வசதிகளையும் கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து கொடுக்கிறது.

(2) கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ;

கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று ஈரோட்டில் நிறுவப்பட்டுள்ளது. இங்குள்ள அலுவலர்கள், அப்பகுதிகளில் கோழி நோய்கள் தோன்றுவதைக் கண்டறிந்து, அவற்றைக் கட் டுப்படுத்துவதற்கான முன் நடவடிக்கைகளை எடுக்க அறிவுரைகள் வழங்கி பணி புரிகின்றனர். மேலும், இவர்கள் கோழிகளிடையே திடீரென்று ஏற்படும் நோய்க்கிளர்ச்சிகளையும் கவனித்து, தடுப் பூசிகள் போடுவதற்கான ஏற்பாடுகளையும் செய்கின்றனர்.

1989–90 ஆம் ஆண்டில் (31, டிசம்பர் 1989 வரை) 330 கிராமங்களும், 850 தனியார் கோழிப்பண்ணைகளும் பார்வை யிடப்பட்டு, 2,501 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

V. பன்றி வளர்ப்பு ;

பொதுவாக, பன்றிகள் கிராமங்களிலுள்ள எளிய விவசாயி களின் பராமரிப்பிலேயே உள்ளன. அவர்கள், இறைச்சி உற் பத்தி ஆற்றல் குறைவாக உள்ள நாட்டுப் பன்றிகளையே வளர்த்து வருகின்றனர். எனவே, இவற்றின் இறைச்சி உற்பத்தித்திறனை மேம்படுத்தும்பொருட்டு, சிறந்த அயலினப் பன்றிகளின் மூலம் கலப்பின அபிவிருத்தி செய்யப்படுகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறை, ஒசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு மற்றும் சைதாப்பேட்டை (சென்னை) ஆகிய நான்கு இடங்களில் பன்றி வளர்ப்புப் பிரிவுகளை செயல்படுத்துகிறது. இங்கு, வெள்ளை யார்க்ஷையர் (Large white, yak shairs) பன்றிகள் இனவிருத்தி செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட கடா பன்றிகள், உள்ளூர் இனப் பன்றிகளின் தரத்தை உயர்த்து வதற்காக விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகின்றன. இப்பிரிவு களில் பிறக்கும் பன்றிகள், சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டத் தின் கீழ் பயனடைவோருக்கும் வழங்கப்படுகின்றன.

VI. பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு ;

மாநிலத்தில் செயல்படுத்தப்படும் கால்நடை வளர்ப்பில், பசுந்தீவனப் பயிர் உற்பத்தியும் முக்கியமான அம்சமாகும். பால் பண்ணைகளின் பொருளாதாரம், பசுக்குகளுக் கொடுக்கப்படும் தீவனச் செலவை வெகுவாக பொறுத்துள்ளது. பசுந் தீவன பயிர் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பில் முக்கியமானதாகும். பசுக்களுக்கு அதிக அளவில் பசுந்தீவனம் கிடைக்கச் செய்வதால், பண்ணையில் தீவனச் செலவு கணிசமாக குறைக்கப்பட வாய்ப்புப் உண்டு.

பசுந்தீவனப் பயிர் வளர்ப்பைக் கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகள் மேற்கொள்வதற்காக கால்நடைப் பராமரிப்புத் துறை, குறைந்த விலையில் தீவன நாற்றுகள், தீவன விதைகள் மற்றும் தீவனப் பயிர் மரக்கன்றுகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு விநியோகித்து, விவசாயிகள் எல்லா காலங்களிலும் தீவனப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு ஊக்கமளித்து வருகிறது. கால்நடை பராமரிப்புத் துறையின் விஸ்தரிப்பு அலுவலர்கள் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டப் பகுதிகளைப் பார்வையிட்டு, தகுந்த முறையில் பசுந்தீவனப் 'பயிர்களைப் பயிரிடுதல் மற்றும் பால் பண்ணை பொருளாதாரத்தில் பசுந்தீவனப் பயிர் சாகுபடியில் முக்கியத்துவம் ஆகியவற்றில் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் அளிக்கின்றனர்.

விவசாயிகளுக்குத் தேவையான பசுந்தீவனப் பயிர் நறுக்குகள், விதைகள் மற்றும் நாற்றுகளை உற்பத்தி செய்து, விநியோகிக்கும் பொருட்டு மாநிலத்தில் 8 தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்களை கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. 1989—90 ஆம் ஆண்டில் (31, டிசம்பர் 1989 வரை) 76.72 இலட்சம் தீவனப் பயிர் நறுக்களும் 8.7 மெட்ரிக் டன் தீவனப் பயிர் விதைகளும் 2.1, இலட்சம் தீவனப் பயிர் மரக்கன்றுகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கால்நடைப் பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்படும் பல்வேறு பசுந்தீவனப் பயிர் வளர்ப்புத் திட்டங்கள் காலப் போக்கில் தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரித்து, பால்பண்ணைகள் மேலும், இலாபகரமாக நடைபெற உதவியாக இருக்கும்.

VII [சிறப்புத் திட்டங்கள்:

கால்நடைப் பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் போன்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு உபரி

வருவாய் பெற வழி செய்கிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தும் முக்கிய திட்டங்களின் விவரம் கீழே கொடுக்கப்படுகிறது.

(1) சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம்:

மத்திய அரசின் நிதி உதவி பெற்ற இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கீழே கண்டுள்ள பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

(அ) செம்மறி ஆடு உற்பத்தித் திட்டம் :

இத்திட்டத்தை கால்நடை பராமரிப்புத் துறை வடஆற்காடு-அம்பேத்கார், சேலம், நெல்லை கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயன் பெறுவோர் மற்றும் விவசாயிகளுக்கு 25 சதவீதம், $33\frac{1}{3}$ சதவீதம் மானியம் முறையே வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 7,000 கிரயமுள்ள 20 பெட்டை ஆடுகளும், 1 கடாவும் அடங்கிய ஆடு வளர்ப்புப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்து தரப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் 1,200 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ரூ. 63.82 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 923 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ரூ. 50.37 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வங்கிகளின் மூலம் நிதி உதவியும் அரசிடமிருந்து மான்யமும் பெற துறை உதவி அளிப்பதுடன் இத்திட்டத்தில் பயனடைவோரின் ஆடுகளுக்கு நோய் நீக்கப் பணிகளையும் கால்நடை பராமரிப்புத்துறை செய்து வருகிறது.

(ஆ) பன்றி உற்பத்தித் திட்டம் :

கால்நடைப் பராமரிப்புத் துறை இத்திட்டத்தை மதுரை மாவட்டத்தில் செயல்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ரூ. 6,000 மொத்தக் கிரயமுள்ள 3 பன்றிகள் அடங்கிய பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த மானிய உதவியளிக்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் 25 பன்றி வளர்ப்புப் பிரிகள் ஏற்படுத்தப்பட உள்ளது. இதுவரை, 25 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ரூ. 2.46 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

(இ) கன்று வளர்ப்புத் திட்டம் :

இத்திட்டத்தை வடஆற்காடு-அம்பேத்கார், சேலம், தென்னாற்காடு, கோயம்புத் தூர், மதுரை மாவட்டங்களில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி இணையம் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கலப்பினக் கிடேரிக் கன்றுகளுக்கு நான்கு மாதம் முதல் 32 மாதம் வரை பராமரிப்பதற்கான தீவனம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

1989–90ஆம் ஆண்டில் ரூ. 101.97 இலட்சம் செலவில் 3,250 கன்றுகளுக்கு தீவனம் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. இதுவரை, ரூ. 96.22 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு, 1986 அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஈ) கோழி உற்பத்தித் திட்டம்;

இத்திட்டம் செங்கை-அண்ணா, வடஆற்காடு-அம்பேத்கார், சேலம், மதுரை மாவட்டங்களில், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகிறது. இதன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு முட்டை மற்றும் இறைச்சிக் கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஆரம்பிக்க கடன் உதவும் மான்ய உதவி அளிக்கப்பட்டு வந்துள்ளது. சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை, விவசாயிகளுக்கு மான்யமாக திட்டச் செலவில் 25 சதவீதம் மற்றும் $33\frac{1}{3}$ சதவீதம் வழங்கப்படுகிறது.

(2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்;

இத்திட்டத்தின் கீழ் பசுந்தீவனப் பயிர் வளர்ப்புக்கான நடவடிக்கைகள் கோயம்புத்தூர், திண்டுக்கல்-காயிதேமில்லத், மதுரை-காமராஜர், நெல்லை-கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் பயன்பெறுவோருக்கு பசுந்தீவன நறுக்குகள், விதைகள் மற்றும் மர நாற்றுகள் 50 சதவீதம் மான்யத்தில் வழங்கப்பட்டு, நிரந்தரமாகத் தீவனப் பயிர் சாகுபடி செய்வதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது.

(3) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ;

இந்தத் திட்டம், நீலகிரி, மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 1989–90ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1990 ஏப்ரல் 5]

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. ஊட்டியில் நிறுவப்பட்டுள்ள உறைவிந்து நிலையத்திற்கு பொலிகாளைகள் வாங்குதல் ..	24.00
2. ஊட்டி உறைவிந்து நிலையத்திற்கு கருவிகள் வாங்க ..	5.55
3. ஐந்து புதிய கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் மூன்று கிளை நிலையங்களை கால்நடை மருத்துவமனையாக உயர்த்த கட்டிடங்கள் கட்ட	9.00
மொத்தம் ..	38.55

(4) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

மாவட்ட ஊரக அபிவிருத்தி நிறுவனங்களினால் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு, கறவை மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் மற்றும் வேலை மாடுகள் வழங்கப்படுகின்றன. இவர்கள் கூடுதல் வருவாய் பெறும் வகையில், சொந்தமான கால்நடை வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காக சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகளுக்கு 25 சதவீதம் மான்யமும், வேளாண் தொழிலாளர்களுக்கு $33\frac{1}{3}$ சதவீதம் மான்யமும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

(5) வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் :

இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் தேவர் திருமகன், தர்மபுரி, புதுக்கோட்டை, சிதம்பரனார் மற்றும் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டங்களிலுள்ள வறட்சிப் பகுதிகளில் வாழும் விவசாயிகளின் வாழ்க்கை பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 5.43 இலட்சம் செலவில் தீவனப் பயிர் உற்பத்தித் திட்டங்கள் செயலாக்கப்பட்டன. 1989–90 ஆம் ஆண்டில் தீவனப் பயிர் அபிவிருத்தித் திட்டங்கள் தர்மபுரி, நெல்லை–கட்டபொம்மன் மாவட்டங்களில் செயல்படுத்த ரூ. 2.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(6) கன்று வளர்ப்புத் திட்டம் :

விவசாயிகள் தங்களுடைய விலை மதிப்புள்ள கலப்பினக் கன்றுகளை விற்றுவிடாமல், பசுவாகும் வரை நன்கு வளர்த்துப் பயனடையும்படி ஊக்குவிப்பதற்காக, மாநிலத்தின் பல்வேறு

பகுதிகளில் கன்று வளர்ப்புத் திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால் தொடர்ந்து 1989–90 ஆம் ஆண்டில் செயல்படுத்தப் பட்டது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து விவசாயிகள் கடனுதவி பெற உதவுவதுடன், கன்றுகள் வாங்குவதிலும் அவர் களுக்கு உதவி செய்து அக் கால்நடைகளுக்கு தேவையான மருத்துவ தேவைகளையும் கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து வருகிறது. 1989–90 ஆம் ஆண்டில் 5,205 கன்றுகள் அடங்கிய 1,041 கன்று பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டம் விவசாயிகளால் பெரிதும் விரும்பப்படுவதால், காலப் போக்கில் மாநிலத்தின் பால் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, பால் பண்ணைத் தொழில் செய்யும் விவசாயிகளின் வருவாய் ஏற்ற முடையும்.

(7) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

ஐந்து மாவட்டங்களில், ஒன்பது மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலனிற்காக கால்நடை அபிவிருத்தி பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. அவை (1) கறவை மாடுகள் விநியோகித் தல் ; (2) செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் ; மற்றும் (3) செயற்கை முறை கருவூட்டல் மூலம் பிறந்த கிடேரிக் கன்றுகளுக்குத் தீவனம் வழங்குதல் ஆகும். இத்திட் டத்தின்கீழ் 1989–90 ஆம் ஆண்டில் 540 விவசாயிகள் ரூ.53.28 இலட்சம் மான்யம் பெற்று பயனடைய உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மொத்த திட்ட செலவில் 50 சதவீதம் மான்ய உதவி அளிக்கப்படுகிறது. தென்னார்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில் மட்டும் 75 சதவீதம் மான்ய உதவ வழங்கப் படுகிறது.

பழங்குடியினர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட ஒன்பது கால் நடை மருந்தகங்கள், ஒன்பது இயங்கும் கால்நடை ஊர்திகள் மற்றும் மூன்று கிளைநிலையங்களின் மூலம் இப்பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும் பசுக்கள், எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியும் செய்யப்படுகிறது.

(8) சிறப்பு மத்திய உதவித் திட்டம் :

ஆதி திராவிடர் சமுதாயத்திற்குட்பட்ட விவசாயிகள் மட்டுமே பயன்பெறும் நோக்குடன், மத்திய அரசின் உதவியோடு இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி மற் றும் சென்னை நகரம் நீங்கலாக பிற மாவட்டங்கள் அனைத்தி லும் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்ந் தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் 20 பெட்டை செம்மறி ஆடு களும், ஒரு கடாவும் அடங்கிய ஆடுவளர்ப்புப் பிரிவை ஏற்படுத்து வதற்காகும் செலவில் 50 சதவீதம் மான்ய உதவி பெறுகின்றனர்

1990 ஏப்ரல் 5]

1989–90 ஆம் ஆண்டில் 5,367 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைக்கப்பட உள்ளன. இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள ஆடு வளர்ப்புப் பிரிவுகள் 2,895 ஆகும்.

(9) வறட்சி நிவாரணம் :

வறட்சிகால பணியாக கால்நடை பராமரிப்புத்துறை தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து வைக்கோல் வாங்கி வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள எளிய விவசாயிகளுக்கு மான்ய விலையில் வைக்கோலை விநியோகித்தது. இப்பணிகாக, வைக்கோல் கொள்முதல் செய்தல், மற்றும் உரிய இடங்களுக்கு அனுப்புதல் போன்ற பணிக்காக இந்த வருடம் ரூ. 6.75 இலட்சம் செலவிடப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து 537.65 மெட்ரிக் டன் வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள 5,174 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. தவிர, ரூ. 18.25 இலட்சம், மாநிலத்தில் உள்ள 9,766 ஏழை விவசாயிகளுக்கு 5,399 ஹெக்டேர் நிலப்பரப்பில் பசுந்தீவன உற்பத்திக்காக மானியமாக வழங்கப்பட்டது.

(10) ஒருங்கிணைந்த மாதிரி அளவீட்டுத் திட்டம் (மாநில அளவில்) :

முக்கிய கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை மதிப்பீடு செய்து, அவற்றின் உபயோக முறைகளையும், பசுக்கள், எருமைகளின் வளர்ப்பு முறைகளையும், மதிப்பீடு செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் கோடை, மாரி, குளிர் ஆகிய மூன்று பருவங்களிலும் அளவீடுகள்மேற்கொள்ளப்படுகின்றன. மூன்று நிலைகளிலான எதேச்சை மாதிரி முறைப்படி (Three tier random sampling) அளவீடுகள் எடுக்கப்படுகின்றன. இதற்காக மாநிலம் 16 பகுதிகளாக பகுக்கப்பட்டு, ஒவ்வொன்றும் கணக்கெடுப்பாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. 1989–90 ஆம் ஆண்டு வரை 3,045 கிராமங்களில் அளவீடுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த அளவீடுகளின் முடிவுகள் வருடாந்திர மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளன. 1989–90ஆம் ஆண்டின் (8 மாதங்கள்) அளவீடுகளின் முடிவுகள் பின்வருமாறு :—

	கோடை.	மழை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
(அ) பால் உற்பத்தி மதிப்பீடு (000' டன்கள்).	1,[illegible]	1,157	2,289

[1990 ஏப்ரல் 5

(1)	கோடை (2)	மழை (3)	மொத்தம் (4)
(ஆ) முட்டை உற்பத்தி மதிப்பீடு (மில்லியன்).	868.59	772.5	1,641.09
(இ) இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் கிலோ).	11.65	12.75	24.40

வருமாண்டுகளிலும் இந்த அளவீடுகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

(11) மாதிரி அளவீடு திட்டம் (மாவட்ட அளவில்) :

வட ஆற்காடு-அம்பேத்கார், பெரியார், மதுரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மாவட்ட மாதிரி அளவீடு திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. முக்கிய கால்நடை உற்பத்திப் பொருள்களான பால், இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றின் உற்பத்தியை மதிப்பீடு செய்வதும், பால், முட்டை, உற்பத்தி செலவை ஆய்வு செய்வதும் இந்த அளவீடுகளின் நோக்கமாகும்.

(12) கால்நடை இடைக்கால கணக்கெடுப்பு (மாநில அளவில்) :

பொதுவாக மாநிலம் முழுவதிலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கால்நடை கணக்கெடுப்பு எடுக்கப்படுகிறது. கால்நடைகளின் ஆயுள் குறுகியதாதலால், இந்த இடைக்காலங்களில் கால்நடைகளின் பிறப்பு, இறப்புகளினால் ஏற்படும் மாறுதல்கள், ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இந்த கணக்கெடுப்பின் நோக்கமாகும். இத் திட்டம் 1982ஆம் ஆண்டு முதல் செயல்படுகிறது. இதன்மூலம் சேகரிக்கப்படும் மதிப்பீடுகள் கால்நடை முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டுவதில் பயன்படுத்தப்படுகின்றன.

பகுதி III.

(1) கால்நடைப் பண்ணைகள் :

தமிழ்நாட்டில், கால்நடை அபிவிருத்தியை மேற்கொள்ளும் பொருட்டு, விஞ்ஞான முறையில் பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் பன்றிகள் இனப் பெருக்கம் செய்வதற்காக கால்நடைப் பராமரிப்புத் துறை ஏழு இடங்களில் மாவட்டப் பண்ணைகளை செயல்படுத்தி வருகிறது.

இந்தப் பண்ணைகள் ஓசூர் (தர்மபுரி மாவட்டம்), புதுக்கோட்டை, ஒரத்தநாடு (தஞ்சை மவட்டம்), செட்டிநாடு பசும்பொன் தேவர் (திருமகன் மாவட்டம்), அபிசேகப்பட்டி

1990 ஏப்ரல் 5]

(நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்), உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) மற்றும் கொருக்கையில் (தஞ்சை மாவட்டம்) செயல் படுகின்றன.

ஓசூர் மற்றும் புதுக்கோட்டை பண்ணைகளில் சிந்தி இன மாடுகளும், கலப்பின மாடுகளும் இனவிருத்தி செய்யப்படு கின்றன. ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டியில் உள்ள பண்ணைகளில் முர்ரா எருமையினம் வளர்க்கப்படுகிறது. கொருக்கை பண்ணையில் உம்பளாச்சேரி இன மாடுகளும், ஊட்டி பண்ணையில் ப்ரீஸியன் இன மாடுகளும் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

(2) அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை:

மாநிலத்தில் உள்ள மாடுகளின் உற்பத்தி திறனை அதிகரிக்க தேவையான ஜெர்சி காளைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் நோக்குடன் இப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. இப் பண்ணையில் திரவ நைட்ரஜன் உற்பத்திப் பிரிவுடன் கூடிய உறை விந்து வங்கி ஒன்று உள்ளது. இங்குள்ள பொலிகாளை களிலிருந்து சேகரிக்கப்படும் விந்து பதப்படுத்தப்பட்டு உறை படுத்தப்பட்டு புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப் பள்ளி மாவட்டங்களிலுள்ள செயற்கைமுறை கருவூட்டல் நிலை யங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 2,91, 00 டோஸ் உறை விந்தும், 39,100 லிட்டர் திரவ நைட்ரஜனும் 1989—90 ஆம் ஆண்டில் (31—12—1989 வரை) இவ்வங்கியில் தயாரிக்கப் பட்டுள்ளன.

உட்கரு மாற்றும் நிலையமும் (Emb yo Transfer Unit) இப் பண்ணையில் இந்த வருடம் தொடங்கப்பட்டுள்ளது.

(3) அரசு பால்பண்ணை, மாதவரம் :

இப்பண்ணை சென்னை நகரத்தின் புறப்பகுதியில் அமைந் துள்ளது. இங்கு ஓங்கோல் கலப்பினங்கள் மற்றும் முர்ரா எருமைகள் பராமரிக்கப்படுகின்றன. குறைவான கட்டணத்தில் தனியாரின் மாடுகளைப் பராமரிக்கும் தனிப்பிரிவும் இப் பண்ணை யில் உள்ளது. இங்கு ஓங்கோல், ஜெர்ஸி இனக் கலப்பினம் உற் பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

[1990 ஏப்ரல் 5

பகுதி IV.

கால்நடை நலப் பணிகள்.

(1). கால்நடை மருத்துவ நிலையங்கள் :

(அ) கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள், இளை நிலையங்கள்—பல்வேறு கால்நடை அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் உண்டாகும் சாதனைகளைப் பாதுகாத்து, அவற்றை மேம்படுத்துவதற்கும் பலதரப்பட்ட நோய்களிலிருந்து கால்நடைகளை பாதுகாப்பதற்கான போதுமான வசதிகள் அளிக்கப்பட வேண்டும். எனவே தொற்று நோய்கள், இதர நோய்கள், குடற்புழுக்கள்/ஒட்டுண்ணிகளால் உண்டாகும் நோய்கள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்காக மாநிலத்தின் எல்லா பாகங்களிலும் கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இடத்தின் தேவைக்கும் அங்குள்ள பொதுமக்களின் ஆர்வத்திற்கும் ஏற்ப கால்நடை பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்கள், பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கு கொண்டுவரப்படும் கால்நடைகளுக்கு, இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந் நிலையங்களில், அறுவை சிகிச்சைகள் மருத்துவ சிகிச்சை, இன விருத்தி சம்பந்தப்பட்ட கோளாறுகள் கவனித்தல், பயனற்ற காளைகளுக்கு காயடித்தல், கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தடுப்பூசிகள் போடுதல் போன்ற பணிகள் ஆற்றப்படுகின்றன. கால்நடை மருத்துவமனைகளில் நோயுற்ற மாடுகள் தங்கி சிகிச்சை பெற அனுமதிக்கப்படுகின்றன. கால்நடை பிரதம மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்வதற்கான எல்லா வசதிகளும் உள்ளன. மதுரை, தல்லாக்குளத்திலுள்ள கால்நடை மருத்துவமனையில் எக்ஸ்ரே கதிர் படமெடுப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது கீழ்க்கண்டுள்ள மருத்துவ நிலையங்கள் மாநிலத்தில் உள்ளன:—

நிலையத்தின் பெயர்.	1—1—1990 அன்று எண்ணிக்கை.
(1)	(2)
1. பிரதம மருத்துவமனைகள்	22
2. கால்நடை மருத்துவமனைகள்	55

1990 ஏப்ரல் 5]

நிலையத்தின் பெயர்	1-1-1990 அன்று எண்ணிக்கை.
(1)	(2)
3. கால்நடை மருத்துவமனை கூடிய கேந்திர கிராம நிலையங்கள்.	3
4. கால்நடை மருந்தகங்கள்	714
5. கால்நடை மருந்தகம் கூடிய கேந்திர கிளை நிலையங்கள்.	24
மொத்தம் ..	817

இதில் 10 கால்நடை மருந்தகங்கள் 1989-90 ஆண்டில் கீழே கண்டுள்ள இடங்களில் திறக்கப்பட்டதாகும்:—

கால்நடை மருந்தகத்தின் பெயர்.	பஞ்சாயத்து யூனியன்.	மாவட்டம்.
(1)	(2)	(3)
1. மேக்கிரி மங்களம்.	குத்தாலம்	தஞ்சாவூர்.
2. பெருவளப்பூர்.	புள்ளம்பாடி ..	திருச்சி.
3. லட்சுமிபுரம் ..	பெரியகுளம் ..	மதுரை.
4. மொரப்பூர் ..	மொரப்பூர் ..	தருமபுரி.
5. திருமழிசை	பூவிருந்தவல்லி ..	செங்கை-அண்ணா
6. வெள்ளோட்டம் பரப்பு.	கொடுமுடி ..	பெரியார்.
7. பாம்புக்கோயில் சந்தை.	சங்கரன்கோயில் ..	நெல்லை-கட்டபொம்மன்.
8. வலையபட்டி	மோகனூர் ..	சேலம்.
9. வெட்டன்விடுதி.	கறம்பக்குடி ..	புதுக்கோட்டை.
10. வடச்சேரி ..	பேர்ணாம்பட்டு ..	வட ஆற்காடு-அம்பேத்கார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இந்த மருத்துவ நிலையங்கள் தவிர மொத்தம் 2,226 கால் நடை கிளை நிலையங்கள் பணிபுரிகின்றன. 1989–90 ஆம் ஆண்டில் (31–12–1989 வரை) 93,24,278 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, 4,04,426 கால்நடைகளுக்குக் காயடிக்கப்பட்டு, 99,54,375 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. 1990–91 ஆம் ஆண்டில் பத்து கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படும்.

(ஆ) கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள்.—நம் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 11 கால்நடை நோய்ப் புலனாய்வு பிரிவுகளும் மாவட்டங்களில் தோன்றும் நோய்களின் தன்மைகளைக் கண்டறிந்து, அவற்றைக் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள களப்பணியாளர்களுக்குத் தக்க ஆலோசனை அளித்து வருகின்றன. மேலும், கால்நடைகள் மற்றும் கோழிகளைத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான தடுப்பு மருந்து தேவைகளை பற்றியும் அறிவித்து உதவி வருகின்றன.

1989–90 ஆம் ஆண்டு (21–12–1989 வரை) இப்பிரிவுகளில் ஆற்றப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு :—

	எண்ணிக்கை.
1. சோதிக்கப்பட்ட மாதிரிகள்	2,40,445
2. காசநோய்க்காக சோதிக்கப்பட்டவை ..	2,123
3. கருச்சிதைவுக்காக சோதிக்கப்பட்டவை ..	5,218
4. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவை.	394
5. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவை.	184

(இ) நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்.—உள்ளமைந்த கிராமங்களிலுள்ள விவசாயிகளின் நோயுற்ற கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 50 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1989–90 ஆம் ஆண்டில் (31–12–1989 வரை) இப்பிரிவுகளில் ஆற்றப்பட்ட பணிகளின் விவரம் பின் வருமாறு:—

	எண்ணிக்கை
1. சிகிச்சை அளிக்கப்பட்டவை	2,06,641
2. ஆண்மை நீக்கம் செய்யப்பட்டவை ...	36,505

1990 ஏப்ரல் 5]

			எண்ணிக்கை.
3.	குடற்புழு நீக்கம் செய்யப்பட்டவை	..	4,85,278
4.	தடுப்பூசிகள் போடப்பட்டவை ..	..	2.93,124
5.	செயற்கைமுறை கருவூட்டப்பட்டவை	..	16,291

நோய்த் தடுப்பு ஊசி மருந்துகளை பாதுகாக்க குளிர்சாதன வசதி அமைத்தல்.

1990 ஆம் ஆண்டு கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு ஏற்படும் தொத்து நோய்களைத் தடுக்க தேவைப்படும் தடுப்பு ஊசி மருந்துகளைக் குளிர்சாதன வசதிகளுடன் நல்லமுறையில் சேமித்து வைக்க ஒரு திட்டம் ரூ. 4.20 லட்சம் செலவில் செயல்படுத்த உள்ளது. இந்த திட்டத்தின் முதல் கட்டமாக, தேர்ந்தெடுத்த, கால்நடை மருந்தகங்கள் மற்றும் நோய் புலனாய்வு பிரிவுகளில், தடுப்பு ஊசி மருந்துகளைப் பாதுகாப்புடன் சேமித்துவைக்க, ஒரு குளிர்சாதனப் பெட்டி நிறுவப்படும். இதனால் தடுப்பு ஊசி மருந்துகளை ராணிப்பேட்டை நிலையத்திலிருந்து கொண்டு வர ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்படும்.

(2) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் :

வெக்கை நோய் கால்நடைகளிடையே பெரும் சேதத்தை உண்டுபண்ணும் கொடிய தொற்று நோயாகும். எனவே 18 மாவட்டக் குழுக்கள், 10 கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 10 சோதனைச் சாவடிகளின் மூலம் வெக்கை நோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெக்கை நோய் மாவட்டக் குழுக்கள்.—இந்தக் குழுக்கள், மாவட்டத்தில் உள்ள மாடுகள், எருமைகள், ஆடுகளுக்கு வெக்கைநோய் தடுப்பு ஊசி போட்டு வெக்கை நோய் தடுப்பு சக்தி அதிக அளவில் உண்டாவதற்காக செயல் படுகின்றன. இந்தப் பணி நல்லமுறையில் திட்டமிடப்பட்டு மாவட்டத்தில் கண்காணிப்புக் குழு புரியும் பகுதி தவிர மற்ற எல்லாப் பகுதிகளிலும் மூன்று ஆண்டிற்கு ஒருமுறை தடுப்பு ஊசி போட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(ஆ) வெக்கை நோய் கண்காணிப்புக் குழுக்கள்.—மாநில எல்லைக்குள் 15 கி.மீ. சுற்றளவு பகுதிகளில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அப்பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்குக் கால முறைப்படி தடுப்பூசி போடப்படுகின்றது.

இதன்மூலம் மாநில எல்லைப் பகுதிகளில் நோயற்ற நிலை உருவாக்கப்பட்டு, வெக்கை நோய் தொற்று நோய்க்கிருமிகள் எல்லையைத் தாண்டி மாநிலத்திற்குள் வருவதைத் தடுக்கும் அரணைப்போல விளங்குகிறது.

(இ) வெக்கை நோய் சோதனைச் சாவடிகள்.—எல்லையோரப் பகுதிகளில் அமைந்திருக்கும் சோதனைச் சாவடிகள் மூலம் மாநிலத்திற்குள் வரும் கால்நடைகளுக்கும் வெளியேறும் கால் நடைகளுக்கும் வெக்கை நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது.

1989–90 ஆம் ஆண்டில் (30–11–1989 வரை) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் 26,79,956 கால்நடை களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.

(3) கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம் :

(அ) கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் செயல்படுத் தப்படுவது.—ஏழை விவசாயிகளின் மாடுகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்படுகிறது. இதற்காகும் தடுப்பூசி மருந்தின் கிரயத்தில் 50 சதவீதம் மத்திய மற்றும் மாநில அரசு களினால் சமமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதர கிரய மான 50 சதவீதம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் (31–10–1989 வரை) 1,04,636 கால் நடைகளுக்குக் கோமாரி தடுப்பூசி போடப்பட்டது.

(ஆ) தேசியபால்வள அபிவிருத்தி வாரியத்தின் மூலம் செயல் படுத்தப்படுவது.—மாநிலத்தில் கோமாரி நோயைத் தடுப்பதற்கான ஏழாண்டுத் திட்டம் ஒன்று 1983–84 ஆம் ஆண்டு முதல் நெல்லை கட்டபொம்மன், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராஜர் மாவட்டங்களிலும், கோயம் புத்தூர், பெரியார், மதுரை மாவட்ட எல்லையோரங்களிலும் தேசிய பால்வள அபிவிருத்தி வாரியத்தின் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதன் கீழ் மாடுகள் எருமைகளுக்கு இலவசமாகக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது.

1989–90 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை மாவட்டங்களும் மற்றும் இராமநாதபுரம், மதுரை, பெரியார் மற்றும் திருநெல்வேலி எல்லையோரங்களிலும் இத் திட்டத்தின் கீழ் செயல்பாடு துவங்கியது.

1989–90 ஆம் ஆண்டில் (30–11–1989 வரை) 2,04,46,874 கோமாரி நோய்த் தடுப்பூசிகள் வாரியத்தின் மூலம் இலவசமாக போடப்பட்டுள்ளன.

1990 ஏப்ரல் 5]

(4) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களின் சீரியக் கட்டுப்பாடு.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக 1984-85-ல் மத்திய அரசின் 50 சதவீதம் நிதி உதவியுடன் கூடிய திட்டமொன்று செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் செயல்படும் பணிகள் பின்வருமாறு :—

(அ) நோயற்ற மண்டலம் ஏற்படுத்துதல் :

ஏற்றுமதி செய்வதற்கேற்ற நோயற்ற கால்நடைகள், அவற்றின் உற்பத்திப் பொருட்களை பெறும் வகையில் வசதி களை அளிப்பதே நோயற்ற மண்டலத்தை உருவாக்குவதன் முக்கிய நோக்கமாகும். ஆரம்ப கட்டமாக, இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (1) பெருமளவில் தடுப்பூசிகள் போடுதல் (2) சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல் மற்றும் (3) நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நிலையம் ஏற்படுத்துதல் போன்ற முக்கூறுகளின் மூலம் மேற்படி நோக்கம் நிறைவேற்றப்படுகிறது.

(ஆ) பெருமளவில் தடுப்பூசிகள் போடுதல் :

வெக்கை நோய் மற்றும் கோமாரி நோய்த் தடுப்பூசிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் கால்நடை களுக்கும், கன்னியாகுமரியிலுள்ள காவல்கிணறு சோதனைச் சாவடி முதல், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் சுற்றளவுள்ள பகுதிகளிலுள்ள மாடு களுக்கும் இலவசமாகப் போடப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் (31—12—1989 வரை) போடப்பட்ட கோமாரி நோய்த் தடுப்பூசிகளின் எண்ணிக்கை:—

		எண்ணிக்கை.
கன்னியாகுமரி மாவட்டம்		1,53,035
இடைப்பட்ட இடம்		50,614
மொத்தம்	..	2,03,649

(இ) சோதனைச் சாவடிகள் :

மாவட்ட எல்லையோரங்களில் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டு வெக்கை நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்ட கால்நடைகள்; நோயற்ற பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படு

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

கின்றன. 1989–90ஆம் ஆண்டில் (31–12–1989 வரை) மாவட்ட எல்லை தாண்டிய 33,872 கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

(5) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப் பேட்டை :

(அ) தடுப்பு மருந்து உற்பத்தி :

மாநிலத்திலுள்ள கால்நடைகள் மற்றும் கோழிகள் அனைத்துக்கும் பல்வேறு தொற்று நோய்களைத் தடுப்பதற்கான ஊசிகளைப் போடும் வசதிகள் கால்நடை பராமரிப்புத் துறையினால் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகள் எல்லாம் இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப் படுகின்றன. இது நம் நாட்டிலுள்ள பழம் பெரும் நிலையங் களில் ஒன்றாகும்.

தற்போது இந்நிலையத்தில் 7 வகையான பாக்டீரியல் தடுப்பு மருந்துகளும், 13 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளும், 12 வகையான நோய் கண்டறியும் மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன. இங்கு கீழ்க்கண்ட முக்கிய நோய்களுக்கு தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன:—

1. மாடுகளுக்கு: வெக்கை நோய், தொண்டை அடைப்பான், சப்பை நோய், அடைப்பான்.

2. ஆடுகளுக்கு : ஆட்டம்மை, வெக்கை நோய், துள்ளுமாரி.

3. நாய்களுக்கு : வெறிநாய்க்கடி, டிஸ்டம்பர்.

4. கோழிகளுக்கு : கோழிக்கழிச்சல், கோழி அம்மை.

1989–90 ஆம் ஆண்டில் (31–12–1989 வரை) 43,66,887 டோஸ் பாக்டீரியல் தடுப்பு மருந்துகளும், 2,09,68,119 டோஸ் வைரஸ் மருந்துகளும் 59,702 டோஸ் நோய் கண்டறியும் மருந்துகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) நோய் கண்டறிதல்:

இராணிப்பேட்டை நிலையத்தில் கால்நடை நோய்களை கண்டறியும் பிரிவும் உள்ளது. மாநிலத்தில் கால்நடைகளுக்கு தொற்று நோய் ஏற்பட்டுள்ளதை தெரிவிக்கப்பட்டதுடன் இந்த பிரிவிலுள்ள அலுவலர்கள் பாதிக்கப்பட்ட கிராமத்

திற்கு சென்று கால்நடை மற்றும் கோழிகளுக்கு ஏற்பட்டிருக்கும் தொற்று நோய்களை கண்டறிந்து தடுப்பு முறைகளுக்கான ஏற்பாடுகளை எடுக்க உதவி புரிகின்றனர்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம்.

இந்திய பொருளாதாரத்தின் மையமாக வேளாண்மை அமையுமானால், கால்நடைச் செல்வம் வேளாண்மையின் முதுகு எலும்பாகும். வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்கள் நமது நாட்டின் வருமானத்தில் சுமார் 40 விழுக்காடு என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவில் பயிரிடத் தகுந்த நிலம் குறைந்து கொண்டு வரும் நிலையில் களர் நிலங்களில் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு வாயிலாக கிராமச் சூழ்நிலையில் அதிக வேலை வாய்ப்பை உருவாக்க வாய்ப்புள்ளது. கடந்த சில ஆண்டுகளாக கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு மிகப் பெருத்த அளவில் கிராமத் தொழிலாக உருப்பெற்றுள்ளது.

வெண்மைப் புரட்சியின் பயனாக, தற்சமயம் பால், முட்டை, இறைச்சி இவைகளின் உற்பத்தியில் குறிப்பிட்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதேபோல் இந்நாட்டின் நீண்ட கடலோரத்தையும் உள்நாட்டு நீர் வளத்தையும் பயன்படுத்தி மீன் உற்பத்தியில் ஓர் நீலப்புரட்சியினை உருவாக்க சிறந்த வாய்ப்புள்ளது.

ஆகவே, இத்துறைகளில் தேவையான தொழில் நுட்பத் திறனை அதிகரிக்க நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மேற்கூறிய வெண்மை மற்றும் நீலப் புரட்சியினை தொடர்ந்து ஊக்குவிக்கவும் தக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் 1989ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ஆம் நாள் தமிழகத்தின் விடிவெள்ளியாக தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியை மையமாகக் கொண்டு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் கால்நடை, கோழி மேம்பாட்டு மையங்கள், உழவர்பயிச்சி மையங்கள், ஆராய்ச்சி பண்ணைகள் முதலியன இப் பல்கலைக்கழகத்தின் அங்கங்களாகும்.

தற்சமயம் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளில் சுமார் 1,200 மாணவ மாணவிகள் இப்பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார்கள்.

[1990 ஏப்ரல் 5

ஆசியாவிலேயே முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவப் படிப்பில் ஓர் புதிய அத்தியாயத்தை உருவாக்க இருக்கிறது.

கிராமப் பொருளாதாரத்தை செவ்வனே மேம்படுத்தவும் மனித வள ஆற்றலை முறையான வகையில் வளர்ப்பதையும் முக்கிய குறிக்கோளாக ஏற்று செயல்பட்டு வருகிறது.

அரசு நிறுவனங்கள்.

(1) தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம் :

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) 12-7-1973-ல் தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பை அபிவிருத்தி செய்ய ரூ. 100 இலட்சம் மூலதனத்துடன் அரசு நிறுவனமாகத் துவங்கப்பட்டது.

2. டாப்கோ நிறுவனம் குஞ்சுப் பொரிப்பகங்கள் மூலம் வீரிய இன முட்டையிடும் கோழிக்குஞ்சுகள் மற்றும் இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் (பிராய்லர்) ஆகியவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்தல், ஜப்பானிய காடைகள், முட்டைகள் மற்றும் இறைச்சி விற்பனை, தரமான கோழி தீவன தயாரிப்பு மற்றும் விற்பனை செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

3. கோவை மாவட்டத்தில் உள்ள அரசூரிலும், மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரிலும் குஞ்சுப் பொரிப்பகங்கள் உள்ளன, இங்கு "டாப்காக்" இன முட்டை கோழிக் குஞ்சுகளும், 'காப்' எனப்படும் பிராய்லர் குஞ்சுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1989-90ஆம் ஆண்டில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசூரில் உள்ள குஞ்சு பொரிப்பகம் விஸ்தரிப்பு பணிக்காக அரசால் ரூ. 18.95 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. திருச்சியில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் குஞ்சுப் பொரிப்பகத்திற்கான கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது. இந்த குஞ்சுப் பொரிப்பகத்தில் 1990ஆம் ஆண்டு மே மாதத்தில் உற்பத்தி துவங்கப்படும்.

4. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காமராஜர் மாவட்டம் இராசபாளையத்தில் புதியதாக ஒரு குஞ்சுப் பொரிப்பகம் நிறுவ, ரூ. 30.95 இலட்சம் தொகையினை, அரசு வட்டியுடன் கூடிய கடனாக வழங்கியுள்ளது. இதன் பணி துவக்கப்பட உள்ளது.

1990 ஏப்ரல் 5]

5. டாப்கோ தீவனக் கலவை நிலையங்கள் நந்தனம், திருப்பூர் மற்றும் கப்பலூரில் இயங்கி வருகின்றன. நந்தனத்திலுள்ள மிகவும் பழமையான இயந்திரத்தினை மாற்றி, மத்திய அரசால் வகுக்கப்பட்ட திட்டத்தின்கீழ், ரூ. 21 இலட்சம் செலவில் புதியதாக இயந்திரம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தீவனத் தயாரிப்பிலும், விற்பனையிலும், முன்னேற்றம் காண வாய்ப்புள்ளது.

6. சென்னை, கோயம்புத்தூர்; திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, வேலூர், நாமக்கல் மற்றும் தர்மபுரி முதலிய மாவட்டங்களில், டாப்கோ விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றது. மேலும் தேசிய திட்டத்தின்படி, சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில். ஊனமுற்றோருக்கும் வேலையில்லாதவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் பொருட்டு, சில்லரை விற்பனைக் கூடங்களில் 96 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டது.

7. இவ்வருடத்தில் சென்னையில் அரசு மருத்துவ மனைகளுக்கு முட்டை வினியோகம் செய்வதற்கும், சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு முட்டை மற்றும் கோழிகள் வழங்கவும், கே.கே. நகர் மற்றும் பெரம்பூர் ஆகிய இடங்களில் இரண்டு மைய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம்.

8 தமிழ்நாடு அரசு, மதிய உணவுத் திட்டத்தின் கீழ் முட்டைகள் வழங்குவதில் டாப்கோ மிகமுக்கிய பங்கு எடுத்துக் கொண்டுள்ளது. தற்போது, ஊராட்சி ஒன்றிய அளவில் எட்டு மாவட்டங்களிலும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் முதலிய மாநகராட்சிகளுக்கு, சிறார் நல மையத்திலேயும் முட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், டாப்கோ அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ், முட்டைகள் வழங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9. இந்நிறுவனம் ஜப்பானிய காடைகள் குஞ்சுப் பொரிப்பகம் ஒன்றினை, செங்கை அண்ணா மாவட்டத்தில் நிறுவியுள்ளது. இதன் மூலம் சென்னை மற்றும் செங்கை அண்ணா பகுதிகளில் ஜப்பானிய காடைகள் விற்பனை செய்யப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் தெக்குப்பாளையத்தில் ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் மற்றொரு ஜப்பானியக் காடைக் குஞ்சு பொரிப்பகம் நிறுவி, 1990–91 ஆம் ஆண்டில் இயங்க உள்ளது.

10. இந்நிறுவனம் 1990–91ஆம் ஆண்டில் சேஷன் சாவடியில் தீவன கூட்டுப்பொருள் நிலையம் ஒன்றினை அமைத்து, அதன் மூலம் தரமான தீவன் கூட்டுப் பொருட்கள் தயாரிக்கவும், கோழிப் பண்ணையாளர்களுக்கு அவற்றை வழங்கவும், டாப்கோ திட்டமிட்டுள்ளது.

11. இந்நிறுவனம் 1989 அக்டோபர் மாதத்தில், செங்கல் பட்டில் கோழியின வளர்ச்சிக்கு உதவும் தளவாட நிலையம் ஒன்றினை அமைத்து, இயங்கி வருகிறது.

12. மத்திய அரசு 31–1–1989 முதல் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கோழி வளர்ப்புக்காக நிதி ஒதுக்கீடு அளிக்கவில்லை. எனவே, கட்டி முடிக்காத கட்டிடங் களை, முழுமையாக கட்டி முடித்து அவைகளில் சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டத்தினை செயலாக்கும் பொருட்டு ரூ. 30,077 இலட்சங்களை அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் தர்மபுரி, தென்னாற்காடு, செங்கை-அண்ணா, பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், காமராஜர், வட ஆற்காடு, அம்பேத்கார், மதுரை, சிதம்பரனார் மற்றும் நெல்லை—கட்ட பொம்மன் முதலிய மாவட்டங்களில் உள்ள 728 குடும்பங்கள் பலனடையும் நோக்கத்தோடு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

13. மேலும், கோழித்தோல் உரி கருவியை, கோவை மாவட்டத் தில் உள்ள தெக்குப்பாளையத்தில், ரூ. 4.50 இலட்சம் மதிப் பீட்டில் நிறுவ உத்தேசித்துள்ளது. இது 1990–91 ஆம் ஆண்டு முதல் இயங்கும்.

14. சேலம் மாவட்டத்தில், கல்ராயன் மலைவாழ் பகுதியில் வாழ்கின்ற 25 நபர்கள் பயனடையும் வகையில் ரூ. 7.48 இலட்ச மதிப்பீட்டில் கோழி வளர்ப்புக் கூடங்கள் நிறுவி, 1990–91 ஆம் ஆண்டில் இயங்க உள்ளன.

15. 1988–89 ஆம் ஆண்டு போலவே, 1989–90 ஆம் ஆண்டி லும் இந்நிறுவனம் 28,500 மெ. டன் அளவிலான இறக்குமதி செய்யப்பட்ட உதவி மக்காச் சோளத்தினை கோழிப் பண்ணை யாளர்களுக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம், கோழித் தீவனத் தின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. டாப்கோ செயல் படுத்தும் இத்திட்டம், நாட்டிலேயே சிறந்த முறையில் செயல் படுத்தப்படும் திட்டமென்று பாராட்டப்படுகிறது.

(2) தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் :

தமிழ்நாடு இறைச்சி நிறுவனம், இறைச்சிக்கென கால்நடை களை திறமையான மற்றும் சுகாதாரமான முறையில் வெட்டு வதற்கான வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, நவீன இறைச்சிக் கூடம் அமைப்பதற்கென 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் துவக்கப்பட்டது.

2. மேற்கூறிய நோக்கத்தினை எய்தும் பொருட்டு, சென்னைக்கு அருகாமையில் உள்ள கொடுவேளியில் நவீன இறைச்சிக் கூடம் அமைக்கும் பணி தொடங்கப் பெற்று, இப்பணி

நல்ல முன்னேற்ற நிலையில் இருந்தபொழுது, சுற்றுப்புற சூழல் காரணங்களாலும், பொதுமக்கள் எதிர்ப்பினாலும், இப்பணியினை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு, தகுந்த மாற்றிடத்தினை தெரிவு செய்ய முடிவு எடுக்கப்பட்டது. இருப்பினும், கடந்த கால இடர்ப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, தற்பொழுது பெரம்பூரில் இயங்கிவரும் இறைச்சிக் கூடத்தினை ரூ. 300 இலட்சம் செலவில், 50 சதவீதம் மத்திய அரசின் உதவியுடன் இரண்டு கட்டங்களாக நவீனப்படுத்த திட்டமிடப்பட்டது. இதன் முதற்கட்டமாக, மாடுகள் அறுவைக் கூடத்தினை நவீனப்படுத்த ரூ. 60 இலட்சம் 1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம், மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன், இதன் செயல்முறைப்பணிகள் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட உள்ளது. இதன் இரண்டாவது கட்டமாக எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் ஆடுகள் அறுவைக் கூடத்தினை, ரூ. 240 இலட்சம் செலவில் நவீனப்படுத்துவது குறித்த செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. மேலும், சைதாப்பேட்டையில் இயங்கிவரும் இறைச்சிக் கூடத்திற்கு முன்னேற்றப் பணிகளை மேற்கொள்ளவும், கோவை மற்றும் மதுரை நகரங்களில் இயங்கி வரும் இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

3. மேலும், பெரம்பூர், வில்லிவாக்கம், சைதாப்பேட்டை மற்றும் பேசின் பாலம் ஆகிய இடங்களில் உள்ள இறைச்சிக் கூடங்களை, இந்நிறுவனம் நன்முறையில் பராமரித்து வருகிறது. 1989–90 ஆம் ஆண்டில் (31–1–1990 வரை) 5,03,246 சிறிய கால்நடைகளும், 38,819 பெரிய கால்நடைகளும் மேற்குறிப்பிட்ட இறைச்சிக் கூடங்களில் வெட்டப்பட்டுள்ளன.

4. மேலும் இறைச்சி நுகர்வோருக்கு, சுகாதாரமான இறைச்சியினை நியாய விலையில் வழங்கும் பொருட்டு, சென்னை அண்ணா நகர், அசோக் நகர், நந்தனம் மற்றும் தண்டையார் பேட்டை ஆகிய நான்கு இடங்களில் சில்லறை விற்பனை அங்காடிகளை இந்நிறுவனம் துவக்கி, புதிய இறைச்சியினை, இறைச்சி நுகர்வோருக்கு அளித்து வருகிறது. இத்திட்டம் இறைச்சி நுகர்வோரிடையே நல்ல வரவேற்பினை பெற்றுள்ளதால், மேலும் பல அங்காடிகளை துவக்கும் பொருட்டு, 1990–91 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 10 இலட்சத்தினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும் தேவையான இறைச்சியினை இந் நிறுவனம் வழங்குவதோடு, சிறைச்சாலைகள், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், காவலர் பயிற்சிக் கல்லூரி விடுதிகள் போன்ற இதர இடங்களுக்கும் இறைச்சி வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

[1990 ஏப்ரல் 5

5. இந்நிறுவனத்தினை, தமிழ்நாடு கோழியின் வளர்ச்சிக் கழகத்துடன் இணைக்க, அரசு உத்தரவிட்டதன் பேரில், இதற்கான நடவடிக்கைகளை இந்நிறுவனம் எடுத்து வருகிறது.